11 APR
-8.

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 23, 1984—தொகுதி 207-எண் 1**

Friday, 23rd March 1984—Volume 207 - No. 1

*சட்டமன்ற மேலவைச் செயலகம்,*
*புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.*

**LEGISLATIVE COUNCIL SECRETARIAT,**
**Fort St. George, Madras - 600 009.**

*விலை ரூ. 2.75]*

275

பொருளடக்கம்.

23—3—1984.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. .. | —viii |
| | தமிழ்நாடு சட்டமன்றப் மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | ix |
| | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட பட்டியல் .. .. | xi—xiv |
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—11 |
| 2. | அறிவிப்பு— | |
| | அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து. | 11 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | திண்டுக்கல் நகராட்சியிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது, நான்காவது, ஊதிய உயர்வு அளிக்காததால் ஏற்பட்டுள்ள இடையூறு குறித்து .. .. .. | 12—13 |
| 5. | அரசின் தீர்மானம்— | |
| | தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு .. .. | 13—81 |
| 5. | 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல். .. .. | 83—85 |
| 6. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். | 86—88 |

143896

D

V211,32 N84

N84-207.1-2

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. The Honourable Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Excise and Prohibition excluding grant of Liquor Permit.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASWAMY, Minister for Dairy Development, in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister for Law and Industries, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries and Mines and Minerals.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGHAVANANDHAM, Minister for Labour, in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Handlooms and Co-operation, in charge of Textiles, Handlooms and Co-operation.

15. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister for Environmental Pollution Control, in charge of Environmental Pollution Control and Passports.

16. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes, Bonded Labour and Employment and Training.

17. The Honourable Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

18. The Honourable Thiru S. R. E. RADHA, Minister for Public Works, in charge of Public Works Department and Establishment matters relating to Public Works Department, Housing and Slum Clearance Board.

19. The Honourable Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes.





20. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. The Honourable Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi.

22. The Honourable Thiru Y. S. M. YUSUF, Minister for Irrigation and Wakf, in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. The Honourable Thiru R. ARUNACHALAM, Minister for Rural Industries, in charge of Rural Industries, including Village and Cottage and Small Industries.

24. The Honourable Thiru K. KALAIMANI, Minister for Fisheries, in charge of Fisheries.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர்

திரு சுந்தர் லால் குரானா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை மற்றும் மது விலக்கு, மது அருந்த அனுமதிச்சீட்டு வழங்கல் நீங்கலாக.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்வளத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண் பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள் மற்றும் சுரங்கமும், கனிவளமும்.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நெசவாலைகள், கைத்தறி மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு தடுப்புத் துறை மற்றும் கடவுச் சீட்டு.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், செய்திக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எல். ஆர். இராதா (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப் பணித்துறை, பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர்.

22. மாண்புமிகு திரு. பா. சை. மூ. பூசுப் (நீர்ப்பாசனத் துறை மற்றும் வஃப் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப் பாசனம் மற்றும் வஃப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீனளத் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மீனளம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
3. திரு. ஏ. ஜே. தாஸ்.
4. திரு. க. அருணாசலம்.

மேலவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர் :

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர் :

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர் :

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்கமுத்து. திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம், திரு. க. | நியமனம் |
| 3. ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 4. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 6. இராதா. திரு. எஸ். ஆர். (பொதுப் பணித்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 10. கலைமணி, திரு. க. (மீனளத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 11. கோலப்பா. திரு. சி. ஆர். | நியமனம். |
| 12. சங்காலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13. சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 17. சித்தாம்பி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 18. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம் |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 20. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 22. தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 23. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 27. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 30. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 32. முனுசாமி, திரு. பி. | நியமனம் |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 33. யூசுப், திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை மற்றும் வஃபு அமைச்சர்.) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. பா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 37. வலம்புரி ஜான், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. வள்ளிமுத்து, திரு. ஈ.வெ.ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எல். | நியமனம் |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 49. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தைந்தாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1984 மார்ச் 23.

(பங்குனி 10, ருத்ரோத்தாரி—திருவள்ளுவராண்டு 2015.)

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான, தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தைந்தாவது கூட்டத் தொடர்).

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா எண்கள் 103, 104 இரண்டும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படலாம்.

### *Post-Graduate Assistants.*

*103. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that Post-Graduate scale of pay has not been given from 11th July 1979 to Post-Graduate Assistants serving from that date in Government Higher Secondary Schools (Vocational Stream), as per G.O. Ms. No. 1091, Education, dated 15th June 1978; and

(*b*) if so, the reasons for the same ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ).—அரசு ஆணைப்படி மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பிரிவுகளுக்கு பகுதி நேர ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர். மேலும் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு முதுகலைப்பட்டம் தேவையென ஆணையிடப்படவில்லை. முன்னாள் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வந்த இருமுனைப்பாட (Bifurcated Course) ஆசிரியர்கள் மட்டும் மேல்நிலைப் பள்ளிகளில் முழுநேர ஆசிரியர்களாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயர்நிலைப்

பள்ளிகளில் பெற்று வந்த சம்பளத்தோடு மாதம் ரூபாய் 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். தொழிற்கல்வி ஆசிரியர்களுள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் இதர முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அரசு ஆணை 1091, கல்வி, நாள் 15—6—1978-ன்படி அளிக்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தைப் பெற வாய்ப்பில்லை.

*104. வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 8—2—1982-ல் மாவட்டத் தலைநகர்களில் ஊர்வலம் நடத்தி, முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் மூலம் தங்கள் சங்கக் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) அவர்கள் அளித்த 8 கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வாழ்க்கைத் தொழில் முறைக் கல்வி தொடர்பான பாடத்தைப் பயிற்றுவிக்கிற முதுநிலைப் பள்ளியாசிரியர்களுக்கு முதுநிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதாவது சப்ஜெக்டுகள் வொக்கேஷனல் கோர்ஸில் கற்பிக்கப்படும்போது, போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியர்களுக்குச் சமமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆணை உருவாக்கலாம் அல்லவா, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு ஆணையை வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு முதுகலைப் பட்டம் தேவையென்று அரசு சொல்லவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை எழவில்லை.



திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, இந்தக் கல்வியில், உதாரணமாக விவசாயம் என்று எடுத்துக்கொண்டால், அதிலே நேச்சுரல் சயின்ஸ் ஆறு பாடவேளைகள் போதிக்கவேண்டியிருக்கிறது. அப்படி போதிக்கப்படும்போது, அவர்கள் முதுகலைப் பட்டதாரிகளாக இருந்தாகவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்காவது இந்த முதுநிலை ஊதியம் வழங்க முன்வரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அத்தகைய பாடங்களைச் சொல்லித் தருகிற ஆசிரியர்களின் நிலைகுறித்து, இந்தப் படிப்புதான் இருக்க வேண்டுமென்று இருந்தால், அப்போது இந்தச் சம்பள விகிதத்தைக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட தகுதி இருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். அப்படி முடிவு செய்யாமல், இப்படிப்பட்ட சம்பளம் தருவதற்கில்லை. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், அரசு ஒரு முக்கியமான யோசனையைச் செய்துகொண்டிருக்கிறது. சிறப்பூதியம் பெற 24 பாடவேளைகள் இருக்கவேண்டுமென்று இப்போது விதியிருக்கிறது. அதற்குப் பதிலாக பள்ளிக் கல்வி இயக்குநர் இந்தச் சிறப்பூதிய பாடவேளை நிபந்தனையை நீக்கியதோடு, சிறப்பூதியம் பெறமுடியாது இருந்த தேதியிலிருந்து சிறப்பூதியம் பெறுவதற்கேற்ற வகையில் அரசு ஆணை வெளியிட இருக்கிறது. இது ஒரு முக்கியமான ஒன்றாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏனைய பிரிவு ஆசிரியர்களுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 40 ஆக உயர்த்திய அந்த நாளிலிருந்து அவர்களுக்கும் அளிக்குமாறு அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைத்தான் இப்போது சொன்னேன். ஊதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட பாடவேளை நிபந்தனையை நீக்கியதோடு புதிய பிரிவு ஆசிரியர்கள் பெற வழி இல்லாததால், அப்படிப் பெற முடியாத நாளிலிருந்து அவர்கள் சிறப்பூதியம் பெற ஆணை இடப்படவிருக்கிறது.

## பகுதிநேர தொழிற் பாட ஆசிரியர் ஊதியம்.

*105. வினா—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாம் தமிழகத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையைக் கொண்டு வந்த பிறகு சிங்கப்பூரிலும் அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் அதற்காக ஆணையே பிறப்பித்து அங்கே முழுமையாக அது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இங்கே அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பின்னர், நூல்கள் வெளியிடுகிறவர்களிடமிருந்தும் பத்திரிகையாளர்களிடமிருந்தும் நமக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஒரு அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையில் விஞ்ஞான ரீதியாக மொழி வளர்ச்சிக்கும், அதன் மூலமாக மக்களின் நலனுக்கும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் போது, மக்களுக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக்கொள்கிற இப்படிப்பட்டவர்கள் அதற்கு ஒத்துழைப்புத் தருவது என்பது மிகவும் வேண்டத்தக்கதாகும். எனவே அப்படிப்பட்டவர்கள் மீண்டும் இதைப்பற்றிச் சிந்தித்து இந்த நல்ல முயற்சிக்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்களில் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளாத நூல்களை வாங்குவதை நிறுத்துவது என்பது நம்மால் செய்ய முடிந்த காரியம்தான் என்றாலும், அதற்கு முன்னர் அனைவருக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

### குடும்ப ஓய்வு ஊதியம்.

* 107. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1964-க்குப் பின்னும், 1—4—1970-க்கு முன்னும் ஓய்வு பெற்றவர்களின் குடும்ப ஓய்வு ஊதியம் வழங்குவது தொடர்பாக, கல்வித்துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 30-ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) இதுபற்றி மாநில கணக்காயர் (Accountant-General) அலுவலகத்திலிருந்து அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதா ?

(இ) ஓய்வு ஊதியம் பெறுவதற்கு காலதாமதம் ஆவது பற்றி முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) விலிருந்து (ஈ) வரை கல்வித் துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 30ஐ அமுல் படுத்துவது தொடர்பாக மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து சில விளக்கங்கள் கோரப்பட்டன. இவ்விளக்கங்கள் கல்வித் துறையால் 25—5—1982-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1012-ல் அளிக்கப்பட்டன. இதன் காரணமாக, கல்வித் துறை அரசாணை எண் 30ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இதுபற்றி அரசுக்கு முறையீடு ஏதும் வரவில்லை.

### *Pay Scales of Wakf Board Employees.*

* 108. *Q.*—Thiru S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revise the scales of pay of the employees of the Wakf Board; and

(*b*) the annual financial commitment of the Wakf Board for the employees' salary ?

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : (அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதங்கள் தமிழ்நாடு வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது. எனவே அவர்களது சம்பள விகிதங்களைத் திருத்தியமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

(ஆ) 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 8.71 இலட்சம்.

(முற்பகல் 10-10)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய ஊதிய விகிதத்தை அவர்களுக்கும் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல, ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை மற்றும் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் கொடுக்கும் பத்தாயிரம் ரூபாய் ஆகியவை கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவற்றைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

அவர்கள் இப்போது வாங்கும் சம்பளம் குறைவு என்றும் சொல்லுகிறார்கள். குறிப்பாக மாவட்டங்களில் பணியாற்றக்கூடிய இன்ஸ்பெக்டர்கள், சூப்பரின்டென்டென்டுகள் ஆகியவர்களுக்குச் சம்பளம் முதல் தேதியன்று கொடுப்பதில்லை என்றும், பயணப்படிகூட வழங்குவதற்கு ஒன்றரை ஆண்டு ஆகிறது என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் குறைபாடுகளையும் நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: அரசு ஊழியர்களுக்குத் தருகின்ற ஓய்வூதிய வசதிகளைப் பற்றியும் மற்ற நன்மைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். வக்ஃபு வாரிய ஊழியர்களைப் பொறுத்த வரையில். அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. இங்கேயுள்ள மூலக் கேள்வி வக்ஃபு வாரியப் பணியாளர்களின் சம்பள விதங்களைப் பற்றியது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால். நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்த வரையில், தலைமை அலுவலகத்திலே பணியாற்றுகிறவர்களைப் பொறுத்த வரையில், அவ்வப்போது சரியாகத் தரப்பட்டிருக்கிறது. இதர மாவட்டத் தலைநகரங்களில் உள்ள அலுவலங்களைப் பொறுத்த வரையில், சம்பளம் சரியாகத் தருவதில்லை என்ற குற்றச்சாட்டு இதுவரை வரவில்லை. வக்ஃபு வாரியத்திற்குரிய பணத்தை வசூலிப்பதில் மாவட்டத்தைச் சார்ந்த அலுவலர்கள் ஒழுங்காக வேலை பார்த்தால். உரிய வருமானம் வரும். அப்படி வரக்கூடிய வருமானத்தைப் பெற்று வக்ஃபு வாரியம் சம்பளத்தை வழங்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சம்பளம் கொடுப்பது என்பது வேறு. கான்ட்ரிப்யூஷனை (contribution) வசூல் செய்வது என்பது வேறு. ஒன்றரை ஆண்டுகளாகத் தரப்படாமல் இருக்கிற பயணப் படியையாவது, ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதிக்குள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் அங்கே பணிபுரியக்கூடியவர்கள் சாதாரண குடும்பத்தினர். ஆகவே அமைச்சர் அவர்கள் அதை கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: நன்றி. உரிய முறையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.



திரு. ஜே. எம். மியாகான்: இந்த கான்ட்ரிபூஷன் வந்தால்தான், அவர்களுக்குச் சம்பளம் கிடைக்குமா என்று கேட்க விரும்புகிறேன். அதைப் பொறுத்துத்தான் சம்பளம் வழங்கப்படுகிறதா? இதுதான் அவர்களுடைய பாலிசியா என்று அறிய விரும்புகிறேன். மற்ற வாரியங்களைப் போல ஒன்றாம் தேதி பிறந்தவுடன் சம்பளம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பாலிசி என்பதல்ல பிரச்சினை. அப்படிப்பட்ட பாலிசியை தனியாக அமைக்க முடியாது. வக்ஃப் வாரியத்தின் வேலையைக் கவனிப்பது, உரிய முறையில் வருகின்ற வருவாயில் குறிப்பிட்ட தொகையைப் பெறுவது, அதைப் பிரித்துக் கொடுப்பது, அதனுடைய பங்கிலிருந்து ஊழியர்களுக்குத் தேவையான சம்பளத்தைக் கொடுத்து கணக்குகளை வைப்பதில் ஈடுபடுவது ஆகியவைதான் அவர்களுடைய வேலை. அந்த முறையில் வருகின்ற வருவாயை வைத்துத்தான் சம்பளம் கொடுக்க முடியும். உள்ளாட்சித் துறையிலுள்ள ஊராட்சி பேரூராட்சிகளிலும் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே அந்த அந்த நிலையில்தான் வக்ஃபு வாரியமும் செயல்படுகின்றது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

*Regional Wakf Boards.*

* 109. *Q.*—Thiru J. M. MIAKHAN and Dr. T. R. JANARTHANAM: Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to constitute Regional Wakf Boards; and

(*b*) if so, when they will start functioning?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) & (இ) 1954-ம் ஆண்டு மத்திய வக்ஃபு சட்டத்தில் மண்டல வக்ஃபு வாரியங்கள் (Regional Wakf Board) அமைப்பது எதும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் மண்டல குழுக்கள் (Regional Committees) அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, மேற்படி கருத்துரு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எம். மியாகான்: அப்போதுள்ள அமைச்சர் அவர்கள் இதே சபையில் அந்த மாதிரி ரீஜனல் வக்ஃபு போர்டு அமைப்போம் என்று வாக்குறுதியைத் தந்துள்ளார்கள். இதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மூலக் கேள்விக்கான விடையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தற்போது முப்பத்தைந்தாயிரம் வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு இருக்கும்போது, நாகர்கோவில் பகுதியிலிருந்து இந்த முறையீட்டிற்கு இங்கே வருகிற நிலை இருக்கிறது. அதை உத்தேசித்து விரைவாக ஐந்து மண்டல வக்ஃபு வாரியங்களாக அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே; இப்படித் தனித் தனியாக 5 மண்டலங்களில் குழுக்கள் அமைத்தாலும் கூட, அந்தக் குழுக்கள் முதற் கட்ட விசாரணை என்று சொல்லக் கூடிய (Preliminary enquiries) -ஐ தான் செய்ய முடியுமே தவிர, அதற்கு அதிகார பூர்வமாக உரிய தீர்ப்புகளை வழங்கக்கூடிய அதிகாரம் கிடையாது; சட்டத்திலும் கிடையாது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில், இதனால் மிகப் பெரிய பயன் கிடைக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. இருந்தாலும், ஆங்காங்கே மண்டலக் குழுக்கள் அமைக்கப் பட்டு அவ்வாறு (Preliminary enquiries) நடத்தப்பட்டுத்தான் வருகின்றன என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU J. M. MIAKHAN : The main purpose of the request for Regional Committees was that thousands of cases were pending before the Wakf Board and they had not been looked into. On the floor of this House the Hon. Minister had agreed to constitute Special Boards or Tribunals, whatever may be, to expedite the disposal of the cases. What will happen to the thousands of cases pending before the High Court and other Courts and before the Wakf Board? What is to be the fate of those cases?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல அப்படி மண்டலக் குழுக்கள் அமைத்து, அதன் வாயிலாக இப்படிப்பட்ட விசாரணை மேற்கொண்டாலும் கூட, அந்தக் குழுக்களுக்கு இறுதித் தீர்ப்பு வழங்கக் கூடிய அதிகாரம் கிடையாது. ஆகவே அப்படியே அந்தக் குழுக்கள் (Preliminary enquiry) prima facie என்று சொல்லக் கூடிய கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை எடுத்துச் சொன்னாலும் கூட, அந்த உண்மைகளின் அடிப்படையில் மறுபடியும் வக்ஃபு





வாரியத்தில் அமைக்கப்பட்ட முறைப்படியான வழக்கு மன்றத்தில் தான் தீர்ப்புகள் வழங்கப்படும். ஆகவே இன்னும் சொல்லப் போனால், இரட்டிப்பு வேலையாக இருக்கின்றது. என்றாலும் இயன்ற அளவு ஆரம்பத்திலேயே ஒரு அடிப்படை ஆதாரம் கூட இல்லை என்றாலும் வழக்கை முடித்து விடலாம். அந்த அளவிற்குத்தான் அது பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையில் இப்போது ஒரு சில மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, ரீஜனல் போர்டு என்பது வேறு ரீஜனல் கமிட்டி என்பது வேறு. ரீஜனல் போர்டு கைவிடப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால் திரு. மியாகான் சொன்னது போல, 35,000 வழக்குகள் இருந்தாலும், இப் போதே அந்த போர்டுகள் ஆங்காங்கே விசாரணை செய்கின்றன. எனவே போர்டிலே அதிகமான வழக்குகள் இருந்தால், இப்போது பின்பற்றப்படும் முறையைப் பின்பற்றி, அந்தந்த ஸ்தலத்திற்கே சென்று வழக்குகளைப் பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியவாறு, இப்போது கடைபிடிக்கப்படுகின்ற வழி முறைகள் நிச்சயமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். இப்போது போர்டே ஆங்காங்கே உள்ள பகுதிகளுக்குச் சென்று தேவைப்படுகின்ற இடத்தில் தேவைப்படுகின்ற விசாரணையை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் 24—3—1984-க்குப் பதிலாக 27—3—1984 அன்று எடுத்துக் கொள்ளப்படும். 24—3—1984 அன்று மேலவைக் கூட்டம் இல்லை. மருத்துவமும், மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கான நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

### 3. கவன ஈர்ப்பு.

**திண்டுக்கல் நகராட்சியிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் முது நிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது, நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்காததால் ஏற்பட்டுள்ள இடையூறு குறித்து.**

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" பணி விதிகள் இல்லாததால் திண்டுக்கல் நகராட்சியிலுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது, நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்காததால் ஏற்பட்டுள்ள இடையூறு குறித்தும் வருமான இழப்பு குறித்தும்".

**மாண்புமிகு திரு .ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான்காவது கால ஊதிய உயர்வு அளிக்க ஆணையிட்டமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஐந்தாவது கால ஊதிய உயர்வும் பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது குறித்தும் ஆணையிடுவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான்காவது ஊதிய உயர்வு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானமே கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆனால் மீண்டும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக, இதுபோன்று ஐந்தாவது ஊதிய உயர்வும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசுப் பள்ளி களிலே பணிவிதி முறைகள் வகுக்கப்பட்டு அவர்களுக்குத் தொடர்ந்து ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால் நகராட்சி நிர்வாகத்துக்கு உட்பட்ட மேல் நிலைப்பள்ளிகளிலே, நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளினுடைய பணி விதிகள்

---

@ 88 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இன்னும் வகுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அவ்வாறு நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளினுடைய பணி விதி முறைகள் வகுக்கப்பட்டு விட்டால், இந்தத் தடை ஏற்படாது. அந்தப் பணி விதி முறைகளை எப்போது வகுக்க இருக்கிறார்கள்? விரைவில் அது குறித்து ஆணையிடுவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அதற்குரிய பணி விதிகளை உடனடியாக அமைக்கும்படி நான் செயலாளர் போன்றவர்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

(முற்பகல் 10-20)

### 4. அரசின் தீர்மானம்.

**தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வைத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பின் மீது கட்சியின் சார்பில் என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக பேரவையிலே இந்த மானியத்தின்மீது

---

@ 89-171 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விவாதம் வந்த அன்று, எதிர்க்கட்சி வரிசையில் ஒரு பிரச்சினையில் வெளி நடப்பு நடந்ததால், எதிர்க் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்கள் கருத்துக் களையெல்லாம் கேட்க முடியாமல் போய்விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினையில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த நேரத்தையெல்லாம் இங்கு எடுத்துப் பேச இருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டார்கள். அது மட்டுமல்லாமல், 'பேரவையிலே பதில் சொல்ல முடியாது போய்விட்டதனாலே, கட்டாயம் மேலவையிலே திரு. நல்லசிவன் அவர்கள் மூலமாக பதில் சொல்ல வேண்டும் என்ற கருத்திலே சொன்னார்கள். அவர்கள் அதை ஒரு விண்ணப்பமாகக் கூட பேரவையிலேயே எங்களுக்கு விடுத்திருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் பேரவையிலே கேட்கமுடியாது போய்விட்டதால், அதையெல்லாம் இங்கே நான் பேசி அவர்கள் கேட்க இருப்பதால், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு நேரம் அதிகம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைச் சொல்லாமலேயே பேசலாம். போலீஸ்காரனைக் கூப்பிட்டு நான் தப்புப் பண்ணப்போகிறேன் என்று சொல்வது மாதிரி சொல்ல வேண்டாம். அதுவே ஒரு மரபு என்று ஆகிவிடும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அப்படிப் பேசுவதிலே ஒன்றும் தப்பில்லை. சாதாரணமாக, 1977 ஆம் வருடத்திற்குப் பிறகு, நம்முடைய மாநில அமைச்சரவையின் சார்பிலே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பல கொள்கை விளக்கக் குறிப்புகள் வைத்திருக்கின்றார்கள். நான் பொதுவாக என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், "நம்முடைய மாநிலத்திலே ஸ்ட்ரைக் ரொம்ப குறைவு, லாக் அவுட்ஸ் குறைவு, மேன் டேஸ் லாஸ்ட் குறைவு, ஆகவே இங்கே சுமுகமாக, சமரசமாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம்" என்றெல்லாம் பெருமையாகப் பேசுகின்றார்கள். அவர்கள் அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பதற்குக்கூட தமிழ் நாட்டிலே தொழிலாளர் பற்றி அவருடைய பேச்சிலிருந்து மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த மேற்கோளுக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றது என்பதால் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உழைப்பவர் உலகம் மலர் இதழில் எழுதியிருக்கின்ற விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். "தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை, கோரிக்கைகளைப் பெற வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது, ஆர்ப்பாட்டம், ஊர்வலம் போன்றவைகள் நடத்துவது என்பதெல்லாம் 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு தேவையாக இருந்தது. ஆனால், இங்கே இன்றைக்கு, இன்றைய நிலைக்கு அது தேவையில்லை. அமைச்சர்களோடு நேரில் பேச வாய்ப்பு இருக்கும் இந்தக் காலத்தில், தொலை பேசியின் மூலமே அமைச்சர்களிடம் தொடர்பு கொள்ளக் கூடிய இந்தக் காலத்தில், மாநில அரசும், மத்திய அரசும் போட்டி போட்டுக் கொண்டு தொழிலாளர்கள் உரிமைகளை, நலன்களைப் பாதுகாக்க பல சட்டங்களை இயற்றி வந்துள்ள இந்தக் காலத்தில், வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் போன்றவைகள் தேவைதானா என்பதை தொழிலாளர்கள் நன்றாக ஆராய்ச்சி செய்துகொள்ள வேண்டும்" என்று 3 ஆண்டுகளுக்கு முன்பாக நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த 'உழைப்பவர் உலகம்' பத்திரிகையிலே சொல்லியிருக்கின்றார்கள். நான் இப்போது என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், 1982-83 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே நடைபெற்றிருக்கக்கூடிய தொழில் தகராறுகள், கதவடைப்புகள், வேலை நிறுத்தங்கள் மூலமாக வேலை இழப்பு என்பதைப்பற்றியெல்லாம் அவர்களே ஒரு கணக்கு சொல்லியிருக்கின்றார்கள். 1982 ஆம் ஆண்டு, 1983 ஆம் ஆண்டு இரண்டையும் ஒப்பிட்டு, இங்கே ஒரு அட்டவணை கொடுத்திருக்கின்றார்கள். அதிலே 1982 ஆம் ஆண்டிலே, அவர்களே ஒத்துக்கொண்டிருப்பதன் பிரகாரம், ஸ்ட்ரைக்ஸ், லாக் அவுட்ஸ் சேர்த்து 1982-லே 187 என்றால், 1983-லே 212 ஸ்ட்ரைக்ஸ், லாக் அவுட்ஸ் சேர்த்து என்று சொல்லியிருக்கின்றார்கள். வேலை நாட்கள் இழப்பு 1982-லே 16 லட்சம், 1983-லே 21 லட்சம். இதெல்லாம் இந்தத் தொழில் கொள்கைக் குறிப்பிலே அரசு கொடுத்திருக்கின்ற விவரங்கள். நான் இந்தக் கொள்கைக் குறிப்புபற்றி ஒன்றும் சொல்லவில்லை. 5—2—1984 தேதி, வெளிவந்த 'இந்து' பத்திரிகையிலே, அதன் 'இன்டஸ்ட்ரியல் கரெஸ்பாண்டெண்ட்' ஒரு விவரம் தெரிவித்திருக்கின்றார். அதில் 1983ஆம் ஆண்டிலே லாக் அவுட்ஸ் எல்லாம் 800 சம்பவங்கள், 300 ஸ்டாப்பேஜஸ் நடந்திருக்கிறது என்ற விவரம் வெளியாகியிருக்கிறது. 30 லட்சம் வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று ஒரு விவரம் வெளியிட்டிருக்கிறது. இதிலே எந்த விவரம் சரி என்று அரசு சொல்ல வேண்டும். 1982 ஆம் ஆண்டைவிட 1983 ஆம் ஆண்டிலே ஸ்டாப்பேஜ் அதிகம். 212 வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. 21 லட்சம் 'மேன்டேஸ் லாஸ்' நடந்திருக்கின்றது. ஆனால் இந்து பத்திரிகையின்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 23

ஒரு பொறுப்பான பத்திரிகையின் இண்டஸ்ட்ரியல் கரெஸ்பான்டெண்ட் 1983 ஆம் ஆண்டில் 300 தொழிற்சாலைகளில் 30 லட்சம் வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார். இதிலே எது உண்மை என்று அரசு பார்த்துச் சொல்ல வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்திலே, இன்றைக்கு நடக்கக்கூடிய தொழில் தகராறுகள் காரணமாக, வேலை நடைபெறாமல் இருக்கிறது, அப்படி இருப்பதன் காரணமாக உற்பத்தி பாதிக்கப்படுகின்றது, அதன் காரணமாக தொழிலாளர்களுக்குச் சம்பளம் இல்லாமல் போகின்றது என்று சொல்கின்றார்கள். உண்மை நிலைமைகளை இப்படியெல்லாம் சொல்லி மறைக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப்பற்றி அடிக்கடி அரசின் பக்கத்திலிருந்து, நாங்கள் 'ஆர்கனைஸ்டு லேபர்' பற்றித்தான் கவலைப்படுவோம் என்றும் 'அன் ஆர்கனைஸ்டு லேபர்' பற்றிக் கவலைப்படமாட்டோமென்றும் சொல்வார்கள். ஆனால் அரசு, தொழிலாளர் நிலைமையைப்பற்றிக் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களில் 'அன் ஆர்க்கனைஸ்டு லேபர்' பற்றிக் கவலைப்படவில்லை. அரசுதான் இவர்களைப் புறக்கணிக்கிறது என்று கூறுகிறேன். 'ஆர்கனைஸ்டு லேபர்' அதிகமாகச் சம்பளம் பெறுகிறார்கள். 'அன் ஆர்க்கனைஸ்டு லேபர்' குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள் என்றும் 'அன் ஆர்க்கனைஸ்டு லேபர்' பற்றி நாங்கள் கவலைப்படவில்லை என்றும் இந்த அரசு கூறுவது தவறு. இந்த அரசு தான் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தப் புள்ளிவிவரத்தில் 'அன் ஆர்கனைஸ்டு லேபர்' பற்றிச் சொல்கிறதா என்றால், இல்லை.

குமரி மாவட்டத்தில் முந்திரிப் பருப்புத் தொழிலாளர்கள் ஆண்களும், பெண்களுமாக சுமார் 70,000 பேர் இருக்கிறார்கள். 158 ஆலைகள் இருக்கின்றன. இவர்களுக்கு வருடத்திற்கு ஒரு மாதம்தான் வேலை இருக்கிறது. இந்த ஆலைகளுக்கு முந்திரிப் பருப்பு 'சப்ளை' பண்ண முடியாத காரணத்தால், அவர்களுக்கு வேலை இல்லை என்று அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. 11 மாதங்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களே, இதனால் மனிதநாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறதே? அது இந்தக் கொள்கைவிளக்கக் குறிப்பில் உள்ள கணக்கில் பிரதிபலிக்கவில்லை.

3 லட்சம் பீடித் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் வேலை இல்லாத நாட்களில் எதை வைத்துப் பிழைப்பது? அவர்களுக்கு full back wage தரவேண்டுமென்று. அவர்கள் போராட்டம் நடத்தி. அரசும் அரசாணை போட்டிருக்கிறது. ஆனாலும் இவர்களுக்கு வேலை இல்லை. அதைப்பற்றி இந்த அரசின் கணக்கில் இருக்கிறதா? மனித



1984 மார்ச் 23] [திரு. ஆ. நல்லசிவன்]

நாட்கள் இழப்பு 21 லட்சம் என்று காட்டப்பட்டிருப்பதில் இந்தக் கணக்கு உண்டா? 212 வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் என்று காட்டப்பட்டிருப்பதில் இந்தக் கணக்கு உண்டா? இல்லை.

அதுமட்டுமல்ல, கைத்தறித் தொழிலில் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட 79 கோடிக்கு கைத்தறித் துணிகள் தேக்கம். அதன் காரணமாக நூல் சப்ளை பண்ண முடியவில்லை. அதனால் வேலை இல்லை. அதனால் கைத்தறி நெசவாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். பவர் லூம்ஸ் வேலை இல்லாமல் இருக்கின்றன. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் எவ்வளவு மனிதநாட்கள் வீணாகியிருக்கின்றன? இது இந்தக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றதா? இல்லை. இப்படி பல. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். பள்ளிபட்டு தாலூகாவில் கொளத்தூர் என்கிற ஊரில் 100 பேர் வேலை செய்கிற கூட்டுறவு சங்கத்தில் மூன்று மாதமாக வேலை இல்லை. கைத்தறித் தொழிலாளர்கள் அந்த வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு மேற்படி கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இவ்வாறு கைத்தறித் தொழிலாளர்கள், நெசவாளர்கள் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று கோரி காஞ்சிபுரம், அசிஸ்டண்ட் ஹேண்ட்லூம் டைரக்டர் அலுவலகம் முன்பு 19—3—1984 அன்றைக்கு ஒரு பெரிய தர்ணா நடந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. அம்பத்தூர், கிண்டி, கோவை பகுதிகளில் உள்ள ஸ்மால் இன்ஜினியரிங் யூனிட்களுக்கு மூடுவிழாக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. காரணம், 'ரா மெட்டீரியல்ஸ்' சப்ளை பண்ண முடியவில்லை. சில பொருள் களுக்கு மார்க்கெட் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுவெல்லாம் மனித நாட்கள் இழப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இல்லை. இது வெல்லாம் சேர்க்கப்பட்டிருந்தால், ஜாஸ்தியாகும். தமிழ் நாடு நிலைமை சுபிட்சமாக இருக்கிறது என்று படம்பிடித்துக் காட்டுவதற்காக, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் ஏற்பட்டிருக்கக்கூடிய வொர்க் ஸ்டாப்பேஜ்-ஐக் கணக்கிலே சேர்க்காமலேயே இந்தக் கணக்கைக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸில் ஏற்பட்டிருக்கக்கூடிய மனிதநாட்கள் இழப்பே சுமார் 30 லட்சம் என்று 'இந்து' பத்திரிகையில் கூறியிருக்கிறார்களே, அதை இந்த அரசு மறுக்கிறதா? இவ்வாறு இந்தக் கணக்கில் சிறு தொழில்களில் வேலைபார்ப்பவர்கள் எல்லாம் சேர்க்கப்படவில்லை. தமிழகத்தில் மின் வெட்டு காரணமாக வேலை இல்லாமல் போயிற்று அல்லவா? அந்தக் கணக்கும் மனிதநாட்கள் இழப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றதா

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 23

(முற்பகல் 10-30)

என்றால் இல்லை. இவைகளை எல்லாம் அரசு சேர்க்காமல் இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்களில் உள்ள வேலையின்மை, உற்பத்தி நஷ்டம் ஆகியவை பற்றிக் குறிப்பிடாமல், எல்லாம் நன்றாக இருக்கிறதென்ற அளவுக்கு அரசு குறிப்பு தந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இந்த மாதிரி உற்பத்தி முடக்கம் ஏற்பட்டிருப்பதற்கு பிரதான காரணத்தை அரசு கூறவில்லை. மத்திய அரசின் தொழில், பொருளாதாரக் கொள்கைதான் இதற்குக் காரணம் என்று நாங்கள் அப்போதும் சொன்னோம், இப்போதும் சொல்கிறோம். இந்த அரசின்மீது நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. நம்முடைய நாட்டில் முதலாளித்துவ சமுதாய அமைப்பு உருவாக்கப்படுவதால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிதான் இப்படிப்பட்ட உற்பத்தி நஷ்டத்திற்குக் காரணம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நெருக்கடிக்குக் காரணமாக நாட்டில் முதலாளித்துவ அமைப்பு ஏற்படுவதால், அதனால் பாதிக்கப்படும் உழைப்பாளி மக்கள் நிவாரணம் கோரி போராட்டம் செய்யும்போது, அந்த மக்களின்பால் இந்த அரசு எத்தகைய கொள்கையை எடுக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன். இங்கே எதற்கெடுத்தாலும் மேற்கு வங்கம்பற்றிப் பேசுகிறார்கள். 'உங்கள் மேற்கு வங்கத்தில்தான் 3 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் உற்பத்தி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லுகிறார்கள். அங்கே 3 லட்சம் சணல் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு அரசாங்கம் ஆதரவு தருவதற்கு வெட்கப்படவில்லை. அங்கே 3 லட்சம் சணல் தொழிலாளர்கள் எதற்காகப் போராடுகிறார்கள்: சனவரியிலிருந்து வேலைநிறுத்தம் செய்கிறார்கள்? அப்படி அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது அந்த அரசுக்கு அவமானமா? அங்கே அந்த 3 லட்சம் தொழிலாளர்கள் ஒரு முக்கியமான கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 58 சணல் மில்களை 5 குடும்பங்கள் ஆட்டிப்படைக்கின்றன. நாட்டின் அந்நியச் செலாவணி அவர்கள் கையிலே இருக்கிறது. அப்படிப்பட்ட மில்களை மத்திய அரசு தேசியமயமாக்க வேண்டுமென்று அங்கேயுள்ள 3 லட்சம் சணல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அவர்களுக்கு அங்கேயுள்ள அரசு பாதுகாப்பு தருகிறது. ஒரு போலீஸ்காரராவது அங்கேயுள்ள ஒரு பேக்டரியில் இருக்கிறார் என்று சொல்ல முடியுமா? மேற்கு வங்க முதலமைச்சர். திரு. ஜோதிபாசு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "இவர்கள் செய்யும் வேலை நிறுத்தம் நியாயமானது; இந்த நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தொழிற்சாலைகளை 5 குடும்பங்கள் வைத்துக் கொண்டு கொள்ளை அடிக்கிறார்கள்; தொழிலாளர்களுடன் செய்துகொண்டும்



1984 மார்ச் 23] [திரு. ஆ. நல்லசிவன்]

ஒப்பந்தத்தை அவர்கள் மீறுகிறார்கள்; இதன் காரணமாக வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது; இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும்" என்று பிரதம மந்திரியிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மந்திரிகள் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாகப் பொதுக் கூட்டங்களில் பேசுகிறார்கள். என்னுடைய பாயின்ட் ஆஃப் வியூ, இது வெட்கப்படத்தக்க நிலைமையல்ல என்பதுதான். அரசாங்கத்தினுடைய பாதுகாப்போடு, பெரிய முதலாளிகளை எதிர்த்து அங்கே தொழிலாளர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி அங்கே நடக்கும்போது, இங்கே என்ன பண்ணுகிறார்கள்? பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது, இங்கே என்ன செய்கிறார்கள் என்பதை நான் ஒப்பிட விரும்புகிறேன். அப்படி ஒப்பிடும்போது, உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தது. நம்முடைய முதலமைச்சரவர்கள் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் எப்போது தலையிட்டார்கள்? 28—11—1983 அன்று ஸ்டிரைக் தொடங்கியது. 22—2—1984 அன்று ஸ்டிரைக் முடிந்தது. 87 நாட்கள் 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். ஏராளமான போலீஸ் படைகளை அனுப்பினார்கள். ஸ்டிரைக்கை முறியடிக்க முதலாளிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலம் வந்து, கோட்டையில் மகஜர் தரும்போது, அங்கே ஒரு மந்திரிகூட இல்லை, 10,000 குடும்பங்கள் வேலையில்லாமல் பட்டினி கிடந்தார்கள். அவர்கள் சார்பிலே மனு கொடுக்கும்போது, அதை வாங்க கோட்டையில் ஒரு மந்திரிகூட இல்லை. 50,000 பேர்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் கேட்க நாதியில்லை. கோட்டையில் அவர்கள் மகஜரை வாங்க ஆளில்லை. ஆனால் இப்படி எல்லாம் நடந்ததற்குப் பிறகு, ஸ்ட்ரைக்குக்கு ஆதரவாக தமிழ் நாட்டிலுள்ள எல்லாத் தொழிற் சங்க அமைப்புகளும் ஆதரவு அளித்தன. இயக்கம் நடந்தது. பிப்ரவரி 14 ஆம் தேதி சென்னை நகரில் பந்த் நடந்தது. பந்துக்கு பொதுமக்களும் ஆதரவு தர வேண்டுமென்று எல்லாத் தொழிற் சங்க அமைப்புகளும் கேட்டபோது, அந்த 'பந்த் கா'லுக்கு சென்னை நகரிலுள்ள பொதுமக்களிடம் ஆதரவு இருக்கும் என்று அரசு பார்த்த உடனே, அரசு பஸ்களை எல்லாம் ஓட விடாமல் செய்து வாபஸ் வாங்கிக்கொண்டது. அன்றைக்கு பஸ்கள் ஓடவில்லை. 50 ஆயிரம் பேர் பட்டினி கிடப்பதைப் பார்த்தும் 2 மாத காலத்திற்கு மேலாகியும் அரசு கவனிக்கவில்லை. பந்துக்கு ஆதரவாக பொதுமக்கள் ஆதரவு இருந்ததால்தான், அரசு பஸ்களை ஓட விடவில்லை. 14—2—1984-க்குப் பிறகு தான் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார்கள். நவம்பரில் ஆரம்பித்த ஸ்ட்ரைக் பற்றி பிப்ரவரியில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். முதலில்

தொழிற் சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தபோது, அரசு பேச்சு வார்த்தை நடத்த மறுத்தது. அங்கே போலீசை அனுப்பினார்கள். நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி என்று 2½ மாதத்திற்கு மேல் ஆன பிறகு, பந்த் எல்லாம் ஆரம்பித்த பிறகு பேச்சுவார்த்தை நடத்தியது. முதலிலேயே பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கக் கூடாதா? நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், பொதுமக்களிடம் இந்த ஸ்ட்ரைக்குக்கு வெகுஜன ஆதரவு இருக்கும் என்று அரசு எண்ணிய காரணத்தால்தான், பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அதுபோல் நெல்லிக்குப்பத்தில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதில் 1,500 பேரை வேலையை விட்டு நீக்கினார்கள். 925 பேர் மட்டும் போதும் என்றார்கள். மற்றவர்களைக் கழித்தார்கள். இந்த 1,500 பேருக்கு பதிலாக வெளியாட்களைக் கொண்டு சர்க்கரை மூட்டையை ஏற்றுவதற்கு முயற்சி செய்தார்கள்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நெல்லிக்குப்பத்தைப் பொறுத்தவரையில், டிரிபியூனல் கொடுத்த தீர்ப்பு சரியில்லையென்று சொல்லி அதை எதிர்த்து தொழிற் சங்கமே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. அப்படி நீதிமன்றத்தில் இருக்கும் ஒரு பிரச்சினை பற்றி உறுப்பினர் பேசலாம் என்றால், அவர் பேசட்டும், நானும் அதனுடைய நிலைமைபற்றி பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 26-ஆம் தேதி அது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்று கருதுகிறேன் தொழிற் சங்கமே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற பிரச்சினை பற்றி நான் பேசவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது என்றால், அதுபற்றிப் பேச வேண்டாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** உச்சநீதிமன்றத்தில் இருப்பது டிரிபியூனல் தீர்ப்பு சரியில்லை என்பதுபற்றி. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உச்சநீதிமன்றத்தில் இருக்கிற வழக்குபற்றிப் பேசலாமா என்பதுதான் பிரச்சினை. எதுவரை அந்த வழக்கின் தன்மை பற்றிப் பேசலாம் என்பதல்ல பிரச்சினை.



**திரு. ஆ. நல்லசிவன் :** அந்த பேக்டரிக்குள் சர்க்காருடைய போலீஸ் போயிருக்கிறது. டி. எஸ். பி. போயிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இது தொழிலாளர் போராட்ட விஷயம். உறுப்பினர் பேசும்வரை பொறுமையாக இருக்கிறேன். நான் குறுக்கிடத் தயாராக இல்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன். நெல்லிக்குப்பத்தில் எவ்வளவு லேபர் போர்ஸ் இருக்கிறது, என்று சொல்கிறபோது, 925 பேர் என்று ஸ்பெஷல் டிரிபியூனல் நிர்ணயித்திருக்கிறது. அதை எதிர்த்து ஒரு சங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. இந்நிலையில் உறுப்பினர் இதைப்பற்றிப் பேசும்போது நானும் பதில் சொல்வது சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்குமென்றால், நானும் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்களும் உறுப்பினரும் இதுபற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. தயவுசெய்து வேறு விஷயங்கள் பற்றிப் பேசலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அமைச்சர் அவர்கள் மணிக்கணக்கில் பதில் சொல்லப் போகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். உறுப்பினராக இருந்தாலும் சரி, அமைச்சராக இருந்தாலும் சரி, பேசிக்கொண்டிருக்கும்போது, பேசுகின்றவர் அனுமதி கொடுத்தால்தான் மற்றவர்கள் பேச முடியும்.

If the Hon. Minister is not yielding, then, nobody can interfere. It is all a matter between the Hon. member and the Hon. Minister.

(முற்பகல் 10-40)

**திரு. ஆ. நல்லசிவன் :** அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருப்பதால், நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால் அந்த மில்லில் வேலை செய்கிற போதே, இந்த வழக்கு அங்கே இருக்கிறபோதே, வேலை இல்லை என்று சொல்லி வேலையிலிருந்து அவர்களை வெளியே தள்ளலாமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிடும் ஒரு பிரச்சினை, விவாதத்திற்குள்ளாகி அது சட்டப்பிரச்சினையாக மாற்றப்பட்டு, உச்சநீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும் அதைத்தான் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்;

உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் மீண்டும் மீண்டும் அது தொடர்பான வேலைநிறுத்தம் போன்ற பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அதிலே அரசாங்கமோ, அரசாங்கத்தின் காவல் துறையோ நடந்துகொண்டது சரியில்லையென்று சொல்லி, டிரிபியூனல் தீர்ப்பும் சரியில்லையென்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லித்தான் உச்சநீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். சரியா, இல்லையா என்று தெரிந்துகொள்ளத்தான் உச்சநீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. ஆகவே தயவுசெய்து நெல்லிக்குப்பம் பிரச்சினையை விட்டு விட்டுப் பேசினால், நேரமும் மிச்சமாகும். வீணான வாதங்களும் குறையும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பிரச்சினை உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. அங்கே அது விவாதிக்கப்படவிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு அதற்குள்ளே போகலாம், எந்த அளவுக்குப் போகக்கூடாது என்பதை இங்கே முடிவுசெய்ய முடியாது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு, வேறு பிரச்சினைக்குப் போவது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** கரூர் மில்லில் 14-11-1983-லிருந்து 68 நாட்கள் ஸ்டிரைக் நடந்தது. சென்னையில் சிம்சன் பிரச்சினையில் தலையிட்ட இந்த அரசு கரூர் மில் பிரச்சினையில் ஏன் தலையிடவில்லையென்று நான் கேட்க விரும்புகிறேன். தொழிற் சங்கத் தலைவர்களைக் கூட்டி மாநாடு போடுங்கள், அதிலே நாங்களும் பங்கெடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னோம். அந்தப் பிரச்சினையில் அமைச்சர் என்ற முறையிலும் அரசு என்ற முறையிலும் நீங்கள் கலந்து கொள்ளலாம் என்று கேட்டோம். எது தீரும், எது தீராது என்று சொல்ல முடியாது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கோர்ட்டுக்குப் போனால் தீராது, ஆனால் கான்பரன்ஸில் பேசலாம் என்று சொல்லியும்கூட, இந்தப் பிரச்சினையைக் கோர்ட்டுக்கு விட்டிருக்கிறார்கள். கோர்ட்டுக்கு விட்டு 2 வாரம் ஆனபிறகும் கூட இப்போதும் ஸ்டிரைக் நடக்கிறது. இந்தப் பிரச்சினை கோர்ட்டில் தீர்க்கப்படமுடியாது என்ற நிலை ஏற்படுகிறபோது, மறுபடியும் கோர்ட்டுக்கு விட்டிருக்கிறார்கள். அப்படியானால், சிம்சன் பிரச்சினையில் 15 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகும், அந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு விட்டபிறகும், ஸ்டிரைக் தொடரலாமா என்று கேட்டார்கள். இங்கேயும் கோர்ட்டுக்கு விடப்பட்ட பிறகு, கரூர் மில்லில் ஸ்டிரைக் தொடருகிறது. அந்த ஒர்க்கர்ஸுக்குத் திருப்தி ஏற்படவில்லையென்று சொல்கிறபோது, ஏன் பேச மறுக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஸ்டிரைக்கை நீட்டிக்கவைத்து தொழிலாளர் போராட்டத்தை உடைப்பது





என்பதுதானே இந்த சர்க்காரின் நிலை. ஆகவே சென்னையில் சிம்சனில் இப்படிப்பட்ட நிலையில் பொது ஜனங்கள் மத்தியில் ஒரு கெட்ட அபிப்பிராயம் ஏற்படும் என்ற காரணத்தால், அரசு இங்கே தலையிட்டது. ஆனால் கரூர் மாதிரி இருக்கிற ஒரு தாலுக்கா தலைமை இடத்தில் சர்க்காரை நிர்பந்திக்கக்கூடிய இயக்கம் வராததால், தலையிட மறுக்கிறார்கள். நாங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் கோர்ட்டுக்கே விட்டுவிடுவோம், ஒரு பிரச்சினையையும் தீர்க்கமாட்டோம் என்றால் எப்படி? ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே. சிம்சன் பிரச்சினையில் தலையிடுகிறவர்கள், கரூர் மில்லில் கோர்ட்டுக்கு விட்டிருக்கிறார்கள். அப்படி விட்ட பிறகும், ஸ்டிரைக் நடக்கிறது என்றால், எப்படி? அதுவும் வெற்றிகரமாகத் தொடருகிறது என்ற நிலை இருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசுக்கு அக்கறை இல்லை என்றால், அந்த முதலாளி அரசுக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதுதான் காரணம். ஆகவேதான் கரூர் மில்லைப் பொறுத்தவரையில், அந்த நிலைமை இருக்கிறது.

அதைப்போல ரப்பர் தோட்டப் பிரச்சினை. மூவாயிரம் தொழிலாளர்கள் 4 மாதமாகப் போராடுகிறார்கள். புதுக் கோரிக்கையாக எதுவும் வைக்கவில்லை. ஏற்கெனவே அமுலில் இருக்கிற பஞ்சப்படியைத் தரவில்லையென்று போராடுகிறார்கள். இதனால் எவ்வளவு பால் உற்பத்தி நஷ்டம் ஏற்பட்டது? தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் போனதால் அவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது? 130 நாளைக்குப் பிறகு இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் சட்டத்தின் 10 (பி) பிரிவின்படி அதைப் பயன்படுத்தி அந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு விட்டார்கள். ஏன் 130 நாளைக்கு முன்பே அதை விடவில்லை? அப்போதே விட்டிருந்தால், அந்தப் பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும். லேபர் டிபார்ட்மெண்ட் சொல்லியும் கேட்காமல், அந்த முதலாளி இருந்திருக்கிறார். பிறகுதான் கோர்ட்டுக்கு விட்டிருக்கிறார்கள். அப்போதே விட்டிருந்தால் ரப்பர் பால் நஷ்டம் ஏற்பட்டிருக்காது, சம்பளம் நஷ்டமும் ஏற்பட்டிக்காது. காரணம், சி.ஐ.டி.யு. காரர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்களா, அதை விடக்கூடாது என்று இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மனோபாவம் ஒரு ஆட்சிக்கு இருந்தால் எப்படி இருக்கும்? அதுமட்டுமல்ல. 130 நாளைக்குப் பிறகு வருவது நியாயமென்றால், அதை ஆரம்பத்தில் விட்டிருந்தால், ரப்பர் பால் உற்பத்தி பெருகியிருக்கும். "அதை இழுத்து இழுத்துப் பார்ப்போம், அது உடைகிறதா என்று பார்ப்போம், உடைந்தால் உடைந்து போகட்டும். உடையாமல் இருந்து கெட்ட பெயர் ஏற்பட்டால் மறுபடியும் கவனிப்போம்". இதுதான் அரசின் கொள்கை.

இங்கே பிரிவு 10 (பி) என்பது அடிக்கடி அடிபடுகிறது. 10 (பி) என்பது ஒரு ஸ்டிரைக் அல்லது லாக்-அவுட் நடந்தால், அரசு அதைத் தடுப்பதற்காக ஒரு நிவாரணம் கொடுத்துவிட்டு தடுக்கலாம் என்பதாகும். இதைச் சொன்ன உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—இப்போது இல்லையென்றாலும், பின்னால் பேசும்போது—முன்பு 10 (பி)யை எதிர்த்தவர்கள் தான் இப்போது வரவேற்கிறார்கள் அல்லது கேட்கிறார்கள் என்று சொல்லுவார். நாங்கள் 10 (பி)யை ஏன் எதிர்த்தோம் என்றால், இந்த அரசின் கையில் அது இருக்கும் வரை அதைத் தொழிலாளர்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்துவார்களே தவிர, முதலாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதுதான் காரணமாகும். ஒரு ஸ்டிரைக் அல்லது லாக் அவுட் என்று வந்தால், உடனே இந்த விதியைப் பயன்படுத்தி அதைத் தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட அதிகாரம் அரசாங்கத்தின் கையிலே இருந்தால், தொழிலாளர்களுக்குப் பாதகமாக, தொழிலாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுமே தவிர, முதலாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதுதான் எங்கள் அபிப்பிராயம். இதற்கான ஆதாரத்தையே சொல்ல வேண்டுமென்றால், முதன் முதலில் இது தமிழ் நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின்போது தான் பயன்படுத்தப்பட்டது. அதாவது 1½ லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தாங்கள் 18 ஆண்டுகளாகப் பெற்று வந்த அதே போனஸ் அளவுக்கு இப்போதும் தரப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு பஞ்சாலை முதலாளிகள் மறுத்தார்கள். தரமாட்டோம் என்று எதிர்த்தார்கள். அப்போது ஒரு ஸ்டிரைக் நடந்திருந்தால், அதன் காரணமாக பஞ்சாலை முதலாளிகள் கீழே இறங்கி வந்திருப்பார்கள். ஆனால் அரசு அவர்களுக்கு அபயம் கொடுத்து, "நீங்கள் அந்த அளவுக்குப் போனஸ் கொடுக்க வேண்டாம், நாங்கள் இதை கோர்ட்டுக்கு விட்டுவிடுகிறோம்" என்று சொல்லி அப்போது தான் முதன் முறையாக 10 (பி) அரசாங்கத்தால் தொழிலாளர்களுக்குப் பாதகமாகப் பயன்படுத்தப்பட்டது. முதலாளிகள் அந்த போனஸ் தொகையைக் கொடுத்திருந்தால், ஸ்டிரைக்கைத் தடுத்திருக்கலாம். நீங்கள் கொடுக்க வேண்டாம், கோர்ட்டுக்குப் போன பிறகு அங்கே சொல்லுகிற மாதிரி கொடுக்கலாம் என்று முதன் முதலாகத் தொழிலாளர்களுக்கு எதிராக, முதலாளிகளுக்குச் சாதகமாக, முதலாளிகளின் அக்கிரமங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டது. எனவேதான் 10 (பி) அரசாங்கத்தின் கையில் இருந்தால், அது தொழிலாளர்களுக்கு எதிராக, அவர்களின் ஸ்டிரைக் அல்லது லாக் அவுட்டுக்கு எதிராக, அவைகளைத் தடை செய்யத்தான் பயன்படுத்தப்படும் என்பது எங்களுடைய கடந்த கால அனுபவம். அதை





எடுத்துக் காட்டத்தான் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போனஸ் கோரிக்கையின்போது, அதை நாசமாக்க 10 (பி) பயன்படுத்தப்பட்டது என்று இங்கே நினைவுபடுத்தினேன்.

இரண்டாவது தடவையாக நெல்லிக்குப்பம் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின்போது அவர்களுக்குப் பாதகமாகவும், முதலாளிகளுக்குப் பாதகமாகவும் 10 (பி) பயன்படுத்தப்பட்டது. நெல்லிக்குப்பம் ஆலை முதலாளி அதை மூடப்போகிறேன் என்று பேசிக்கொண்டிருந்தார். அதன் காரணமாக 4 மாத காலத்திற்கு லேபர் டிபார்ட்மெண்டில் கன்சிலியேஷன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அரசு அப்போதே அந்தப் பிரச்சினையை கோர்ட்டுக்கு விட்டால், முதலாளி குளோஷர் நோட்டீஸ் போட முடியாது. எனவேதான் முதலாளி குளோஷர் நோட்டீஸ் போடுகிறவரை காத்துக் கொண்டிருந்து, அவர்கள் அப்படி நோட்டீஸ் போட்ட பிறகு, அரசு இந்தப் பிரச்சினையைக் கோர்ட்டுக்கு விட்டது. அப்போதுதான் இரண்டாவது முறையாக 10 (பி) இந்த அரசால் பயன்படுத்தப்பட்டது. ஒரு ஆலை முதலாளி, ஒப்பந்தம் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருக்கிறார், அதைச் செய்ய வேண்டும் என்று லேபர் டிபார்ட்மெண்டில் 4 மாத காலம் கன்சிலியேஷன் இருந்து, கோர்ட்டுக்கு நாங்கள் விட வேண்டும் என்று கேட்டபோதெல்லாம் விடாமல், அந்த முதலாளி குளோஷர் நோட்டீஸ் கொடுத்த பிறகு அதைக் கோர்ட்டுக்கு விட்டார்கள். அதற்குக் காரணம் சட்டத்திலே கோர்ட்டுக்கு விட்டாலும், குளோஷர் நோட்டீசை அது பாதிக்காது என்று இருக்கிறது. பின்னாலே அந்தப் பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசியமேற்பட்டது.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இப்படி மேலவையில் இவ்வளவு நுணுக்கமாகப் பேசினாலும்கூட, தந்திரமாக இந்தக் காரியங்களையெல்லாம், அதுவும் தொழிலாளர்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்து கொண்டு வருவதுதான் இந்த அரசின் கொள்கையாக இருந்து வருகிறது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அதை நாங்கள் எதிர்த்தோம். ஆனால் அதன் கீழ் ரூல்ஸ் போடும்போது, நோட்டீஸ் கொடுத்துவிட்டுத்தான் ஒருவரைப் பிடிக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் ஒரு நோட்டீஸ்கூட கொடுக்காமல் ஒருவரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்தால், அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குப் போகவில்லையா? அப்படித்தான் 10 (பி)யை சரியாகப் பயன்படுத்தாமல், தொழிலாளர்களுக்குப் பாதகமாகப் பயன்படுத்துகிற நடைமுறையைப் பார்க்கிறபோது, நாங்கள் அதை எதிர்க்கிறோம்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 23

அடுத்து, போக்குவரத்துத் துறையின் பர்பார்மன்ஸ் போனஸ் என்று தரப்படுகிறது. அதாவது அவரவர்கள் செய்கிற வேலைக்குத் தகுந்தாற் போல், போனஸ் தரப்படுகிறது. ஆனால் உண்மையில் அங்கே என்ன செய்கிறார்கள் என்றால், ஒரு வருஷத்தில் ஒரு தொழிலாளி ஒரு மணி நேரம் ஸ்டிரைக் செய்தாலும்கூட, அந்த வருஷத்தில் அவருக்கு பர்பார்மன்ஸ் போனஸ் கிடையாது என்கிறார்கள். அதைப்போலவே அண்மையில் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு எலிஜிபிள் லீவு இருக்கிறது. அதாவது 'வீக்லி ஆஃப்' இருக்கிறது. அப்படிப்பட்ட 'வீக்லி ஆஃப்' நேரத்தில் ஒரு நாள் தர்ணா இருந்தாலும் கூட, அந்த வருஷத்தில் அந்தத் தொழிலாளிக்கு பர்பார்மன்ஸ் போனஸ் கிடையாது என்கிறார்கள். அதைப்போலவே 'பீஸ்புல் புரொடெஸ்ட்' என்ற சமாதான பூர்வமான ஆட்சேபணை செய்தாலும் கிடையாது என்கிறார்கள். இதிலே என்ன தவறு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இப்படி எலிஜிபிள் லீவின்போது ஒரு நாள் தர்ணா இருந்தாலும் 'பீஸ்புல் புரொடெஸ்ட்' செய்தாலும் அந்த வருஷம் பர்பார்மன்ஸ் போனஸ் கிடையாது என்று உத்தரவிடப்படுகிறது என்றால், தொழிலாளர்களுக்கு அரசு என்ன ஜனநாயக உரிமைகளை வழங்குகிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

இன்னுமொரு முக்கியமான விஷயம். இந்த அரசாங்கத்தில் இருக்கக் கூடியவர்கள், சி.ஐ.டி.யூ. சங்கம் என்பதற்காக பழி வாங்கும் போக்கிலே, பாரபட்சம் காட்டும் போக்கிலே போகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். டாட்டா ஆயில் மில் கம்பெனியில் முதலாளிக்கும், தொழிலாளிகளுக்கும் பஞ்சப்படி பற்றி ஒரு உடன்பாடு ஏற்படுகிறது. முதலாளிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், சட்டப்படி ஒரு உடன்பாடு தேவை. சட்டப்படி 18(1) அல்லது 12(3) என்ற பிரிவின் கீழ் உடன்பாடு ஏற்பட வேண்டும். 18 (1) என்பது தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே போடும் ஒப்பந்தம். 12(3) என்பது தொழிற் சங்கங்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே வேறு ஒரு ஆபிசர் முன்னிலையில் ஒப்பந்தம் போடுவது. ஆனால் இந்த லேபர் டிபார்ட் மென்டில் உள்ள ஆபிசர்கள் சாக்குபோக்குச் சொல்லி, கடந்த எட்டு மாதங் களாக ஒப்பந்தம் போடாமல் மறுக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், பஞ்சப் படியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் டாட்டா ஆயில் மில்லில்தான் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பதாகும். அங்கே ஆயிரம் ரூபாய்க்கு மேலே பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. இப்போதுள்ள



1984 மார்ச் 23] [திரு. ஆ. நல்லசிவன்]

விலைவாசிப் புள்ளிக்கு ஏற்றபடி, அதிகமாக மேனேஜ்மென்ட் கொடுக்க முன்வந்தால்கூட, தொழிற்சங்கங்களும் முதலாளிகளும் ஒத்துக் கொண்டாலும்கூட, இங்கேயுள்ள டெபுடி லேபர் கமிஷனர் திரு. லட்சுமணன் அதைக் குறைக்க வேண்டுமென்று யோசனை சொல்லுகிறார். அவர் சொன்ன யோசனையை முதலாளிகளும் ஒத்துக்கொண்டார்கள். அப்படியிருந்தும் இன்னும் 'அக்ரிமென்ட்' போடப்படவில்லை. அதற்குக் காரணம் அரசின் தலையீடுதான். அங்கேயுள்ள 295 தொழிலாளர்களும் ஒத்துக்கொண்டு கையெழுத்துப் போடுகிறார்கள். முதலாளிகளும் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் தொழிற்சங்கத் தேர்தலில், முறையாக நடந்த தேர்தலில் தோற்றுப் போன தலைவர் அதே பெயரை வைத்துக்கொண்டு பிரச்சினையைக் கிளப்பு வதால், அவரும் கையெழுத்துப் போட வேண்டும், அது அவசியமானது என்று கூறி லேபர் டிபார்ட்மென்டில் உள்ளவர்கள் அடம் பிடிக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுடைய தலையீடுதான் காரணம் என்று எனக்குத் தகவல். அப்படிப்பட்ட தலையீட்டின் காரணமாகத்தான் அக்ரிமென்ட் போடப்படவில்லை. ஆனால் "ஒரு சங்கத்தின் பெயரை இரண்டு பேர் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே அக்ரிமென்ட் போடப்படவில்லை". என்று சொல்லுகிறார்கள். அது உண்மையா? இல்லை. நாகப்பட்டினம் ஸ்டீல் ரோல் மில்ஸ், சென்னை சதர்ன் சுவிட்ச் கியர், குமரி இரப்பர் தோட்டம் ஆகிய நிறுவனங்களில் எல்லாம் ஒரே சங்கத்தின் பெயரை இரண்டு பேர் வைத்துக்கொண்டு அக்ரிமென்ட் போட அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே சி.ஐ.டி.யூ.வின் தலைவராக திரு. சிந்தன் அவர்கள் இருப்ப தால், அங்கீகரிக்கப்படவில்லை. இப்படி பாரபட்சமான முறையில் இயங்க அமைச்சர் பதவியைப் பயன்படுத்தலாமா? 300 தொழிலாளர்கள் மேனேஜ் மென்டோடு சட்டப்படி அக்ரிமென்ட் போடுவதை ஒரு அமைச்சர் பதவியில் உள்ளவர் தலையிட்டு தடுப்பது எப்படி நியாயமாகும்? இந்த அரசு பாரபட்சமாக நடக்கிறது என்பதற்கு இதை நான் உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். கிருஷ்ணா பாடி ஓர்க்ஸ், மதராஸ் என்ற கம்பெனியினில் 500 பேர் வேலை செய்கிறார்கள். கடந்த ஆறு மாதங்களாக அந்தக் கம்பெனி மூடிக் கிடக்கிறது. அசோக் லேலன்டுக்குத் தேவையான பாடியைச் செய்து கொடுத்து வந்தார்கள் அந்தக் கம்பெனியில். முதலாளிகள் பிடிவாதம் பண்ணுவதால், அந்தக் கம்பெனி இப்போது மூடிக் கிடக்கிறது. ஆகவே அந்தக் கம்பெனியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொண்டால் எந்தவிதமான நஷ்டமும் வராது. முழு வேலையும் கொடுப் பதற்கு அசோக் லேலன்ட் கம்பெனி தயாராக இருக்கிறது. அரசாங்கப்

போக்குவரத்து பஸ்களுக்கும் அங்கே பாடி கட்டலாம். 500 தொழிலாளிகள் வேலை செய்யக்கூடிய அந்தக் கம்பெனி இப்போது மூடிக் கிடக்கிறது. இந்த தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்தவராக இருப்பதால், அதைச் செய்ய அரசு தயாராக இல்லையென்று கருதுகிறேன்.

பி&சி மில் பிரச்சினையைப்பற்றிச் சொல்கிறேன். அதிலே உள்ள 12,000 பேர்களில் கிட்டத்தட்ட 7,500 பேர்கள் இரண்டு மாதங்களாக ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள். அந்த இரண்டு மாத ஸ்ட்ரைக்கில் சட்டப்படி தர வேண்டிய போனஸைக் கொடுக்க மறுக்கிறார்கள். இதே கம்பெனிக்குச் சொந்தமான பெங்களூரில் இருக்கிற மில்லில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். மீனம்பாக்கத்திலுள்ள பின்னி இன்ஜினியரிங் கம்பெனியில் போனஸ் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே கொடுக்க மறுக்கிறார்கள். இந்தப் பிரச்சினையையொட்டி நடக்கக்கூடிய ஸ்ட்ரைக்கிலே, இந்தக் கம்பெனிக்கு மேஜர் ஷேர் மத்திய சர்க்கார் தந்திருக்கிறது. இதிலே 65 கோடி ரூபாய் வரைக்கும் மத்திய சர்க்காரின் பைனான்சியல் இன்ஸ்டிடியூஷனிலிருந்து வந்திருக்கிறது. அப்படியெல்லாம் இருந்தும்கூட சென்னை நகரத்திலே 30 ஆயிரம், 40 ஆயிரம் பேர்கள் சம்பாதித்து வாழுகிற சென்னை நகரத்திலே அந்த மில் மூடிக் கிடக்கிறபோது, மத்திய அரசு இவ்வளவு பணத்தையும் தந்து, 65 கோடி ரூபாயை ஒரு தனியார் முதலாளி நிர்வாகத்திடம் கொடுத்திருக்கிறது. அதற்குப் பதிலாக அரசே 'டேக்ஓவர்' பண்ண வேண்டுமென்று இந்த இரண்டு அவைகளிலேயும் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பக் கூடாதா? எதற்கெல்லாமோ தீர்மானம் போடுகிறார்கள், அனுப்புகிறார்கள். சென்னை நகரத்திலே 30 ஆயிரம், 40 ஆயிரம் பேர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கிற பிரச்சினையில்—மத்திய அரசு தன்னுடைய மூலதனத்தைப் பூராவும் போட்டுவிட்டு, நேஷனல் பாங்கிலிருந்து 55 கோடி ரூபாயையும் கொடுத்து—இந்த இரண்டு அவையிலும் மத்திய அரசே இதை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் போடக்கூடாதா? தீர்மானம் போடுவதன் மூலமாக தமிழர்களுடைய உணர்வுகளையும் காட்டக் கூடாதா! சென்னை நகரத்திலே சுமார் 30 ஆயிரம் பேர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறபோது, சீக்கிரம் முடிவு எடுக்க அரசு என்ன அக்கறை காட்டுகிறது? பி & சி மில் ஒரு பாரம்பரியம் மிக்க மில். சென்னையிலே சென்ட்ரல் கவர்ன்மென்டினுடைய ஷேர் இருக்கிறபோது, அதை நிர்பந்திப்பதற்கு, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்கு இந்த இரண்டு அவைகளிலும் ஒரு தீர்மானம் போடக்கூடாதா என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். அரசு அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பதற்காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்பொழுது ஆர்கனைஸ்டு லேபர்களுக்காக நம்முடைய அரசு எவ்வளவு பண்ணியிருக்கிறதென்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆர்கனைஸ்டு லேபருக்கு அவர்கள் என்ன செய்தார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு Fall Back- Wage Back கொடுக்கலாமென்று நான் அப்போதே சொன்னேன். கவர்ன்மென்ட் ஜி.ஓ. போட்டது. அந்த ஜி. ஓ. என்ன சொல்கிறது என்றால், தொழிலாளிக்கு முதலாளி வேலை கொடுக்காத காலத்தில், ஒரு நாளைக்கு 500 பீடி சுற்றுவதற்கு எவ்வளவு சம்பளம் உண்டோ அந்தச் சம்பளத்தை வேலை செய்யாமல் இருந்தால் கூட—அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருந்தால் கூட—அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறது. இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்டிலே தொழிலாளிக்கு வேலை கொடுக்காமல் இருந்தால், 'லே ஆப்' பண்ணினால் பாதிச் சம்பளமும், பாதிப் பஞ்சப்படியும் தர வேண்டுமென்று இருப்பதைக் காரணமாகக் காட்டி பீடித் தொழிலாளர்கள் வற்புறுத்தியதன் காரணமாக Fall Back Wage கொடுக்கலாம் என்று அரசே ஒரு ஜி.ஓ. போட்டது. ஆனால் அரசு போட்ட ஜி.ஓ.வில் என்ன பண்ணினார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். காலநிலை சரியில்லாததன் காரணமாக பீடித் தொழிலாளர்களுக்கு வேலைக்குக் கூலி கொடுக்காவிட்டால், நெருப்புப் பிடித்தால், மழை பெய்தால், மின்வெட்டு ஏற்பட்டால், தொத்து வியாதி பரவினால், சமூகக் கலவரங்கள் ஏற்பட்டால், சரக்குகளுக்குத் தேக்கம் ஏற்பட்டால், கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டால், இவ்வளவும் ஏற்பட்டாலும் அவர்களுக்கு Fall Back Wage இல்லை. அப்படியானால் எப்போதுதான் Fall back wage கொடுப்பார்கள்? அவர்களுக்கு வேலை இல்லாமல் போகிற காரணமும் இது தான். இத்தனை காரணமும் இருந்தாலும் அவர்களுக்கு Fall Back Wage இல்லை என்றால், எப்போது கொடுப்பார்கள்? போகாத ஊருக்கு வழி காட்டுகிறார்களே, அந்தத் தொழிலாளிக்கு அங்கே வேலை கிடைக்கவில்லை என்றால், அதை விட்டால் வேறு எங்கே வேலை அவனுக்குக் கிடைக்கும்? வேலை கிடைக்காத காரணத்தால் தான், குறிப்பிடுகிறார்கள். எவ்வளவு பாதிப்பு இருந்தாலும், அவனுக்கு Fall Back Wage கிடையாது. அவனுக்கு எப்போது கிடைக்கும்? இப்படி ஒரு ஜி.ஓ. போட்டதை சட்டமன்றப் பேரவையிலே எடுத்துக் காட்டியபோது, அது தவறுதான் என்று ஒப்புக் கொண்டு அது அப்படி மோசமாக இருக்கிறது என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். இன்று வரைக்கும் அதைத் திருத்தவில்லை. இந்த ஜி.ஓ. போடப்பட்ட தேதி 6—10—80. மூன்றரை வருஷம் ஆகிவிட்டது. தமிழ்நாட்டில் இருக்கிற மூன்று இலட்சம் பீடித் தொழிலாளர்களுக்குச் சம்பளம்

[திரு. ஆ. நல்லசிவன்] [1984 மார்ச் 23

(முற்பகல் 11—00)

கொடுப்பதற்காகப் போடப்பட்ட ஜி.ஓ.க்குப் பிறகு மூன்று வருடங்கள் ஆகி விட்டன. இன்னும் திருத்தப்படவில்லை. ஆனால் அரசு விளம்பரம் பண்ணுகின்றது. உழைப்பாளர்களுக்காக இந்த அரசு இருக்கின்றது என்று சொல்கின்றது. தமிழ்நாட்டிலே மூன்று இலட்சம் பீடித் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. மூன்று வருடங்கள் ஆகியும் அவர்களுக்கு வழி யில்லை. அதற்காக அரசு கண் கலங்கவில்லை. இந்த நிலைமையில் உழைப் பாளர்கள் நலன் காப்பதுபற்றிப் பேசுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர் பாதுகாப்புத் திட்டம் என்று சொன்னார்கள். கைத் தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அதிலே என்ன பண்ணுகிறார்கள் என்றால், 'கோ-ஆபரேட்டிவ் செக்டாருக்கு இது அப்ளை' ஆகாது என்று சொன்னார்கள். கோ-ஆபரேட்டிவ் செக்டாருக்குப் பொருந் தாது என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன சொல் கின்றார்கள் என்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற கைத்தறி நிறுவனங்களில் 2/3 பங்கு கோ-ஆபரேட்டிவ் செக்டாரில் இருக்கின்றது என்று அவர்களே சொல்கின்றார்கள். அதாவது 67 சதவிகிதம் கோ-ஆபரேட்டிவ் செக்டாரில் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள் என்றால், மீதம் 33 பர்சென்ட் தனியார் செக்டாரில் இருக்கின்றது என்று அர்த்தம். அப்படி இருக்கும்போது இந்தச் சட்டம் கோ-ஆபரேட்டிவ் செக்டாருக்குப் பொருந்தாது என்றும் சொல்கின்றார்கள். கோ-ஆபரேட்டிவ் செக்டாருக்குப் பொருந்தாது என்று சொல்லி, அதை யாரிடம் யார் கையில் கொடுத்திருக்கின்றார்கள் என்றால், அந்தச் சட்டத்தை இம்ப்ளிமென்ட் பண்ணுவதை டைரக்டர் ஆஃப் ஹேண்டாலும்ஸ் அவர்களிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். 2/3 பங்கு கோ-ஆபரேட்டிவ் செக்டாரில் கைத்தறி இருக்கின்றது. அது பொருந்தாது என்று சொன்னவுடன் முதலாளிகள், மாஸ்டர் வீவர்ஸ் எல்லாம் கோர்ட்டுக்குப் போகின்றார்கள். தனியார் துறைக்கும், கோ-ஆப்பரேடிவ் செக்டாருக்கும் இடையே பாரபட்சம் இருக்கின்றது என்று காட்டி சட்டத்தையே முடக்கிப் போட்டு விட்டார்கள். நாங்கள் பேரவையிலே சொன்னோம். மேலவையிலும் சொன்னோம். கோ-ஆப்பரேடிவ் செக்டாருக்கு அப்படி கொடுக்காதீர்கள் என்று சொன்னோம். அப்படிக் கொடுத்ததால் தான் அதையே காரணம் காட்டி, அதை ஹைக்கோர்ட்டிலே போட்டு, அதற்கு 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். அதை அவர்கள் கெடுத்து விடுவார்கள் என்று நாங்கள் சொன்னோம். கோ-ஆப்பரேடிவ் செக்டாருக்கு அப்படிச்



1984 மார்ச் 23] [திரு. ஆ. நல்லசிவன்]

சொல்லியதால், அதை அங்கே அனுப்பி, தனியார் கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கியிருக்கின்றார்கள். ஆனால் இதிலே எவ்வளவு பெரிய விளம்பரம் நடந்திருக்கின்றது. பார்த்தீர்களா? தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ், கைத்தறி நிறுவனம், ஒரு செல்வாக்கான நிறுவனம் என்று சொல்கிறோம். அந்த நிறுவனத்திலே உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இப்படி வந்திருக் கின்றது. ஆனால் கைத்தறி நெசவாளர்களுக்குச் சாதகமாக இருப்பதாக விளம்பரம் பிரமாதமாக இருக்கின்றது. அந்தச் சட்டம் எங்கே இருக்கின்றது? அது இப்போது மூலையிலே கிடக்கிறது. அதைப்பற்றி ஒரு வார்த்தை பேசு கின்றார்களா? இல்லை. தமிழ் நாட்டிலே கோ-ஆப்பரேடிவ் செக்டார் அப்படி இருக்கின்றது. 66 சதவிகிதம் அளவுக்கு உள்ள நிறுவனம் அப்படி இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையிலே தனியார் அந்தச் சட்டத்தை முடக்கி விட்டிருக்கின்றார்கள். இதுகூட வேண்டுமென்றே, "அவனை இப்படி அடிக்கின்ற மாதிரி அடிக்கிறேன், அழுகிற மாதிரி அழு" என்பது போல செய் திருக்கின்றார்கள். வேண்டுமென்றே அது கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று செய்து விட்டார்களோ என்று நான் கருதுகிறேன். அப்படி எண்ண வேண்டிய அளவுக்குச் செய்திருக்கின்றார்கள். அந்த 67 சதவிகிதம் கோ ஆப்பரேடிவ் செக்டாருக்கு ஏன் அப்படி விதி விலக்கு அளித்திருக்கின்றார்கள் என்று காரணம் கேட்டால், அவர்கள் சொல்கின்றார்கள். அது என்ன என்றால், "அதிலே ரொம்ப ஜனங்கள் இருக்கின்றார்கள். அதாவது அதிலே ஷேர் ஹோல்டர்ஸ் என்று இருக்கின்றார்கள். அந்த முறையில் அவர்களுக்கு டிவிடண்ட் கொடுக்கின்றார்கள். ஆனால் கோ-ஆப்பரேடிவ் செக்டாரில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு 'இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்' பொருந்தாது, தொழிற்சாலைச் சட்டம் பொருந்தாது. 'டிஸ்மிஸ்' பண்ணினால், கோர்ட்டுக்குப் போக முடியாது. 'பேமெண்ட் ஆஃப் வேஜஸ் ஆக்ட்' பொருந்தாது. 'மெட்டர்னிட்டி பெனிபிட் ஆக்ட்' பொருந்தாது. 'நேஷனல் பெஸ்ட்டிவல் ஹாலிடேஸ் ஆக்ட்' பொருந்தாது என்று சொல்லி யிருக்கின்றார்கள். இந்த நாட்டிலே உள்ள அந்த உழைப்பாளர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்தச் சட்டங்கள் பொருந்தாது. 'இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்' பொருந்தாது. இப்படி கோவாப்ப ரேடிவ் செக்டாரில் சட்டங்கள் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட சட்டமே இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். தனியார் அதன்பேரில் கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கி செயல்படுத்த முடியாமல் ஆக்கிவிட்டிருக்கின்றார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் என்று சொல்கின்றார்கள். தொழிலாளர் துறையிலே அதனுடைய பலன் இன்று கைத்தறி நெசவாளர்க்குக் கிடைக்காமலே போய்

விட்டது. தமிழ் நாட்டிலே அந்த நிலைமையைப் பார்க்கிறோம். இப்படித் தான் ஆடம்பரமான ஸ்கிம்ஸ், பாப்புலீஸ்ட் ஸ்கீம்களை அறிமுகப்படுத்தி பிரமாதப்படுத்தி விளம்பரம் பண்ணுகிறார்கள். அது 3-வது நாள் பிசு பிசுத்துப்போய்விடுகிறது. அது எங்கே போயிருக்கின்றது என்று பார்க் கின்ற அளவுக்கு. நிலைமைகள் இருக்கின்றன. கைத்தறி நெசவாளர்களுக்கு தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.

தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு ஒரு சட்டம் வேண்டும். பேக்டரிகளிலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்களை ஆண்டுக் கணக்காக டெம்பரரியாக வேலையில் வைத்திருக்கிறார்கள். அவர்களை நிரந்தர மாக்குவதற்கு என்று சட்டத்தை இந்த அரசு கொண்டுவந்தும், அதைச் சரி யாக நிறைவேற்றவில்லை. ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கின்றது. மத்திய அரசுச் சட்டம். அது என்னவென்றால், 12 மாதங்களில் ஒரு தொழிலாளி 240 நாட்கள் வேலை செய்திருந்தால், அந்தத் தொழிலாளி நிரந் தரமான தொழிலாளியாகக் கருதப்பட்டு சரி செய்ய வேண்டும் என்று இருக்கிறது. நான் சொல்கிறேன். இப்போது 240 டேஸ்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஒரே ஒரு சந்தேகம். 240 நாட்கள் வேலை செய்திருந்தால், பெர்மனன்ட் ஆக்கவேண்டும் என்று மத்திய அரசு சட்டம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த ஆக்ட்? அதன் செக்ஷன் என்ன என்று அவர்கள் சொன்னால், அதை நான் தெரிந்துகொண்டு, அதற்கு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல் வதற்கு உதவியாக இருக்கும். 'பெர்மனன்ட்' ஆவது. அவனுடைய உரிமை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இருவரில் ஒருவர் உட்கார்ந்து, மற்றவர் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் தெளிவு படுத்துவதற்காகச் சொல்கிறேன்.

(திரு. நல்லசிவன் எழுந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 45 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக் கின்றார்கள். நான் சொல்லிவிடுகிறேன். இன்னும் எவ்வளவு வேண்டு மானாலும் பேசட்டும். நான் காத்திருக்கிறேன். நான் தெளிவுபடுத்தி விடுகிறேன். நாங்கள் கொண்டு வந்தது 'confer a permanent status' அதாவது 24 மாதங்களில் 480 நாட்கள் ஒரு தொழிலாளி வேலை



செய்திருந்தால், அவனை பெர்மனன்ட் செய்துவிட வேண்டும் என்பதுதான் நம்முடைய சட்டம். மாண்புமிகு உறுப்பினர் 240 நாட்கள் வேலை செய்தால் பெர்மனன்ட் செய்துவிட வேண்டும் என்று மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சில பெர்மனன்ட் தொழிலாளர்களுக்கு, சில அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்பது வேறு. Benefits which are being enjoyed by the permanent employees. என்பது வேறு. நாங்கள் கொண்டு வந்திருப்பது, 24 மாதங்களில், 480 நாட்கள் வேலை செய்திருந்தால் பெர்மனன்ட், செய்து விடவேண்டும் என்பது. அது போல் 240 நாட்கள் வேலை செய்தால் யாரையும் பெர்மனன்ட் ஆக்கிவிட வேண்டும் என்று மத்திய அரசுச் சட்டம் இருக்கின்றதா? அப்படி எந்த ஆக்ட்-ல் இருக்கிறது? எப்போது கொண்டு வந்தார்கள்? அதைப்பற்றிச் சொன்னால், உபயோகமாக, உபகாரமாக இருக்கும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில், அப்படி இல்லை. அதனால்தான் நான் அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்: I will be benefited.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிரச்சினை குறித்து ஓராண்டுக்கு முன்புகூட இதேமாதிரி மாண்புமிகு உறுப்பினர் பேசி, மாண்பு மிகு அமைச்சர் அவர்களும் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பதெல்லாம், ஓராண்டு ஆனதற்குப் பிற்பாடு நிரந்தரமாக்க வேண்டு மென்று ஏதாவது சட்டமிருக்கிறதா என்பதுதான்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. 240 நாட்கள் ஆனவுடனே, 'Automatic' ஆக, நிரந்தரமாக்க வேண்டுமென்று சென்ட்ரல் ஆக்டில் இருப்பதாகச் சொல்ல வில்லை. ஆனால் சென்ட்ரல் ஆக்டிலே, 240 நாட்கள் வேலை செய்த ஒரு தொழிலாளிக்கு, நிரந்தரமாக்கப்பட்ட ஒரு தொழிலாளிக்குள்ள பல உரிமைகள் கிடைக்கின்றன என்றுதான் அன்றைக்கும் சொன்னேன், இப்போதும் சொல் கிறேன். அப்படி சென்ட்ரல் ஆக்ட் இருக்கிறபோது, நாம் அதை 'பிரின்சிபில்' ஆக ஒத்துக்கொண்டிருக்கிறபோது, மாநில அரசு, தன்னுடைய சட்டத்தில் 240 நாள் வேலை செய்த தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது என்று கொண்டு வந்தால், பாராட்டியிருப்போம். ஆனால் அதற்கு மாறாக 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்திருந்தால்கூட, பாராட்டியிருக்கலாம். ஆனால் இந்தச் சட்டம் 1—1—1982-லிருந்து அமுலுக்கு வருமென்றும் போட்டிருக்கிறார்கள். அப்படியானால் 1—1—1982-க்குமுன் யாராவது 480 நாட்கள் வேலை செய்

திருந்தாலும், அவர்களுக்கு நிரந்தரமாகாது. அதைப்போல் முதலாளிகள் நீதிமன்றத்திற்குப் போய் 'ஸ்டே' வாங்கிவந்துவிட்டார்கள். இவ்வாறு முதலாளிகள் உயர்நீதிமன்றத்திற்குப் போய் ரிட் போட்டு 'ஸ்டே' வாங்கி வருவதற்கு ஓட்டைகளை வைத்து, முதலாளிகளுக்குச் சாதகமாகச் சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். 1—1—1982 என்று சொல்லியிருப்பதால், 1—1—1982-க்கு முன்பு 480 நாட்கள் வேலை செய்துள்ளவர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது. இச்சட்டம் வந்ததற்குப் பிறகு, முதலாளிகள் 480 நாட்கள்வரை எவரையும் வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை. 24 மாதங்களில் எவரும் 480 நாட்கள் வேலைசெய்துவிடாத அளவிற்குப் பார்த்துக் கொள்கிறார்கள். மாதத்தில் 20 நாட்கள் ஒருவர் வேலைசெய்தால்தான் 480 நாட்கள் வரும். எனவே யாருக்கும் மாதத்தில் 20 நாட்களுக்கு வேலை கொடுப்பதில்லை. 15 நாட்களுக்குத் தான் வேலை கொடுக்கிறார்கள். எனவே எவருக்கும் 24 மாதத்தில் 360 நாட்களுக்கு மேல் வாராமல் செய்துவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டத்தைப்பற்றி சட்டசபையில் விமர்சனம் செய்யும்போது, முழுமையாக நல்லமுறையில் விமர்சனம் செய்தால், நன்றாக இருக்கும். 15 நாட்கள் நிறுத்திவிட்டு, பிறகு 15 நாட்களுக்கு வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சரியில்லை. யாராவது ஒரு தொழிலாளியை நிறுத்திவிட்டு, 90 நாட்களுக்குள்ளாக வேறொரு தொழிலாளியை வேலைக்கு வைத்தால், நிறுத்திவிட்ட தொழிலாளிக்கு 'கண்டினியுடி ஆப் சர்வீஸ்' உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 'ஆஸ்பெக்ட்'-ஐக் கொஞ்சம் ஆழமாகப் படித்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நன்றாக இருக்கும். அதுமாதிரி ஏமாற்ற முடியாது. 'இம்பாசிபிள்'. சட்டத்தை அவ்வளவு கேர்ஃபுல்லாக 'டிராஃப்ட்' பண்ணியிருக்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி 'ஷரத்து' போட்டிருப்பது வாஸ்தவம். ஆனால், 'இம்ப்ளிமென்டேஷன்' இருக்கிறதா? இந்த நிரந்தரமாக்கும் சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் இத்தனை தொழிற்சாலைகளில் இத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், நான் பாராட்டுவேன். ஆனால் அப்படிச் சொல்ல முடியுமா? முடியாது. காரணம் சாக்கில்லை. இதுபோல் மாண்புமிகு அமைச்சர் நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பேசாமல் இருக்கிறார். "1—1—1982 க்குப் பிறகு" என்று சட்டம் போட்டதால், 1—1—1982-க்குமுன் 480 நாட்கள் வேலை பார்த்தவர்களுக்கு வேலை



கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று முதலாளிகள் கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள் என்றும், அதுமாதிரி ஓட்டை வைத்து சட்டத்தை இந்த அரசாங்கம் தயாரித்திருக்கிறதென்றும் சொன்னேன். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. 1—1—1982-க்கு முன்பாக 480 நாட்கள் பூர்த்தியாகி இருந்தாலும்கூட, அவர்களுக்கு வேலை நிரந்தரமாக்குவதற்கான ஏற்பாடு செய்யாமல், முதலாளிகள் ஹைகோர்ட்டில் 'சேலஞ்ச்' பண்ணி 'ரிட்' போட்டு 'ஸ்டே' வாங்குமளவிற்கு சட்டத்தில் ஓட்டை வைத்திருப்பதற்கு இந்த அமைச்சருக்குப் பொறுப்புண்டா? இல்லையா? உண்டு. இந்தமாதிரி சட்டங்களைப் போடுகிறபோது, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு தருவதுபோல் போட்டுவிட்டு, ஆனால் முதலாளிகளுக்குச் சாதகமாக ஓட்டைகளை வைத்துக்கொண்டே போடுகிற தந்திரத்தை இந்த அரசு செய்கிறது என்றுதான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மோட்டார் வண்டிகள் சட்டம் என்பது, பேக்டரியில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கு பேக்டரிச் சட்டம் எப்படியோ, அப்படித்தான். ஆனால் மோட்டார் வண்டிகள் சட்டத்திலே தொழிலாளர்களுக்கு 'நேஷனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ்' க்கு ஏற்பாடு இல்லை; கேன்டீன் வசதி ஏற்படுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை; டிஸ்பென்சரி வைக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை; ரெசஸ் ரூம் கட்ட வேண்டுமென்ற கட்டாயமில்லை. இவைகளெல்லாம் மோட்டார் வாகனச் சட்டத்தில் இல்லாததால், இவைகளைத் தர வேண்டுமென்றும், பேக்டரி சட்டத்திற்கு இணையாக இந்தச் சட்டத்தையும் கருதவேண்டுமென்றும் ஒரு சங்கம் கோர்ட்டுக்குப் போக வேண்டிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலையில், தொழிலாளர் அரசு, தொழிலாளர் அரசு என்று பெருமை அடித்துக்கொள்கிறது இந்த அரசு. ஒரு லட்சம் மோட்டார் தொழிலாளர்கள் வேலை செய்யும் தமிழ் நாட்டில், அவர்களுக்குப் பாதுகாப்பு தர முடியவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, ஆண் பெண் சம உரிமைச் சட்டம். இது மத்திய அரசு போட்ட சட்டம். தமிழ் நாட்டில் இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது, பெண்களுக்கு என்னென்ன வேலை வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய, குறிப்பாக தேயிலைத் தோட்டத் தொழிலிலே பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பு இருக்கிறதா என்று ஆராய ஒரு கமிட்டியைப் போட்டார்கள். எங்கள் மாநில அமைப்பிலே உள்ள, சி.ஐ.டி.யு. வைச் சேர்ந்த ஒரு பெண்கூட அந்தக் கமிட்டியிலே இருக்கிறார்கள். 1982-ல் அந்தக் குழு பரிசீலித்து, ரிப்போர்ட்

எல்லாம் கொடுத்திருக்கிறது. ஆனால் 1982-க்குப் பிறகு 1984 வரையில் அந்தக் கமிட்டி கூடவே இல்லை. அதன் ரிப்போர்ட் என்ன என்பது யாருக்கும் தெரியாது. ஆண் பெண் சம உரிமைச் சட்டத்தை தமிழ் நாட்டில் அமுல்படுத்துவதற்காகப் போட்ட கமிட்டி என்னவாயிற்று என்பது யாருக்கும் தெரியவில்லை. அடுத்து குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் எத்தனை சட்டங்களை வைத்திருக்கிறார்கள் ?

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவரவர்களே, சட்டங்கள் நிறைய இருக்கின்றன. இன்னும் 10 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டத்திற்கு மத்திய அரசு ஒரு வழிகாட்டுதலைக் கொடுத்திருக்கிறது.

Minimum wages should be revised in all the States once in every two years and on rise of every 50 points based on the 1960 consumer price index.

1960 ஆம் ஆண்டு பிரைஸ் இன்டெக்சை அடிப்படையாகக் கொண்டு, 50 புள்ளிகள் கூடினால் அதைக் கணக்கெடுத்து, பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. அதுவும் 2 வருடங்களுக்கு ஒரு முறை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. தமிழ் நாட்டிலே பல தொழிற்சாலைகளிலே 3, 4 வருடங்கள் ஆகியும் இதைச் செய்வதில்லை. 1981 மார்ச்சிலே, 1960 பிரைஸ் இன்டெக்சை அடிப்படையாகக் கொண்டு, பிரைஸ் இண்டெக்ஸ் 420 புள்ளிகள் ; 1983-ல் 561 புள்ளிகள். 141 புள்ளிகள் உயர்ந்தும் கூட, 50 புள்ளிகள் என்ற அடிப்படையில் 3 மடங்காகியுங்கூட, இதுவரை ரிவைஸ் பண்ணவில்லை. மினிமம் வேஜஸ் ஆக்டை. அப்படி ரிவைஸ் பண்ண சட்டத்திலே இடமிருக்கிறது. 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' என்பது அன்ஆர்கனைஸ்ட் லேபருக்காகப் போட்ட சட்டம். நாங்கள் ஆர்கனைஸ்ட் லேபருக்காக சண்டை போடும்போது, "இவர்களைப் பற்றித்தான் கவலைப்படுகிறீர்கள், அன்ஆர்கனைஸ்ட் லேபர் பற்றி நீங்கள் கவலைப்படுவதில்லை" என்று கண்ணீர் வடிக்கிற அரசு, அன்ஆர்கனைஸ்ட் செக்டரில் உள்ள தொழிலாளர்கட்கு, 50 புள்ளிகள் பிரைஸ் இண்டெக்ஸ் உயரும்போது ஊதியத்தை ரிவைஸ் பண்ண வேண்டுமென்ற பிரின்சிபிளை அமுல்படுத்தாமல் இருப்பது என்ன நியாயம்? எங்களுக்கு எதிராக உபயோகப்படுத்தத்தானா 'அன்ஆர்கனைஸ்ட் லேபர்'? அவர்களுக்கு விவரம் தெரியாதா? எங்களுக்கு எதிராக உபயோகப்படுத்துகிறார்கள் என்று. அவர்கள் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினையில் அரசு மாதக் கணக்கில் உறங்கிக் கொண்டிருப்பது ஏன்? ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.





அதைப்போல கைத்தறி நெசவாளர் குறைந்த பட்சச் சம்பள நிர்ணயச் சட்டம். இப்போது அரசு குறைந்த பட்சச் சம்பளத்தை அறிவித்துவிட்டது. ஆனால் அது அமுல் நடக்காமல் இருக்கிறது. கலெக்டர், தாசில்தார்கள் ஆகியோர் போய் சர்க்கார் நிர்ணயித்துள்ளதைவிட குறைவாக அக்ரிமெண்ட் போடுகிறார்கள். அரசு அதிகாரபூர்வமாக நோட்டிபிகேஷன் மூலம் அறிவித்துள்ளதற்கும் குறைவாக நிர்ணயிக்கிறார்கள். அப்படிப் போட்ட அக்ரிமெண்டுகளையும் அமல் நடத்தவில்லை என்று தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு மாத காலமாக ஸ்டிரைக் செய்கிறார்கள். லேபர் டிபார்ட்மெண்ட் என்ன செய்யும் என்பது தெரியவில்லை. மினிமம் வேஜஸ் ஆக்டில் உள்ளதற்கும் குறைவாக, கலெக்டர் இருந்து, அக்ரிமெண்ட் போட்டாலும், அதை அமுல் செய்ய மறுக்கிறார்கள். அங்கே ஒரு மாதமாக ஸ்டிரைக் செய்கிறார்கள். அதைக் குறித்து ஒன்றும் செய்யவில்லை.

அடுத்து, விவசாயத் தொழிலாளர்கள் கூலி நிர்ணயம். இவர்களும் 'அன் ஆர்கனைஸ்ட் லேபர்' தான். அவர்களைப்பற்றி என்ன கவலைப்படுகிறது அரசு என்று கேட்க விரும்புகிறேன். தினசரிக் கூலி 11, 10, 8 ரூபாய் என்றும், பண்ணை ஆட்களுக்கு 210 ரூபாய் என்றும் நிர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இதை அமுல் நடத்த ஒரு ஏற்பாடுமில்லை. இன்றைய தினம் கிராமப் புறங்களிலே விவசாயத் தொழிலாளர்கள் 70, 80 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் வரும்போது, அவர்களுக்குக் குறைந்த ஊதியமான 11, 10, 8 ரூபாய் என்றும், பண்ணையாட்களுக்கு 210 ரூபாய் என்றும் நிர்மானிக்கப்பட்டதை அமுல்படுத்த ஏற்பாடில்லை. பேரவையிலே ஒரு கேள்வி கேட்டபோது "யாராவது இதனை அமுல்படுத்தவில்லையென்றால், பாதிக்கப்பட்டவர்கள் லேபர் கோர்ட்டுக்குப் போவார்கள்" என்று சொன்னார்கள். ஒரு சாதாரண ஏழையெளிய அக்ரிகல்சுரல் லேபரர், கிராமத்தில் இருப்பவர், 2 வேளை கூட சாப்பிட வசதியில்லாதவர் கிராமத்திலிருந்து திருச்சிராப்பள்ளியில் இருக்கிற லேபர் கோர்ட்டுக்குப் போக முடியுமா? மத்திய அரசு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையெல்லாம் கேட்டு 240 ரூபாய் என்று நிர்மானித்து முடிவெடுத்ததை நம்முடைய அரசு 210 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறது.

அதுபோல் இன்றைக்கு காண்டிராக்ட் முறையில் தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்றைய தினம் இந்தவகையில் மின்சார வாரியத்தில் காண்டிராக்ட் லேபராக இருக்கிறார்கள், அதுபோல் டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிறார்கள். பேக்டரி-

களில் வாட்ச்மேன் காண்டிராக்ட் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார். எக்ஸெர்வீஸ்மென்னுக்காக ஒரு பியூரோ வைத்திருக்கிறார்கள். அவர்கள் தினசரி 8 மணி நேரத்திற்கு இவ்வளவு தொகை வேண்டுமென்று பேக்டரியி லிருந்து கேட்டு வாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் வாங்குகின்ற தொகை யில் ஒரு குறிப்பிட்ட தொகையை காண்டிராக்ட் அடிப்படையில் வாட்ச்மேன் களுக்கு இவர்கள் வழங்குகிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு, இப்படிப்பட்ட வாட்ச்மேனை முதற்கொண்டு காண்டிராக்ட் அடிப்படையில் நியமிக்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் 1980-ல் தேர்தலுக்கு முன்பு தேர்தல் அறிக்கையிலே இரண்டு விஷயங்களை இன்றைக்கு ஆளுகின்ற கட்சி அறிவித்திருந்தது. அதிலே "பொதுவாக இரண்டு வகை அரசு உண்டு. ஒரு வகை அரசு பணக்காரர், ஏழைகள் என்கிற வகையில் தரம் பிரிக்காமல், சண்டை போடாமல் பார்த்துக் கொள்வது. இன்னொரு வகை அரசு அறவழியில் சமூக பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வரும் வகையில் செல்வங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையிலுள்ள அரசு" என்று சொல்லியிருந்தார்கள். இரண் டாவது வகையில் நம்முடைய அரசு செயல்படுவதாகச் சொல்கிறது. ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், 1980 க்கு முன்பும் இந்த அரசு அதன் படி செயல்படவில்லை, 1980 க்குப் பிறகும் அதன்படி செய்யவில்லை. 1982-83-ல் நடைபெற்றிருக்கக்கூடிய வேலை நிறுத்தங்களும், மேன் டெயிஸ் லாசும் இந்த அரசு எந்தவகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்று. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக பாதிக்கப் பட்ட மக்கள் போராடுகிறபோது, இந்த அரசு அவர்களை நசுக்குகிறது. ஆனால் அதேவேளையில் அரசு தொழிலாளர்களுக்காக நன்மை செய்வதாக பிரசாரமும் செய்கிறது. போடுகின்ற சட்டங்களையும், செயல் முறைகளை யும் தடுத்து முதலாளிகள் நீதிமன்றங்களுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கும் அளவுக்கு வழிவகை செய்து சட்டங்களைப் போடுகிறது. இங்கே தொழி லாளர் மத்தியில் ஒன்றைச் சொல்வது, அதேவேளையில் முதலாளிகள் மத்தி யில் இன்னொன்றைச் சொல்வது. இப்படிப்பட்ட போக்கை இந்த அரசு உடனடியாகக் கைவிடவேண்டும். அப்படி இல்லையென்றால், "ஆர்கனைஸ்ட்" 'அன்ஆர்கனைஸ்ட்" என்று பார்க்காமல் அனைத்து தொழிலாளர்களும் சேர்ந்து இந்த அரசை எதிர்த்துப் போராடுவார்கள் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



* திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, தொழிலாளர் நலன் கொள்கைக் குறிப்பு குறித்து பேசுகின்ற வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உழைப் பவரே உயர்ந்தவர் என்ற உன்னதமான லட்சியத்தை இந்த நாட்டுக்கு லட்சிய மாக எடுத்துத் தந்திருக்கிறது இந்த அரசு. இப்படிப்பட்ட காலக் கட்டத் திலே உழைப்பவர்களுடைய மத்தியிலே, உழைப்பவர்களுடைய காவலனாக இந்த அரசு இருந்து வருகிறது. அவர்களுடைய பல சங்கடங்களை நீக்கிய வர் தான் தமிழகத்தினுடைய முதல்வர், உழைப்பாலே உயர்ந்த உத்தமர்

(முற்பகல் 11-20)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், காலப்போக்கிலே பல சங்கடங்கள் உழைப்பாளர்களுக்கு ஏற்பட்டாலும், உழைப்பவர்களுக்கு உறுதுணையாக இருந்தாலும், இன்றையதினம் எங்களை விமரிசனம் செய்கிறபோது, இது உழைப்பாளர்களுக்கு விரோதமான அரசு என்று சொல்லி, சில காரணங் களை மரியாதைக்குரிய பெரியவர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறபோது, தரமுள்ள பத்திரிகை, பொறுப்புள்ள பத்திரிகை என்ற ஒரு பத்திரிகையில் வந்த கருத்துக்களை எடுத்துக்காட்டினார்கள். நான் அதற்குள்ளே கூட போகாமல், ஒட்டுமொத்த மாக செய்திருக்கிற காரியங்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்ற ஆசை யிருந்தாலும், மரியாதைக்குரிய பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து மேற்கு வங்கத்திற்குத் தாவிய காரணத்தாலே, அங்கே யிருந்து வருகிற ஒரு சிறப்பான, தரமான பத்திரிகையில் வந்த செய்தியை நான் எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

உழைப்பாளர்களுக்காகத்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், தொழிலாளர்களின் நலனைப் பாராட்டுகிற அந்த மேற்கு வங்க அரசைப்பற்றி 4—1—83 அன்று 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக் கிறது. இது என்னவென்றால், கல்கத்தா துறைமுகத்தில் இருக்கிற மூட்டை தூக்குகிற தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடு படுகிறார்கள். இது தமிழ் நாட்டில் அல்ல. "உழைப்பவர்களுக்காக நாங்கள்தான் உறுதுணையாக இருக்கிறோம், தொழிலாளர்களுக்கு எங்களை விட்டால் யார் பாதுகாப்பு இந்த அகில உலகத்திலும் இருக்கிறார்கள்?" என்று சொல்லுகிற அந்தப் பகுதியில் அவர்களுடைய தலைவர் ஆளுகிற அந்த மாநிலத்தில்தான் மூட்டை தூக்குகிற, உடல் உழைப்பை அர்ப்பணிக்கிற அந்தத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு ஒரு போராட்டத்தில் ஈடுபடு கிற நேரத்தில் அங்கே இருக்கிற மரியாதைக்குரிய முதலமைச்சர் திரு ஜோதி

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1984 மார்ச் 23

பாக தலைமையில் இருக்கிற உள்துறை ஆணையிடுகிற ஒரு செய்தி அந்த 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. என்ன ஆணை என்று சொன்னால், உற்பத்தியாளர்கள் மூட்டைகளை எடுக்கத் தேவையான போலீஸ் உதவி அளிக்கப்படும் என்று அந்த உள்துறை ஆணையிடுகிறது. நான் கேட்கிறேன், தொழிலாளர்களுக்காகவே பிறந்து வந்த அரசைக் கேட்கிறேன், அங்கே 52 மில்களில் இருக்கிற இரண்டரை லட்சம் தொழிலாளர்களுக்காக ஏறத்தாழ இரண்டே முக்கால் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை, 3 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை, தொழிலாளர்களுக்குப் பக்கத்திலிருந்து அரசே முன்னின்று அவர்களுக்காகப் போராடுகிறோமென்று சொல்கிற அந்த மாநிலத்தில்தான் மூட்டை தூக்குகிற தொழிலாளர்களுக்கெதிராக போலீசைத் தூண்டிவிடுகிற தொழிலாளர் விரோத சூழ்நிலையை இந்த உலகத்திற்கே எடுத்துக்காட்டாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சிசெய்கிற மேற்கு வங்காளத்தில் இருக்கிற நிலைமையைச் சொன்னால், அது பொருத்தமாக இருக்கும்.

மேற்கு வங்காளத்தில் சட்டமன்ற விடுதி இருக்கிறது. இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடன் பொதுக்கணக்குக் குழுவிலே கலந்து கொண்டு அங்கே சென்று அந்த விடுதியில் தங்கும் வாய்ப்பை 28—11—1983-ல் பெற்றோம். அப்போது அந்த விடுதியில் உள்ள ஓட்டலை ஏலத்திற்கு எடுத்திருந்தவரின் ஏல காலம் முடிவுற்று இன்னொருவரின் கட்டுப்பாட்டுக்கு அந்த விடுதி வரவிருந்தது. அந்த நேரத்தில் 75 தொழிலாளர்கள், அந்த ஓட்டலை, அந்த விடுதியை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்ற ஒரு போராட்டத்தை கல்கத்தாவிலே சட்டமன்ற விடுதியிலே நடத்தினார்கள். நாங்களும் அதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது எங்கள் கண் முன்னாலே நடந்த நிகழ்ச்சியை நான் சொல்ல விரும்புகிறேன். அப்போது அந்த அரசு அந்த 75 தொழிலாளர்களையும் போலீஸ்காரர்களை விட்டு அடித்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குத் துரத்தி விட்டு வந்தது. அப்படிப்பட்ட அரசுதான் மேற்கு வங்க அரசு என்று இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. நல்லசிவன் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 23] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் தொழிலாளர்கள் பக்கத்திலே இருக்கிறோம். சக தொழிலாளர்களுக்காக எங்கள் முதல்வரே ஆதரவு தெரிவிக்கிற வகையில் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டு, மைய அரசே அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். இதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு ஏதுமில்லை. நலிவுற்ற அல்லது நட்டத்திலே இயங்குகிற எந்தத் தொழிற்சாலையானாலும் சரி, வேலை செய்கிற தொழிலாளர்களின் நலன் கருதி, மைய அரசு அவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று கோருவதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அதற்கு முன்னால் வேலை நிறுத்த உணர்வை உருவாக்கி விட்டு, அதன் காரணமாக ஏறத்தாழ 2½ லட்சம் தொழிலாளர்களின் வயிறு காய்ந்து அவர்கள் சாப்பிடுவதற்கும் உணவு இல்லாத நிலையில், திண்டாடுகிற சூழ்நிலையில், அவர்கள் இந்தத் தீர்மானத்தைப் போடுவதைக் காட்டிலும், அந்த ஆலைகள் நன்கு வேலை செய்து கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிற நேரத்தில், அந்தத் தீர்மானத்தைப் போட்டு மைய அரசுக்கு அனுப்பியிருந்தால், நான் அதை வரவேற்பேன். ஆனால் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாமல், போராட்ட உணர்வைத் தூண்டிவிட்டு, தொழிலாளர்களின் அடிவயிறு காய்கிற நேரத்தில் அதில் குளிர் காய்கிற சூழ்நிலையைத்தான் நாம் மேற்கு வங்கத்தில் பார்க்கிறோம் என்பதை மெத்தப் பணிவோடு இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய தலைவரின் ஆட்சி, தமிழகத்தில் உள்ள ஆட்சி, தொழிலாளர்கள் பக்கத்தில் எப்படி இருக்கிறது என்பதற்குக் கடந்த கால சம்பவங்கள் சிலவற்றை நான் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போதெல்லாம், எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் சரி, பொதுக் கூட்டங்களுக்குச் சென்றாலும் சரி, வேறு எங்கே போனாலும் சரி, எங்களையெல்லாம் டன் முதலாளிகளோடு இணைத்துக் கோடிட்டுக் காட்டிப் பேசிவருவதையே ஒரு பழக்கமாக, நடைமுறையில் கொண்டிருக்கிறார்கள். இதையொட்டி கடந்த கால சம்பவம் ஒன்றை இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தனியார் பஸ்களில் வேலை செய்கிற ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் தங்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி அரசுக்குக் கோரிக்கை வைத்தார்கள். 1962-ஆம் ஆண்டு இந்தக் கோரிக்கை பஸ் தொழிலாளர்களால் வைக்கப்பட்டது. அப்போது ஆண்டு கொண்டிருந்த அரசு அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலியை

நிர்ணயம் செய்தது. அதாவது டிரைவர்களுக்கு ரூ. 90 என்றும் கண்டக்டர்களுக்கு ரூ. 75 என்றும் ஊதிய நிர்ணயம் செய்தது. அதற்குப் பின்னாலே 1977 ஆம் ஆண்டு வரை அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு மீண்டும் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்கள். லட்சக் கணக்கான தொழிலாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்து வந்தார்கள். இதற்கு முன்னாலே ஆண்டு கொண்டிருந்தவர்கள் மரியாதைக்குரிய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதற்காக ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவும் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்த்து, இந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் போதவில்லை, அது உயர்த்தப்பட வேண்டும் என்று சொல்லி ஒரு அறிக்கையே கொடுத்தது. ஆனால் 1977 ஆம் ஆண்டுவரை தனியார் பஸ்களில் வேலை செய்கிற டிரைவர், கண்டக்டர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று அதற்காக அமைக்கப்பட்ட குழுவே எடுத்துச் சொல்லியும்கூட, அதை ஏற்று அமுல் செய்ய மறுத்தார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நேரத்தில்தான் யார் பஸ் முதலாளிகளுக்கு ஆதரவாளர்களாக இருந்தார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

ஆனால் எங்களுடைய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேதான் தனியார்களுடைய பஸ் தொழிலாளர்களுக்கு—அவர்கள் டிரைவர்களானாலும் சரி, கண்டக்டர்களானாலும் சரி—அவர்களின் குறைந்தபட்ச ஊதியத்தைத் திருத்தியமைத்துத் தந்தாக வேண்டும் என்று ஏற்று, டிரைவர்களுக்கு ரூ. 250 என்றும் கண்டக்டர்களுக்கு ரூ. 200 குறைந்தபட்ச ஊதியம் என்றும் நிர்ணயித்து 1979 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தியது. எனவேதான் இந்த நாட்டின் தொழிலாளர்களுடைய ஊதியத்தை நிர்ணயம் செய்த தலைவர், உழைக்கும் வர்க்கத்தின் பக்கத்திலே இருக்கிற எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தான் என்றால், அது மிகையாகாது.

அது மட்டுமல்ல. விலைவாசிப் புள்ளிக்கு 75 பைசாவை ஒவ்வொரு தொழிலாளிக்கும் அதிகமாகத் தர வேண்டும் என்று சொன்னவர்தான் எங்கள்

(முற்பகல் 11-30)

புரட்சித் தலைவர். இங்கே, உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும் என்று சொன்னார்கள். எங்கள் ஊரில் கந்தசாமி நூற்பாலையில் நடந்த கொடூரமான சம்பவத்தை இங்கே விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். எந்த இயக்கத்திலே இருந்தாலும், எந்தக் கொடியைப்



பிடிப்பவனாக இருந்தாலும் தொழிலாளிதான். தங்களுடைய பக்கத்திலே இருப்பவன்தான் தொழிலாளி, தங்கள் சங்கத்திலே உறுப்பினராக இருப்பவன்தான் தொழிலாளி என்று கூறக்கூடிய சித்தாந்தத்தை இந்த மண்ணிலே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய தலைவர் எங்களுடைய கட்சிக் கொடியைப் பிடித்தாலும், எந்தப் பக்கத்தில் இருந்தாலும் மற்றக் கட்சிக் கொடியை பிடித்தாலும், உடலில் இருக்கும் இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைப்பவர்கள் யாராக இருந்தாலும், இந்த நாட்டிற்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய எவனாக இருந்தாலும், அவன் எங்கே இருந்தாலும், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், அவன் ஒரு தொழிலாளி என்ற இலட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கந்தசாமி நூற்பாலை பவானிக்குப் பக்கத்திலே உள்ள நூற்பாலை. அந்த நூற்பாலையில் ஒரு பொது சங்கம் இருக்கிறது. உழைப்பவர்களுடைய சங்கம் இருக்கிறது. எந்தக் கட்சியும் சாராத சங்கம் இருக்கிறது. அந்த இடத்திலே அந்த ஒரே ஒரு சங்கம்தான் இருந்தது. அங்கே ஏ.ஐ.டி.யூ.சி. என்று சொல்லுகிற புதிய சங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். உழைப்பவர்கள் எல்லாம் ஒன்று கூடி வாழ வேண்டுமென்று சொல்லுகிறார்களே அவர்களைக் கேட்கிறேன். உழைப்பவன் எங்கே இருந்தால் என்ன? அவன் உழைப்பவன் தானே. அப்படியில்லாமல் தங்களுக்கென்று ஏ.ஐ.டி.யூ.சி. என்ற சங்கத்தை உருவாக்கி அரசியலாக மாற்றுவானேன்? அப்படி மாற்றுகிற நேரத்தில் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு ஊதிய உயர்வு ஒப்பந்தத்தைப் போட்டார்கள். தேதி 31—3—1982. அந்த ஒப்பந்தம் மார்ச் மாதம் இறுதி வரை செல்லும். ஆனால் அந்த ஒப்பந்தம் முடிவதற்கு நான்கு வாரங்களுக்கு முன்பு மீண்டும் வேலை நிறுத்தத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய போக்கு சரியில்லை என்று சொல்லி, அவர்கள் அரசியல் ஆக்கிவிட்டார்கள் என்று சொல்லி, கட்சி மாச்சரியம் இல்லாமல் அங்கே இருந்த, பொதுச் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் அண்ணா தொழிற் சங்கத்திலே தங்களை இணைத்துக்கொண்டார்கள். அண்ணா தொழிற் சங்கத்திலே தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அப்போது ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தினால் லாபம் இல்லை என்று சொல்லி, அரசியலுக்கு அப்பாற்பட்டிருந்த ஒரு பொதுச் சங்கத்திலிருந்து அண்ணா தொழிற் சங்கத்தோடு இணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். பேச்சுவார்த்தை நடத்தும்போது, தொழிலில் ஈடுபட தொழிலாளிகள் விரும்பி தொழிற்சாலைக்குச் செல்லும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பு தர

வேண்டிய உரிமை அரசுக்கு இருக்கிறது. வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிற தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் இருக்க உரிமை இருக்கிறது. ஆனால் ஏ.ஐ.டி.யூ.சி. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அண்ணா தொழிற் சங்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு தொழில் செய்த சுப்பிரமணியம் என்ற 32 வயது வாலிபனை * * * என்றால் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் அந்தத் தொழிலாளியினுடைய மனைவிக்கு எங்களுடைய புரட்சித் தலைவர் முப்பத்தைந்தாயிரம் ரூபாயை காப்பு நிதி யாகக் கொடுத்து, அந்தத் தொழிலாளியின் குடும்பத்தைக் காப்பாற்றுகிற உன்னதமான செயலைச் செய்திருக்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தத் தொழிலாளிக்கு இவர்கள் எப்படி துரோகம் செய்திருக்கிறார்கள்? அவர்கள் கொடியைப் பிடித்தால்தான் தொழிலாளியா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைப் பிடித்தால் தொழிலாளி இல்லையா?

செல்வநாயகம் என்ற வாலிபன், சி.ஐ.டி.யூ. என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் க்ட்சியின் சங்கத்திலேயிருந்து அண்ணா சங்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டார் என்பதால் ஒரே வாரத்திலே * * * தயவுசெய்து எண்ணப் பார்க்க வேண்டாமா? இவர்கள் தாங்கள் தொழிலாளிகளின் பக்கத்திலே இருப்பவர்கள். தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிறவர்கள் என்று இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யார் தொழிலாளிகளுடைய பக்கத்திலே இருப்பவர்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே சட்டங்களை எல்லாம் தந்தார்கள். தந்தி என்று சொன்னார்கள். 480 நாட்கள் வேலையில் ஈடுபட்டால் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் மாண்புமிகு மரியாதைக்குரிய பெரியவர் * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** *** என்று சொன்ன வார்த்தைகள் அவையினுடைய குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. "கொலைகாரப் பாவிகள் என்று சொல்வது" தப்பில்லை. ஆனால் *** என்பது சரியல்ல.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** 480 நாட்களுக்கு வேலை செய்தால், நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சட்டத்தை பாரத பூமியிலே முதன் முதலாக அறிமுகம் செய்ததே புரட்சித் தலைவருடைய அரசுதான். அப்படி அறிமுகம் செய்ததோடு மட்டுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் பேசி விட்டு வெளியே போய்விட்டார்கள். அவர்கள் சொன்னார்கள். "எந்த

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





இடத்திலேயாவது ஒரு தொழிலாளியாவது நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறானா? பட்டியல் தரமுடியுமா?" என்று கேட்டார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். சேஷசாயி இன்ஸ்டிடியூட் லிமிடெட் என்று சொல்கிற அந்த இன்ஸ்டிடியூட்டிலே ஒரே நேரத்தில் 400 க்கு மேற்பட்ட தொழிலாளிகள் இந்தச் சட்டத்தினாலே நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கூட்டுறவுப் பஞ்சாலை என்று சொல்லுகிற அத்தனை பஞ்சாலைகளிலும் வேலை செய்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்கிறேன். நான் இன்னொன்றையும் சொல்வேன். நான் கவர்னர் உரையின் போது பேசுகிறபோது இதைச் சொன்னேன். மீண்டும் அதைச் சொல்கிறேன். 480 நாட்களுக்குத் தொடர்சியாக வேலை செய்தால் அவன் நிரந்தரமாக்கப்படவேண்டுமென்ற தந்தி என்று சொல்கிற அந்தச் சட்டத்தினுடைய நகல்களையும் பாரத பூமி முழுவதும் நாங்கள் இன்றையதினம் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தொழிலாளர்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற திரு. ஜோதிபாசு இருக்கிற அந்த மாநிலத்திற்கே இந்தச் சட்டத்தினுடைய நகல்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்திய நாட்டில் தொழிலாளர்களுக்கு ஒரு முன் உதாரணமாக, ஒரு முன்னேற்றமான, ஒரு ஆதரவான திட்டத்தை, சட்டத்தை இந்தப் பூமிக்கு அளித்துக்கொண்டிருக்கிற அரசு தான் புரட்சித் தலைவருடைய அரசு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்பத்திலே நான் சொல்லிய ஒரு பாட்டை, ஆளுநர் உரையின் மீது பேசும்போது நான் எடுத்துச் சொன்ன அந்தப் பாட்டை, நான் திரும்பச் சொல்கிறேன்.

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே'
பெரும் புகழ் நுமக்கே இசைக்கின்றேன்,'
பிரம தேவன் கலையிங்கு நீரே"

என்று பாரதி சொன்னானே அந்தப் பாட்டினுடைய தேவனாக, உற்பத்தியை நாட்டிலே அள்ளித் தருகிற தொழிலாளி வர்க்கத்தினுடைய பாது காவலனாக இருந்து கொண்டிருக்கிற அரசு தான் இந்த அரசு என்று சொல்லி, வாய்ப்புத் தந்ததற்காக நன்றியைச் சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு தொழிலாளர் நலத் துறையில் என்னென்ன செய்து வருகிறது என்ற விவர பூர்வமான கொள்கை அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே கொடுத்திருக்கக் கூடிய கொள்கை அறிக்கையிலே உள்ள எல்லா அம்சங்களையும் எடுத்து நான் பேசுவதைவிட எனக்கு முன்னால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். நான் இரண்டு அல்லது மூன்று எளிய விஷயங்களை மட்டுமே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கொள்கை என்ற முறையிலே. . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே விரிவாகப் பேசுவதற்கு அவகாசம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: திரு. நல்லசிவன் அவர்களே ஒரு மணி நேரம் பேசினார்கள் என்பதற்காக. . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திரு. நல்லசிவன் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசினார்கள். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொல்லவேண்டிய கருத்துக்களையும் அவர்கள் சேர்த்துச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்தக் காரணத்தினாலே அவருக்குத் தேவையான அளவுக்கு காலம் கொடுக்கப்பட்டது.

(முற்பகல் 11-40)

திரு. ப. மாணிக்கம்: இருப்பினும் ஒரு உறுப்பினர் ஒரு மணி நேரம் பேசினால், அமைச்சருக்கு ஒரு மணி நேரம் தேவை என்ற அடிப்படையிலே தாங்கள் ஒரு ஆலோசனை வழங்கியிருக்கிறீர்கள். அப்படி என்று சொன்னால் 2 உறுப்பினர்கள் 2 மணி நேரம் பேசினார்கள் என்று சொன்னால், அமைச்சருக்கு 2 மணி நேரம் தேவை என்று பொருள். அமைச்சருக்கே, தங்களுடைய நிலையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, அவ்வளவு நேரம் தேவைப்படுகிறது என்று சொன்னால், அப்படிச் சிக்கல்கள் துறையில் இருக்கிறதென்றே பொருள்படுகிறது. இருப்பினும், இந்த விவர அறிக்கைக்குள்ளே உள்ள விவரங்களைக் குறித்துச் சொல்வதை விட்டு நான் இன்னொன்றைச் சொல்கிறேன். ஒன்று, நம் மாநில அரசு இரண்டு தீர்ப்புகளை கவனத்தில் எடுத்து நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். இன்று பல்லாவரத்தில் உள்ள இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி, அதிலே பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு



எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு இருந்தும், அது நடைமுறைக்கு வராமல் இருக்கின்றது. இன்னொன்று, பால்வள நிறுவனத்தில் வேலை செய்த தொழிலாளர்கள், 1,500 பேர்கள், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிலே நிற்கின்றார்கள். அதைப்பற்றியும் உயர்நீதி மன்றத் தீர்ப்பு இருக்கிறது. அதுவும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதற்கு அரசு பல்வேறு விளக்கங்களைக் கொடுக்கக்கூடும். பல்வேறு வியாக்கியானங்களைக் கொடுக்கக்கூடும். தொழிலாளர்கள் எப்படி பழி வாங்கப்படுகின்றார்கள்? அவர்களுடைய பிரச்சினை உயர்நீதிமன்றத்திற்கு வந்து, அதன் தீர்ப்பு வந்த பிறகும் கூட, அதை நிறைவேற்ற அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதை என்னுடைய குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். அதில் தொழிலாளர் நலக் கொள்கை என்ற முறையிலே அந்தத் துறைக்கு என்னென்ன பொறுப்புகள் இருக்கின்றன என்று வரிசைப்படுத்திச் சொல்லியிருந்தபோதிலும், அது எங்கு அவசியமாகச் செயல்பட வேண்டுமோ அந்த இடத்திலே செயல்படவில்லை. அது மட்டுமல்ல. குறிப்பாக தமிழ்நாட்டில், இந்த அரசின் மீது வந்த விமர்சனத்தில், குறைபாட்டில், தொழிலாளர் பிரச்சினையிலே அரசு நடந்துகொள்ளக்கூடிய முறை சரியல்ல என்பது தான். அரசில் எப்படி சரியாக நடந்துகொண்டோம் என்று அமைச்சர் அவர்கள் விளக்கும்போது, அவர்கள் பல்வேறு விவரங்கள் கூறலாம். இவ்வளவு விவரங்களைத் தருகிறோம் என்பதைவிட, நம்முடைய அணுகு முறையிலே மாறுதல் இருந்தால், அது மக்களுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். பாராட்டுதலை, ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பது தான் மிக முக்கியம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரு முற்போக்கான சட்டத்தை இயற்றி இருக்கிறோம் என்றார்கள். இந்தியாவில் வேறு யாரும் இயற்றவில்லை. இரண்டு ஆண்டுகளில் இத்தனை நாட்கள் வேலை பார்த்தால், அவனை நிரந்தரத் தொழிலாளியாக ஆக்க வேண்டும் என்றும், இம்மாதிரி முன்னேற்றமான சட்டங்களை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறோம் என்றும் சொன்னார்கள். ஏற்றுமதி என்பது மட்டுமே முற்போக்குக்கு அடையாளம் என்று சொன்னால், பல்வேறு ஏற்றுமதிகளைச் செய்யலாம். அந்தக் கருத்தை நான் அறவே நிராகரிக்கவில்லை. ஆனால் அதற்கு வருகின்ற முறைகள் சரியல்ல. ஒரு அமைச்சர் இன்னொரு மாநிலத்திலேயிருந்து, சட்டங்களைப் பெறமுடியும். இந்தத் துறையிலே உள்ளவர்கள், மாநில அரசுகளுக்குள்ள சட்டங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன, அதற்கு அது என்ன செய்கிறது என்று தெரிந்துகொள்வது ஒரு நடைமுறைப்

[திரு. ப. மாணிக்கம்] [1984 மார்ச் 23

பழக்கம். அரசினுடைய பரிவர்த்தனையில் உள்ள விஷயங்கள் உள்ளன. இந்த மாநிலம் ஒரு சட்டத்தை ஒரு விதத்திலே போட்டிருக்கலாம். அதை நிறைவேற்றியிருக்கலாம். இரண்டு ஆண்டுகளில் இத்தனை நாட்கள் வேலை செய்தால், தொழிலாளியை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று ஏட்டிலே இருக்கின்றது. ஆனால் நடைமுறையிலே இல்லை. பொதுவாக நம் நாட்டிலே உள்ள சட்டங்களை எடுத்துப்பார்த்தால், பல்வேறு முற்போக்கான சட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய அடிப்படைச் சட்டங்கள் பல விஷயங்களிலே முற்போக்கானவைதான். இன்னும் பார்த்தால் டிரைக்டிவ் பிரின்சிபில்ஸ்' என்று இருக்கின்றன. ஆனால் அதை நீதிமன்றத்திற்குக் கொண்டுவர முடியாது. அதைப் படித்தாலும் நமக்குப் பெருமையாக இருக்கின்றது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வாழ்க்கையைத் தொடங்கும்போதே, நமக்கு என்று ஒரு குடியரசுச் சட்டத்தை அமைத்துக்கொண்டோம். நம் 'மனமும் மகிழ்ச்சி அடைகிறது. ஆனால் நடப்பிலே எப்படி இருக்கிறது? குடிமக்களுக்கு எப்படி இருக்கிறது? சாதாரண ஏழை எளிய மக்களுக்கு எப்படிப் பயன்படுகிறது ? இன்னும் சொல்லப்போனால், சென்னையிலே உள்ள மிகப் பெரிய பேக்டரியிலே நடப்பதைச் சொல்கிறேன். இங்கே அக்டோபர் இறுதியிலே நடந்த கூட்டத்தொடரில் கேட்டேன். இந்தியன் டுபாக்கோ கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் சுமார் 800 பேர்கள் 8 ஆண்டுகளாக டெம்பரரியாகவே இருக்கின்றார்கள். அது எப்படி நடக்கிறது? அதற்கும் சட்டம் இடம் தருகிறது. ஒரு நாள் நீக்கி மறுநாள் வேலைக்கு வரச்சொல்லலாம். 3 நாட்கள் வேலை செய்துவிட்டு ஒரு நாள் விட்டு திரும்ப வேலைக்கு வரச் சொல்லலாம். இப்படியெல்லாம் சட்டத்தை உடைக்கிறார்கள். இந்த ஜனநாயகத்திலே இப்படி நடக்கிறது. நான் ஜனநாயகத்தைக் குறை சொல்லவில்லை. ஜனநாயகம் உரிமையை எல்லோருக்கும் வழங்குகிறது. ஜனநாயகத்தின் கழுத்தை எப்படித் திருகுகிறார்கள் என்பதைத்தான் நான் சொல்கிறேன். ஏனவே ஆகாதவன் கையில் குழந்தை அகப்பட்டால், கழுத்தைத் திருகுவான் என்று சொல்வார்கள். குழந்தையை நாம் எல்லோரும் தான் நேசிக்கிறோம். ஆனால் ஆகாதவனிடம் அந்தக் குழந்தை அகப்பட்டால் அந்தக் குழந்தையின் கழுத்தை அவன் திருகுவான். அந்த மாதிரி போடப்படுகின்ற சட்டங்கள் எப்படி திருகப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்குவது என்பதிலே எப்படி திருகுகின்றார்கள் என்று பார்க்கிறோம். அந்தச் சட்டம் எப்படி பயனற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்படி நிரந்தரமாக்குகிற சட்டம் நடைமுறையில் எங்காவது கொண்டுவரப்பட்டிருக்கிறதா? வலியுறுத்தப்பட்டிருக்கிறதா? ஆங்கிலத்தில் சொல்வதுபோல் (Enforcement)



1984 மார்ச் 23] [திரு. ப. மாணிக்கம்]

செய்யப்பட்டிருக்கிறதா? இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாமலிருந்த இடங்களில், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன்மூலம் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதற்கான ஆதாரம் எதுவும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் காண முடியவில்லை. அதற்கு மாறாக, அந்தச் சட்டங்களை நிராகரிக்கின்ற, நிறைவேற்ற மறுக்கின்ற, தொடர்ந்து மறுத்துக் கொண்டிருக்கின்ற நிர்வாகங்களைத்தான் நடைமுறையில் நாம் காணமுடிகிறது. பல்வேறு சாரணங்களால் மூடப்பட்டிருக்கும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் குறித்து, காலத்திலே தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்க்காததால், அதிக மனித உழைப்பு நாட்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. காலத்திலே தலையிடுவதிலே மாநில அரசு தவறிவிடுகிறது.

பல தொழிற்சாலைகளில் எட்டு வருஷமாக டெம்பரரியாக வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு எந்தச் சட்டம் இடம் தருகிறது? சட்டத்தை அவர்கள் ஏமாற்றும்போது, அரசு என்ன செய்கிறது? இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறதா என்பது முக்கியமானது.

இதுவுமல்லாமல் இன்னொரு முக்கியமான பிரச்சினையைக் கூறிவிட்டு முடித்துக்கொள்கிறேன். 1981-82 ஆம் ஆண்டுக்கான போனஸ் சம்பந்தமாக சிறுமுகை, சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனியில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதென்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அங்கே போனஸ் தராமல் இருக்கிறார்கள். பழிவாங்கலும் நடந்திருக்கிறது. உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. ஆனால் அந்த உடன்பாடு தொழிலாளர்களுக்குத் திருப்தி தரவில்லை. விரைவில் தருவதாகக் கூறிய அந்தப் பகுதி போனஸ்கூட சரிவரத் தரப்படவில்லை. போனஸ் உடன்பாட்டில் கோளாறுகள் ஏற்பட்டு, மிகப் பெரிய சர்ச்சையையும் கிளப்பியிருக்கிறது. அவ்வளவு சர்ச்சைக்குப்பின்னும் என்ன நடந்திருக்கிறதென்று கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதனைகள் என்று பட்டியலைப் போடும்போது அந்த விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதனைகள் என்று பட்டியலைப் போடுவது சுலபமானது. ஆனால் எங்கே, எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது? போடுகிற சட்டங்களை நிறைவேற்றுவதற்கு நம் மாநில அரசு கவனம் செலுத்துவது மிகக்குறைவு. தொழிலாளிகள், அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக என்ன என்ன சட்டரீதியான வழிகள் எல்லாம் இருக்குமோ, அந்த வழிகளில் எல்லாம் கேட்டுப்பார்த்துவிட்டு, முடியவில்லை என்றால், ஜனநாயக ரீதியில் கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். அப்போது அரசு, அவர்களின் கிளர்ச்சியை அடக்க முன்வருகிறது. அந்தக் கொள்கையை அரசு மாற்றிக்

கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதிலும், Enforcement செய்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். அதே நேரத்தில் ஏற்கெனவே உயர்நீதிமன்றம் சிலவிஷயங்களில் நடந்துவிட்ட அநீதிகளைத் திருத்துவதற்குக் கொடுத்த தீர்ப்புகளை நிறைவேற்றாமல் இருக்கிறது என்பதற்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிட்டேன். இப்படிப் பல்வேறு விஷயங்களைக் குறிப்பிடலாம்.

மூன்றாவதாக தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதில் மாநில அரசின் அணுகுமுறையை மாற்றியமைக்க வேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினைகளில் காலத்தில் தலையிட்டு முடிப்பதில்லை, காலம் தாழ்த்தி முடிக்கின்றது. அது மட்டுமல்ல, தொழிலாளர்களைக் குறித்து ஒரு கொள்கை வைத்திருக்கிறது. Tiring out என்பது இது எல்லாவற்றிலும் உண்டு. தொழிலாளர் போராட்டம், அரசியல் போராட்டம், இராணுவம் அனைத்திலும் Tiring out உண்டு. அதாவது எதிரியை அசந்துவது என்பது. தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறபோது, அவர்களுக்கு ஓரளவிற்கு நியாயமான உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, அவர்களை அசத்தி, களைப்படையச் செய்து, ஓயச்செய்து, போராட்டம் முடிந்தால் போதும் என்கிற நிலைமைக்கு, மாநில அரசு அவர்களைக் கொண்டுவந்து நிறுத்துவது என்பது நல்ல கொள்கை அல்ல. இந்தக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Deputy Chairman, Sir I would like to congratulate the Hon. the Labour Minister on the Policy Note on Labour for 1984-85, presented by him to this House. The Policy Note is of great interest and it sounds very satisfactory. It makes a pleasant reading. But, as the hon. Member Thiru Manickam pointed out, all the measures that are listed out in the Policy Note have to be carried out. For that, it is necessary for the management, labour and the outside people to take interest in the various measures. I would request the Hon. Minister to place on the table of the House a detailed note so that we may know where the bottlenecks exist and why certain measures are not being carried out.

(முற்பகல் 11-50)

Sir, it is nice to note that under a number of categories the Government are doing their best. They have fixed minimum wages for certain categories and they are also doing something for the unorganised workers. I have been interested in the Labour Policy



of the Government and in the welfare of labourers. Therefore, I would like to say that we have got to see that all the different measures like legislation pertaining to wages, social security measures labour welfare measures, etc., which are mentioned in this Policy Note are carried out. In this connection, I would like to mention one thing about the workers in the Co-optex. I am very much interested in their welfare. Perhaps, this request may have to be passed on to the Hon. Minister in charge of Handlooms. A number of those workers have not been made permanent for one reason or the other. I would request both the Hon. the Labour Minister and the Hon. Minister in charge of Handlooms kindly to consider their case and see that those with three or four years' service are made permanent unless there is some compelling reason for not doing so.

Sir, in the Vehicles Maintenance Depot at Avadi, there are about 2,000 labourers. Most of them are Tamilians. It was very sad to hear them say that housing facilities had not been provided for them because they had not got the land. I hope that the Hon. Minister concerned will have a dialogue with those labourers and the Union leader and see that the poramboke land is set apart for the construction of houses for those workers, if it is not needed by the Defence Ministry for their purposes. There are two schools in that campus. I think that one of them is affliated to the Tamil Nadu Board of Secondary Education. Of course, I have not so far brought this to the notice of the Hon. Minister concerned. But, I would request the Government to see that the children studying in that school are given noon meals.

Sir, I now come to the point relating to the construction of houses for workers. From the Policy Note, I find that only 1,274 houses which are to be constructed by private contractors are being subsidised by the Government. I do not know whether the figure is for the entire Tamil Nadu. If it is so, the figure is very low and it must be increased.

Regarding the starting of Holiday Homes for the workers, I am sure that all the workers will happily welcome this measure. But, only one Holiday Home has come into existence in September 1983. We do not know how many workers have made use of that Home. I would request the various managements and the Government to see that the workers are enabled to go and stay in the Holiday Home for at least 15 days in a year and spend a restful time. Nowadays, so much is being talked about Elagiri Hills. At present

[Thirumathi Tara Cherian] [1984 மார்ச் 23

we have only one Holiday Home at Courtallam. If we can have one more Holiday Home at Elagiri Hills, I am sure that the workers will make use of it.

Then, Sir, I have to say that nothing has been mentioned about bonded labour in this Policy Note. I think that the Supreme Court has asked for a note from the Tamil Nadu Government on the steps taken by this Government to release the labourers who went from this State and became bonded labourers in Hyderabad and other places in Andhra Pradesh, whether they have been settled back in Tamil Nadu, whether their children have been brought back, etc. I would like the Hon. Minister to see that the points raised by the Supreme Court are answered as early as possible.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

Sir, in the whole Policy Note, there is not one word about child labour. Recently, a committee was appointed to go into the living conditions of children employed in match factories at Sivakasi. But, nothing is known about the deliberations of that committee. We have to make those children happy. Wherever possible, the welfare organisations also can do something for these children, if only things are brought to their notice. But, how long should we go on waiting for the report? Why should we not fix a time-limit for the committee to give its report?

Child labour exists not only in Sivakasi but in many other places. At least in Sivakasi, they come under a sort of organised labour. In other places like Tiruchirappalli, hundreds and thousands of children work in various places, roam like vagabonds on the roads and they are practically in the streets. Therefore, there should be some action for amelioration of the condition of child labour. If we know what the Government are doing in that connection, we can also—help the Government in all possible ways. During my stay in Maharashtra, I learnt that many children who came for work under private builders had no place to sleep. They have no education and it is most pathetic to see their poor conditions. It should be made compulsory for the employers to do something to protect the children of the workers. The persons who are employed under one contractor should be helped to get employment under another contractor and they should be given some kind of licence or certificate saying that he has done particular work and he has done it well. We have provided for training programme, expertise and skill and other things but that is not enough. These



1984 மார்ச் 23] [திரு. ஆர். டி. சீத்தாபதி]

people have got to be uplifted in many ways and they should be made to realise that they have self-respect and that is the kind of training we should give them.

All that I would like the Hon. Minister to tell us a particularly what he has done for bonded labour and also for child labour and why he has completely left this out in the Policy Note. Some amount would at least have been allotted and it must be a few crores for the betterment of child labour, which is very necessary. With these wordsI conclude. Thank you.

* திரு. ஆர். டி. சீத்தாபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது, 1984—85 ஆம் ஆண்டினுடைய தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அண்மையில் சென்னை மாநகரத்தில் சிம்சன் குரூப்பைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏறத்தாழ 3 மாத காலமாக தங்களுடைய உரிமைகளுக்காக வாதாடினார்கள். அந்த நேரத்தில் இந்த அரசு மிகவும் அக்கறையோடும் தீர்க்கவேண்டும் என்பதற்காகவும் நடவடிக்கைகளை எடுத்தது. அதில் தமிழக அரசும், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஈடுபட்டதை எல்லோரும் அறிவார்கள். என்னதான் கருத்து வேறுபாடு இருந்தாலும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தீர்த்ததற்காக நன்றி தெரிவித்தாலும்கூட, அதில் அரசுக்கு அக்கறையில்லாமல் இருந்ததாகவும் குறிப்பிட்டார்கள். அதனால் தான் 2, 3 மாத காலமாக பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்ற வினாவையும் இங்கே எழுப்பினார்கள். நான் அவருக்கு பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக என்னுடைய உரையைத் துவக்க விரும்பவில்லை. சென்னையில் தமிழ் மொழி காத்த உயிர்த் தியாகம் செய்த தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் சனவரித் திங்கள் 25 ஆம் நாள் நடைபெற்றது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அக்கூட்டத்தில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிலே "சிம்சன் தொழிலாளர்கள் எல்லாம் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும். பேச்சுவார்த்தை மூலமாக அதைத் தீர்த்துக்கொள்ளலாம்" என்கிற வாக்குறுதியை அளித்தார்கள். அப்போது தொழிற் சங்கத்தைச்

சார்ந்த தொழிலாளர்கள் எல்லாம் வேலைக்குச் செல்வதாக இருந்தும்கூட அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த தலைவர் விடாப்பிடியாக அதை நிராகரித்து விட்டார். எப்படியாகிலும் 1972 ஆம் ஆண்டு எப்படி ஒரு சூழ்நிலையை சென்னையிலே உருவாக்கலாமென்று நினைத்தாரோ, நினைத்து செயல்பட்டாரோ அதே நிலையில் இந்தப் பிரச்சினையையும் உருவாக்க வேண்டுமென்ற அக்கறையோடு தான் அந்தத் தொழிற் சங்கத் தலைவருடைய நடவடிக்கை அமைந்தது.

(நண்பகல் 12-00)

இந்த அரசு அதில் அக்கறையில்லாமல் இருந்ததில்லை என்பதை மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக நான் தமிழகத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அதிலே அக்கறையோடு இருந்த காரணத்தாலே தான், அந்த வேண்டுகோளை பொதுமக்கள் முன்னிலையில் வெளியிட்டார்கள். ஆனால் சட்டம் ஒழுங்கு கெடும் என்று பயந்துகொண்டு அதற்குப் பின்னாலே தான் முதலமைச்சர் தலையிட்டார் என்று சொல்வது தவறு. நிச்சயமாக அகில இந்திய அண்ணா தி. மு. க. அரசு அதற்காக பயப்படவில்லை. தொழிலாளர்களைப் பட்டினி போடக்கூடாது, அவர்களுடைய நலன்தான் நம்முடைய நலன் என்ற நிலையில் பேச்சு வார்த்தைக்கு வாருங்கள் என்று முதலமைச்சரே தலையிட்டு, தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்களையும் உடன் வைத்துக்கொண்டு அக்கறை காட்டினாரே தவிர, ஏதோ பிரளயம் வந்துவிடும் என்று பயந்து விடவில்லை. அந்த நிலையும் அகில இந்திய அண்ணா தி.மு.க.-வுக்கு இல்லை. அப்படி பயப்படாது என்பதை தங்கள் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, தொழிலாளர் சங்கத் தலைவர்களிடம் பேசுகிற நேரத்தில், மூன்று மாதச் சம்பளத்தைத் தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கேட்ட நேரத்திலேகூட, மேனேஜ்மெண்ட் நிர்வாகிகள் தர இயலாது என்றார்கள். எவ்வளவு பணம் செலவாகும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு ரூ. 40 லட்சம் என்றார்கள். அப்படியானால் இந்த சர்க்கார் அந்தப் பணத்தை உங்களுக்குக் கடனாகத் தரும். அதை இப்போது தொழிலாளர்களுக்குக் கொடுங்கள், பின்னால் அரசுக்கு அந்தப் பணத்தை நிர்வாகம் தவணை முறையில் கொடுக்கலாம் என்று பெருந்தன்மையோடும் தொழிலாளர்கள் பட்டினி கிடப்பதைத் தவிர்க்கவேண்டுமென்ற நோக்கத்தோடும் சொன்னார்கள். அண்ணா ஒருமுறை சொன்னார்களே, நாங்கள் தான் உண்மையான கம்யூனிஸ்ட் என்று, அப்படிப்பட்ட அண்ணா அவர்களுடைய தம்பியான நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் மனமுவந்து, தருவதாக தெரிவித்ததற்குப் பின்பு நிர்வாகம், "நாங்கள் சென்று யோசித்து





வருகிறோம்" என்று சொல்லிவிட்டு. பின்னாலே "நாங்களே அந்தப் பணத்தைத் தருகிறோம்" என்று தந்ததை நாடு மறந்திருக்காது. அதற்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சுமுகமான முறையில் வேலை நிறுத்தம் தீர்ந்ததற்காக தொழிலாளர்களையும், அதற்குக் காரணமான நிர்வாகத்தையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் 1972 ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலையில் இப்போது எந்தத் தலைவர் தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறாரோ அந்தத் தலைவர் தொழிற் சங்கத் தலைவராக இருந்தபோது அங்கே இப்படித்தான் ஒரு நிலைமை உருவாகிய நேரத்தில், பிரதாப் சந்திரன் என்ற தொழிலாள நண்பர் தொழிற்சாலைக்குள்ளேயே கொலை செய்யப்பட்டார் என்பதை தமிழகம் மறந்திருக்காது. அந்த நண்பரை நாம் இழந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்த நேரத்தில். நானும் மாவட்டத் துணைச் செயலாளராக இருந்தேன். அப்போது அவர்களும் நானும் சென்று இறந்த அந்தத் தோழருக்கு மாலை அணிவித்தோம். இன்றையதினம் அண்ணா தி. மு. க. வுடைய பொதுச் செயலாளர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் நம்முடைய புரட்சித் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க, பிரதாப் சந்திரனுக்கு சிலை வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துவரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தொழிலாளர்கள் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் என்னுடைய யோசனையாக ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வைக்கப்படுகிற சிலை, அவர் எங்கே பணியாற்றினாரோ, எங்கே அவர் கொலை செய்யப்பட்டாரோ அதே கிரவுண்டிலேயே அமைய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவருடைய திருக்கரங்களாலேயே திறக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கட்டிடத் தொழிலாளர்களின் இன்னலைப் போக்க இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துவருவதைப் பாராட்டுகிறேன். கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கும்போது, மேலேயிருந்து கீழே விழுந்து இறந்து விட்டால், ரூ. 10 ஆயிரம் கொடுக்கப்படும் என்றும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அது வழங்கப்படும் என்றும் அறிவித்து, அதற்கான நடைமுறைகளைக் கூட நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வகுத்திருக்கிறார்கள். ஒரு கட்டிடத் தொழிலாளி இறந்து ரூபாய் கொடுத்து அந்த மாவட்டத்தில் இருக்கிற லேபர் டிபார்ட்மென்டின் அலுவலகத்தில்

தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று முதல்வர் அறிவித்திருக்கிறார்கள். அதைக்கூட "இதற்கும் 5 ரூபாய் கொடுத்துத் தான் பதிவு செய்து கொள்ள வேண்டுமா? இது என்ன அநியாயம்" என்று வெளியே அரசியல் கட்சிகள் கூப்பாடு போடுவதை நாம் அறிவோம். ஆனால் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்களா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்காகத்தான் அவர்கள் பணம் கட்டவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி கட்டினால்தான், அவர்கள் அந்தத் தொழிலில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களா இல்லையா என்பது தெரிய வரும். அப்போதுதான் ஒரு முழுமையான கணக்கு இந்த அரசுக்கு வரும் என்ற காரணத்தால்தான், இதை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே 1947 ஆம் ஆண்டு முதற்கொண்டு இங்கே செயல்பட்டு வந்த எந்த ஒரு அரசும் இப்படிப்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் இறந்து விட்டால் பணம் அளிப்பது என்ற காரியத்தைச் செய்யவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர்தான் அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் இறந்தால் ரூ. 10,000 என்று அறிவித்திருக்கிறார்கள். இதன் மூலம் இந்த அரசு தான் தொழிலாளர் நல அரசு என்பது தெளிவாகிறது என்று சொல்லி அதை யும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பெட்ரோல் பங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் அவர்கள் 3, 4 பேராக இருந்தாலும் சரி, ஒரு தொழிலாளியாக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் இந்த அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலமாக குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயித்து அவர்கள் பயனடையச் செய்திருக்கிறது. தொழிலாளர்களின் நன்மைக்காகச் சட்டங்களை இயற்று வது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இங்கே நான் எடுத்துக் கூற ஆசைப்படு கிறேன்.

அதைப்போலவே கடைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் 1947 முதல் 1980 ஆம் ஆண்டு வரை எந்த ஒரு அரசும் சம்பளம் நிர்ணயம் செய்ய வில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பின்னர்தான், 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி முதல் கடைகளில் பணி யாற்றும் ஊழியர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் ரூ. 220 என்று நிர்ண யித்திருக்கிறது. எனவே இதையெல்லாம் யார் செய்தார்கள் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்



களைக் கேட்டுக்கொள்கிறேன். வேறு எந்த மாநிலத்திலாவது இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறதா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருக்குகிற தொழிலாளர்களுக்கு இதுவரை எந்தவிதமான ஊதியப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்து வந்த நிலைமையை மாற்றி, புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக் கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், தொழிலாளர் இயக்கத்தி லிருந்து இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும்தான் பெருக்கும் தொழிலாளர்களுக்குக் கூட ரூ. 210 ஊதியமாகவும் அதோடு பஞ்சப்படியும் தர வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தமிழகத்திற்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தனியார் மருத்துவ மனைகளில் பணியாற்றுகிற ஊழியர் களுக்குக்கூட இந்த அரசுதான் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து இந்தச் சட்டத்தின் பயனை அவர்களும் பெறும்படி செய்திருக்கிறது என் பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 1965ஆம் ஆண்டு போனஸ் சட்டப்படி 20 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றுகிற நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மட்டும் தான் போனஸ் சட்டம் பொருந்தும், அவர்கள்தான் போனஸ் பெற முடியும் என்றிருந்தது. அப்படி நிர்ணயிக்கப்பட்ட 20-க்கும் குறைவாக உள்ள தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு அது பயன்படாது என்ற நிலைமை யில் இருந்தது. ஆனால் இந்த அரசு ஏற்பட்ட பின்னர்தான் 10 தொழி லாளர்கள் பணியாற்றினால் கூட, அவர்களுக்கும் போனஸ் வழங்கப்பட வேண்டும் என்று இந்த அரசு நிர்ணயித்து, அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து இன்றையதினம் 10 தொழிலாளர்கள் உள்ள இடங்களில் பணியாற்றுகிற வர்களும்கூட அந்தச் சட்டத்தின் பலனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கம்பெனிகளில் பணியாற்றும் 10-ஐ தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், மாடல் ஸ்டாண்டிங் ஆர்டர்படி தொடர்ந்து 8 நாட் களுக்கு வேலைக்கு வராமல் இருந்தால், அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட லாம் என்று இருந்தது. ஆனால் 8 நாள் வேலைக்கு வராமல் இருந்தாலும் கூட நோட்டீஸ் கொடுத்து விசாரணை செய்து நியாயமான காரணம் இருந் தால்தான், வேலை நீக்கம் செய்ய வேண்டுமே தவிர, 8 நாள் வேலைக்கு

வரவில்லை என்ற காரணத்திற்காகவே வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று இந்த அரசுதான் செய்திருக்கிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல தொழிலாளர்கள் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டால் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்காது என்ற நிலை இருந்தது. புரட்சித் தலைவர் ஆட்சியில் இதற்காக 1981 ஆம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அது என்ன சட்டம் தெரியுமா? தொழிலாளர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டால், 90 நாட்கள் வரை 50 சதவீதம் தர வேண்டும் என்றும், 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரையில் 75 சதவீதம் ஊதியம் தர வேண்டும் என்றும், 180 நாட்களுக்கு மேலே போனால் முழு ஊதியத்தைத் தர வேண்டும் என்றும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இதன் பலனாக பல தொழிலாளர்கள் நன்மை பெறுகிறார்கள். ஆகவே இந்த சர்க்கார் தொழிலாளர்—விரோத சர்க்கார் அல்ல. தொழிலாளர் சர்க்கார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1972 ஆம் ஆண்டு வரை சட்டப்படி வருடத்திற்கு 220 நாட்கள் பணியாற்றியிருந்தால், 15 நாட்களுக்கு கிராஜுட்டி (பணிக்கொடை) தர வேண்டுமென்று இருந்தது. அந்த 240 நாட்களுக்கு இரண்டு, மூன்று நாட்கள் குறைவாக இருந்தாலும் தரக்கூடாது என்ற நிலை இருந்தது. நாட்கள் குறைவாக இருந்தாலும் தர வேண்டுமென்று இந்த சர்க்கார் சொன்ன நேரத்தில் அவர்கள் எங்கே போனார்கள் தெரியுமா? உச்சநீதிமன்றம் சென்று அது எப்படி சரியென்று வாதாடி தீர்ப்பை வாங்கி வந்தார்கள். அதற்குப் பின்பு புரட்சித் தலைவர் அரசு, உச்சநீதி மன்றத்திற்குப் போய்விட்டார்களே என்று அடங்கி, ஒடுங்கி அயர்ந்துவிடவில்லை. அவர்களுக்காக இந்தச் சட்டத்தினைத் திருத்தி அவர்கள் கம்பெனியில் தொடர்பு கொண்டிருந்தாலே போதும், அவர்களுக்கு கிராஜுட்டி தர வேண்டும் என்று உருவாக்கினார்கள். அந்தச் சட்டத்திற்கு மத்திய சர்க்கார் விரைவில் அனுமதி தரும் என்று நம்புகிறோம். அதை மத்திய சர்க்கார் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் ஆகிவிட்டதால் இறுதியாக ஒன்றை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவைகளின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டில் 223, 1981 ஆம் ஆண்டில் 288, 1982-ல் 187, 1983-ல் 212. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980-ல்



2,81,784, 1981 ஆம் ஆண்டில் 1,86,174 1982-ல் 66,677 1983-ல் 73,935 பேர், இழந்த மனித உழைப்பு நாட்கள்—1980-ல் 3,51,022, 1982-ல் 18,05,978 1983-ல் 21,16,218 நாட்கள். ஆகவே இந்த அரசு எந்த அளவிற்கு தொழிலாளர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால் நான் இந்த அவையின் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டுமானால், தொழிலாளர்கள் வளம் பெற வேண்டுமானால், முடியாமல் இருப்பதற்குக் காரணம் தண்ணீர்ப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறைதான். ஆகவே பல தொழிலதிபர்கள் தமிழகத்திலே தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன் வருவதில்லை. ஆனால் கர்நாடகா, ஆந்திரா மாநிலத்துக்காரர்கள், "எல்லாம் தருகிறோம், இங்கே தொழிற்சாலைகளை ஆரம்பியுங்கள்" என்று கேட்டுக்கொள்வதால், அங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அருள்கூர்ந்து நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில் தொழில் அமைதியை அரசியல் லாபத்திற்காக யாரும் கெடுக்காமல், அரசியல் உள்நோக்கம் பார்க்காமல் இருக்க வேண்டும். நாட்டில் எல்லோரும் தொழிலாளர்கள், யாராக இருந்தாலும் சரி, பேனா பிடிக்கிறவர்கள் கூட தொழிலாளிகள் என்ற முறையில் இந்த அரசு காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகளுடைய உரிமைக்காக நாங்களும் குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு. அறிஞர் அண்ணா அவர்களின் உண்மையான தம்பி ஆளுகின்ற அரசு. இதையெல்லாம் ஏன் தெரிவிக்கிறேன் என்று சொன்னால், அண்ணா ஒருமுறை நமது புரட்சித் தலைவரைப் பற்றிக் குறிப்பிடும்போது "இந்தக் கனி யாருடைய மடியில் விழப் போகிறதோ என்று நான் ஏங்கிக் கொண்டிருந்தேன் அந்தக் கனி என்னுடைய மடியிலே விழுந்தது; இதை என்னுடைய இதயத்திலே வைத்துக்கொண்டேன்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்தக் இதயக் கனி தான் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறது; தொழிலாளர்களை ஆண்டுகொண்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு விரோதமான அரசு அல்ல இது. தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற அரசு, அண்ணாவின் அரசு, அவர்களுடைய தம்பி அரசு என்று கூறி, இந்த அளவுக்கு வாய்ப்பு நல்கிய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கத்தின் மீது பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மிக விளக்கமாக இந்த அரசு செய்துள்ள நன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி எனக்கு அந்தச் சிரமத்தைக் கொடுக்காமல் அவர்களே அந்த வேலையை முடித்துவிட்ட காரணத்தினால், அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள் எப்போதும் சைல்டு லேபரைப் பற்றித்தான் பேசுவார்கள். அது குறித்து பல கேள்விகளுக்கு நான் சட்ட மன்றத்திலே பதில் சொல்லியிருக்கிற காரணத்தால், இப்போதும் பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளுக்கெல்லாம் உண்மையாகவே இந்த அரசு பதில் சொல்லியாக வேண்டும். பொதுவாக, மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். எனவே நானும் புள்ளி விவரத்தைக் கொடுத்து விட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறேன். ஆர்கனைஸ்டு லேபர் என்ற வகையில் 9,41,099 பேர்கள் இருக்கிறார்கள். அந்த 9,41,099 பேர்களில் நேற்று வரையில் வேலை நிறுத்தத்தில் இருப்பவர்கள் 11,337. இந்த 11,337 பேர்களில் பி & சி மில்லிலுள்ள 7,800 பேர்களைக் கழித்துவிடுவோமானால் 3,537 பேர்கள்தான். பி & சி மில்லில் வேலை நிறுத்தம் இல்லையென்று சொன்னால், தமிழகம் பூராவும் எத்தனை பேர்கள்தான். 9,41,099 பேர்களிடையேயும் பேச்சு வார்த்தைகளின் மூலமாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது அட்ஜூடிகேஷன், ஆர்பிட்ரேஷன் போன்றவைகளின் மூலமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை வளர்ந்து வருமென்று இந்த அரசு கருதுகிறது. அது நாட்டுக்கும் நல்லதாகும். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களே பாராட்டியிருக்கக்கூடிய, பின்பற்றியிருக்கக்கூடிய தலைவர்களுடைய கருத்தை அப்படியே படித்து, கடைசியிலே அவர்களுக்குச் சொல்லலாமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது வேறு ஒன்றைச் சொன்னார்கள். "அன்ஆர்கனைஸ்டு லேபருடைய கணக்கை நீங்கள் தரவில்லை" என்று சொன்னார்கள். ஆர்கனைஸ்டு லேபர் என்றால் பரம்பரை பரம்பரையாக வந்திருக்கிற அளவிலே





கணக்குகளைக் கொடுத்து வருகிறோம். அன்ஆர்கனைஸ்டு லேபர், மற்றவர்களுடைய வேலை நிறுத்தம் அல்லது வேலை நாள் இழப்பு என்பதை எடுப்பதென்பது மிகச் சிரமம் என்பதாலும், அது அன்ஆர்கனைஸ்டு லேபர் என்பதனாலும் கொடுக்கப்படவில்லை. ஆனால் அந்த ஆலோசனையை, சாத்தியக் கூறுகளை இந்த அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Fall back wage பற்றிச் சொன்னார்கள். அவர்களே சொன்னார்கள். தேதி கொடுத்தார்கள். 6—10—1980-ல் பீடித் தொழிலாளர்

(பிற்பகல் 12-20)

களுக்கு Fall back wage-ஐ நிர்ணயித்தார்கள். அதில் குறிப்பிட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலிலே பாராட்டி விட்டுச் சொல்வார்களென்று கருதினேன். 1946-லே இடைக்கால அரசாங்கம் ஏற்பட்டு, 1947-ல் இருந்து நாம் முழு சுதந்திரம் பெற்று வருகிறோம். 1980-ல் பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு Fall back wage- நிர்ணயித்தது என்றால், அது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அதிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன, இதை நீங்கள் திருத்த வேண்டுமென்று சொல்வார்களென்று எதிர்பார்த்தேன். அடுத்துப் பேச இங்கே வாய்ப்பு எப்படியாவது கொடுக்கப்படுமானால் பேசுவார்கள் என்று நான் கருதுகிறேன். இப்போது பேசியிருந்தால் நான் மெத்த மகிழ்ச்சியடைந்திருப்பேன். நான் பெருமையோடு சொல்லிக்கொள்வது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய ஆட்சிதான் நிர்ணயித்தது. நிர்ணயித்தது சில ரெகமன்டேஷன்களை எல்லாம் அடிப்படையாக வைத்துத்தான். அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசே உணர்கிறது. அரசே உணர்கின்ற காரணத்தினாலேயே அதைப்பற்றி விசாரிக்க செயலாளர்—ஆணையாளரிடம் சொல்லியிருக்கின்றார்கள். "இன்னும் மேலும் பரிசிலனை செய்து, பலன் அளிக்கக்கூடிய வகையிலே, ஃபால் பேக் வேஜஸ் போன்று அவர்களுக்கும் இன்னும் நன்றாகக் கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தயார் செய்யுங்கள்" என்று சொல்லியிருக்கிறோம். அது பரிசிலனை செய்யப்படும் என்று சொல்லும் நேரத்தில், முதன் முதலாக அதைக் கொண்டு வந்தது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது நல்லது என்று கருதுகிறேன்.

மேற்கு வங்காளத்தைப்பற்றிச் சொன்னார்கள். சிம்சன் வேலை நிறுத்தம் நீண்ட நாட்கள் நடந்தது என்றார்கள். 83 நாட்கள் நடந்தது. முதலிலேயே பேச்சு வார்த்தை நடத்தாமல் இருந்து பின்னால்தான் சீ.எம். தலையிட்டார், தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டார் என்று சொன்னார்கள். எந்த ஒரு வேலைநிறுத்தமாக இருந்தாலும், உடனடியாக அது 'பப்ளிக் யுடிலிட்டி சர்விஸ்' என்றால், வேலை நிறுத்த நோட்டீஸ் கொண்டு, உடனே கன்சிலியேஷன் ஆரம்பித்துவிடுகின்றார்கள். அது உங்களுக்கும் தெரியும். கன்சிலியேஷன் ஆரம்பித்து, அதற்கு என்று இருக்கின்ற அதிகாரிகளிடம் விடுகின்றார்கள். அதிலே லேபர் கமிஷனர், சீப் கன்சிலியேஷன் ஆபீசர் எல்லாம் பார்த்துவிட்டு, அங்கேயே முடியும் என்றுதான் கருதுகிறோம். அந்த நடைமுறைதான் எங்கும் நடந்துகொண்டிருக்கின்றதே தவிர வேறல்ல. இப்போது கூட மேற்கு வங்காளத்திலே லேபர் செக்ரட்டரி பேசுகிறார். லேபர் மினிஸ்ட்டரோடு நிறுத்திவிடுவதில்லை. லேபர் செக்ரட்டரியும் பேசிக் கொண்டிருக்கின்றார் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவருக்கு ஒழுங்காகத் தகவல் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். நான் 'ஸ்டேட்ஸ்மென்' பார்த்து தெரிந்துகொண்டிருக்கிறேன். அதை நான் ஒழுங்காகப் படித்துக்கொண்டிருக்கிறேன். இந்தமாதிரி பேச்சுவார்த்தைகள் அந்த மட்டத்தில் முடிந்த பிறகு, அங்கே ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று சொன்னால், என் மட்டத்திலே அல்லது சி.எம். மட்டத்திலே அழைத்துப் பேசுகிறோம். அதில் கால தாமதம் ஆகிறது. அது இரண்டு பேருக்கும் கொஞ்சம் 'கூலிங் ஆஃப் பிரியட்' ஆக இருக்கிறது. அவர்களுக்கே தேவைப் படுகிறதுபோல அது இருக்கிறது. எடுத்தபோதே உடனடியாக எல்லாப் பிரச்சினையையும் முதல் அமைச்சர் அவர்களோ அல்லது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களோ நேரடியாக எடுத்துப் பேசுவது என்ற அமைப்பு இல்லை. அது சரியான அமைப்பு முறையல்ல. சரியான முறையாக இருக்க வேண்டும் என்று சொன்னால், அது லேபர் ஆபிசர், அடிஷனல் லேபர் கமிஷனர் டி.சி.எல், அதற்கு மேல் ஜாயிண்ட் கமிஷனர், செகரட்டரி என்று முறை இருக்கிறது. ஒவ்வொரு படியாக ஏறி வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஆரம்பம் கன்சிலியேஷன் லெவலிலே நடக்கிறது. பிறகு தேவைப்படுகிறபோது நாம் தலையிடுகிறோம். அதிலே கால தாமதம் ஆகிவிட்டது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய குறைபாடு. ஆனால் மேற்கு வங்காளத்தைப்பற்றி ஏதாவது கவலை வந்திருக்கின்றதா?



**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே கன்சிலியேஷன் டிப்பார்ட்மெண்ட் மூலம் வருவதற்கு நாள் ஆகிறது என்றுதான் சொன்னேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசும்போது 25 ஆம் தேதி தியாகிகள் தினத்தன்று, வேலை நிறுத்தம் செய்து போராடிய போது, "வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு வேலைக்குப் போங்கள், அப்புறம் பேசிக்கொள்ளலாம்" என்று முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விட்டும் அவர்கள் கேட்கவில்லை. என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தும் கேட்காததால், 83 நாட்கள் இழுக்கடிக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். இது முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கின்றது. 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். 50 ஆயிரம் பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்போது முதல் அமைச்சர் அவர்கள் 'வேலைக்குச் செல்' என்று சொல்கின்றார்கள். இருந்தாலும் முதலாளிகளுடைய பேச்சுவார்த்தை தீராததன் காரணமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அந்த நிலையில் இருப்பவர்களை போக வேண்டும் என்று கேட்கிறார்கள். "நான் சொல்லி தொழிலாளர்கள் கேட்கவில்லை. ஆகவே நாங்கள் இப்போது தலையிட வேண்டுமா" என்றுதான் அரசு இத்தனை நாட்கள் தாமதித்ததாக நான் கருதுகிறேன். அதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் கருதுவது அரசால்தான் தாமதமாயிற்று, அரசு தாமதமாக வேண்டுமென்றே தள்ளிவிட்டது என்பதுதான். அதுதான் அவருடைய குற்றச்சாட்டு. எனக்கு வருகின்ற சந்தேகம் அது இல்லை. அதை நான் மறுக்கிறேன். படிப்படியாக வந்த காரணத்தினால் பேசுகிறோம். நான் அடுத்து மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொள்கிறேன். ஜனவரி 16 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் நடக்கிறது என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் ஆளும் கட்சியினரும் அந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தருகின்றனர் என்று சொல்கின்றார்கள். இன்று தேதி 23 மார்ச் மாதம். ஒரு நாளைக்கு இழப்பு 3 கோடி என்று கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள். ஆளும்கட்சி ஆதரிக்கிறது. முதலமைச்சர் வேலைநிறுத்தத்தை ஆதரிக்கின்றார். ஆனால் ஜனவரி 16 ஆம் தேதி ஆரம்பித்த வேலை நிறுத்தம் இன்னும் முடியாமல் இருக்கிறது. பேச்சு வார்த்தையே முடியாமல் இருக்கின்றது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 23

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்).

எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? I am not yielding now. இந்த சப்ஜெக்ட் முடியவில்லையே. மேற்கு வங்காளத்தில் முதலமைச்சர் அவர்களே ஆதரிக்கின்றார். தொழிலாளர் நல அமைச்சர் ஆதரிக்கின்றார். ஆளும் கட்சி ஆதரிக்கிறது, தொழிலாளர்கள் ஆதரிக்கின்றார்கள் அல்லது சங்கமும் ஆதரிக்கிறது. ஆனால் ஜனவரி 16 ஆம் தேதி ஆரம்பித்த வேலைநிறுத்தம் இன்னும் ஏன் முடியவில்லை? What do you infer from that? மேற்கு வங்காளத்தில் முதல்வரே ஆதரிக்கிறார். தொழிலாளர் நல அமைச்சர் ஆதரிக்கிறார். ஆளும் கட்சி ஆதரிக்கிறது. எல்லாத் தொழிற் சங்கங்களும் ஆதரிக்கின்றன. ஆனால் ஜனவரி 16-ல் ஆரம்பித்த வேலை நிறுத்தம் இன்னும் ஏன் முடியவில்லை? (குறுக்கீடுகள்) சில வேலை நிறுத்தங்கள் திடீரென்று முடிக்கப்படுவது அவ்வளவு சாத்தியமல்ல, இவ்வளவு பேர் தலையிட்டும் அந்த வேலை நிறுத்தத்தில் மேற்படி ஆலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கும் பி & சி ஆலையை தேசியமயமாக்க வேண்டுமென்று 7—12—1983 அன்றே நம் முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். தேசியமயமாக்க வேண்டுமென்று தான் நாமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அரசாங்கமே வேலை நிறுத்தத்தை ஆதரிக்கிற எக்ஸ்ட்ரீமுக்குப் போவதில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு வேலைநிறுத்தம் என்றால், அதனுடைய சாதக பாதகங்களைப் பார்த்து, எந்த அளவிற்கு நல்லது செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். ஒரு எக்ஸ்ட்ரீமுக்குப் போவதென்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தமாக, கொள்கையாக இருக்கலாம். ஆனால் அண்ணாயிசம், அண்ணாவின் கொள்கை எந்த வேலை நிறுத்தமாக இருந்தாலும், அதன் சாதக பாதகங்களைப் பார்த்து நாட்டுக்கு நன்மை எதுவோ அதைத் தான் செய்வதென்பதாகும். இதையே பின்பற்றி மாண்புமிகு அமைச்சர் திரு. ஜோதிபாசுவும் பேசியிருக்கிறார்கள். என்னிடம் "கட்டிங்" இருக்கிறது. கடைசியில் படித்துக் காண்பிக்கிறேன். நான் சொல்வதெல்லாம் சில போராட்டங்கள் நடத்தும்போது சில நாட்கள் ஆகத்தான் செய்கின்றன. அதற்காக, தொழிலாளர்களை அடக்க அரசு [illegible] செய்து தோற்கடிக்கும் கொள்கையைக் கையாளுகிறது என்று சொல்கிறார்கள். 30—6—1977-லிருந்து [illegible] சொல்லி வருகிறார்கள். ஆகவே நானும் கேட்கிறேன், முதலமைச்சரே ஆதரிக்கக் கூடிய ஒரு



1984 மார்ச் 23]

போராட்டம், ஆளும் கட்சியே ஆதரிக்கக்கூடிய ஒரு போராட்டம், ஜனவரி 16 ஆம் நாளன்று ஆரம்பித்த ஒரு போராட்டம் 2½ லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள ஒரு போராட்டத்தில் இன்னும் ஓர் ஒப்பந்தம் வரவில்லையே, ஏன்? (குறுக்கீடுகள்) ஏனென்றால் போராட்டங்கள் என்று ஆரம்பித்தால், இரண்டு சாராரையும் ஒத்துக் கொள்ள வைத்து, இரண்டு பேரையும் 'டேபிளில்' உட்கார வைத்து, ஒரு சுமுகமான ஒப்பந்தத்தைக் கொண்டு வருவதற்கு சில சமயங்களில் கால தாமதமாகிறது. அப்படித்தான் மேற்கு வங்காளத்திலும் நடந்துகொண்டிருக்கிறது. முதல்வர் அவர்களே ஆரம்பித்த போராட்டம் இப்படி முடியாமல் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறதென்பது வருத்தப்படவேண்டிய ஒன்றுதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தில் சணல் ஆலைகள் தொழிலாளர்கள் போராட்டம், சணல் ஆலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்று, மத்திய அரசுக்கெதிரான போராட்டமாகும். அவர்கள் கோரிக்கை மத்திய அரசு நிறைவேற்றவேண்டிய கோரிக்கையாகும். மேற்படி போராட்டத்தில் மத்திய அரசு தலையிட்டால் தான் முடியும். ஆனால் இங்கே மாநில அரசு தலையிட்டுத் தீர்க்கவேண்டிய கோரிக்கை. போராட்டம் ஆரம்பித்து 80 நாட்களுக்குப் பின் மாநில அரசு முதல்வர் தலையிட்டு தீர்த்து வைத்திருக்கின்றார். அதை ஏன் முன்பே செய்யவில்லை என்று கேட்கிறபோது, மேற்கு வங்காளத்தைக் காட்டுவதில் பிரயோஜனமில்லை. இந்த அரசு தனக்கிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்போது பிரச்சினையைத் தீர்த்ததுபோல் முன்பே ஏன் செய்யவில்லை என்று தான் கேட்கிறேன். அதை ஏன் முன்பே செய்யவில்லை. செவிசாய்க்கவில்லை என்ற காரணத்தினால்தான், தொழிலாளர்களை 80 நாட்கள் பட்டினி போடுவதற்காகத்தான் காலதாமதம் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதுதான் இல்லை என்று சொல்கிறேன். அப்படி நாங்கள் செய்யவில்லை. வேலைநிறுத்தம் நடக்கும்போது, தமிழகத்தில் தொழிலாளரைப் பட்டினிப்போட நினைக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரி என்று சொன்னால், மேற்கு வங்காளத்தில் வேலைநிறுத்தம் இவ்வளவு நாள் நீடிப்பது ஏன்? . மத்திய அரசுதான் தேசிய மயமாக்கவேண்டுமென்று ஒன்றுமில்லை. மாநில அரசு, தான் தேசிய மயமாக்கிக்கொள்கிறேன் என்று சொன்னால், அதைச் செய்ய முடியும். பாண்டியன் சர்க்கரை ஆலையை அதுபோல் மாநில அரசு செய்திருக்கிறது. எனக்குத் தெரிந்தவரைக்கும், தேசியமயமாக்குவதற்கு மாநில அரசுக்கும் அதிகாரம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவன்

சொல்கிற வாதம் சரியல்ல. மேற்கு வங்க அரசு தொழிலாளியைச் சாவு என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களே போராட்டத்தை நீடிக்க உடந்தையாக இருக்கிறார் என்கிற குற்றச்சாட்டை, நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நான் வருத்தப்படுவதெல்லாம், இப்படிப் பெரியவர்கள் எல்லாம் தலையிட்டும்கூட, இன்னும் அந்த மாநிலத் தொழிலாளர்கள் வேதனைப்படுகிறார்களே. ஏன் இங்குள்ள 14 கட்சியினரும் சேர்ந்து கல்கத்தா, ரைட்டர்ஸ் பில்டிங்குக்குச் சென்று, மாண்புமிகு முதலமைச்சர் திரு ஜோதி பாஸுவைச் சந்தித்து, "நாங்கள் தமிழகத்திலிருந்து வந்திருக்கிறோம். எந்த ஒரு சிங்கிள் ஃபேக்டரியாக இருந்தாலும், 14 கட்சியினரும் ஒன்றாகச் சேர்ந்துதான் போராடுவோம். அதுதான் வழக்கம். அதுபோல்தான் சிம்சனில் செய்தோம். கரூரில் செய்வதாக இருக்கிறோம். இங்கும் அதற்காகத்தான் வந்திருக்கிறோம்" என்று கூறி, ஒரு நாளைக்காவது அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டால், நான் பாராட்டுவேன். ஏனென்றால்,

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(பிற்பகல் 12-30)

The Hon. Member Thiru Nallasivan belongs to an inter-national party, and Hon. Member Thiru Manickam also belongs to an inter-national party. 14 கட்சிகளுக்குத் தலைமை தாங்கி நடத்துகிறவரும், அகில உலகப் பிரச்சினையில் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்தான். நீங்கள் எல்லாம் நேராக மேற்கு வங்கம் சென்று, ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்து, ஒரு நாளைக்கு 3 கோடி ரூபாய் நஷ்டமாகிறது, எனவே போராட்டத்தை நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கும்படியாக மிகமிகப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மற்றொரு மாநில அரசோடு ஒப்பிட்டுப் பேசுவதிலே ஆட்சேபனை இல்லை. ஒப்பிட்டுப் பேசலாம். ஆனால் பிரச்சினையின் தன்மையைப் பார்க்க வேண்டும். அங்கே சணல் தொழிற்சாலைகளை தேசிய மயமாக்க வேண்டுமென்பது பிரச்சினை. சணல் தொழில் மீண்டும் மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகி, மாநில அரசினுடைய அதிகாரத்திற்கு அப்பாலுள்ள பிரச்சினையாக அது மாறிவிட்ட காரணத்தாலே, தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்திற்கு முதலமைச்சர் மட்டுமல்ல, அந்த அரசே ஆதரவு தந்து, அங்கே போராட்டம் நடக்கிறது. இந்தப் பிரச்சினையோடு, நம்முடைய மாநிலத்திலே பாண்டியன் ஷுகர்ஸ் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டதை ஒப்பிட்டுக் காட்டினார்கள். இப்படி ஒப்பிட்டுக் காட்டுவதை, ஆங்கிலத்திலே 'டிஸ்டார்ஷன்' என்பார்கள்.



அமைச்சரவர்களுடைய பதிலிலே ஒரு பிரச்சினையினுடைய தன்மைகளை, ஸ்தூலமான தன்மைகளை மறுத்துவிட்டு, மற்றொரு மாநில அரசோடு அதை ஒப்பிடும்போது, விவரங்களையே 'டிஸ்டார்ட்' பண்ணக்கூடாது. பிரச்சினையினுடைய தன்மையையே மாற்றுவது என்பது தவறு. எனவே சணல் தொழிற்சாலைகளை தேசிய மயமாக்குவது என்பதும், மதுரை பாண்டியன் ஷுகர்ஸில் நடந்த ஒரு தப்பிதத்தைத் திருத்த அதனுடைய நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது என்பதும் வெவ்வேறு தன்மையுடையவை: இரண்டாவது, நம்முடைய மாநில அரசுக்கு தேசிய மயமாக்குவதற்கு அதிகாரமில்லை. எனவே அது பேச்சு வார்த்தையில் இருக்கிறது என்பது வேறு விஷயம். அதனால்தான், இம்மாதிரி பிரச்சினைகளை 'டிஸ்டார்ஷன்' பண்ணக்கூடாது என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மத்திய அரசிடம் அனுமதி பெற்று, தேசிய மயமாக்கலாம் என்பது எனக்குத் தெரிந்த சட்டம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் முதற்கொண்டு போராட்டத்தில் இணைந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். Very good. பி & சி மில்லைப் பொறுத்தவரையில், சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்களே, அதைப்போல மேற்கு வங்கத்திலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதைச் செயற்படுத்துவதற்கு தீர்மானத்தின் ஆப்பரேடிவ் போர்ஷனாக இருக்க வேண்டும் ". . . அப்படி இல்லை என்றால், அரசு ராஜினாமா செய்யும் அல்லது இப்படிச் செய்யும்" என்று தீவிரமான வேலைகளில் அந்த அரசு ஈடுபட்டிருக்கிறதா? சொல்லலாம். The hon. Member can always express lip sympathy. நீங்கள் அந்தப் போராட்டத்தோடு இருக்கிறோம் என்று சொல்லிவிடலாம். Right போராட்டத்தோடு ஒரு முதலமைச்சர், ஒரு ஆளுங் கட்சி, வலுவுள்ள ஆட்சி இணைந்திருக்கிற நேரத்தில் இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது, என்ன செய்கிறார்கள் What is the operative portion of the resolution? அதை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள்? ஒன்றுமில்லையே. சொல்லிவிட்டால் போதுமா? பேச்சு வார்த்தைதான் நடக்கிறது. அரிபாத கோஷ்—என்னுடைய அருமைச் சகோதரருக்குத் தெரியும்—அவர்களோடு பேசினார்கள். மறுபடியும் செயலாளரோடு பேசுகிறார்கள். மறுபடியும் மந்திரியோடு பேசுகிறார்கள். இதுதான் நடக்கிறதே தவிர என்ன எங்களைவிடத் தீவிரமாகச் செய்துவிட்டார்கள் என்றுதான் நான் கேட்கிறேன். அதைப்பற்றிச் சொல்லவில்லை. அந்த அரசு போராட்டத்தை நீட்டிக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு அரசு, ஒரு முதலமைச்சர், ஆளும் கட்சி அத்தனை

யும் ஆதரவு கொடுத்து, —mind you, it is dragging on from January 16th—போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே தமிழக அரசின்மீது அப்படிப்பட்ட குற்றச்சாட்டு சொல்ல வேண்டாம். சில நேரங்களில் சில போராட்டங்களில் ஒரு ஒப்பந்தத்திற்குக் கொண்டுவர நேரமாகிறது. அது சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நெல்லிக்குப்பம் பற்றிச் சொன்னார்கள். நான் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்கிறேன். 10 (பி) . . .

**திரு. ஆ. நல்லசிவன் :** நெல்லிக்குப்பம் என்ற வார்த்தையையே பேசக் கூடாதென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 10(பி) செக்ஷன் பற்றிச் சொன்னார்கள். அங்கே 'நெல்லிக்குப்பம்' வந்தது. 10(பி) செக்ஷனை அவர்கள் எதிர்த்தார்கள். சரி. ஆனால் 10(பி) செக்ஷனைக் கொண்டு வர வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். நெல்லிக்குப்பம் ஆலையிலே 10(பி) செக்ஷனைக் கொண்டு வந்து, அந்த ஆலையை மூடவிடாமல் தமிழக அரசு பார்த்துக் கொண்டது. Is it not a marvellous and tremendous victory for Dr. M.G.R.'s Government யோசனை பண்ணிப் பாருங்கள். எவ்வளவு பெரிய வெற்றி அவருக்கு! புரட்சித் தலைவர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். ஒரு தொழிற்சாலையை மூடாதே என்று சொல்லவும். ஒரு தொழிலாளிக்கு இவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லவும் அதிகாரம் இதுவரை எந்த அரசுக்குமில்லை. அந்த அதிகாரத்தை முதலில் கேரள அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அந்தச் சட்டத்தையே தமிழக அரசும் கொண்டு வந்தது. அதை எதிர்த்தார்கள். இரண்டு பேரும் எதிர்த்தார்கள். ஆனால் அந்தச் சட்டத்தை நெல்லிக்குப்பத்தில் உபயோகப் படுத்தி, அந்த ஆலையை மூடாமல் செய்ய வேண்டுமென்பதற்கு, சுப்ரீம் கோர்ட் போனார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்களுடைய சட்டத்தைப் புரிந்துகொண்டு செயல்பட ஓராண்டுக்காலம் ஆகியிருக்கிறது. பாவமில்லை. "Better late than never." என்று சொல்வார்களே, அந்த அளவிலே அதைப் பாராட்டுகிறேன். ஆனால் நாங்கள் உபயோகப் படுத்தியது தொழிலாளர்களுக்குச் சாதகமாகத்தான். நாங்கள் அதை உபயோகப்படுத்தியதன் காரணமாகத்தான் இன்றையதினம் அந்த ஆலை ஓடிக் கொண்டிருக்கிறது. இல்லையென்றால் மூடிவிடுவார்கள். நீங்களே அதை உபயோகப்படுத்துங்கள் என்று சொன்னார்கள். நீங்கள் வழக்கு மன்றத்திற்குப் போனதற்காக நாங்கள் போய்விடவில்லை. அந்தத் தொழிற்



சாலையை மூடக் கூடாது என்பதில், புரட்சித் தலைவர் ஆட்சி மிகமிக உறுதியாக இருந்தது. முதலில் ஐ.டி.ஆர். ஆக்டை 'இன்வோக்' பண்ண வேண்டும். அதற்கான அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நெல்லிக்குப்பத்தைப் பொறுத்தவரையில், 10-பி சட்டம் பற்றி அமைச்சர் சொன்னார். அதுபற்றி நான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அதுபற்றிச் சொல்ல வேண்டாம் என்று நான் சொன்னதுபோல் அமைச்சர் அவர்களும் அதுபற்றிப் பேச வேண்டாம். வேறு பிரச்சினைக்குப் போவது நல்லது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கோவை பஞ்சாலையைப் பொறுத்தவரையில், 10-பி-ஐக் கொண்டுவந்து தொழிலாளர்கள் பெற்று வந்த போனஸைப் பெறும்படி செய்தோம். சட்டமன்றத்தில் தவறான தகவலைச் சொல்ல முடியாது. தொழிலாளர்கள் வாங்கிக்கொண்டிருந்த போனஸை வாங்கிக் கொடுத்தோம். இந்த 1981-82-ம் ஆண்டு என்ன போனஸ் கொடுக்க வேண்டும் என்பதுதான் ரெபரன்சுக்குப் போயிருக்கிறது. எந்த ஆண்டுக்கு அது பற்றி பிரச்சினை வந்ததோ அதைக் கொடுக்கவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம். மூன்றாவதாக 10-பி கொண்டு வந்தோம். அந்த 10-பி பற்றி 4, 5 தினங்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் பாராட்டினார். இப்பொழுதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அதுபற்றிப் பாராட்டுவார் என்று நான் கருதினேன். ஆனால் அதைப்பற்றிப் பேசாமல் விட்டு விட்டார். 2,500 தொழிலாளர்கள் 17—10—1983 லிருந்து போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும்போதே பேச்சுவார்த்தை நடந்தது. தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்த பஞ்சப்படியை முதலாளி நிறுத்திவிட்டார். அதைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் போட்ட ஆணையை, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இங்கு படிக்கிறேன். (24—2—84)

"In accordance with clause 1 *(f)* of the Settlement under Section 12 (3) of the Industrial Disputes Act, 1947, dated 24th October 1979 and the existing practice followed by the private Rubber Plantations in Kanyakumari District, the Employers shall pay to all workmen dearness allowance from 1st April 1982 (the order is dated 24th February 1984) on which date the enhanced dearness allowance was not paid. The employers shall continue to pay the ad hoc amount as provided in clause 1 (c) of the Settlement under section 12 (3) of the Industrial D sputes Act, 1947, dated 11th December 1982 and also in accordance with the existing practice followed by the private

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 23

Rubber Plantations in Kanyakumari district, the arrears arising out of the implementation of the above directions shall be paid within 15 days from the date of receipt of this Government Order by the parties ".

எல்லாவற்றையும் படிப்பது நல்லதல்ல. ஆதலால் படிப்பதை இத்துடன் நிறுத்திவிடுகிறேன். ஆகவே நிறுத்தப்பட்டிருந்த பஞ்சப் படியை தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. 20-பி பிரிவின்படி கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதே நேரத்தில் வேலை நிறுத்தத்தையும் இந்த அரசு தடை செய்யவில்லை. ஆனால் வேறு அரசுகள் தடை செய்திருக்கின்ற தகவலை தான் பின்னால் சொல்ல வருகிறேன். இன்றையதினம் 'ஸ்டே' வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி 'ஸ்டே' வாங்குவதைக்கூட எப்படி எப்படித் தவிர்ப்பதற்கு முயற்சி செய்யலாம் என்பதைப்பற்றி இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, கரூர் மில் பற்றிச் சொன்னார்கள். கரூர் மில்லில் பேச்சு வார்த்தை நடந்தது. ஆனால் ஒப்பந்தம் வரவில்லை. அந்த விஷயம் ஒரு டெக்னிகல் விஷயம். நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்தம் வரவில்லையென்ற காரணத்தால், அது டெக்னிகல் விஷயமாக இருப்பதால், 9—3—1984 அன்று அந்தப் பிரச்சினைகளை தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்புகிறோம்.

According to the Government, we feel that a question of law is involved there.

Learners, Trainees,— அது அவர்களைப் பொறுத்த பிரச்சினை. நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படாததால் தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். இது 264 தொழிலாளர்களுடைய பிரச்சினையாகும்.

To determine

Whether they are apprentices, trainees or temporary?

To determine the above issue and to decide as to whether the demand of the above workmen that they should be paid occupational wages is justified; if not to what relief they are entitled;

Whether the demand of the workmen that promotion should be on category-wise seniority is justified if not, to what relief the workmen are entitled?



1984 மார்ச் 23]

இது மிகவும் டெக்னிகல் விஷயம். அதனால் நேரடிப் பேச்சு வார்த்தை வெற்றி பெறாததால், நாங்கள் தொழில் நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். இதில் அரசு எந்தத் தவறும் செய்யவில்லை. அது தொழில் நீதி மன்றத்தால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அருமைப் பெரியவர் திரு. மாணிக்கம் இத்துடன் தொடர்புடையவர்கள் என்பதால், அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கூட என்னிடம் பேசியிருக்கிறார்கள். திரு. நல்லசிவன் அவர்களை வேலைநிறுத்தத்தைப் பின்வாங்கிக் கொண்டு நல்ல வழக்கறிஞராக வைத்து கோர்ட்டில் வாதாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 'டாம்கோ' பற்றி இங்கே சொன்னார்கள். டாம்கோ வின் தலைவர் குசேலரா, சிந்தனா என்ற போராட்டம் நடக்கிறது. இது சிவில் சூட். நாங்கள் தீர்க்க முடியாது. திரு. சிந்தன் தனி ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார். "உங்களுக்குள்ளேயே தகராறு இருக்கிற காரணத்தால், நீங்கள் 18(1)-ன் படி ஒப்பந்தம் போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொன்னோம். 12(3) வேண்டாம் என்றும் சொன்னேன். அப்படி அவர்கள் ஒப்பந்தம் போட்டுக்கொள்ளவில்லை. என் மீது குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

அடுத்ததாக, மேட்டூர் கெமிகல்ஸ் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அங்கே சி ஐ டி யு, ஐ என் டி யு சி, தி மு க, ஏ ஐ டி யு சி., (குறுக்கீடு .)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்.)

ஒரு மணி நேரம் முக்கியமான பிரச்சினைகளையெல்லாம் திரு. நல்லசிவன் பேசியிருக்கிறார். ஒரு பாயிண்ட் கூட விடக்கூடாது. எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியாக வேண்டும். அதனால் தான் மேட்டூரில் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** (திரு. ப. மாணிக்கம். திரு. ஆ. நல்லசிவன் ஆகியவர்களை நோக்கி) தங்களுக்கு ஏதாவது விளக்கம் வேண்டுமானால் அமைச்சர் பேசி முடித்த பிறகு, விளக்கம் கேட்டால் நான் அனுமதிக்கிறேன். அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஐ என் டி யு சி, தி மு க. ஏ ஐ டி யு சி இவைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு மேட்டூர் கெமிகல்சில் சி ஐ டி யு மட்டும் 18(1) ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

It is binding on parties to the Contract

யார் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அது செல்லும்

சி ஐ டி யு சங்கத்தையும் அந்த முதலாளியையும் தான் அது கட்டுப்படுத்தும். மற்றவர்களைக் கட்டுப்படுத்தாது. ஆக நான்கு சங்கங்கள் இருக்கும்போது. சி ஐ டி யு தனியாக 18(1) ஒப்பந்தம் போடக்கூடிய பழக்கம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது சங்கம் உன்னுடையதா என்னுடையதா என்று தெரியாது.

Two giants in the field—Kuchelar and V. P. Chintan

"இரண்டு பேரும் ஏன் மோதிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் மேட்டூர் கெமிகல்சில் செய்ததைப் போல 18(1) ஸ்டேட்மெண்ட் போடுங்கள்" என்று சொல்லியிருக்கிறோம்.

Why do you want to rope in others also?

நீங்கள் செய்ததையே முன்மாதிரியாக வைத்து இந்த அரசாங்கம் ஒரு ஆலோசனை செய்தால் அதிலும் குற்றம் சாட்டுவது சரியல்ல. எனவே மேட்டூர் கெமிகல்சில் சி ஐ டி யு செய்வதையே நீங்கள் 'டாம்கோ'-விலும் செய்யலாம் என்று ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

என் எஸ் கே பாடி ஓர்க்ஸ் மூடியிருக்கிறார்கள். Notice கொடுத்து மூடியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். இப்போது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி முதலாளி ஒரு தொழிற்சாலையை மூடவேண்டுமென்று சொன்னால் மூடிக்கொள்ளலாம், அது அவர்களுடைய உரிமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. 25 (F.F.A.A) படி ஒரு நோட்டீஸ் கொடுப்பது என்பது 'இன்பர்மேஷன்' தான். பெர்மிஷன் வாங்குவது அல்ல. ஆனாலும் நாங்கள் 25 (O) 25 (M) 25 (N) இந்த மூன்றையும் திருத்திக்கொண்டு வந்து அரசாங்கத்திடம் பெர்மிஷன் வாங்கவேண்டுமென்று ஒரு நிலை உருவாவதற்கு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

'பாடி ஓர்க்ஸ்' பிரச்சினை கன்சிலியேஷனில் இருக்கிறது.

அடுத்து பி அண்டு சி மில் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 7—12—1983 அன்று இதை தேசியமயமாக்க வேண்டும் என்று கோரி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். மீண்டும் இப்போது ஒரு கடிதம் 10, 15 நாட்களுக்கு முன்னாலே—அதாவது 11 அல்லது 22 ஆம் தேதி என்று நினைக்கிறேன்—நினைவு சரியாக இல்லை—எழுதியிருக்கிறார்கள். எனவே உரிமையாகத்தான் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்பட ஒன்றுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள்பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுக்காகத்தான் நாம் ஒரு சட்டம் கொண்டு வந்தோம். கோவாப்பரேட்டிவ் செக்டாரை 'எக்ஸ்க்ளூட்' செய்தால்தான் மாஸ்டர் வீவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது சொன்னதை நாங்கள் கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அந்தச் சட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் கோர்ட்டில் அதுபற்றிய வழக்கு இருக்கிறது. நாங்கள் வழக்காடி வெற்றி பெற்று சட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று நம்புகிறோம். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் "நாங்கள் கோவாப்பரேட்டிவ் செக்டாரை அதன் உள்ளே சேர்க்காததால்தான் இந்தச் சட்டம் செயல்பட முடியாமல் போய்விட்டது" என்று சொல்லக்கூடியவர்களைப் பார்த்து நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். எங்களைப் பார்த்து இப்படி செயல்பட முடியாமல் செய்து விட்டீர்களே என்று கேட்பவர்கள் மேற்கு வங்க முதல்வர் அவர்களைப் பார்த்து "இப்படி கோவாப்பரேட்டிவ் செக்டாரைச் சேர்க்காமல் சட்டம் கொண்டு வந்த காரணத்தால்தான் கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் போய் விட்டது, நீங்கள் அப்படிச் செய்யாமல் சட்டம் கொண்டு வர வேண்டும்." என்று கேட்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எனக்குத் தெரிந்தவரை, இந்தியாவிலேயே கைத்தறி நெசவாளர்களுக்காக என்று முதன் முதலில் சட்டம் கொண்டு வந்ததே இங்கேயுள்ள புரட்சித் தலைவருடைய அரசுதான். நாங்கள் கொண்டு வந்த சட்டம் இன்னும் செயல்முறைப்படுத்தப்படாமல் இருக்கலாம். முதன் முதலாகக் கொண்டு வந்ததால் தவறுகூட செய்திருக்கலாம். அவ்வளவு நிறைவாகச் செய்யாமலும் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது எங்கே லேக்குனா இருக்கிறது என்பது தெரிந்துவிட்டது. எனவே நேராக மேற்கு வங்க முதல்வர் அவர்களுக்குப் போன் செய்து "காம்ரேட், இப்படி தமிழ் நாட்டில் தவறு செய்து விட்டார்கள். நீங்கள் உடனடியாக இப்படிப்பட்ட தவறு இல்லாமல் ஒரு பில் கொண்டு வாருங்கள்" என்று கேட்க வேண்டும். முதலமைச்சர் அவர்களைப் பார்த்து "காம்ரேட்" என்று சொல்வதில் தவறு இல்லை.

"Comrade, why not bring in a legislation for the benefit of the hand-loom workers? Tamil Nadu Government have committed mistake. You can eliminate that mistake, by including the co-operative sector," என்று கேட்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சியில் அவர்கள் ஈடுபட

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 23

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே 'கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிசம்' செய்வது சரி. நாங்களும் அதை ஏற்றுக்கொள்கிறோம். இப்போது வழக்கு மன்றத்தில் அதில் நாங்கள் வெற்றி பெற்று அந்தச் சட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று நம்புகிறோம். ஆனால் அதே நேரத்தில் இங்கே மட்டும் நண்பர்கள் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தால், என்ன அர்த்தம்? எங்கள் மாநிலத்தில் கொண்டு வந்துவிட்டோம், பார்த்தீர்களா என்று அங்கே செய்து காட்ட வேண்டும். எனவேதான் அத்தகைய முயற்சிகளில் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'கன்ஃபர்மெண்ட் ஆஃப் பர்மனென்ட் ஸ்டேட்ஸ்' பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கோவாப்பரேட்டிவ் செக்டாரில் உள்ள அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளிலும் உள்ள தொழிலாளர்களில் 24 மாதங்களில் 480 நாட்களுக்கு மேல் பணியாற்றிய அனைத்துத் தொழிலாளர்களும் 1982 ஆம் ஆண்டே நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே, வடலூரில் உள்ள நிறுவனத்தில் 8 ஆண்டுகள் வரை வேலை செய்தும் நிரந்தரமாக ஆகாது இருந்த 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இப்போது நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தாரங்கதாராவில் உள்ளவர்களும் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் புள்ளிவிவரங்கள் தேவையென்றால், நான் அவைகளைச் சேகரித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலே ஓட்டை வைக்க வேண்டுமென்று வழி வைக்கவில்லை. அதில் ஓட்டையே இல்லை. ஆனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதைச் 'சேலஞ்ஜு' செய்து கோர்ட்டில் வெற்றி பெற முடியும் என்று நாங்கள் இருக்கிறோம். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். காண்ட்ராக்ட் லேபர் (அபாலிஷன் அண்டு ரெகுலேஷன்) சட்டம் கொண்டு வந்தபோதும் கோர்ட்டுக்குப் போனார்கள். எனவேதான் அந்த முதலாளிகளுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், "All the legislations that are brought in by this Government are beneficial legislations".
தொழிலாளர்களின் நன்மைக்காக நாங்கள் சட்டம் கொண்டு வருகிறோம். தொழிலாளர்களுக்கான சட்டங்கள் செயல்படுத்தப்பட்டால்தான், தமிழகத்தில் நிம்மதி இருக்கும். எனவே மீண்டும் முதலாளிகளையும் தொழில் அதிபர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், "தமிழ் நாட்டின் இந்த அரசு கொண்டு வருகிற எந்தச் சட்டத்தையும் தயவு செய்து வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்லாதீர்கள்." ஏனென்றால் நாங்கள் தொழிலாளர்கள் திருப்தி அடைய, அவர்கள் நல்வாழ்வு வாழ, நிலையான வாழ்க்கை பெற பெனிஃபிஷியல் லெஜிஸ்லேஷன்களைக் கொண்டு வரும்போது, "அதை



1984 மார்ச் 23] [திரு. எஸ். இராகவானந்தம்]

எதிர்த்து நீங்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருந்தால், நாட்டில் எவ்வளவு பெரிய கொந்தளிப்பு ஏற்படும்" என்பதை உணர்ந்து எல்லா வழக்குகளையும் அவர்கள் பின்வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அடுத்து, குறைந்தபட்ச ஊதியம்பற்றிச் சொல்லப்பட்டது. குறைந்தபட்ச ஊதியத்தை நாங்கள் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் அறிக்கையையும் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். என்னிடத்திலே மூன்று பப்ளிகேஷன்ஸ் இருக்கின்றன. 'உழைப்பவர் உலகம்' என்ற பத்திரிகையில் 'தொழிலாளர் நல அமைச்சர் வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறோம். உழவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை 5—4—1983 லிருந்து நிர்ணயித்திருக்கிறோம். அந்தக் கூலியைப் பெறுவது எப்படி, என்ன செய்வது, தொழிற் சங்கத் தலைவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி ஒரு பக்கமுள்ள அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். நேரம் அதிகம் ஆவதால், எல்லாவற்றையும் படிக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பதால், ஒன்றை மட்டும் படிக்க அனுமதி தர வேண்டும் என்று கேட்டு, இந்த அறிக்கையைப் படித்துக் காட்டுகிறேன். நாங்கள் சட்டத்தைக் கொண்டு வந்தால் மட்டும் போதும் என்று தூங்கவில்லை.

"தொழிலாளர் நல அமைச்சர் வேண்டுகோள்

தமிழ்நாடு அரசு உழவுத் தொழிலும், அதைச் சார்ந்துள்ள தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதத்தை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் திருத்தி அமைத்துள்ளதை அறிவீர்கள். உதாரணமாக உழவு மாடுகளுடன் உழவு புரியும் தொழிலாளர்களுக்கு ஊதியம் ஒரு நாளைக்கு ரூபாய் 18 ஆகும். மற்ற தொழிலாளர்களுடைய ஊதிய விகிதங்களும், மற்ற விவரங்களும் 'உழவர் உலகம்' 1983 ஆம் ஆண்டு ஜூன் மாத இதழ் பக்கம் பத்திலும், ஆகஸ்ட் மாத இதழ் எழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

உழவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தை தமிழ் நாட்டில் வருவாய்த் துறை அமல்படுத்தி வருகிறது. இத்துறையில் உள்ள
வருவாய்த் துறை ஆய்வாளர்கள் (Revenue Inspector)
துணை வட்டாட்சியர்கள் (Deputy Tahsildars),
வட்ட ஆட்சியாளர்கள் (Tahsildars),
வருவாய் கோட்ட அலுவலர் (Revenue Divisional Officers),
மாவட்ட வருவாய் அலுவலர் (District Revenue Officers),
மாவட்ட ஆட்சியாளர்கள் (District Collectors), ஆகியவர்களுடைய

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 23

ஆட்சி வரம்பில் இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதியம் வழங்கப்படவில்லையெனில் மேற்சொன்ன ஆய்வாளர்களிடம் புகார் செய்யலாம். மேலும் வழங்கப்படாத தொகையை வசூலிக்க சம்பந்தப்பட்ட வட்டாட்சியாளர்களிடம் கோரிக்கை மனு செய்யலாம். அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு ஊதியத்தைவிட குறைவாகக் கொடுத்தால் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவர்களுக்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது ரூபாய் 500 வரை அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கலாம். வேலை அளிப்பவர்கள் அருள்கூர்ந்து அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தை முழுமையாக தொழிலாளர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

அதே நேரத்தில் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். we are not keeping quiet. இது அக்ரிகல்ட்சுரல் லேபரர்சைப் பொறுத்த வரையில். மற்ற எல்லா இடத்திலும், கைத்தறி நெசவாளர்கள் உட்பட, குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று இன்னுமொரு பக்கத்திலே இதே போல அறிவிப்பு கொடுத்திருக்கிறோம்.

அதே போல Conferment of permanent status பற்றியும் வெளியிட்டிருக்கிறோம். 480 நாட்கள் வேலை செய்தும் பெர்மெனன்ட் செய்யவில்லையென்றால், யாரை அணுக வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். தொழிற்சாலைகள் என்றால், தொழிற்சாலை ஆய்வாளர்களையும், மலைத் தோட்டங்கள் என்றால் மலைத் தோட்ட ஆய்வாளர்களையும், இதர நிறுவனங்கள் என்றால் தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்களையும் அணுக வேண்டும் என்றும் இன்னுமொரு பக்கத்திலே விளம்பரம் வெளியிட்டிருக்கிறோம். இப்படி குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்த காரணத்தாலே அதுவே போதும் என்று நாங்கள் திருப்தி அடையவில்லை. மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

அதே போல விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அமைப்புக்கு உட்படாத தொழிலாளர் நலனைப் பாதுகாக்க தமிழ்நாட்டில் 73 வட்டங்களில் ஊரகத் தொழிலாளர் அமைப்பாளர்களை அரசு அமைத்து ஊரகத் தொழிலாளர்களுக்கு அவர்கள் உரிமைகளையும், கடமைகளையும் போதித்து, அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதற்குள்ள ஒரு திட்டத்தை 1984-85 ஆம் ஆண்டு செயல்படுத்த இருக்கிறது இந்த அரசு.



1984 மார்ச் 23] [திரு. எஸ். இராகவானந்தம்]

தமிழ்நாடு பூராவும் இதற்காக நியமிக்கப் போகும் 75 பேர்கள் குறைந்தபட்ச ஊதியம் போன்ற எல்லாச் சட்ட திட்டங்களையும், லெஜிஸ்லேஷன்களையும் தொழிலாளர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் பயனடையச் செய்வதற்குரிய திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்தவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அருமை சகோதரர் திரு. மாணிக்கம் அவர்கள் அந்தச் சட்டத்திலே ஒரு பெரிய குறை இருக்கிறது. 100 காண்ட்ராக்ட் தொழிலாளர்களை தொழிலதிபர் நிறுத்திவிடுகிறார் என்றால், அபாலிஷ் செய்துவிடுகிறார் என்றால், அவர்களுக்குப் பதிலாக யாரை வேலைக்கு வைப்பது?

The principal employer is at liberty to recruit whomsoever he wants. ஆதாவது தொழிற்சாலையின் சொந்தக்காரர் நிறுத்தப்பட்ட அந்த 100 காண்ட்ராக்ட் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சட்டத்தில் இல்லை. யாரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். அப்படியென்றால் என்னவாகும்? காண்ட்ராக்டில் சம்பாதித்துக் கொண்டிருந்த அந்தத் தொழிலாளி வேலை இழந்து நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமை வரும். எனவே 'ஃபுல் இம்ப்ளிமெண்டேஷன்' செய்ய வேண்டுமென்று அரசு கருதுவதால், என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் காண்ட்ராக்ட் லேபர் (ரெகுலேஷன் அண்டு அபாலிஷன்) சட்டம் பிரிவு 10-ஐத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் மேலே கடிதம் எழுதியிருக்கிறோம். எங்கே காண்ட்ராக்ட் லேபர் அபாலிஷ் செய்யப்படுகிறதோ, அங்கே அதனால் யார் யார் வேலையிழந்திருக்கிறார்களோ, அவர்களை
The principal employer should employ them in the principal establishment.
என்று திருத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அந்தத் திருத்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது திருத்தப்பட்ட பிறகு அவர்களுக்கு நன்மை கிடைக்கும். எனவே
"We are acting. We are conscious of their difficulties",
என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்து நம்முடைய அருமை சகோதரர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனியைப்பற்றிச் சொன்னார்கள். நாங்கள் refer செய்திருக்கிறோம். அந்தப் பிரச்சினையை refer செய்த உடனே கோர்ட்டில் என்ன செய்தார்கள்? வேலைக்கு எடுத்துக்

கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமென்று சொன்னால், 131 தொழிலாளர்கள் என்று கருதுகிறேன். ஆனால் அதை எதிர்த்து உயர் நீதி மன்றத்திற்கு வழக்காடப் போயிருக்கிறார்கள். அதுதான் இங்கிலிஷ் எலக்ட்ரிக் கம்பெனியினுடைய நிலைமை. எங்களைப் பொறுத்தவரை We have referred the issue and the workers have succeeded also. ஆனால் மேல் முறையீட்டிற்கு நிர்வாகம் சென்றிருக்கிறது. விஸ்கோஸ் போனசைப் பொறுத்தவரையில், 1981-82 போனசு பூராவும் கொடுக்கப்பட்டுவிட்டது. 1983 ஆம் ஆண்டுக்குள்ள போனஸ்— It is being discussed— பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் ஒரு ஐந்து நிமிடங்களில் அதாவது 1 மணிக்கு சரியாக முடித்துவிடலாம் என்று கருதுகிறேன். இந்த அரசு கொண்டுவந்திருக்கக் கூடிய சட்டங்கள் எல்லாவற்றையும் நான் திருப்பிச்சொல்ல வரவில்லை. எங்களுக்கு முன்னால் இருந்த ஆட்சியில் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதற்கு தமிழ்நாடு லேபர் வெல்பர் ஆக்ட் என்று பெயர். அது 1972-ல் வந்தது. அந்தச் சட்டத்தின்படி தொழிலாளி ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். முதலாளி இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த மூன்று ரூபாயை வைத்து தொழிலாளிக்கு நன்மை செய்ய வேண்டும். தொழிலாளியிடமிருந்து ஒரு ரூபாய், முதலாளியிடமிருந்து இரண்டு ரூபாய், ஆக மூன்று ரூபாயை வாங்கி ஒரு வருஷத்துக்குச் செய்தார்கள். இது ஒரு சட்டம். நாங்கள் கொண்டு வந்த சட்டங்கள் எல்லாம் பெனிபீஷியல் சட்டங்கள். இந்தச் சட்டத்திலே What is the Government's share? அரசாங்கத்தினுடைய பங்கு என்ன? தொழிலாளி ஒரு ரூபாயும், முதலாளி இரண்டு ரூபாயும் ஒரு வருஷத்துக்குக் கொடுக்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்கிறது? இந்த 'பைலை' முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பினேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி Criticise பண்ணுவதற்கு முன்னால் ஒரு நிமிஷம் சிந்திக்கப் பேசி அப்புறம் பண்ணுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ரொம்ப வேகமாகப் பேசிவிட்டார்கள். இதைப்பற்றியெல்லாம் அந்த நேரத்திலே கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பைலைக் கொடுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளி ஒரு ரூபாய் தருகிறார்; முதலாளி இரண்டு ரூபாய் தருகிறார்; அரசாங்கத்தினுடைய பங்கு என்ன என்றார்? அரசாங்கத்தினுடைய பங்கு பூஜ்யம் Nil என்று எழுதி அனுப்பினேன். முதலமைச்சர் அவர்கள் அதற்கு அரசாங்கம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஆண்டுக்கு இரண்டு ரூபாய் தரும் என்று எழுதி அனுப்



பினார். உடனே லேபர் வெல்பர் போர்டிலே இதை வைத்தோம். தொழிலாளர்கள் இரண்டு ரூபாய் கொடுக்கிறோம என்று ஒத்துக்கொண்டார்கள். முதலாளி நான்கு ரூபாய் தருகிறோம் என்றார்கள். அதனால் தொழிலாளி 2 ரூபாய், அரசாங்கம் 2 ரூபாய், முதலாளி 4 ரூபாய் என்று ஃபண்டு வருகிறது. இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் கொண்டு வருகிற சட்டம். ஒவ்வொரு சட்டமும் எவ்வளவு பெனிபீஷியலாக இருக்கிறது என்று பார்க்க வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காக்க வைப்பது மரியாதை அல்ல: அதற்காகத் தான் நான் சுருக்கமாக முடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னொன்று, எப்படி திரு. நல்லசிவன் மறந்துவிடுகிறார் என்பது தான் எனக்குக் கவலை. ஸ்கிரீனிங் கமிட்டி, ஸ்கிரீனிங் கமிட்டி என்று எவ்வளவு சத்தம் போட்டிருக்கிறார்கள்.

What for is this Screening Committee? ஸ்கிரீனிங் கமிட்டியைக் கொண்டு வந்தது யார்? தி.மு.க. ஆட்சியிலேதான் ஸ்கிரீனிங் கமிட்டி வந்தது. 'ஸ்கிரீனிங் கமிட்டியை 'அபாலிஷ்' பண்ணு, ஸ்கிரீனிங் கமிட்டியை 'அபாலிஷ்' பண்ணு என்றார்கள். ஸ்கிரீனிங் கமிட்டியை அபாலிஷ் பண்ணியது யார்? புரட்சித் தலைவர் தானே. We have abolished the Screening Committee. அந்த ஸ்கிரீனிங் கமிட்டியை எடுத்ததற்கு, என்னதான் இந்த அரசை Criticise செய்தாலும், "நான் ஒரு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சொல்லக் கூடாதா? அதைக் கேட்க எனக்கு இப்போது உரிமை இல்லையா? பாராட்டி ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? What are you going to lose after all? நீங்கள் தான் கேட்டீர்கள். நானும் லேபர் லீடராக இருக்கும்போது, எதற்கு ஸ்கிரீனிங் கமிட்டி என்று சொன்னேன். நம்முடைய முதல்வர் அவர்களிடம் போய்ச் சொன்னேன். ஸ்கிரீனிங் கமிட்டி என்றால் என்ன என்று கேட்டார்கள். கோர்ட்டுக்கு அனுப்புவதற்கு முன்னாலே கோவாபரேடிவ் செக்டார், பப்ளிக் செக்டார் சம்பந்தப்பட்டவரை இவர்களோடு உட்கார்ந்து, எல்லோரும் பார்த்து, கோர்ட்டுக்கு அனுப்பலாமா, வேண்டாமா என்று சொல்ல நடுவிலே ஒரு 'பாடி' இருக்கும். நடுவிலே என்ன பாடி (Body) வந்தது என்றார்? மந்திரி தானே அனுப்புகிறார். அப்படியானால் அந்த பாடியை அபாலிஷ் பண்ணுங்கள் என்று by one stroke of the pen எழுதிவிட்டார். அதற்கு ஒரு வார்த்தை பாராட்டு இல்லையா? இந்த நல்லவைகளை எல்லாம் நீங்கள் சொல்லிவிட்டு மறுபடியும் எங்களை 'அட்டாக்' பண்ணினால் நான் ஏற்கும். ஏன் தெரியுமா? என்ன தான் நீங்கள் எங்களை 'அட்டாக் பண்

னினாலும் ஜனங்கள் மத்தியிலே எடுபடவில்லை. ஏதோ நீங்கள் மனதிலே நினைக்கிறதை எல்லாம் நாங்கள் செய்யவில்லை என்று அட்டாக் பண்ணுகிறீர்களேயொழிய, எதை நாங்கள் செய்திருக்கிறோமோ அதை ஜனங்கள் மத்தியில் நீங்கள் சொல்வதில்லை. திரு. மாணிக்கம் அவர்கள் பேசினாலும் அப்படித்தான். இரண்டு பக்கமும் 'அனலைஸ்' பண்ணிப் பேசினால் ஜனங்கள் கேட்பார்கள். ஒருகால் எங்கள் மீது குற்றம் இருந்தால் எங்களுக்குக் கோபம் வரும். எங்கள் யாருக்கும் கோபம் வரவில்லை. திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்களும் பேசினார்கள். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து மக்கள் முடிவு எடுத்து விடுகிறார்கள்.

அண்ணா தி.மு.க. ஆட்சியிலே தான் தொழிற்சாலைகள் நிரம்ப மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். 1971-ல் இருந்து 1976 வரைக்கும் மூடித் திறந்த தொழிற்சாலைகள் 9 தான். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இது வரையில் 17 தொழிற்சாலைகளைத் திறந்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன, 50 ஆயிரம் பேர் நடுத்தெருவிலே நிற்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் இல்லை, 9 தொழிற்சாலைகள் தான் மூடப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 2,754 தான். என். எஸ். கிருஷ்ணா பாடி ஒர்க்ஸ் சேர்த்துதான். இதில் பரமா மில்லைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்துக்கு எழுதியிருக்கிறோம். தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்துக்கு எழுதியிருக்கிறோம். ஜனார்த்தனா மில்ஸ்,





கோயம்புத்தூர்—அதை தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். என். எஸ். கிருஷ்ணா பாடி ஒர்க்ஸ். சமரச அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. காவேரி என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட். அது தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் முன்பு பேச்சு வார்த்தையில் இருந்துகொண்டிருக்கிறது. சதர்ன் அல்லாய் பௌண்ட்ரி. அதே மாதிரி பேச்சு வார்த்தையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்திய போர்ஜ். அதை ரெபரன்ஸ்க்கு கொடுத்திருக்கிறோம், மூடியது சரியா இல்லையா என்பதை ரெபரன்சுக்கு கொடுத்திருக்கிறோம். எல். போர்ஜ் லிமிடெட், சென்னை இரண்டாவது தொழிலாளர் துறை ஆணையாளர் முன்னர் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. 'மினி எகுவிப்மெண்ட்ஸ், கோவை—கோவை மூன்றாவது தொழிலாளர் துறை ஆணையாளர் முன்னால் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கின்றது. ஆனால் மூடிய தொழிற்சாலைகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் எண்ணிக்கை குறைவுதான். 'இந்து பத்திரிகையிலே அப்படி எழுதியிருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். இந்து இதழிலே எழுதியதை எல்லாம், அவர்கள் எடிட்டோரியலில் எழுதியதை எல்லாம், அவர்கள் பாலிசிகளை எல்லாம் ஏற்றுக்கொள்வது மாதிரி சொல்கின்றார்கள். அவர்களுக்குக் கிடைத்த தகவல்களை அவர்கள் எழுதுகின்றார்கள். அரசுத் தகவல்களை நான் தருகிறேன். நாம் சொல்கிறோம். மந்திரி பார்த்துச் சொல்லிவிட்டார் என்று மக்கள் கருதுவார்கள். 2,754 பேர்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் 9 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இப்போது இவைகளிலே பலவற்றை தேசிய மயமாக்கவேண்டும் என்று அரசு எழுதியிருக்கின்றது என்று சொல்கின்றார்கள் எனவே இந்த அரசைப் பொறுத்தவரையில், 'We can say without fear of contradiction யாரும் அதை மறுத்துச் சொல்ல முடியாது என்ற அளவுக்கு தைரியமாக நெஞ்சை உயர்த்தி நாம் சொல்லலாம், நம் நாட்டிற்கு எது நல்லது என்று நாங்கள் கருதுகிறோமோ அதைச் செய்கிறோம். நியாயத்தின் பக்கம் நிற்கிறோம். அதனால்தான் நாட்டு மக்களே இந்த ஆட்சியின் பக்கம் நிற்கின்றார்கள் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 5. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

1983-84 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். 1983–84 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், வறட்சி, வெள்ளம் போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உருவானதாலும், தற்பொழுது செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் சிலவற்றில் அதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாலும், மக்களின் நலனுக்காகச் சில புதிய திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளதாலும், இந்தத் துணை மதிப்பீடுகளை தற்பொழுது அவைமுன் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூபாய் 1,130.10 கோடியில், ரூபாய் 220.24 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூபாய் 903.86 கோடி மூலதன, கடன் கணக்கிலும் வருகின்றன. துணை மதிப்பீடுகள் மூலம் சேர்க்கப்பட்டுள்ள மொத்தக் கூடுதல் தொகை குறித்த விவரங்களும், அதற்கான காரணங்களும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமான இனங்களை இங்கு கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. தமிழ் நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட கடும் வறட்சியிலிருந்து இம்மாநிலம் விடுபட்டு வரும்நிலையில், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும், பிப்ரவரி, மார்ச்சு திங்களில் பெய்த பெருமழை காரணமாகவும் இம்மாநிலம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இந்நிலையைச் சமாளிக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு ஏற்கெனவே ரூபாய் 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் மேற்கொண்டும் ரூபாய் 7.64 கோடி செலவிட அரசு இப்பொழுது அனுமதி வழங்கியுள்ளது. இதில் சாலைகளையும், பாலங்களை





ம் பழுது பார்ப்பதற்காக ரூபாய் 13.60 கோடியும், பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக ரூபாய் 8.00 கோடியும், கருணை அடிப்படையில் உதவித் தொகையும், ஏனைய பொருள்களும் அளிக்கும் வகையில் ரூபாய் 15.26 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடன் கால அளவை மாற்றியமைக்கவும், வேளாண்மை இடு பொருட்களை வழங்குவதற்கும், நகராட்சிகளுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உதவுவதற்காக எஞ்சிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

3. கல்வி முன்னேற்றத்திற்கு முதன்மை அளித்து, மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் இம்மாநில அரசின் தலையாய கொள்கையாகும். அண்ணா போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மாணவர்களுக்கு அளித்துள்ள கட்டணச் சலுகை தொடர்பாக, அவற்றிற்கு உதவித்தொகை அளிப்பதற்காக, அரசு ரூபாய் 6.19 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் அரசு இடையறாது நாட்டம் செலுத்தி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தயாரிக்கும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி அளிப்பதற்காக, அவற்றிற்கு உதவித் தொகை வழங்கும் வகையில் அரசு, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டத் தொகையைவிடக் கூடுதலாக ரூபாய் 9.86 கோடியை தற்பொழுது ஒதுக்கியுள்ளது.

5. கிராமப்புற நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், ரூபாய் 8.90 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், கிராமப்புற இணைப்புச் சாலைகளை அமைக்க ரூபாய் 3 கோடியும், பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ரூபாய் 8 கோடியும்

ஒதுக்கப்பட்டுள்ளது ; ரூபாய் 2.9 கோடி மண்வள—நீர்வள பாதுகாப்புப் பணிகளுக்காகவும், நில மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் என்றும், சமுதாயத்திற்குப் பயன்தரும் நிலையான சாலைகளையும், பாசன வாயில்களையும் உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், கிராமப்புற சத்துணவுக் கூடங்களுக்குக் கூடுதலாகச் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு, அரசு ரூபாய் 48.17 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது.

7. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு ரூபாய் 36 கோடி ஒதுக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட தொகையை விடக் கூடுதலாக ரூபாய் 3.95 கோடி செலவிடப்படும். இந்தக் கூடுதல் செலவும் இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. ரோட்டரி துளையிடும் கருவிகளை வாங்குவதற்கு அரசு, ரூபாய் 99 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இது மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் வள நிறுவனங்களை வலுப்படுத்தும். இச்செலவின் ஒரு பகுதி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானிய மீதத்திலிருந்து மறு நிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் பெறப்படும்.

9. பூம்புகார் கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவி வகையில் ரூபாய் 1.10 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் பெரிய அளவிலான கப்பல்களை வாங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அனல் மின் உற்பத்திக்குக் குறைந்த செலவில் நிலக்கரியைக் கொண்டு வருவதற்குப் பேருதவியாக இருக்கும்.



10. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதிலும், உழவர்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அரசு முழுக் கவனம் செலுத்தி வருகிறது. தஞ்சாவூர், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் புதிய கடன்களை வழங்குவதற்காக, இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 கோடி என்ற வீதத்தில் அவற்றிற்கு ரூ 2 கோடி வழிவகை முன்பணம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. செலவு, துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 1983-84 ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றிற்கு ரூபாய் 5 கோடி (மானியமாக ரூபாய் 4.44 கோடியும், கடனாக ரூபாய் 0.56 கோடியும்) வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்ட பிறகு, இத்தொகை மேற்படி நிதியில் ஈடு செய்யப்படும்.

12. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்துள்ளது. இருப்புகளுக்காக நிலுவையாக உள்ள பட்டிகளுக்குத் தொகை கொடுப்பதற்காகக் கூடுதலாக ரூபாய் 1.5 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. இந்தத் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தொடர்பான முக்கியமான சில திட்டங்களை மட்டுமே நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். இதில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு செலவிற்கான முன் பணம் மானிய கோரிக்கையும்@ இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ளதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 26—3—1984 திங்கள் கிழமை அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-09)

---

@ 150 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது,

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

124. 1982-83 ஆம் ஆண்டிற்குரிய பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பதினோராவது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (எ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

125. வணிகவரி-அறநிலையத்துறையின் 4—7—1977 ஆம் நாளிட்ட II/&/(2)/CTRE/3887 77 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, 13—1—1984 ஆம் நாளிட்ட, வணிகவரி-அறநிலையத் துறையின் 43 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப் பட்டது. [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (நீக்குவதும்-ரயத்து வாரியாக மாற்றுதலும்) சட்டத்ின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 48 (5) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

126. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் செய்த மாற்றம் தொடர்பாக, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித்துறையின் 12—11—1983 ஆம் நாளிட்ட 1569 எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

127. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் செய்த மாற்றம் தொடர்பாக, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 26—10—1983 ஆம் நாளிட்ட 1518 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

128. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் செய்த மாற்றம் தொடர்பாக, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 25—6—1983 ஆம் நாளிட்ட 962 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப் புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]



129. 1982-83 ஆம் ஆண்டிற்குரிய மாநிலத் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் பனிரெண்டாவது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (எ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

130. வேளாண்மைத்துறையின் 10—5—1974 ஆம் நாளிட்ட II (2) AG/2854/74 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக 31-10-83 ஆம் நாளிட்ட வேளாண்மைத்துறையின் 1887 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

131. வேளாண்மைத்துறையின் 15—5—1978 ஆம் நாளிட்ட II (2) AG/2455/83 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக 3—1—1984 ஆம் நாளிட்ட வேளாண்மைத்துறையின் 13 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

132. வேளாண்மைத்துறையின் 2—4—1974 ஆம் நாளிட்ட II (2) AG/2228/74 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, 31—10—1983 ஆம் நாளிட்ட வேளாண்மைத்துறையின் 1889 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

133. வேளாண்மைத்துறையின் 12—5—1976 ஆம் நாளிட்ட II (2) AG/2779/76 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது தொடர்பாக, 31—10—1983 ஆம் நாளிட்ட வேளாண்மைத்துறையின் 1890 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

134. வேளாண்மைத்துறையின் 9—4—1975 ஆம் நாளிட்ட II (2) AG/1458/75 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, 31—10—1983 ஆம் நாளிட்ட, வேளாண்மைத்துறையின் 1888 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

135. வேளாண்மைத்துறையின் 8—3—1976 ஆம் நாளிட்ட
II(2)AG|1326(2)78
ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது தொடர்பாக, 31—10—1983 ஆம் நாளிட்ட வேளாண்மைத்துறையின் 1891 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

136. உணவு-வேளாண்மைத்துறையின் 4—5—1963 ஆம் நாளிட்ட
(1) II 2812|63 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது தொடர்பாக, 8—1—1984 ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறையின்
20957-1 AM II(1)83(1)2|
12 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அறிக்கை வெளியிடப்பட்டது. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது ]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

* 51. தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

-ூ52. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நடவடிக்கைகள் குறித்த சிறு வெளியீடு (தமிழ்).

-ூ53. தமிழ் நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

-ூ54. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்-நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 20—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

-ூ 22—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



### இணைப்பு

(12 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திண்டுக்கல் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு மூன்றாவது கால ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு விட்டது. இவர்களுக்கு நான்காவது கால ஊதிய உயர்வு அளித்தது பற்றி அடிப்படை விதி 26 குறிப்பு 5-ன்படி ஒரு பதவிக்கு உண்டான பணி விதிகள் இல்லையென்றால் அப்பதவியில் உள்ளவர்களுக்கு மூன்று கால ஊதிய உயர்வுக்கு மேல் அளிக்கக் கூடாது என்ற காரணத்தால் தணிக்கையில் தடை எழுப்பப்பட்டது. இந்த தடையின் காரணமாக இந்த ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட நான்காவது கால ஊதிய உயர்வு நகராட்சி ஆணையரால் ரத்து செய்யப்பட்டது.

2. தணிக்கைத் தடையை அரசு ஆராய்ந்தது. அரசு ஆணை எண் 730, கல்வி, நாள் 28—4—1981-ல் வெளியிடப்பட்டுள்ள தனி விதிகளில் உள்ள தகுதி மற்றும் பணி நிலைமைகள் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்குப் பொருந்துமாதலால் இத்தடை சரியானது அல்ல. ஆதலால் திண்டுக்கல் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு நான்காவது ஊதிய உயர்வு அளிக்கும்படி திண்டுக்கல் நகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

## இணைப்பு II

(13 ஆம் பக்கத்தின் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ் நாட்டில் தொழிலாளர் நலன்.

### பாகம் 1.

### அத்தியாயம் 1.

### பொது.

1—1—1983 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அமைதியான தொழில் நல்லுறவு நிலவியது. அமைதியான தொழில் நல்லுறவைப் பெறுவதற்காக அரசு தேவையான போதெல்லாம் சட்டங்களை இயற்றியுள்ளது. நிருவாகங்களும், தொழிற் சங்கங்களும் மக்களுக்கு நலன் பயக்கத்தக்க கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு நலன் பயக்கத்தக்க கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு அதிக அளவில் ஒத்துழைப்பு நல்கின. அமைப்புரீதியில் வராத தொழிலாளர்களுக்குச் சட்டப்படி வரையறுத்த குறைந்தளவு ஊதியங்கள் அளிப்பதன் மூலம் அவர்களின் நிலனைப் பாதுகாப்பதில் அரசு தீவிரமாக உள்ளது. நிருவாகமும், தொழிலாளர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயலாற்றும் சுமுக நிலைக்கு அரசு தனது பாராட்டுதலைத் தெரிவிக்கிறது.

தொழிலாளர் நலத்துறையின் 'பணிகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன':

(1) தொழில் உறவுகள் தொடர்பான சட்டம்;

(2) பணி, நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள் ;

(3) ஊதியங்கள் குறித்த சட்டங்கள் ;

(4) சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ;

(5) தொழிலாளர் நலப் பணிகள் ;

(6) எடைகள்-அளவைகள் குறித்த சட்டங்கள்.



### அத்தியாயம் 2.

### தொழில் உறவுகள் தொடர்பான சட்டம்.

### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

2.1. 1982-83 ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும், அவற்றை முடிவு செய்தது பற்றிய விவரங்களும் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன .

வேலை நிறுத்தங்கள் :—

2.2. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3. பின்வரும் காரணங்களினால் வீணான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

(1) ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் அடைந்த துன்பம் குறித்தும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் தங்கள் மன வேதனையைத் தெரிவிக்கவும், துன்பமடைந்த அவர்களுக்கும் தங்களுடைய உறவினர்களையும்; சொத்துக்களையும் இழந்தவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவிக்கவும், இத்தகைய துன்பங்களும், கொடுமைகளும் மீண்டும் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ளவும் தமிழ்நாடு அரசு எல்லா அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் ஒத்துழைப்புடன் 2—8—1983 அன்று மாநிலம் முழுவதும் பொது கடையடைப்பு நடத்தியது.

(2) 1983 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டத்தில் நடைபெற்ற 76 நாள் வேலை நிறுத்தம்.

(3) கோயம்புத்தூரில் துணி ஆலைகளில் நடைபெற்ற ஒரு பகுதித் தொழிலாளர்களின் ஒரு நாள் வேலை நிறுத்தம்.

(4) கோயம்புத்தூர், இலட்சுமி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனத்தில் 1,800 தொழிலாளர்கள் சுமார் 30 நாட்களுக்கு செய்த வேலை நிறுத்தம்.

2.4. 1982-83 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் பற்றி தொழிற்சாலை வாரியான புள்ளி விவரம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புக்கள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால் தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் இணைப்பு 3-ல் காணலாம்.

2.5. இம்மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழிலாளர் நீதி மன்றங்களுக்கு தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 33-சி (2) பிரிவின் கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை, இக்குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 4).

தொழிற்சாலைகளை மூடிவிடுவதைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :

(1) திருமகள் ஆலை, குடியாத்தம் :

2.6. பங்குதாரர்களிடையே நிலவிய நீண்டநாள் பகைமை காரணமாக இந்த ஆலையில் வேலை நிறுத்தப்பட்டது. இதனால் இந்த ஆலை பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகாத ஆலையாக ஆகிவிட்டது. 452 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் ஆலையை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்தார். பின்னர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த ஆலை புதிய இயக்குநர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் ஆலோசனையின் பேரில் தொழிலாளர் நல ஆணையர் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதால், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 8—7—1983 அன்று உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 15—7—1983 அன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



(அ) ஸ்ரீ இராமலிங்க சூடாம்பிகை ஆலை, திருப்பூர் :

2.7. இந்த ஆலை, 25—7—1982-லிருந்து 1,400 தொழிலாளர்களை லே-ஆப் செய்தது. நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக இந்த ஆலை நலிவுற்ற தொழில் பிரிவாக ஆகிவிட்டது. புதிய நிருவாகம் ஒன்று 4—5—1983 அன்று இந்த ஆலையை எடுத்துக்கொண்டது. இதற்கு உத்தரவாதம் அளிக்கும்படி அவர்கள் அரசை அணுகினர். இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்பும், தொழிலாளர் நல ஆணையர் முன்பும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இதற்கிடையில், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 500 என்ற வீதத்தில் 1,400 தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக முதலமைச்சரின் இடருதவி நிதியிலிருந்து அரசு ரூபாய் 7 இலட்சம் வழங்கியது. அதன் பின்னர் 15—12—1983 அன்று ஆலையைத் திறப்பது சம்பந்தப்பட்ட மற்ற பிரச்சினைகள் தொடர்பாக 9—12—1983 அன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்பு, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 15—12—1983 லிருந்து ஆலையைச் சுத்தம் செய்யும் பணியும், பழுது பார்க்கும் பணியும் தொடங்கப்பட்டதாகவும், ஆலை தற்போது செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. டிரான்ஸ்பார்மர் அண்ட் ஸ்விச்கீர் லிமிடெட் :

23. இந்நிறுவனம் பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகாத வகையில் செயல்பட்டதால், 1—4—1982-ல் இருந்து தொழிலாளர்கள் அனைவரும் லே-ஆப் செய்யப்பட்டனர். இந்நிறுவனம் நலிவுற்ற தொழில் பிரிவாக ஆகிவிட்டது. இந்நிறுவனத்தை மீண்டும் திறப்பது பற்றி தொழில் துறை பரிசீலித்து வந்தது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 250 என்ற வீதத்தில் 220 தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக முதலமைச்சரின் பொது இடருதவி நிதியிலிருந்து அரசு ரூபாய் 55,000 வழங்கியது. மத்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தின் மூலமாக சென்னை, டிரான்ஸ்பார்மர் அண்ட் ஸ்விச்கீர் லிமிடெடை ஆண்ட்ரூயூல் இந்திய அரசு நிறுவனம் Andrew Yule நிறுவனம்) எடுத்துக்கொண்டுள்ளது. இந்நிறுவனம் 19—11—1983 அன்று திறக்கப்பட்டது.

4. துணிகள் :

2.9. தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பல்வேறு தொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர் (அண்ணா தொழிற்சங்கப் பேரவை தவிர). இத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், 1982 ஆம் ஆண்டுக்கு (1982-83) ஊதியக்கொடையும், முந்தைய ஆண்டுகளில் அதாவது 1978-79, 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் வழங்கியதைப் போன்று கூடுதல் தொகையும் வழங்குமாறு கேட்டு, வேலை நிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தனர். சென்னை, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் பல்வேறு நாட்களில் இணக்க பேச்சுவார்த்தைகள் நடத்தினார். அவர் நடத்திய விவாதத்தின் அடிப்படையிலும், தொழிலாளர் நல இணை ஆணையர் முன்பு மேற்கொண்டும் நடைபெற்ற இணக்க பேச்சுவார்த்தைகளினாலும், 25—10—1983 அன்று தொழில் தகராறுகள் சட்டத்தில் 12 (3) பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின்படி 1982 ஆம் ஆண்டுக்கு (1982-83) ஊதியக் கொடை வழங்குவதற்கும், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொழிலாளர்கள் பணி புரிந்த நாட்களின் அடிப்படையில் தொகை வழங்குவதற்கும் இந்த உடன்பாடு வகை செய்கிறது :—

| | ரூபாய். |
|---|---|
| 1. 275 நாட்களும், அதற்கு மேலும் | 400 |
| 2. 200 நாட்கள் முதல் 274 நாட்கள் வரை | 300 |
| 3. 100 நாட்கள் முதல் 199 நாட்கள் வரை | 200 |
| 4. 50 நாட்கள் முதல் 99 நாட்கள் வரை | 100 |
| 5. 30 நாட்கள் முதல் 49 நாட்கள் வரை | 50 |

2.10. ஏறக்குறைய 1.15 இலட்சம் துணி ஆலைத் தொழிலாளர்கள் இந்த உடன்பாட்டினால் பயனடைந்தனர்.



5. போக்குவரத்துக் கழகங்கள் :—

2.11. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் தொழிலாளர்கள் உள்ள பல்வேறு தொழில் சங்கங்கள், சம்பள விதங்களையும், படிகளையும் திருத்துதல், மற்ற கோரிக்கைகள் ஆகியவை தொடர்பான பிரச்சினை குறித்து கோரிக்கை எழுப்பினர். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் முன்பு இது குறித்து 18—7—1983, 8—3—1983, 8—8—1983, 11—8—1983, 16—8—1983 ஆம் நாட்களிலும் இறுதியில் 17—8—1983 அன்றும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் நன்முயற்சி காரணமாக மத்திய தொழிற்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளும், பல்வேறு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பிரதிநிதிகளும் 17—8—1983 அன்று உடன்பாடு ஒன்று செய்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து, சென்னை தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்பு மேற்கொண்டு நடைபெற்ற இணக்கப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து பின்வரும் கழகங்களில் அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாட்களில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டன :—

| | |
|---|---|
| 1. சோழன் சாலைப் போக்குவரத்துப் பொறியியல் கழகம், கும்பகோணம். | 26—8—1983. |
| 2. ஜீவா போக்குவரத்துக் கழகம், ஈரோடு. | 17—8—1983. |
| 3. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி. | 19—8—1983. |
| 4. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், மதுரை, பாண்டியன் பொறியியல் கழகம், மதுரை. | 29—8—1983. |
| 5. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி. | 30—8—1983. |
| 6. சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர், சேரன் பொறியியல் கழகம், பொள்ளாச்சி. | 27—8—1983. |
| [illegible]. நேசமணி போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில். | [illegible]—8—1983. |

2.12. இந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டதால், மாநகரிலும், வெளியூர்களிலுமுள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியம் முறையே ரூபாய் 75, ரூபாய் 65 ஆக உயர்ந்தது. இதனால் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 67,000 ஆகும். இந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிடாத சி.ஐ.டி.யு. எல்பி. எஃப், ஏ.ஐ.டி.யுசி தொழில் சங்கங்கள் பொது கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது மட்டுமல்லாமல், ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் செல்திறன் குறித்தும் எந்த அளவிற்கு அவை தங்களைக் கட்டுப்படுத்தும் என்பது குறித்தும் வினவின. இது குறித்து இணக்க பேச்சு வார்த்தைகள் நடத்திய தொழிலாளர் நல ஆணையர் அரசுக்கு இணக்க முறிவு அறிக்கையை அனுப்பியுள்ளார். 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் படி செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையையொட்டி தொழிலாளர்கள் உடன்படிக்கையின் கீழ் வரும் கோரிக்கையை எழுப்புவதிலிருந்து தொழிலாளர்கள் தடை செய்யப்படுவதால், இக்கோரிக்கைகள் குறித்து நீதிமன்றத் தீர்ப்புக்கு விட மறுத்து, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

6. தோல் பதனிடு தொழிற்சாலைகள் :

2.13. தமிழ்நாட்டிலுள்ள தோல்பதனிடு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஊதியத்தைத் திருத்துதல், ஆண்டுச் சம்பள உயர்வு, தற்காலிக விடுப்பு முதலியவை தொடர்பாகக் கோரிக்கைகளை எழுப்பினர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் முன்பு 1983 ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் பல்வேறு நாட்களில் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின் பலனாக தகராறிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து 26—9—1983 அன்று உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை காரணமாக தோல்பதனிடு தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 25,000 தொழிலாளர்கள் அவர்களுடைய ஊதியத்தில் ரூபாய் 80 உயர்வு பெற்றுப் பயனடைந்தனர்.



7. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் :

2.14. மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், கடிதம் வரப்பெற்ற நாளிலிருந்து 21 நாட்களுக்குப் பின்னர் எந்த ஒரு நாளிலும் நிறுத்தம் செய்யப் போவதாகக் குறிப்பிட்டு 20—4—1983 அன்று வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். இக்கோரிக்கையில் ஊதிய திருத்தம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, தொழிலாளர் இறந்த பின்னர் அவருடைய குடும்பத்தினருக்குக் கிடைக்கும் பயன் திட்டம், ஓய்வூதியப்பயன் திட்டம் முதலியவை அடங்கும். இருதரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தியதின் பலனாகவும், தொழிலாளர் நல ஆணையர் நடத்திய இணக்கப் பேச்சு வார்த்தைகளினாலும், 10—10—1983 அன்று உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையினால் சுமார் 14,000 தொழிலாளர்கள், ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு ரூபாய் 133 முதல் ரூபாய் 201 வரை பயன்பெற்றனர்.

8. பீடித் தொழில் :

2.15. பீடித் தொழிலில் பணி புரியும் தொழிலாளர்கள் பல்வேறு தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஊதியத்திருத்தம், ஊதியக் கொடை ஆகியவை உட்பட தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி 10—1—1983 அன்று வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். இதன் விளைவாக சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வு) தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும்—பீடி தயாரிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனும் பல்வேறு நாட்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பின்வரும் மாவட்டங்களிலுள்ள பீடி தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவற்றுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் தொழிலாளர் நலத் துறை ஆணையர் முன்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்டன :—

| | |
|---|---|
| வட ஆர்க்காடு மாவட்டம் | 4—8—1983. |
| சென்னை மாநகர், செங்கற்பட்டு மாவட்டம் | 5—8—1983. |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 6—8—1983. |

சேலம் மாவட்டம்.

1. டி.சி. திவான் முகைதீன் அண்ட் சன்ஸ், திவான் பீடி கம்பெனி, சேலம் மற்றும்.

2. பூக்கடை பீடி வியாபாரி, சையத் காதர் தெரு, சேலம் (ஆகிய திருவாகங்களைப் பொறுத்தவரையில்).

24—5—1983.

2.16. இந்த உடன்பாடு, ஊதியத்தில் 80 காசு உயர்வும், 1,000 பீடி சுற்றுவதற்கு ஊதியக் கொடையாக 15 காசு அளிக்கவும் வகை செய்கிறது. இந்த உடன்பாட்டினால், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் 5—5—1983 லிருந்து மாநிலம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்வதாக அச்சுறுத்தியது தவிர்க்கப்பட்டது.

**9. சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை, கோயம்புத்தூர் :**

2.17. கோயம்புத்தூர் தலைமை அலுவலகம் உட்பட உதகமண்டலம் கோடைக்கானல் கிளை அலுவலகங்களில் பணியாற்றும் 2,300 தொழிலாளர்கள் (தினக்கூலி பெறும் தொழிலாளர்கள், மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்கள்) 1981-82 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடையைக் கோரி, 14—11—1982/16—11—1982 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனையடுத்து, நிருவாகம், தலைமை அலுவலகம், கிளை அலுவலகங்களிலுள்ள தொழிற்சாலைகளை 21—11—1982 ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்தது. சென்னை, தொழிலாளர் நலத்துறை ஆணையர் நடத்திய சமரசப் பேச்சு வார்த்தையின் விளைவாக, இரு தரப்பினரிடையே 2—4—1983 ஆம் நாளன்று, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ரத்து செய்தனர். நிருவாகமும் 4—4—1983 ஆம் நாளிலிருந்து கதவடைப்பை நீக்கியது.



**10. கே.சி.பி. லிமிடெட், சென்னை-19.**

2.18. சென்னை-19, திருவொற்றியூர் கே.சி.பி. நிறுவனத்தின் சுமார் 800 தொழிலாளர்கள் கே.சி.பி. தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தோராவர். இத்தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி 9—6—1982 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனையடுத்து, 26—2—1982 ஆம் நாளன்று தொழிலாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, நிருவாகம் செய்த ஊதியக் குறைப்பை எதிர்த்து தொழிலாளர்கள் 6—3—1982 ஆம் நாளன்று முற்றுகைப் போராட்டம் செய்தபோது, பல தவறான செயல்களைச் செய்ததால் நிருவாகம் 33 தொழிலாளர்களை பணியறவு செய்தது. தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பற்றியும் 33 தொழிலாளர்களை வேலையிலிருந்து பணியறவு செய்தது பற்றியும் சென்னை, தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் (ஆய்வு) பல சுற்று இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இணக்கப் பேச்சு வார்த்தைகளில் உடன்படிக்கை ஏதும் செய்து கொள்ளப்படாததால் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பான அடிப்படை ஊதியத்தை திருத்தியமைத்தல், அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி போன்ற கோரிக்கைகள் குறித்தும், பணியறவு செய்யப்பட்ட 33 தொழிலாளர்கள் குறித்தும், 20—10—1982 நாளிட்ட 2245 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்குவதற்காக, சென்னை தொழில் நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டது. தீர்ப்பு வழங்குவதற்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும், தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தனர். சங்கம் ஆஜர் ஆக தவறியதன் காரணமாக இவ்வழக்கு சென்னை தொழில் நடுவர் மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும், தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து வேலை நிறுத்தத்தை ரத்து செய்து, 24—1—1983 ஆம் நாளிலிருந்து பணியை மீண்டும் தொடங்கினர். தீர்ப்பில், இத் தகராறுகள் குறித்து இறுதி செய்யப்படாததால், இருதரப்பினரும், நிலுவையாகவுள்ள இந்த பிரச்சனையில் தலையிட்டு உடன்படிக்கை செய்து முடிப்பதற்கு உதவுமாறு, தொழிலாளர் நலத்துறை துணை ஆணையரை (ஆய்வு) வேண்டினர். சென்னை, தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் (ஆய்வு) இருதரப்பினருடன் தொடர்ந்து

நடத்திய பேச்சுவார்த்தையாலும், அவரது பரிந்துரைகளின் அடிப்படையிலும், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின் கீழ், 4—5—1983 ஆம் நாளன்று, அவரது முன்னிலையில் இரு உடன்படிக்கைகள் ஏற்பட்டன. பொதுக்கோரிக்கைகள் குறித்த ஒப்பந்தம் மாதம் ரூ. 60 ஊதிய உயர்வு ஏற்பட வகை செய்ததோடு ஒவ்வொரு மாதமும் ரூ. 100 ஊக்கத்தொகையாக ஈட்ட வாய்ப்புக்கும் வழி செய்தது.

பணியறவு செய்யப்பட்ட 33 தொழிலாளர்கள் தொடர்பான உடன்படிக்கையில் தொடர்ந்து பணியிலே இருந்ததாகக் கருதப்படுவதுடன் ஆனால் முன்னால் ஊதியம் ஏதும் வழங்கப்படாமல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு வகை செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 6 தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஒவ்வொருக்கும் ஒரு மொத்தத்தொகை ரூ. 20,000 வழங்குவதோடு பணிக்கொடை உட்பட பணியிலிருந்த ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு மாத ஊதியம் என்ற அடிப்படையில் இழப்பீட்டுத்தொகை வழங்க உடன்பாடு செய்யப்பட்டது. இந்த இரு உடன்படிக்கையினால், நீண்ட நாட்களாக கே.சி.பி. நிறுவனத்தில் இருந்து வந்த தகராறுகள் இறுதியாக தீர்த்து வைக்கப்பட்டன.

**11. டன்லப் இந்தியா லிமிடெட் :**

2.19. அம்பத்தூர் திருவாளர்கள் டன்லப் இந்தியா லிமிடெட்டுக்கும் அம்பத்தூர், டன்லப் தொழிற்சாலை தொழிலாளர்கள் சங்கத்திற்குமிடையே செய்து கொண்ட 10—6—1978 ஆம் நாளிட்ட நீண்ட கால உடன்படிக்கை முடிவுற்றதன்பேரில் அதே சங்கத்தின் தொழிலாளர்கள் 10—6—1982 ஆம் நாளன்று புதிய கோரிக்கைகளைக் கொடுத்தனர். சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையரின் முன்னிலையில் நடைபெற்ற பல சுற்று நேரடிப் பேச்சு வார்த்தைகள் இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் 27—5—1983 ஆம் நாளன்று இரு தரப்பினர்களாலும் 12 (3) ஆம் பிரிவின் கீழ் உடன்படிக்கையினால் கையொப்பம் இடப்பட்டது. இந்த உடன்படிக்கையினால் ஊதியத்திருத்தம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, பயணப்படி, பயண விடுப்புச்சலுகை, விடுப்புச் சலுகைகள், ஏனைய பயன்களுக்கு வகை செய்யப் பட்டுள்ளது.



**12. சிவானந்தா ஸ்டீல்ஸ் லிமிடெட், சென்னை :**

2.20. சென்னை, சிவானந்தா ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து 29—7—1981 ஆம் நாளிட்ட உடன்படிக்கையின் 8 ஆம் சரத்தின் கீழ் பணி நிலைகளைப் பொருத்தமாக மீண்டும் வரையறை செய்யுமாறு கோரி 28—7—1983 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனையடுத்து, 1982-83 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை, தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவப்படி வழங்குதல், அண்மையில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏனைய படிகள் வழங்குதல் போன்ற சில கோரிக்கைகளை சங்கமும் எழுப்பியது. இதற்கிடையில், ஒழுங்கற்ற நடவடிக்கைகளைச் செய்ததற்காக நிருவாகம் 10 தொழிலாளர்கள் மீது குற்றஞ்சாட்டி அவர்களைப் பணியறவு செய்தது. நிலுவையாக உள்ள அனைத்துப் பிரச்சனைகளும் சென்னை தொழிலாளர் நல துணை ஆணையரினால் (ஆய்வு) பல்வேறு நாட்களில் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு முடிவாக 24—11—1983 ஆம் நாளன்று இவரது முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கையின் காரணமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ரத்து செய்து, 24—11—1983 ஆம் நாளன்று மீண்டும் பணியைத் தொடங்கினர். இதனையடுத்து உடன்படிக்கையின் 7 (ஏ) (பி) பகுதிகளின்படி, 25—11—1983 ஆம் நாளன்றும், 10—1—1984 ஆம் நாளன்றும் இவர் தனது முடிவைத் தெரிவித்ததால், வேலை நீக்கம் செய்யப்பட்ட சில தொழிலாளர்கள் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டனர்.

**13. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி :**

2. 21. 1982—83 ஆம் கணக்கு ஆண்டிற்கான ஊதியக் கொடையை ஆதாயத்துடன் இணைப்பதற்குப் புதிலாக உற்பத்தியுடனோ அல்லது உற்பத்தித் திறனுடனோ வருடாந்திர ஊதியக்கொடையை இணைப்பது தொடர்பான பிரச்சனை குறித்து, மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள மதுரா கோட்ஸ் லிமிடெட் நிருவாகத்திற்கும், அதன் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த தொழில் தகராறுகள், 28—2—1983 ஆம் நாளன்று சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையரின் முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

**14. இலட்சுமி மிஷின் ஒர்க்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.**

2.22. இந்நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 1,500 தொழிலாளர்கள், லேபர் ப்ரோகிரசிவ் ஃபெடரேஷன், அண்ணா தொழிற் சங்கப் பேரவை, சென்டர் ஆப் இந்தியன் டிரேட் யூனியன், ஆல் இந்தியா டிரேட் யூனியன் காங்கிரஸ், தமிழ் நாடு நேஷனல் டிரேட் யூனியன் காங்கிரஸ், ஹிந்துமஸ்தூர் சபா, வேறு சில தனிப்பட்ட சங்கங்கள் ஆகிய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஆதாயத்தில் பங்குத்தொகை வழங்குவதைத் தொடர்ந்து வருமாறும் பங்குத் தொகையை அதிகரிக்குமாறும் நிருவாகத்தைக் கேட்டுக்கொண்டனர். பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து தொழிலாளர் நல இணை ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடத்துமாறு கேட்டுக் கொண்டனர். பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த போது தொழிலாளர்கள் 12—8—1983 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக 12 (3) பிரிவின் கீழ் 14—10—1983 ஆம் நாளன்று உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை ஆதாயத்தில் பங்கு ஊதியங்களில் திருத்தம், அகவிலைப் படி, செயலூக்கத் தொகை முதலியவற்றிற்கு வகை செய்கிறது. தொழிலாளர்கள் 17—10—1983 அன்று மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

**15. எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் குரூப் கம்பெனிகள் :**

2.23. கோயம்புத்தூர் எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தில் சுமார் 890 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இத் தொழிலாளர்கள் கோயம்புத்தூர் தொழிலாளர்கள் சங்கத்தையும் (சென்டர் ஆஃப் இந்தியன் டிரேட் யூனியன்), கோயம்புத்தூர் மாவட்ட பொறியியல், பொது தொழிலாளர்கள் சங்கத்தையும் (ஆல் இந்தியா டிரேட் யூனியன் காங்கிரஸ்) சேர்ந்த உறுப்பினர்களாவர். 14—7—1982 அன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் சில பிரச்சினைகள் குறித்து உடன்படிக்கை செய்தார். உடன்படிக்கையைச் சேர்ந்த பகுதிகளில் ஒரு பகுதி செயல்படுத்தப் படாததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கும், வேலைக்கு வந்த தொழிலாளர்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டதில், திரு. சாந்தப்பன் என்ற தொழிலாளர் தாக்கப்பட்டார். அதே நாளன்று அதாவது 3—9—1982 அன்று அவர் இறந்து விட்டார்.



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நன்முயற்சியால், கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர், கோயம்புத்தூர் எவரெஸ்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் நான்கு தொழில் பிரிவுகளைப் பொறுத்த மட்டில், 20—9—1982 அன்று உடன்படிக்கை செய்தார். தீர்வு காணப் படாத பிரச்சினைகளுக்கு இரு தரப்பினரிடையேயும் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வு காணவும், அப்படியும் தீர்வு காணப்படாவிட்டால், கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் தலையிட்டு தீர்வு காண்பதாகவும் அந்த உடன்படிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இரு தரப்பு பேச்சு வார்த்தை வெற்றிகரமாக அமையாததால், தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தினார் ; கோயம்புத்தூர் எவரெஸ்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் அனைத்து தொழிற் பிரிவுகளையும் பொறுத்தவரையில் 24—8—1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. தற்போது இந்நிறுவனங்கள் வழக்கம்போல் செயல்பட்டு வருகின்றன.

**16. சேஷாசாயி தொழில் நிறுவனம் :**

2.24. 10—3—1978 அன்று உடன்படிக்கை முடிந்ததன் பேரில் வடலூர், சேஷசாயி தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு தொழிற் சங்கங்களின் மூலம் முறையீடு செய்தனர். சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் சமரச பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனையின் பேரிலும் தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 5—10—1983 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையினால், 1,500 தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

**17. ஃபாபிட் ஏசியா நிறுவனம், சென்னை :**

2.25. சம்பள விதங்களைத் திருத்தி அமைத்தல், அகவிலைப்படி ஊதிய உயர்வுக்குப் பணிக்கால அளவைக் கணக்கில் எடுத்துக் கொள்வல்; ஆகியவை அடங்கிய பொதுக் கோரிக்கைகளின் மீது சென்னை ஃபாபிட் ஏசியா நிறுவனத்தின் நிருவாகத்திற்கும், அந்நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறுகள் சென்னை, தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வு) சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினார்; அதன் காரணமாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 12—10—1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

18. பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம். திருச்சி:

2. 26. திருச்சிராப்பள்ளி, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்திற்கெதிராக, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் (எம்.ஹெச்.டி. திட்டங்கள்) தேசிய தொழிற்சங்கத்திற்கு நாட்கூலி பெறுவோரின் பணியை முறைப்படுத்தல், மிகை ஊதியங்கள் வழங்கல், இலவச பேருந்து "ஷட்டல்" முறைகளை மீண்டும் கொண்டு வருதல், போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல், கழித்துக் கொள்ளப்பட்ட அரை நாள் ஊதியங்கள் முதலியவற்றைத் திருப்பிக் கொடுத்தல் போன்றவை சம்பந்தமாக, தொழில் தகராறு ஏற்பட்டது. இவ்விஷயம் சமரசத்திற்காக தொழிலாளர் நல தனித் துணை ஆணையருக்கு வந்தது; தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 27—10—1983 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

19. நாச்சியம்மை பருத்தி ஆலை, செட்டிநாடு:

2.27. இந்த ஆலையின் தொழிலாளர்கள், 1982-83 ஆண்டிற்கான ஊதியக் கொடை தொடர்பாக, 31—10—1983 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை, தொழிலாளர் நல உதவி ஆணையரும், அதன் பின் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையரும் பல்வேறு தேதிகளில் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தினர். 24—12—1983 அன்று தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன் காரணமாகத் தொழிலாளர்கள் 26—12—1983 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டனர்.

20. இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை:

2.28. ஊதிய திருத்தம் முதலிய கோரிக்கைகளை முன் வைத்து இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர் சங்கம் பணியாளர் சங்கம் வேலை நிறுத்தம் செய்வதாக இந்நிறுவனத்திடம் அறிவித்தன. இவ்விஷயம், சமரசத்திற்காக தொழிலாளர் இணை ஆணையருக்கு வந்தது; தொழிற் தகராறுகள் சட்டத்தின் கீழ் 12(3) பிரிவின் கீழ் 5—12—83 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இதற்கு முன்னர் ஊக்கத்தொகை வழங்குவது தொடர்பாக, 12 (3) பிரிவின்கீழ் 31—10—1983 அன்று தொழிலாளர்கள் நல இணை ஆணையர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.



2.29. ஊதியங்கள், அகவிலைப்படி, ஏனைய பணி நன்மைகள், 1982-83-க்

2.29. ஊதியங்கள், அகவிலைப்படி, ஏனைய பணி நன்மைகள், 1982-83க்கான ஊதியக் கொடை, பதவி உயர்வு, உற்பத்தி, உற்பத்தித் திறன் முதலிய கோரிக்கைகளை வைத்ததில், மேற்சொன்ன நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே தொழிற் தகராறு ஏற்பட்டது. இதன் காரணமாக இந்நிறுவனத்தை 21—11—1983 முதல் மூட வேண்டியதாயிற்று. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் பல முறை சமரச பேச்சு வார்த்தை நடத்தினார். ஆதலால், 13—12—1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. மூடப்பட்ட நிறுவனம் திறக்கப்பட்டு, 15—12—1983 முதல் மீண்டும் பணி நடைபெறத் தொடங்கியது.

22. சிம்சன் குரூப் கம்பெனிகள்:

2.30. சிம்சன் குரூப் கம்பெனிகள் தொழிற்சங்கமும் அந்தந்த சிம்சன் குரூப் கம்பெனியின் நிர்வாகத்திற்கு தாங்கள் 22—11—1983 அன்று அல்லது அதற்குப் பின்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவிக்கை கொடுத்தனர். அடிப்படை ஊதிய விகிதங்களைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி ஊதிய உயர்வு, கல்விப்படி, விடுப்புகால பயணச் சலுகை, சில தொழிலாளர்களை வேலைக்கமர்த்தாமை முதலிய பொதுவான கோரிக்கைகள் வேலை நிறுத்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. உத்தேச வேலை நிறுத்த நிலைமைகளைக் கருதிப் பார்த்து, தொழிலாளர் நல இணை ஆணையரின் முன்னிலையில் 1983 நவம்பரில் பல்வேறு நாட்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது, பல்வேறு கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டன. அதனையடுத்து 25—11—1983 அன்று பணி நிறுத்தம் தொடர்பான விஷயங்கள் உட்பட பல விஷயங்கள் குறித்தும் இரு தரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இருதரப்பு பேச்சு வார்த்தைகளினால் உடன்படிக்கை ஏற்பட்டதாகவும் வேலை நிறுத்தம் ஏற்படாது என நம்பிக்கை தெரிவித்ததாகவும் நிர்வாகத்

இன் பிரதிநிதிகள் தெரிவித்தனர். நிர்வாகத்தினரின் கூற்று மறுக்கப்பட்டது; கோரிக்கைகள் ஏற்கப்படாததாலும், பணி நீக்கம் செய்யப்பட்ட 15 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள நிர்வாகத்தினர் ஒப்புக்கொள்ளாததாலும், தொழிலாளர்கள் 28—11—1983 முதல் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர் என்று தொழிற்சங்கம் தெரிவித்தது. சிம்சன் குரூப் கம்பெனிகளில் உள்ள 17 தொழில் பிரிவுகளில் சென்னை விளம்பர கம்பெனி, சென்னை 'ரிகோல்ட் கெமிக்கல்ஸ்' நிறுவனம் ஆகியவை நீங்கலாக, ஏனைய தொழில் பிரிவுகள் அனைத்திலும் பணியாற்றுகிற சுமார் 10,050 தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டனர்; அதனையடுத்து தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன; 31—12—1983 அன்று நடந்த விவாதத்தில் பணியை மீண்டும் தொடங்குவதற்கு இடைக்கால ஏற்பாடுகள் அடங்கிய சில கருத்துக்களைத் தெரிவித்தார். சில மாற்றங்களுடன் மேற்சொன்ன கருத்துக்களை நிர்வாகம் ஏற்றுக்கொண்ட போதிலும், இடைக்கால ஏற்பாடு எதுவும் தங்களுக்குத் தேவையில்லையென்றும், ஆனால், தங்களுடைய அனைத்து கோரிக்கைகளுக்கும் இறுதியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் தொழிற்சங்கம் தெரிவித்தது. இதற்கிடையில் 15 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தாதது தொடர்பான பிரச்சினை சென்னை, தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட்டது. இவ்விஷயத்தில் தலையிட்டு தகராறைத் தீர்த்து வைக்குமாறு முதலமைச்சரை தொழிற் சங்கங்களும், ஏனைய தொழிற் சங்கங்களின் தலைவர்களும் கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளின் பேரில் முதலமைச்சர் அவர்கள் 18—2—1984, 20—2—1984 ஆகிய நாட்களன்று நிர்வாகத்தினருடனும், தொழிற் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். 20—2—1984 அன்று முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில், நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது; அதன் அடிப்படையில் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் 22—2—1984 அன்று பணிக்குத் திரும்பினர்.

•

23. பி.அண்டு சி. மில்ஸ், சென்னை.

2.31. இந்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் முயற்சிகளினாலும் அப்போது இருந்த சென்னை தொழிலாளர் நல ஆணையரின் பேச்சு வார்த்தைகள், உடன்படிக்கை ஆகியவற்றின் காரணத்தாலும், 1—1—1981 முதல் மூடப்பட்டிருந்த பின்னி நிறுவனம், சென்னை பி. அண்டு சி. மில்ஸ் ஆகியவை 19—6—1981 அன்று மீண்டும் திறக்கப்பட்டன. அந்த ஆலை



மீண்டும் நலிவுற்றது. எட்டு நாள் ஊதியத்தைப் பிடிக்குமாறு தண்டனை வழங்கியதைத் திரும்பப் பெறுதல், குறித்த நாட்களில் ஊதியங்கள் வழங்குவது, குழுவின் உறுப்பினர் அலுவல் உறுப்பினர்களது தாற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்வது, தொழிலாளர்களை நிர்வகித்தல் முதலிய கோரிக்கைகளை வைத்து, சென்னை தொழிற் சங்கம் 26—12—1983 அன்று நிருவாகத்திற்கு வேலை நிறுத்த அறிவிப்பை கொடுத்தது. திரு. ஜி. கமலரத்தினத்தின் தீர்ப்பில் முடிவு செய்யப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துதல், பணம் வகையில் நன்மைகள்/உரிமைகள், 1982-83-க்கான ஊதியக் கொடை, ஈமச் சடங்கு நன்மைக்கான நிதி, பயன்படுத்திக் கொள்ளாத சிகிச்சைப்படி, முதலியவை தொடர்பான கோரிக்கைகளை வைத்து பி. அண்டு சி. ஆலை பணியாளர் சங்கமும் 6—1—1984 அன்று நிருவாகத்திற்கு வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது. தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனையடுத்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி, 13—1—1984 அன்று தொழிலாளர் நலத் துறை அரசு ஆணையர் மற்றும் செயலாளரின் முன்னிலையில் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் சமரச பேச்சு வார்த்தையைத் தொடங்கினார். பின்னி பொறியியல் தொழிலாளர் சங்கமும் நிருவாகத்திற்கு (பின்னி இஞ்சினியரிங் ஒர்க்ஸ்), மீனம்பாக்கம், வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது; மேற்சொன்ன சங்கமும் 13—1—1984 அன்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளில், தொழிலாளர் நலத்துறையின் அரசு ஆணையர் மற்றும் செயலாளர் சில கருத்துக்களைத் தெரிவித்தார்; 13—1—1984, 14—1—1984 அன்று பேச்சுவார்த்தையைத் தொடருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் நல ஆணையரைச் சந்திக்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர், இதற்கிடையில் பொங்கல் பண்டிகை முன் பணம் வழங்குவது தொடர்பாக, 14—1—1984 அன்று பி. அண்டு. சி. மில் நிருவாகத்தினர் மில்லில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர் என்றும், அதனையடுத்து, பதட்ட நிலையும் குழப்பமும் ஏற்பட்டது என்றும், மேலும், தொழிலாளர் நிருவாகப் பணியாளர் சிலரைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து தொழிலாளர்கள் 14—1—1984 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்; வேலை நிறுத்தம் தொடருகிறது. இந்த வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சுமார் 7,800 பேராகும்.

தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை 23—1—1984 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் முறையீடு ஒன்று செய்து கொண்டார். சென்னை தொழிற்சங்கத்தின் முறையீடு குறித்து இந்திய அரசின் கருத்துக்களை இவ்வரசுக்குத் தெரிவிக்குமாறு மத்திய வர்த்தக அமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்குத் தொடருதல் :

2.32. 1983-ல் அரசு பின்வரும் இனங்களில் வழக்குத் தொடர அனுமதி வழங்கியுள்ளது :

| | | |
|---|---|---|
| 1. | சுவாமி அண்டு கம்பெனி, கோயம்புத்தூர், (குத்தகைதாரர்—வாசுதேவா தொழில் நிறுவனம்). | 1—9—1982—ஆம் நாளிட்ட 12(3) உடன்படுக்கையை நிறைவேற்றாமை. |
| 2. | ரிலயபிள் மெஷினரி கம்பெனி சென்னை. | சென்னை, தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிறைவேற்றாமை |
| 3. | தவமணி டெக்ஸ்டைல்ஸ், சிவகிரி | கோயம்புத்தூர், தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிறைவேற்றாமை |
| 4. | பி.ஏ.ஏ. எக்ஸ்பிரஸ், பாலக்கோடு தருமபுரி மா. வட்டம் | 12(3) உடன்படிக்கையை நிறைவேற்றாமை. |

2.33. இனம் எண். 2-ஐப் பொறுத்த வரையில், குற்றஞ் சாட்டப்பட்டவர் அதாவது இந்நிறுவனத்தின் உரிமையாளர், நீதித் துறை மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் தொழிலாளர் திரு. ஜெயராமனுக்குச் சேர வேண்டிய ரூ. 300 கொடுத்துள்ளார்கள். எனினும், நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவர் தொகை செலுத்தத் தவறியதற்காக ரூ. 25 அபராதம் விதித்தும் அவர்மீது வழக்குத் தொடரவும் தீர்ப்பு வழங்கியது.

2.34. ஏனைய மூன்று வழக்குகளும் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி :—

2.35. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பின்வரும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது :



1. சென்னையிலுள்ள டிரான்ஸ்பார்மர் ஸ்விட்சு கியர் நிறுவனத்தைச் சேர்ந்த 220 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் இந்நிதியிலிருந்து ரூ. 250 வீதம் வழங்கப்பட்டது.

2. திருப்பூரிலுள்ள இராமலிங்கர் கூடாம்பிகை ஆலையைச் சேர்ந்த 1,400 தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 500 வீதம் மேற் சொன்ன நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

3. நீலகிரியிலுள்ள கார்டைட் தொழிற்சாலையைச் சேர்ந்த ஏழு தொழிலாளர்களுக்கு தலா ரூபாய் 1,000 என்ற வீதத்தில் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 7,000.

தொழிற்சங்கங்கள் :

2.36. 1—11—1983 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 3,932. இவ்வாண்டில் 449 தொழிற்சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 683 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. 19 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. நான்கு தொழிற்சங்கங்கள் கலைக்கப் பட்டன. 1983 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப்படி பதிவு செய்யப் பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,713.

சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

2.37. தொழில் நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கு மிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு "சுமுகமான தொழிலுறவுக்கு பரிசு வழங்கும் திட்டத் தினைக்" கொண்டுவந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அக்குழு 1981 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தெரிந்தெடுத்தது. இவர்களுக்கு முதற் பரிசாக சுழற்கோப்பை ஒன்றும் நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றும், இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் இதற்கென சென்னையில் 24—1—1984 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட விழாவில் மாண்புமிகு தொழில் அமைச்சர் வழங்கினார்.

அத்தியாயம். 3

**பணி நிபந்தனைகள், வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள் :**
**1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் :**

3.1. 1983 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 11,465 தொழிற்சாலைகள் இருந்தன. 1983 டிசம்பர் திங்கள் இறுதியில் 470 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டதுடனும், 925 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டதுடனும் சேர்ந்து தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,920 ஆக உயர்ந்தது. 31—12—1983 அன்றுள்ளவாறு இச்சட்டத்தின்கீழ் பணிபுரிவோரின் எண்ணிக்கை 7,85,864 ஆகும்.

3.2. இச்சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் முறையே இணைப்புகள் 5, 6, 7-ல் தரப்பட்டுள்ளன.

3.3 தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982 .. .. .. | 50 | 25,889 |
| 1983 .. .. .. | 45 | 20,547 |

3.4. அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டதால் (1982 ஆம் ஆண்டில் 7,01,450 தொழிலாளர்களிலிருந்து 1983 ஆம் ஆண்டில் 7,85,864 தொழிலாளர்கள் அதாவது 84,414 தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர்), உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது. உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. தொழில் பாதுகாப்பு மேம்படுத்துகிற மும்முர நடவடிக்கைகளான பாதுகாப்புக் கல்வி, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்புச் சுற்றாய்வு முதலியவற்றை நடத்தியதாலும், தொழிற்சாலைகள் சட்டத்தின் பாதுகாப்பு விதிமுறைகளைச் சிறந்த முறையில் ஆய்வு செய்து, செயல்படுத்தியதாலும் இது சாத்தியமாயிற்று.



**தொழிலாளர்களின் உடல் நலன், பாதுகாப்புக்காகத் தனிப்பிரிவு அமைத்தல் :**

3.5 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல்நலன், பாதுகாப்பு ஆகியவற்றில் இத்துறை கவனம் செலுத்துகிறது. எனவே ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஆய்வுக்கூடங்களில் ஏற்பாடு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவற்றிற்கு வகை செய்யும் நோக்கத்துடன் இத்துறையில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலை சுகாதாரம், உடல் நலன் பேணும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்களாக பணி புரிவதற்கு, இத்துறையில் ஆறு முழு நேர மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். துறையின் பாதுகாப்பை மேம்படுத்துகிற நடவடிக்கைகள் முழ்முரப்படுத்தப்படுவதற்காக இரண்டு பாதுகாப்புப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. தொழிற்சாலை சுகாதார ஆய்வுக் கூடம், சான்றளிக்கும் அறுவை மருத்துவர்கள், பாதுகாப்புப் பிரிவுகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் தொழிற்சாலை சுகாதாரம், உடல் பாதுகாப்பு தொடர்பானவற்றைப் பார்த்துக்கொள்ள தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

**அரசு வழங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள்.**

3.6 தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெறுவதைப் பாராட்டி இம் மாநிலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பரிசு வழங்கும் முறை உள்ளது. இம்முறை, தொழிற்சாலைகளில் விபத்துக்கள் நடைபெறுவதைத் தடுக்கும் முக்கியப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகள் தொழிலாளர்கள் ஆகியோர்களை ஊக்குவிப்பதற்காக வழங்கி வரும் பரிசாகும். இவ்வரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசைத் தவிர, பாதுகாப்பை மேம்படுத்தல், உற்பத்தியைப் பெருக்குதல், தொழிலில் திறமை, தொழில் முறைகளில் புதிய கண்டுபிடிப்புகள் மேம்பாடு கண்டு, பொருள்

விபத்துகளைக் குறைத்தல், முதலியவை குறித்து தொழிலாளர்கள் கருத்துரைகளை அளிக்கும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக உழைப்பு வீரர் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இப்பணிகளில் தொழிலாளர்கள் பெரும் பங்கு வகிப்பதற்காக இத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை 1983 ஆம் ஆண்டில் மூன்று வகைகளின்கீழ் ரூபாய் 500 ஆக இருந்ததை ரூபாய் 1,000 ஆகவும் ரூபாய் 250-ஐ ரூபாய் 500 ஆகவும் ரூபாய் 100-ஐ 250 ரூபாய் ஆகவும் அரசு உயர்த்தி உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 1981 ஆம் சாதனை ஆண்டில் பயிற்சி பெற தகுதி உடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு ரொக்கப் பரிசும், சுழற் கோப்பைகளும் 24—1—1984 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன. 1982 சாதனை ஆண்டிற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமும் நிர்வாகத்தினரிடமும் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

3.7. பாதுகாப்புப் பிரிவுகள் :—பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படும் என்று கருதப்படும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பாதுகாப்புப் பிரிவுகள், பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. இந்தப் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளைத் தவிர, கருத்தரங்குகள் முதலியவை தேசிய பாதுகாப்புச் சபை, விபத்தில் உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான சங்கம், பணியாளர்கள் நலச் சங்கம் போன்ற நிறுவனங்களின் உடனுழைப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, தொழிலாளர்கள் பயன் அடைவதற்காக, தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றிய திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றது. பாதுகாப்புப் பற்றிய சுவரொட்டிகள் தயாரிப்பதற்கு, தேசிய பாதுகாப்புச் சபைக்கு, உதவி புரிகின்றன. 1983 ஆம் ஆண்டில், பயனடைந்த 1,041 தொழிலாளர்களுக்கு, மதுரையில் உள்ள பாதுகாப்புப் பிரிவு 34 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளையும், கோயம்புத்தூரில் உள்ள பாதுகாப்புப் பிரிவு ஐந்து பாதுகாப்புப் பயிற்சி வகுப்புக்களையும், நடத்தின. 1983 ஆம் ஆண்டில் இரு பாதுகாப்புப் பிரிவுகளால், 13 பாதுகாப்பு சுற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1983 ஆம் ஆண்டில், பாதுகாப்பைப் பற்றி விளக்கும் ஆறு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. தொழிற்பாதுகாப்புப் பற்றிய காலாண்டு இதழ் ஒன்றும் வெளியிடப்பட்டது.



3.8. பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் :

தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றி, தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களும், மேற்பார்வையாளர்களும் பயன்பெறும் வகையில் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால்,* (சுகாதாரம்—பாதுகாப்பு) 24 பயிற்சி வகுப்புகள் 1983 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகள் மூலம் 700 பேர் பயன்பெற்றனர். இவ்வகுப்புகளில் தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

தொழிற்சாலைகளில், 63 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவற்றால் 1,741 பேர் பயனடைந்தனர்.

தொழிலாளர் உடல் நலன்.

3.9. சென்னையில் உள்ள, மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக்கூடத்துடன் இணைந்து தொழிற்சாலைத் தொழிலாளர் சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு செயல்படுகிறது. ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஆய்வுக்கூடங்களில் ஏற்பாடு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவற்றிற்கு வகை செய்யும் நோக்கத்துடன் இப்பிரிவு செயல்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களின் இரத்தம், சிறுநீர், சளி முதலியவற்றின் 987 மாதிரிகள் பெறப்பட்டு, அவை தொழிலாளர் நலம் பேணும் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டன.

3. 10. தொழிலாளர் உடல்நிலையைக் கவனிப்பதற்கான மருத்துவப் பிரிவு :

கைத்தறி தொழிற் துறை போன்று நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழிற் பிரிவுகளில் பணியாற்றுபவர்களுக்கு மதுரையில் உள்ள மருத்துவப் பிரிவு மருத்துவ வசதிகளை அளிக்கிறது. 1983 ஆம் ஆண்டில் மதுரை, முதன்மை நிலையத்தில் கடந்த ஆண்டு 193 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்க இவ்வாண்டு 499 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. செல்லூர் துணை நிலையத்தில் கடந்த ஆண்டு 354 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்க இவ்வாண்டு 1,893 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

**சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் :**

3.11. சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பணியாற்றிவரும் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆறுபேர். தொழிலாளர்கள், சிற்றுண்டி சாலைப் பணியாளர்கள் ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், ஆகியோரை மருத்துவ பரிசோதனை செய்து அவர்கட்கு மருத்துவத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த சான்றளிக்கும் மருத்துவவர்கள், திறம்பட பணியைச் செய்வதற்காக, தொழிற்சாலைகள் சட்டம், 87,92,94 ஆம் பிரிவுகளின் கீழ், கூடுதல் ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த சான்றளிக்கும் மருத்துவர்கள், கடந்த ஆண்டில் ஆபத்தான தொழில்களில் பணி புரியும் 7,688 தொழிலாளர்களை பரிசோதனை செய்திருக்க இவ்வாண்டும் 9,637 தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து, சான்றளித்துள்ளனர். தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் கடந்த ஆண்டு 4,012 இளம் தொழிலாளர்களை பரிசோதனை செய்திருக்க இவ்வாண்டு 6,951 இளம் தொழிலாளர்களைப் பரிசோதித்துச் சான்று அளித்துள்ளனர். இவர்களைத் தவிர, 802 சிற்றுண்டிச் சாலை பணியாளர்களையும் பரிசோதனை செய்தனர்.

**தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் :**

3.12. இச்சட்டத்தின்கீழ் வரும் கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை, நடத்தப்பட்ட ஆய்வு விவரம் இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள், ஆகிய விவரங்கள் 5, 6, 7, 8 ஆகிய இணைப்புகளில் உள்ளன.

**நிலையான, தற்காலிக விலக்குகள் :**

3.13. இந்த ஆண்டில் தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து அரசு நான்கு இனங்களுக்கு (சந்தைகள், திருவிழாக்கள் நீங்கலாக) தற்காலிக விலக்கும் அளித்துள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர், சந்தைகள், திருவிழாக்களுக்கு அளிக்கப்படும் விலக்கு உட்பட 18 இனங்களுக்குத் தற்காலிக விலக்கு அளித்துள்ளார்.



3.14. தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர் 86 இனங்களுக்குத் தற்காலிக விலக்கும், 14 இனங்களில் இச்சட்டத்தைச் செயலாக்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அனுமதியும் அளித்துள்ளார்.

3.15. இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு விண்ணப்பங்கள் ஆண்டுத் தொடக்கத்தில் பரிசிலனையில் இருந்தன. இந்த ஆண்டு இரண்டு விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த நான்கு இனங்களிலும் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணை பிறப்பித்துள்ளார்.

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் :**

3.16. இச்சட்டத்தின் கீழ்வரும் ஓட்டல் நிறுவனங்களின் எண்ணிக்கை வசூலிக்கப்பட்ட பதிவுத்தொகை, நடத்தப்பட்ட ஆய்வுகள், இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட மேல் முறையீடுகள் ஆகிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 5, 6, 7, 8 ஆம் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :**

**தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் :**

3.17. வசூலிக்கப்பட்ட உரிமத்தொகை, ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் இச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவைபற்றிய விவரம் 5, 6, 7, 8 ஆகிய இணைப்புகளில் உள்ளன.

**தொழிலாளர் நலன் :**

3.18. பீடித் தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு செஸ்வரி வசூலிக்கிறது. மேலும் நலப்பணிகளை மேற்கொள்வதற்காக அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும், இந்த ஆண்டில், தமிழ் நாட்டில் பின்வரும் தொழிலாளர் நலப்பணிகளை மேற்கொண்டுள்ளது,

**சுகாதாரம் :**

3.19. மூன்று நிலையான மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவை எப்போது தொடங்கப்பட்டன என்ற விவரம் வருமாறு :—

(1) சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் நிலையான மருந்தகம் (24—2—1983).

(2) குடியாத்தத்தில் நிலையான மருந்தகம் (25—2—1983).

(3) முக்கூடலில் (திருநெல்வேலி) நிலையான மருந்தகம்—28—2—1983.

3.20. இம்மாநிலத்தில் தற்போதுள்ள மருத்துவ நிலையங்கள் அனைத்தும் பீடித் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை அளிக்கின்றன.

3.21. மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சகம், திருநெல்வேலியில் உள்ள முக்கூடலில் 50 படுக்கை வசதியுடைய மருத்துவமனையினை அமைக்க நிருவாக அனுமதி அளித்துள்ளது. இதற்கான நிலத்தை கையகப்படுத்த தக்க நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன.

**வீட்டுவசதி :**

3.22. பொருளாதார நிலையில் நலிவுற்ற தொழிலாளர் வர்க்கத்தினருக்கு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகை 1-4-1983 முதல் 1,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

3.23. வேலூரில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் கட்டிய குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு 150 தொழிலாளர்களுக்குத் தகுதியுடைமை இருப்பதாக ஒப்புதளிக்கப்பட்டுள்ளது.

**படிப்புதவித் தொகை :**

3.24. இந்த ஆண்டில் தமிழகத்தில் அறிஞர்கள் 1,761 பேருக்கு 3,31,100 ரூபாய் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது.



3.25. 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவின்படி தமிழக அரசின், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் 9 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை தமிழக மாநிலத்திற்கென்று மத்திய அரசு அமைத்துள்ளது. இக் குழு இந்த ஆண்டில் இருமுறை கூடி, தமிழக பீடித் தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் பணிகளை மேம்படுத்த பல்வேறு வழிவகைகள் பற்றி விவாதித்தது.

**1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் :**

3.26. 1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றன.

3.27. வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், நடத்தப்பட்ட ஆய்வுகள், விதித் துறைகளை மீறியவர்கள் மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5, 6, 7 ஆகிய இணைப்புகளில் உள்ளன.

**1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் பிற செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள் பல்வேறு விதித்துறைகள்) சட்டம்.**

3. 28. வெளியூரில் இச்சட்டம் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில் தொழிலாளர் நல ஆணையாளர் (சென்னை) அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

3. 29. இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 23

### செய்தித்தாள் பணியாளர்களுக்காகப் பலேகர் நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயலாக்குதல்.

3.30. இம்மாநிலத்தில் பலேகர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளுக்கு உட்பட்ட மொத்தம் 307 செய்தித்தாள் நிறுவனங்களில் 101 செய்தித்தாள் நிறுவனங்கள் அப்பரிந்துரைகளைச் செயலாக்கியுள்ளன. 163 செய்தித்தாள் நிறுவனங்கள் செயல்படவில்லை. 9 செய்தித்தாள் நிறுவனங்கள் இப்பரிந்துரைகளை இன்னும் செயலாக்கவில்லை. 34 செய்தித்தாள் நிறுவனங்களில் பணியாளர்கள் எவரும் இல்லை. எஞ்சிய செய்தித்தாள் நிறுவனங்கள் இப்பரிந்துரைகளைச் செயலாக்குகின்றனவா என்பது கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

### 1976 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

3. 31. மருந்தாக்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துகிற இச் சட்டம், இச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றது.

### 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.

3.32. 1983 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சுமார் 92,300 தொழிலாளர்கள் பணிபுரியும் 451 தோட்டங்கள் இருந்தன. இந்த ஆண்டில், 61 தொழிலாளர்கள் பணியாற்றும் 3 தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. தோட்டமெதுவும், பட்டியலில் இருந்து அகற்றப்படவில்லை. ஆண்டு இறுதியில் 454 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 31—12—1983 அன்று உள்ளபடி, தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,361 ஆகும்.



1984 மார்ச் 23]

3. 33. சென்னையிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளர் தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச்சட்டத்தின் விதித் துறைகளைச் செயலாக்குவதில் இவருக்கு உதவியாக மலைத் தோட்ட ஆய்வாளர்கள் ஏழு பேர் உள்ளனர். இவர்களின் தலைமையகம் கடலூர், உதகமண்டலம், குன்னூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஆய்வாவர்கள் தவிர நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய ஈரிடங்களில் பணிபுரியும் இரண்டு மருத்துவ அதிகாரிகள் இச்சட்டத்தின் படி மருத்துவ வசதி அளிக்கின்றனர். மலைத் தோட்டப் பகுதியில் உள்ள மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஆய்வு செய்கின்றனர். இந்த ஆண்டில், இம் மருத்துவ அதிகாரிகள், 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் வழக்கமாக 606 தடவை சென்று மருத்துவமனைகளையும், மருந்தகங்களையும், ஆய்வு செய்தனர். மேலும், 3 தடவை தனி ஆய்வும், 3 தடவை விடு முறை ஆய்வும், 1 தடவை திடீர் ஆய்வும் மேற்கொண்டனர்.

3.34. இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்ட ஆய்வுகள் தொடுக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 6, 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல்—நீக்குதல்) சட்டம்.

3.35. இச்சட்டத்தைத் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர்.

3.36. இச்சட்டத்தின் கீழ், 1983 ஆம் ஆண்டில் 399 உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கியுள்ளனர். பதிவு அதிகாரிகள் 94 பேரை முதன்மைத் தொழிலதிபர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

3.37. மேற்கொண்ட ஆய்வுகள், தொடுக்கப்பட்ட வழக்குகள் அவற்றின் முடிவு ஆகியவை குறித்த விவரங்கள் 6, 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழு.

3.38. 1977 ஆம் ஆண்டு முதல் மாநில ஒப்பந்த தொழிலாளர் ஆலோசனைக்குழு செயல்பட்டு வருகிறது. இது 1981 இல் திருத்தியமைக்கப்பட்டது. இக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த/நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

3.39. மேற்கண்ட குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள இரசாயனத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை ஆய்வு செய்ய 1983 ஆம் ஆண்டில் துணைக்குழு ஒன்றை அரசு நியமித்தது. இக்குழு அதுபற்றி ஆய்வு செய்து வருகிறது.

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலை (நிலை ஆணைகள்) சட்டம்.

3.40. 1983 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 85 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங்கினர். 19 இனங்களில் நிலை ஆணைகளின் திருத்தங்களுக்கு நடப்பாண்டில் சான்றிதழ் வழங்கினர். நடப்பாண்டில் மேல் முறையீட்டு அதிகார மன்றங்கள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றம் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் 6 முறையீடுகள் மீது தீர்ப்பு வழங்கினர். இச்சட்டத்தின் 13-ஏ ஆம் பிரிவின் கீழ் 7 மனுக்களின் மீது இந்த நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்

3.41. நடப்பாண்டில் தாக்கல் செய்த வழக்குகள் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரங்கள் 6, 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் இத்துறையின் மூலம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது.



தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம்.

3.42. இச்சட்டம், 24 மாதங்களில் 480 நாட்கள் தொழிலாளர் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவருக்கு நிலையான அந்தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும் 1—1—1982 லிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச்சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அவர்கள் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளன.

3.43. நடப்பாண்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகம் மேற்கொண்ட ஆய்வு விவரம் 6 ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு கட்டிடம்-கட்டிடத் தொழிலாளர் (பணி நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு.

3.44. கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஊதியம், சுகாதாரம், பாதுகாப்பு, பணி நிலைமைகள் ஆகிய வகையில் தொழிலாளர்கள் நலன் கருதி தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கட்டிடம்—கட்டிடத் தொழிலாளர் (பணி நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவினை சட்டமன்றத்தில் கொண்டு வந்தது.

1979 ஆம் ஆண்டு பன்மாநில இடம் பெயர் தொழிலாளர் (பணிமுறைப் படுத்தல்—பணி நிலைமைகள்) சட்டம்.

3.45. பன்மாநில இடம் பெயர் தொழிலாளர்களின் பணியை முறைப் படுத்தவும் அவர்களின் பணி நிலைமைகள் குறித்து விதித்துறை இயற்றவும், மத்திய அரசு கொண்டு வந்த 1979 ஆம் ஆண்டு பன் மாநில இடம் பெயர் தொழிலாளர் (பணிமுறைப்படுத்தல்—பணிநிலைமைகள்) சட்டம் 11-6-1979 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.

3.46. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட வரைவு விதிகள் 12—9—1983-ம் நாளிட்ட தொழிலாளர் நலத்துறையின் 2154 ஆம் எண். ஆணையில் அரசினால் உறுதி செய்யப்பட்டுள்ளன. அந்த விதிகள் 12—9—1983 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் (சிறப்பு வெளியீட்டில்) வெளியிடப்பட்டுள்ளன.

### அத்தியாயம் 4.

### ஊதியங்கள் சட்டம்.

### 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

4—1—1983 ஆம் ஆண்டில் அரசு கீழ்காணும் வேலைகளைப் பொறுத்த மட்டில் குறைந்த அளவு ஊதிய விதத்தை நிர்ணயித்துள்ளது/திருத்தியமைத்துள்ளது :—

1. புகையிலை தயாரிப்பில் வேலை (பீடி சுற்றுபவர் நீங்கலாக) (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

2. வாசனை சுவை புகையிலை தயாரிப்பில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

3. கல் வெட்டியெடுக்கும் இடங்களில் கல் உடைக்கும் வேலை அல்லது கற்களை ஜல்லிகளாக்கும் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

4. பஞ்சிலிருந்து விதை நீக்குதல், பஞ்சு அழுத்துதல், பஞ்சு கழிவு ஆகியவற்றில் வேலை, (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

5. வெட்டு மரத்தொழிற்சாலையில் வேலை (திருத்தியமைக்கப்டுள்ளது).

6. முந்திரி தொழிலில் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

7. ஓட்டல்கள், சிற்றுண்டியகங்களில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

8. திரைப்படத் தொழிலில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

9. வெளுப்பாக்குதல், சாயம் தோய்த்தல் ஆகிய நிறுவனங்களில் வேலை (நிர்ணயிக்கப்பட்டது).

10. கைத்தறி நெசவில் வேலை (திருத்தியமைக்கப்பட்டது).

11. கைத்தறிப்பட்டு நெசவில் வேலை (திருத்தியமைக்கப்பட்டது).

12. சோப்பு தயாரித்தல் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

13. விசைத்தறித் தொழிலில் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).



14. மருத்துவமனைகள்-தனி மருத்துவ மனைகள் ஆகியவற்றில் வேலை (அரசின் மருத்துவ மனைகள், தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள், மருந்தகங்கள் தவிர) (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

15. சாலை அமைத்தல், பராமரித்தல் ஆகிய வேலைகள் அல்லது கட்டிட வேலை அல்லது கல் உடைத்தல், ஜல்லி உடைத்தல் ஆகிய வேலைகள் (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

16. தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்பில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

17. மைகா சுரங்கங்களில் வேலை (மத்திய அரசு அறிக்கையின் மறு வெளியீடு) (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

18. வேளாண்மை, அதன் துணைத் தொழில்களில் வேலை.

4. 2. பீடி சுற்றுபவர் தொடர்பாக அவர்களின் குறைந்த அளவு ஊதிய விதத்தை உயர்த்துவது குறித்துப் பொது மக்களிடமிருந்து மறுப்புரை/கருத்துரை கேட்டு அரசு வரைவு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இந்த வரைவு அறிவிக்கையை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.3. பின்வரும் பணிகள் தொடர்பாக குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது :—

1. ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓட்டுவதில் வேலை;

2. செங்கல் ஓடு உற்பத்தித் தொழிலில் வேலை;

3. அச்சகங்களில் வேலை;

4. மீன்பிடி தொழிலில் வேலை.

4. 4. பின்வரும் வேலைகளுக்கு குறைந்த அளவு ஊதிய விதங்களை நிர்ணயிக்க அல்லது திருத்தியமைக்க ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது :—

(1) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் தோல் பொருள் தயாரிப்பிலும் வேலை;

(2) ஜவ்வரிசித் தொழிலில் வேலை;

(3) மோட்டார் பட்டறைகளில் வேலை;

(4) சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை;

(5) பொதுப் பொறியியல், வடிவமைப்புத் தொழிலில் வேலை;

(6) மூக்குபொடித் தயாரிப்புத் தொழிலில் வேலை;

(7) உப்பளங்களில் வேலை;

(8) அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை;

(9) சலவை நிலையங்கள், துணி வெளுப்பு (கம்பெனி, பட்டுத்துணி உட்பட) தொழிலில் வேலை;

(10) எண்ணெய் ஆலைகளில் வேலை;

(11) அரிசி ஆலை, மாவு ஆலை அல்லது பருப்பு ஆலையில் வேலை;

(12) வனத் தொழிலில் வேலை;

(13) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை;

(14) தையல் தொழிலில் வேலை;

(15) செயற்கை வைரம் அறுக்கும் வேலை;

(16) நார்ப்பொருள் தயாரிப்பில் வேலை;

(17) தேயிலைத் தொழிற்சாலையில் வேலை.

4. 5. (சமையல்) பாத்திரங்கள் தயாரிப்பு வேலைக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களை நிர்ணயிக்க ஆலோசனைக் குழு தெரிவித்த பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

4. 6. ஆய்வு ஆண்டில், அரசு பின்வரும் வேலைகளை 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்த்துள்ளது :—

(1) டப்பா கொள்கலன் தயாரிப்பில் வேலை;

(2) கழிவுப் பஞ்சாலையில் வேலை.

மேற்கூறிய வேலைகளுக்கு குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.



குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை மன்றம்.

4.7. குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை மன்றம், ஆய்வு ஆண்டில் மூன்று முறை கூடியது. இக்குழு, மேற்படி கூட்டங்களில் முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளதுடன், அட்டவணையிடப்பட்ட வெவ்வேறு வேலைகளுக்கும் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிப்பதில் அல்லது திருத்தியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கென்று அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பரிந்துரைத்துள்ளது.

4. 8. தொழிலாளர் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள், குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்கிற முறையில், 1983 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் வழங்காதது பற்றிய கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்பளித்தனர்.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

4. 9. இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

4. 10. நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 6, 7 ஆம் இணைப்புகளில் உள்ளன.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம்.

4. 11. தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும்போது அவர்களுக்குத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

4. 12. வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி வாழ்க்கைப்படி வழங்கக்கோரி, இவ்வாண்டுத் தொடக்கத்தில் 29 உரிமைக் கோரிக்கைகள் பைசல் செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில் அத்தகைய உரிமைக் கோரிக்கைகள் 196 துறை அலுவலர்களால் பெறப்பட்டன. அவற்றுள் 157 கோரிக்கைகள் இவ்வாண்டிலேயே பைசல் செய்யப்பட்டன; ஆண்டு இறுதி நிலவரப்படி 68 கோரிக்கைகள் பைசல் செய்யப்படாமல் உள்ளன.

## அத்தியாயம் 5.

### சமூகப் பாதுகாப்பு.

**1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி—பல்வகை விதித் துறைகள் சட்டம்.**

5.1. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 173 தொழிற்சாலைகளுக்கும், குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்துகிறது. வருங்கால வைப்புநிதி, குடும்ப ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றிற்காக மூன்று திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

5. 2. இந்த ஆண்டில், ஆஸ்பெஸ்டாஸை ஆதாரமாக கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு 1—9—1983 லிருந்து இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

**நிறுவனங்களையும் சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொணருதல்.**

5. 3. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இச்சட்டத்தின் கீழ் கொணரப்பட்ட நிறுவனங்கள், பணியாளர்கள், சந்தாதாரர்கள் ஆகியோர் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் படாதவை. | மொத்தம் |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 434 | 17,170 | 17,604 |
| பணியாளர் எண்ணிக்கை | 3,35,767 | 31,38,588 | 16,74,355 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3,21,593 | 12,13,476 | 15,35,069 |

**1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்கள்.**

5.4. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இத்திட்டத்தின் கீழ்வருகின்ற சந்தாரர்களின் எண்ணிக்கை 11,14,276 ஆகும்.



**1976 ஆம் ஆண்டு பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத் கீழ் உறுப்பினராதல்.**

5.5. அனைத்து உறுப்பினர்களும் அதாவது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட, விலக்களிக்கப்படாத நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தாமாகவே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

5. 6. ஆயினும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் கூட்டு காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூடுதல் பயன்பெறும் ஏற்பாட்டைத் தொழிலதிபர்கள் செய்திருக்கும் பொழுது அவர்கள் பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் சேருவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இது வரை 38,235 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட 122 நிறுவனங்களுக்கு இந்த விலக்களிக்கப்பட்டுள்ளது.

**கேட்பு, வசூல், நிலுவை.**

5. 7. மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1983 ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் வருமாறு :—

| (1) | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. (2) | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். (3) | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| கேட்பு | 6,245.25 | 1,064.34 | 238.11 |
| வசூல் | 5,966.81 | 1,016.24 | 230.12 |
| நிலுவை | 278.44 | 48.10 | 7.99 |
| (1) தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகளைப் பொறுத்தமட்டில் அவற்றை எடுத்துக் கொள்வதற்கு முன்பிருந்த கால அளவுக்குரிய நிலுவைகள். | | 57.15 | |

5.8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும் பகுதி பின்வரும் வகைத் தொழில் நிறுவனங்களில் வசூலிக்கப்படாது முடங்கிக் கிடக்கின்றன :—

| (1) | (2) தொழிலாளர் வருங்கால வைப்புநிதி | (3) தொழிலாளர் குடும்பம் ஓய் வூதியம். | (4) தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (2) மேற்கூறிய திட்டம் பொருந்துவதை எதிர்த்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 80.77 | 7.37 | 2.54 |
| (3) கலைக்கப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள். | 16.39 | 0.84 | 0.29 |
| (4) மூடப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள். | 4.50 | 0.40 | 0.10 |
| மொத்தம் | 158.81 | 8.61 | 2.93 |

5.9. நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து அவை நாட்டுடைமையாவதற்கு முன்பிருந்த காலத்திற்குரிய நிலுவைத் தொகையை வசூலிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

5. 10 ரூபாய் 119.63 இலட்சம் நிலுவைத் தொகையை முனைப்பாக வசூலிப்பதற்கு இந்த அமைப்பு வரி வசூல் சான்றிதழ்களை ஏற்கனவே அளித்துள்ளது. 364 இனங்களைப் பொறுத்த ரூ. 56.45 இலட்சம் வரையிலான வசூல் விவகாரம் மாவட்ட ஆட்சியர்களிடம் பைசல் செய்யப்படாமல் உள்ளன. இத்துடன் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 நிலவரப்படி நிலுவை வசூல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட 1,311 வழக்குகள் விசாரணையில் உள்ளன.



## பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்.

5.11. 1983 ஆம் ஆண்டில் 52,339 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 2,316.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

5.12. 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமை கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (அ) 31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,345 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 67,364 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 73,709 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 52,339 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 13,822 |
| (ஊ) 31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,548 |

5.13. 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | |
|---|---|
| 1. இறப்பு | 2,595 |
| 2. வயது முதிர்வு பெற்றமை | 7,756 |
| 3. நிரந்தரமாக இயலாமையுற்றது | 406 |
| 4. பதவியை விட்டு விலகியது | 23,078 |

| | |
|---|---|
| 5. ஆட்குறைப்புச் செய்யப்பட்டது | 13,309 |
| 6. இடம் பெயர்தல் | 4,505 |
| 7. பணியிலிருந்து நீக்கப்பட்டது | 333 |
| 8. பல்வகை | 357 |
| மொத்தம் | 52,339 |

5.14. 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,722 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 64,810 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 71,532 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 41,529 |
| (உ) குறைபாடுகளை, சரிசெய்து அனுப்பிவைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 22,133 |
| (ஊ) 31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,870 |

1983 ஆம் ஆண்டில் 41,529 தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 71.74 இலட்சமாகும்.

31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,289 ஆகும்.



5.15. 1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31—12—1982 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் படாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 836 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,543 |
| (இ) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 3,379 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,101 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 444 |
| (ஊ) 31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 834 |

தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்த மட்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 87.85 இலட்சமாகும்.

5.16. 58,651 சந்தாதாரர்களுக்கு மொத்தம் ரூ. 1,331.36 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரம் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

5. 17. இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்சக்தியைப் பயன்படுத்துகின்ற 10-ம் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலை புதிய துறைகளின் கீழ் மின்சக்தியைப் பயன்படுத்தாத 20 அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும் ஓட்டல்கள், உணவகங்கள், திரை அரங்குகள் ஆகியவையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,000 ரூபாய்க்குக் குறைவாக

ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு பின்வரும் உதவிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (1) மருத்துவ உதவி | மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது. |
| (2) நோய் கால உதவி | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (3) பேறுகால உதவி | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (4) ஊனமையுற்றோருக்கு உதவி | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (5) சார்ந்துள்ளவர்கள் நல உதவி | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை | பணமாக அளிக்கப்படுகிறது. |

5.18. இம்மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு இத்திட்டம் படிப்படியாக நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5,15,000 |
| (ஆ) ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை | 6,21,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 6,21,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை | 24,09,000 |

5.19. 1983-84-ல் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் பின்வரும் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது :—

(1) செங்கல்பட்டு மாவட்டத்தில் பாடியநல்லூர், அலமாதி.

(2) வடஆற்காடு மாவட்டத்தில் வாலாஜாபேட்டை.

(3) செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருநின்றவூர், காக்களூர்.

(4) திருமலையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

அரசு ஆணையின் விவர அட்டவணையில் அறிக்கையிடப்பட்டப் பகுதிகளில் உள்ள 20 நபர்களுக்கு மேல் பணியாற்றி வரும் அல்லது பணியாற்றி வந்த தனியார் போக்குவரத்து நிறுவனங்களில் இச்சட்டத்தின் விதித்துறைகளை 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் முதற்கொண்டு அரசு செயல்படுத்தப்பட்டுள்ளது.



5.20. புதிதாகச் சேர்க்கப்பட்ட நிறுவனங்களில் பணியாளர் உட்பட இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 5.15 இலட்சமாக உயர்ந்துள்ளது.

5.21. மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், மாநில காப்புறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு நிகராக உள்ளது. எனவே அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை போக்குவரத்துக் கழகங்களை இந்திட்டத்திலிருந்து நீக்கிவிடலாமென அரசு கருதியுள்ளது.

5.22. மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1 : 7 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. இக்கழகம் மருத்துவ செலவிற்காக செலவிடப்படும் தொகைக்கு உச்சவரம்பு வரையறை செய்துள்ளது. இந்த உச்சவரம்பு 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது, தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 130 (காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி).

5.23. மேற்சொன்ன உச்சவரம்பிற்கு மேற்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருந்துப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ. 25-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 55-க்கு உட்பட்ட தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.

5.24. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவ மனைகளும், 116 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | படுக்கைகள். |
|---|---|
| (1) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, அயன்புரம் (சென்னை). | 625 |
| (2) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை. | 206 |

(3) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. 202

(4) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர். 500

(5) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்). 50

5.25. ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 45 மருத்தகங்களில் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய மருந்தகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

5.26. சென்னை 23 அயன்புரத்திலுள்ள காப்புறுதி மருத்துவமனையில் வரும் நோயாளிகளின் நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வசதி செய்வதற்காகவும், குழந்தைகள் மருத்துவப் பிரிவு, பல் மருத்துவச் சிகிச்சை பிரிவு (24 படுக்கை வசதிகள்) ஆகியவற்றை அயன்புரம் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்ட மருத்துவ மனையிலிருந்து சென்னை கே. கே. நகர் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்ட மருத்துவமனைக்கு மாற்றுவதற்கு 1984 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5.27. பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றும் 50 படுக்கைகள் கொண்ட மேலும் நான்கு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளைக் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது :—

1. சேலம் தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

2. மேட்டூர் அணை தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

3. திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

4. சிவகாசி தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

**1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம்.**

5.28. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம் பின்வரும் நேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது :—

(அ) பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் தொழில் விபத்துக்களுக்காக.

(ஆ) தொழில் முறையில் ஏற்படும் இறப்பு அல்லது நோய்களுக்காக.



இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப் பணியாளர்கள், இரயில்வே பணியாளர்கள் குறிப்பிட்ட சில தீங்குவிளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு (நாட்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் நீங்கலாக) தொழிலதிபர்களின் வர்த்தக அல்லது வணிக காரியங்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்காக நியமிக்கப்பட்டு உள்ள நாட்கூலி பெறும் பணியாளர்கள் ஆகியோருக்குப்பொருந்தும்.

5.29. தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையாளரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5.30. தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி—கல் உடைத்தல், வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது அவை போன்ற ஆபத்தான தொழில்களில் பணிபுரியும்போது காயமேற்பட்டு அதனால் நிலையாக பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச்சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணி புரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். இவ்வாண்டில் இந்நிதியிலிருந்து துயர் துடைப்புத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

## 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்.

5.31. இச்சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாள நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டில் பெற்று, தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8 ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

### திருத்தம்.

5.32. தொழிலாளர் ஒருவர் தொழிலதிபரிடம் ஒரு ஆண்டில் குறைந்த அளவு 240 நாட்கள் பணியாற்றினால் தான் அவருக்கு பணிக்கொடை வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் லாலப்பா, லிங்கப்பா ஏனையோருக்கும் ஷோலாப்பூர் லட்சுமி விஷ்ணு டெக்ஸ்டைல் மில்சுக்கு மிடையே நடந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான பணிக்கொடையை இழக்க நேரிடும் தொழிலாளர்களுக்கு அத்தகைய இழப்பு ஏற்படாமல் இருக்க வகை செய்யும் பொருட்டு 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் 2 (சி) பிரிவை திருத்தும் வகையில் இவ்வரசு சட்ட முன்வடிவு ஒன்றை இயற்றியுள்ளது. மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட முன்வடிவு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 6.

### தொழிலாளர் நலப் பணிகள்.

### அரசு உதவி பெறும் தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம்.

### தனியார் துறை தொழிலதிபர் திட்டங்கள்.

6.1. தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின்கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

6.2. சிறிய இரு அறைகளைக் கொண்ட (இருமாடிகள்) வீடுகள் கட்டுவதற்காக உச்சவரம்புத் தொகையாக ரூ. 5,350-ம், சிறிய இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 6,050-ம் முறையான இரு அறைகளைக்கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 7,600-ம் முறையான இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (இருமாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்பு தொகையாக ரூ. 8,500-ம் இத்திட்டத்தின் கீழ் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

6.3. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,274 வீடுகள் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை செலவிட்ட தொகை ரூ. 54.28 இலட்சமாகும்.

### மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

6.4. குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்பு செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட மலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6.5. அறிக்கையாண்டில் பின்வரும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கி வழங்கியுள்ளது :—

| | வீடுகளின் எண்ணிக்கை. | கடன் | உதவித் தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சோலையார், காளையார் எஸ்டேட் வால்பாறை. | 70 | 1,40,000 | 1,05,000 |
| 2. ஈஞ்சப்பாறை எஸ்டேட், வால்பாறை. | 12 | 24,000 | 18,000 |

6.6. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ. 26.40 இலட்சம் செலவில் 1,057 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

6.7. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் 1971 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலைப் பணியாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அண்மைக் காலத்தில் மேலும் பல திட்டங்களை நிறைவேற்றவும் கருதியுள்ளது.

6.8. ஏற்கனவே உள்ள 30 தொழிலாளர் நல நிலையங்களுடன் இவ்வாண்டில் பின்வரும் நான்கு இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன :—

1. தாச்சநல்லூர்.
2. காஞ்சிபுரம்.
3. கரூர்.
4. திருவொற்றியூர்.

### விடுமுறை இல்லம் Holiday Home

6.9. தொழிற்சாலைப் பணியாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகை செலுத்தக்கூடிய விடுமுறை இல்லம் Holiday Home ஒன்று ரூ. 15 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது, 1983 இல் திறந்து வைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம்.

6.10. இவ்வாரியம் செயல்படுத்திய ஏனைய நலத் திட்டங்கள், அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு:—

| | 1983-84 |
|---|---|
| தொழிலாளர் நல நிலையங்கள்— | |
| (1) தையல் பயிற்சி நிலையங்கள்— | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 39 |
| (ii) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை | 1,344 |



| | |
|---|---|
| (2) பாலர் பள்ளிகள்— | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 34 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 2,000 |
| (3) குழந்தைக் காப்பு நிலையங்கள்— | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 8 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 214 |
| (4) படிப்பகங்கள்— | |
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை | 7 |
| (ஆ) பயன்பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை. | 61,838 |

(5) ஏனைய திட்டங்கள்—

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பி கொடுத்தல். | 558 | 28,198 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்புக் கட்டணங்கள். | 736 | 74,824 |
| (இ) புத்தக வங்கி .. | 23,472 | 3,95,804 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள். | 641 | 1,28,200 |

6.11. பின்வரும் படிப்புகளுக்காக 1982 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை வழங்கிய வகையில் வாரியம் நிதியுதவி அனுமதித்துள்ளது.—

| (1) | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. (2) | தொகை. (3) |
|---|---|---|
| (அ) பொறியியல் படிப்பிற்கான படிப்புதவி தொகைகள். | 18 | 18,000 |
| (ஆ) பொறியல் பட்டயப் படிப்பிற்கான படிப்புதவித் தொகை. | 24 | 14,400 |
| (இ) மருத்துவப் பட்டப் படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள். | 5 | 5,000 |
| (ஈ) தொழிற் பயிற்சி நிலையங்கள் படிப்புக்களுக்கான படிப்பு உதவித் தொகை. | 18 | 5,400 |
| (உ) மேல்நிலைப் பள்ளிக் கல்வி | 13 | 6,500 |

**சட்ட உதவி :**

6.12. உயர்நீதி மன்ற வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக; சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூபாய் 150 என்ற விதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் இரு மனுதாரர்களுக்கு ரூபாய் 150 விதம் மொத்தம் ரூபாய் 300 வழங்கப்பட்டுள்ளது.

6.13. தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள, தகுதி வாய்ந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்கள் பிறப்பிக்க ஆணைகளை எதிர்த்து நிருவாகங்கள் உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந்தப்பட்டத் தொழிலாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடையவராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின் போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டில், இத்தகைய சட்ட உதவி வேண்டி ஏழு மனுக்கள் வரப்பெற்று, அவற்றிற்காக ரூபாய் 350 வழங்கப்பட்டது.



**தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்கள்.**

6.14. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு சட்ட உதவி செய்வது தொடர்பாக, ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு அளித்த பரிந்துரைக்கிணங்க, அரசு இச் சட்ட ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இக் குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்து வரும் மனுக்களை கருணை உணர்வோடு பரிசீலனை செய்து, அவர்களுடைய துயரை நீக்குவதற்காக அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் நலன் தொடர்புடைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அணுக வேண்டியவர்களைப் பற்றியும் அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது.

6.15. இக் குழுக்கள் 1983 ஆம் ஆண்டில் 331 முறையீடுகளுக்குத் தீர்வு கண்டுள்ளன.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.**

6.16. தமிழ்நாடு அரசால் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையைத்தான்-தென்னிந்தியாவில் முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நிலையமாகும். இந் நிலையத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) தொழிற்சங்க நடவடிக்கைத் தரத்தை உயர்த்துதல்;

(2) தொழிலாளர்களுக்கு நலன் பயக்கும் வகையில் நிருவாகவாயில்களை மேம்படுத்துதல்;

(3) திறமையான தொழிலாளர் நல நிருவாகப் பணியை உருவாக்குதல்.

6.17. 1983 ஆம் ஆண்டில் இந்நிலையம் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது :—

(1) சென்னையில், அரசு சார்புச் செயலாளர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி நினைவுகூர் பயிற்சி;

(2) வணிக நிறுவனங்கள் தொழிலதிபர்களுக்கு கடைகள் நிறுவனங்கள் சட்டம், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றிய வகுப்புகள் நடத்துதல்;

(3) தொழிற்சங்க தலைமை பற்றிய திட்டம்;

(4) தொழிற்சாலைகளில் மேற்பார்வைப் பணியாற்றுபவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்;

(5) கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிருவாகிகளுக்கு நினைவுகூர் பயிற்சி அளித்தல்;

(6) துறை அதிகாரிகள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளித்தல்.

6.18. இந்நிலையம் இதுவரையில் நடத்திய பயிற்சி வகுப்புகள், கருத்தரங்கங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 194 ஆகும். இவற்றில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 6,968 ஆகும்.

**தொழிலாளர் நல நிருவாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு, பட்டயக் கல்வி.**

6. 19. இக்கல்வி நிலையம் 15—9—1979 முதல் தொழிலாளர் நல நிருவாகம் பற்றி ஓராண்டு பகுதி நேர பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்பை நடத்தி வருகிறது. இக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழிலாளர் நிருவாகம், தொழிலாளர் நல உறவு, தொழிலாளர் நல நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புகள் பெறுகின்றனர். இதுவரை தொழிலாளர் நல நிருவாகத்தில் 101 மாணவர்களுக்கு பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.



**தொழிலாளர் நலன் பற்றிய தமிழ் திங்களிதழ்.**

6.20. இந் நிலையம் "உழைப்பவர் உலகம்" திங்களிதழ் ஒன்றை தமிழில் வெளியிட்டு வருகிறது. தொழிலாளர் நீதிமன்றங்கள், உயர் நீதி மன்றங்கள், உச்ச நீதி மன்றம் ஆகியவை தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அளித்த முக்கியமான தீர்ப்புகள் பற்றிய செய்திக் குறிப்புகள் இதில் வெளியிடப்படுகின்றன. அரசு அறிவிப்புகள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி, வேலை நிறுத்தம், கதவடைப்புகள் ஆகிய புள்ளி விவரங்களையும் வெளியிடுகிறது.

**வருங்கால திட்டம்.**

6.21. தொழிலதிபர்கள்-தொழிலாளர் நல்லுறவு, பணியாளர் அமைப்பு குறித்த மேலாண்மை தொழிலாளர் நலன் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி திட்டத்தை மேற்கொண்டு வருவதற்காக இந்நிலையத்தில் ஆராய்ச்சிக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் நடுவர் மன்றம் தீர்ப்பு அளிப்பதில் ஏற்படும் காலதாமதம் பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சி நிறைவுறும் தருவாயில் உள்ளது. இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் 7

### எடைகள் அளவைகள் குறித்த சட்டம்.

### தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு எடைகள் அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டம்

7·1. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்துல்) சட்டம், குறைவாக எடைபோடுதல் அளவையிடும் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள், எடைகள், அளவைகள்கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக்கட்டுப்பாட்டின்ழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் தொழிலாளர் நல இணை ஆணையாளரும் ஆவர் (ஆய்வு). இவருக்கு உதவியாக இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள் தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல துறை உதவி ஆய்வாளர்கள் சென்னை மாநகர் செங்கல்பட்டு மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை

அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் (stampin Insp:ctors) ஆகியோரும் சென்னை மாநகர் செங்கல்பட்டு கோயபுத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வாளர்களும் (பிரிவு) ஆகியோரும் இவருக்கு உதவியாக பணியாற்றுகின்றனர். 1983 ஆம் ஆண்டில் 7 எடை அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகளுக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்திற்காக ஒரு தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (பிரிவு) பதவிக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. சென்னை, செங்கல்பட்டு, மதுரை, ஆகிய இடங்களுக்காக ஏற்கனவே எடை-அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது. எடை அளவைகளில் முத்திரையிடும் பணிக்காக மட்டுமே எடை-அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதால், சென்னை, செங்கல்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள வணிகர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

7.2. எடை-அளவைகள் குறைவாக போடப்படுதல், தவறான எடைகள்-அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனைகள் நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல் உட்பட கூட்டாகச் சோதனை இடுதல், தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

7.3. 1983 ஆம் ஆண்டில் எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக கடந்த ஆண்டில் போடப்பட்டு நிலுவையில் இருந்த 17,924 வழக்குகள் உட்பட 18,694 வழக்குகள் போடப்பட்டன. இவ் வழக்குகள் அனைத்திலும் தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 11,51,268 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை - அளவைகளில் முத்திரை இடுவதற்கான கட்டணமாக 1983 ஆம் ஆண்டில் ரூ. 57,21,530.10 வசூலிக்கப்பட்டது.





7.4. 1982-83 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடை-அளவைகள் உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் பழுதுபார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங்களின் (புதிய, புதுப்பித்தல்) விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்பவர்கள். | விற்பனையாளர்கள். | தயாரிப்பாளர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982 .. .. | 258 | 589 | 121 |
| 1983 .. .. | 267 | 587 | 113 |

7.5. அறிக்கை ஆண்டில் விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், பழுது பார்ப்பவர்கள், ஆகியோரிடமிருந்து ரூ. 1,56,262.50 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

7.6. எடைகள் - அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார்.

7.7. 1983ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களை சோதனையிடும் பொருட்டு இத்துறை 2,37,542 ஆய்வுகள் மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள் கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். 1983 ஆம் ஆண்டில் 10,869 கிராமங்களில் 76,055 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

7.8. எடைகள்-அளவைகள் குறைவாகப் போடப்படுவது குறித்து மேற்கொள்ளப்படும் சோதனைகள் தவிர மாநிலம் முழுவதிலுமுள்ள வர்த்தக நிறுவனங்களில் திடீர் சோதனையையும் இத்துறை நடத்துகிறது. நடத்தப்பட்ட திடீர் சோதனைகள் பற்றிய விவரம் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

7.9. 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ஆம் நாளில் கூட்டாக நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின் போது கைப்பற்றப்பட்ட தவறான, குறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப் படாத பல்வேறு எடைகள் அளவைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| எடைகள் .. .. .. .. | 22,406 |
| கொள்ளளவு கருவிகள் .. .. .. | 15,294 |
| நிறுவைக் கருவிகள் .. .. .. | 519 |
| அளக்கும் கருவிகள் .. .. .. | 411 |
| துலாத் தராசுகள் (பீம் ஸ்கேல்ஸ்) .. | 3,227 |

எஸ். இராகவானந்தம்,
தொழிலாளர் நல அமைச்சர்.



பாகம்—2.

இணைப்பு—1.

தொழில் தகராறுகள்.

| விவரம். | 1982. (1982 ஜனவரி முதல் நாளிலிருந்து 1982 டிசமபர் 31 ஆம் நாள் வரை.) | 1983. (1983 ஜனவரி முதல் நாளிலிருந்து 1983 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை | 1,542 | 1,730 |
| (ஆ) வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 7,347 | 7,580 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 7,159 | 7,356 |
| (ஈ) இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 1,328 | 1,416 |
| (உ) வேறுவகையில் சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 4,907 | 4,908 |

| விவரம் (1) | 1982. (1982 ஜனவரி முதல் நாளிலிருந்து 1982 டிசம்பர் 31ஆம் நாள் வரை.) (2) | 1983. (1983 ஜனவரி முதல் நாளிலிருந்து 1983 டிசம்பர் 31ஆம் நாள் வரை.) (3) |
|---|---|---|
| (ஊ) தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 894 | 1,032 |
| (எ) நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 1 | .. |
| (ஏ) தொழில் தகராறுகள் சட்டம் 10 (2) ஆம் பிரிவின்கீழ் நீதிமன்ற தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 29 | .. |
| (ஐ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,730 | 1,954 |



## இணைப்பு 2.

1983 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். (1) | 1982. (1982ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் முடிய.) (2) | 1983. (1983ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் முடிய.) (3) |
|---|---|---|
| (அ) கதவடைப்புக்கள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை.. .. | 187 | 212 |
| (ஆ) வீணான உழைப்பு நாட்கள் | 18,05,978 | 21,16,218 |

## இணைப்பு 3.

1983 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்.

| | |
|---|---|
| 1. நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை .. .. .. | 43 |
| 2. தாங்களாவே முன்வந்து வேலை தொடங்கப்பட்டவை .. .. .. .. | 7 |
| 3. தொழிலாளர் துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை.. | 141 |
| 4. மூடப்பட்டவை .. .. .. | 5 |
| 5. ஆண்டிறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. .. | 16 |



## இணைப்பு 4.

(1) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அ) துணி நெசவு .. | 80 | 117 | 23,237 | 35,440 | 5,86,166 | 7,20,309 |
| (ஆ) பொறியியல் .. | 52 | 49 | 10,429 | 19,530 | 6,43,526 | 7,75,712 |
| (இ) தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 3 | 5 | 2,650 | 1,342 | 3,900 | 49,810 |
| (ஈ) புகையிலை, பீடித் தொழில். | .. | .. | .. | .. | .. | .. |
| (உ) மலைத்தோட்டங்கள் | 6 | 10 | 4,887 | 6,808 | 1,57,190 | 3,46,146 |
| (ஊ) ஏனையவை .. | 46 | 31 | 25,474 | 10,815 | 4,15,196 | 2,24,241 |
| மொத்தம் .. | 187 | 212 | 66,677 | 73,935 | 18,05,978 | 21,16,218 |

**(ii) தீர்ப்பு வழங்குதல் :**

| | தீர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புக்கள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 32 | 87 | 36 | 57 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 862 | 783 | 909 | 980 |
| (இ) 10(2)-ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்டவை | 29 | .. | .. | .. |
| (ஈ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 1 | .. | .. | .. |
| (உ) தொழிலாளர் நீதி மன்றங்கள் முன்பு 33-சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை .. .. .. | 2,556 | 1,906 | .. | 1,560 |

**(iii) தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1)-ஆம் பிரிவின்கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள் :**

| ஆண்டு. | தேர்வுகளின் எண்ணிக்கை. | தொகை ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982 .. .. .. .. | 143 | 13,76,996.20 |
| 1983 .. .. .. .. | 74 | 5,97,307.92 |



## இணைப்பு 5.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண்ணும், சட்டத்தின் பெயரும். | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை. | முடிக்கப்பட்டவை. | தண்டனை அளிக்கப்பட்டவை. | விடுதலை பெறப்பட்டவை. | தண்டிக்க பட்டவை. | திரும்ப பெறப்பட்டவை. | முடிவு பெறாமல் உள்ளவை. | பெறப்பட்ட அபராத தொகை ரூபாய். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 2,620 | 3,706 | 3,869 | 3,547 | 110 | 10 | 202 | 2,457 | 6,43,745 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ் நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 5,882 | 18,763 | 19,960 | 19,759 | 51 | 72 | 78 | 4,685 | 7,80,918 |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு உணவகங்கள் சட்டம். | 1,673 | 2,909 | 3,272 | 3,205 | 13 | 18 | 36 | 1,310 | 1,98,283 |
| 4. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்து தொழிலாளர் சட்டம். | 169 | 325 | 350 | 339 | 8 | 3 | .. | 144 | 60,880 |
| 5. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப் படுத்துதும் நீக்குதலும்) சட்டம். | 34 | 79 | 77 | 72 | 1 | .. | 4 | 36 | 3,015 |
| 6. 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 2,061 | 5,428 | 5,524 | 5,460 | 21 | 17 | 26 | 1,965 | 1,76,93[illegible] |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 65 | 86 | 104 | 100 | 2 | 1 | 1 | 47 | 33,100 |
| 8. 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 817 | 1,546 | 1,658 | 1,617 | 10 | 4 | 27 | 705 | 88,315 |
| 9. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,055 | 3,137 | 3,017 | 2,959 | 21 | 14 | 23 | 1,175 | 1,99,920 |
| 10. 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 5 | 87 | 71 | 70 | .. | .. | 1 | .21 | 3,170 |
| 11. 1972 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 1 | 1 | 1 | 1 | .. | .. | .. | 1 | 50 |
| 12. 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 173 | 164 | 177 | 164 | 6 | .. | 7 | 160 | 23,295 |
| 13. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் | 6 | .. | .. | .. | .. | .. | .. | 6 | .. |
| 14. 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம். | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | .. | 25 |



## இணைப்பு 6.

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப் பட்ட உரிம/பதிவு தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **அமைப்பு ரீதியான தொழிற்சாலைகள் :** | | | ரூ. |
| **(1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்:—** | | | |
| 1982 .. .. .. .. | 11,465 | 7,01,450 | 55,11,712 |
| 1983 .. .. .. .. | 11,920 | 7,85,864 | 58,30,396 |
| **(2) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் —** | | | |
| 1982 .. .. .. .. | 451 | 92,300 | இதற்கு அவசியமில்லை. |
| 1983 .. .. .. .. | 454 | 92,361 | |
| **(3) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்—** | | | |
| 1982 .. .. .. .. | 1,658 | 58,511 | 81,140·25 |
| 1983 .. .. .. .. | 1,614 | 62,874 | 91,624.93 |

அமைப்பு ரீதியல்லாத தொழில்கள் :

(1) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்—

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 1,173 | 10,979 (வீட்டிலிருந்து பணிபுரிபவர்கள் 2 இலட்சம்.) | 20,951.00 |
| 1983 .. .. .. .. | 1,195 | 12,004 (வீட்டிலிருந்து பணிபுரிபவர்கள் 2 இலட்சம்.) | 37,133.00 |

(2) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் —

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 2,72,363 | 2,66,182 | இதற்கு அவசியமில்லை. |
| 1983 .. .. .. .. | 2,70,505 | 2,65,963 | |

(3) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் —

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 26,349 | 66,966 | 2,87,622.95 |
| 1983 .. .. .. .. | 25,676 | 70,874 | 2,96,142.00 |



## இணைப்பு 7.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம்.

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 21,599 | 1,014 | 2,607 | 679 | 819 | 2,631 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 3,80,176 | 38,682 | 5,950 | 9,382 | 11,965 | .. |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம். | 49,460 | 860 | 654 | 506 | 131 | — |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம். | 3,503 | 60 | 128 | 67 | ... | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம். | 230 | .. | .. | .. | .. | .. |
| 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் - நீக்குதல்) சட்டம். | 1,626 | .. | .. | .. | .. | ... |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,92,867 | 2,005 | 1,856 | 1,421 | .. | ... |
| 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 1,032 | 75 | 35 | 18 | .. | — |
| 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். | 57,247 | 142 | 104 | 184 | — | — |
| 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டம். | 1.20,484 | 1,340 | 1,398 | 1,464 | .. | ... |



## இணைப்பு 7.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம்.

| சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுபட்ட ஆய்வு. (3) | சிறப்பு ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவு நேர ஆய்வு. (6) | சோதனை ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1960 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம். | 2,536 | 33 | 86 | 6 | — | — |
| 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 589 | 23 | 12 | 8 | .. | — |
| 1961-ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 10,690 | — | — | — | — | — |
| 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம். | 1,057 | — | — | — | — | — |

## இணைப்பு 8.

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| தொடர் எண்ணும், விவரங்களும். | *தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | **தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | **பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 38 | 34 | 124 | 160 | 350 | 315 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 70 | 85 | 208 | 214 | 880 | 1736 |
| (3) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை. | 108 | 119 | 332 | 374 | 1,330 | 2,051 |
| (4) நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 74 | 73 | 172 | 199 | 915 | 1,711 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 34 | 46 | 160 | 175 | 315 | 340 |

*தொழிலாளர் நல அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியோரால் முடிவு செய்யப்பட்டவை. **தொழிலாளர் நலத்துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.



(ஆ) தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரமும், தொடர் எண்ணும். | தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 254 | 299 | 181 | 168 | 146 | 87 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 927 | 1,031 | 671 | 579 | 141 | 208 |
| (3) மொத்தம் | 1,181 | 1,330 | 852 | 747 | 287 | 295 |
| (4) இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 882 | 970 | 684 | 430 | 200 | 220 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 299 | 360 | 168 | 317 | 87 | 75 |

## இணைப்பு 9.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் பற்றிய விவரங்கள்.

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| (அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (பத்தி 62) | 14,265 |
| (ஆ) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக்குடியிருப்பு வாங்க அல்லது வீட்டுமனை சுங்களம், அரசு முகவரமைப்புகளின் கடனைத் தீர்க்க (பத்தி 68பி அண்டு 68 பிபி.) | 8,689 |
| (இ) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் (பத்தி 68 எச்). | 8,221 |
| (ஈ) உறுப்பினருக்கு/அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக. (பத்தி 68 ஜே.) | 932 |
| (உ) உறுப்பினர்களின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள் மகன்கள் சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள், மகன் ஆகியோரின் உயர் கல்விக்கு (பத்தி 68 கே.) | 23,704 |
| (ஊ) பத்தி 68 எல் படி வழங்கப்பட்ட முன் பணம் .. .. .. .. | 54 |
| (எ) மின்வெட்டு காரணமாக தொழிற்சாலையில் லே-ஆப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68-எம்). | 2,730 |
| (ஏ) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்ப்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68-என்). | ஏதுமில்லை. |

## இணைப்பு 10.

1958-ஆம் ஆண்டு எடைகள் அளவைகள் குறித்த சட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட திடீர் சோதனைகள் பற்றிய விவரம்.

| தொழில் வகை. | திடீர் சோதனை நடத்தப் பட்ட நாள் | செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை. | கண்டுபிடிக் கப்பட்டகுறை கேடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உணவு பங்கீட்டு கடைகளிலும் ஏனைய கூலவர் அமைப்புகளிலும். | 03—02—1983<br>05—02—1983 | 246 | 79 |
| டிை | 19—04—1983<br>20—04—1983 | 336 | 113 |
| எரிவாயுக்கலங்கள் .. .. .. (Gas cylinders). (விற்பனையாளர்கள் இடங்களில்). | 15—03—1983 | 195 | 10 |
| எரிவாயுக்கலன்கள் (பங்கீடு செய்யும் இடங்களில்) | 15—03—1983 | 27 | 1 |
| பெட்ரோல் பங்குகள் .. .. .. | 06—06—1983<br>07—06—1983 | 447 | 48 |

(பம்புகளின் அளவுகளை சரிசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது).

275

தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# அதிகாரபூர்வமான வெளியீடு
# OFFICIAL REPORT


திங்கட்கிழமை, மார்ச் 26, 1984—தொகுதி 207-எண் 2

Monday, 26th March, 1984—Volume 207 - No. 2

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT,
Fort St. George, Madras - 600 009.

விலை ரூ. 2.75]

285

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | 165—189 |
| 2. கவன ஈர்ப்பு— | |
| (1) அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப் படும் நிலக்கரிப் பற்றாக்குறை காரண மாக பொருளாதார நிலை பாதித் துள்ளது குறித்து. | 189—190 |
| (2) பட்டதாரி ஆசிரியர்களை பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்யாததால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து. | 191—192 |
| 3. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம். | 192—262 |
| 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 262—265 |

143896

D

V211,32'N84

N84.20711—2

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1984 மார்ச் 26.

பங்குனி 13, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு 2015.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக்.

* 110 வினா.—திரு. ம. சங்கரலிங்கம், திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பிலும்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) செட்டிநாடு, அண்ணாமலை பாலிடெக்னிக், 1970 ஆம் ஆண்டிலிருந்து அரசின் நேரடி மேற்பார்வையில் இருந்து வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுகிறார்களா ?

(உ) அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்களில், இரண்டு வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தும் வேலையில் நிரந்தரப்படுத்தப் படாதவர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மேற்படி பாலிடெக்னிக்கை, அரசு எடுத்துக்கொண்டதாக ஆணை வழங்கப்படாமல் இருப்பதால், அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள், அரசு ஊழியர்களாகக் கருதப்படவில்லை.

| | |
|---|---|
| (உ) ஆசிரியப் பணியாளர்கள் | 9 |
| ஆசிரியரல்லாத பணியாளர்கள் | 12 |
| மொத்தம் | 21 |

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக் 1970-லிருந்து அரசின் நேரடிப் பார்வையில் இருந்தும், அது அரசு பாலிடெக்னிக் என்று அறிவிக்கப்படாமல் இருப்பதால், அங்கு பணிபுரியும் ஊழியர்கள், ஆசிரியர்கள் எந்தப் பணியிலும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை அகற்ற, அந்தப் பாலிடெக்னிக்கை அரசு பாலிடெக்னிக் என்று அறிவித்து, அங்கே பணி புரிபவர்களின் சர்வீஸ் கண்டிஷனிலே இருக்கக்கூடிய சிக்கல்களை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்தப் பல்தொழில் பயிற்சிப் பயிலகத்தைத் தொடர்ந்து நடத்த நிதி நிலைமை இடம் தராததால், அதை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அந்த நிர்வாகக் குழு கேட்டுக்கொண்டது. எனவே அந்தப் பல்தொழில் பயிற்சிப் பயிலகத்தை 1970 நவம்பர் முதற்கொண்டு அரசு ஏற்று நடத்தி வருகிறது. அதன் நிர்வாகத்திலிருந்து பெறப்பட்ட வரைவுத் தீர்வை பத்திரத்தில் கல்வித் துறைச் செயலாளரால் கையொப்பமிட்டு அண்ணாமலை பல்கலைப் பயிலக முதல்வருக்கு பதிவுக்காக இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ளது. பத்திர நகல் பதிவு செய்யப்பட்ட பின்னர்தான், இப்பயிலகத்தை அரசு முறையாக ஏற்றுக் கொண்டதாக ஆணை பிறப்பிக்க இயலும். ஆகவே அந்தப் பத்திரத்தில் அந்த நிர்வாகம் கையெழுத்திட்டால்தான், அரசு பயிற்சிப் பயிலகமாக அதை அறிவிக்க இயலும். இந்தச் சந்தர்ப்பத்தில் 12—3—1984 கடிதத்தில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அண்ணாமலை பாலிடெக்னிக்கை 1983 ஜூன் முதல் அவர்கள் அறக்கட்டளையே தொடர்ந்து நடத்த விருப்பம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பத்திரத்தில் கையெழுத்திடாததால், பத்திரம் பதிவாகாத நிலையில், அதை அரசு பாலிடெக்னிக்காக அறிவிக்க இயலாமல் இருக்கிறது.



திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அவர்கள் பண நெருக்கடி ஏற்பட்டபோது, அரசின் கையிலே ஒப்படைத்துவிட்டு, அரசு பல நெருக்கடியான கால கட்டங்களையெல்லாம் கடந்த பிறகு, இப்போது பாலிடெக்னிக்கை நடத்துவதில் லாபகரமான சூழ்நிலை வந்த பிறகு, அவர்களே நடத்தப் போவதாகச் சொல்வதை அரசு ஏற்றுக்கொள்கிறதா ? அங்கே வேலை பார்க்கும் ஆசிரியர்கள், பல வருடங்களாகியும் பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கும் அவல நிலையை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1970 முதல் அதை அரசு ஏற்று நடத்தி வருவதால் இதுவரை ரூ. 10,36,344 செலவாகியிருக்கிறது. இதை நாம் சொன்னபோது, டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் இத்தொகையை வசூலிக்காமல், அவர்களுக்கு அந்தப் பாலிடெக்னிக்கைத் திருப்பித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இப்போது அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ்: ஏற்கெனவே 1970-ல் அரசுக்குக் கொடுத்துவிடுவோம் என்று அக்ரிமெண்ட் ஒன்று போட்டு, மறு மதிப்பீடாக ரூ. 1.6 லட்சம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டாம்ப் டியூட்டி தவிர்ப்பு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சமுதாய நல பாலிடெக்னிக் திட்டம் என்ற முறையில் மத்திய அரசு உதவி பெற்று, ஆசிரியர்களுடைய சேமநல நிதிக்கு அரசாங்கம் 3 விழுக்காடு தொகை தந்ததோடு, விருந்தினர் விடுதிக்கு பல லட்சம் ரூபாய் முதலீடும் செய்துள்ள நிலையில், இப்போது அவர்கள் ஒப்பந்தத்தை மீறுவதற்குக் காரணம் என்ன ? அரசு பல லட்சம் ரூபாய்களை முதலீடு செய்துள்ளதால், அக்ரிமென்ட்படி அந்தப் பயிலகத்தை மாற்ற வேண்டுமென்று அரசு நிர்ப்பந்திக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 1970-ல் ஒரு பாலிடெக்னிக் நடத்துவதற்கு எவ்வளவு மானியத் தொகை கொடுத்து வந்தோமோ அதை விட இப்பொழுது அதிகமாக வழங்கி வருகிறோம். ஆகவே அரசின் உதவியைப் பெற்று பாலிடெக்னிக் நடத்துவது என்பது இப்பொழுது அவ்வளவு கடுமையானதாக இல்லை. அவர்கள் இப்பொழுது எடுத்து நடத்தலாமென்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் போலும். ஆனால் அரசு அவர்களுடைய கோரிக்கையை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** 10 வருடங்களுக்கு மேலாக 10 லட்சம் ரூபாய்க்கு மேல் அரசுப் பணம் அதற்காகச் செலவிடப்படுகிறது. அதை அரசே ஏன் 'டேக்-ஓவர்' பண்ணக்கூடாது? இதை முதலிலேயே செய்திருக்கலாம் அல்லவா? இவ்வளவு அரசுப் பணம் செலவிடும் நிலையிலும் கூட நிர்வாகம் நினைத்தால் அவர்கள் கைவசம் வைத்துக்கொள்ளலாமென்ற நிலைமை இருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பத்திரம் பதிவு செய்தல் போன்ற பணிகளை எல்லாம் வேகமாகச் செய்திருக்கிறோம். இது 1970-ல் நடைபெற்றது. ஆனால் 1977-ல் இருந்து நாங்கள் சில காரியங்களைச் செய்திருக்கிறோம். இப்பொழுது அவர்கள் மானியத்தை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

### *Thiagarajar College of Engineering, Madurai.*

* 111 Q. THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether thirty seven students of the Thiagarajar College of Engineering, Madurai, were suspended in connection with the murder of two other students of the same college;

(*b*) whether thirty five of the said students have been totally acquitted by the Sessions Court and whether they have thereupon applied to the Government for transfer to some other College of Engineering with permission to resume their studies there; and

(*c*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 30—3—1981 அன்று மதுரை தியாகராயர் பொறியியற் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 37 மாணவர்கள் கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்கள்.



(இ) மற்றும் (உ) இவர்களில் இருவருக்கு நீதிமன்றத்தால் ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது. பிறர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த 37 பேரில் 9 பேர் இறுதியாண்டு மாணவர்கள். அந்த 9 பேரும் கல்லூரியில் தொடர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளனர். மீதி 28 மாணவர்களில் 22 பேர் காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டு ஏற்கனவே சேர்ந்து விட்டனர். 3 பேர் சேலம் அரசுப் பொறியியற் கல்லூரிக்கும் 3 பேர் கோவை அரசினர் பொறியியற் கல்லூரிக்கும் மாறுதல் செய்யப்பட்டுள்ளனர்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அந்த மாணவர்கள் மேலும் படிப்பைத் தொடர அரசு செய்த உதவிக்கு நன்றி. இதுபோல் பல கல்லூரிகளில் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது, மாணவர்கள் மறு ஆண்டு கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்கிற நிலை இல்லை. பல கல்லூரிகளில் நடவடிக்கை எடுக்கும்போது, இறுதி ஆண்டு மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் படிப்பைத் தொடர முடியவில்லை. ஆகவே அப்படிப் பட்டவர்களை அடுத்த ஆண்டு அதே கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிற நிலை அல்லது வேறு கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் நிலை ஏற்படுத்தப்படுமா? அதற்கேற்ற வகையில் அரசு பரிந்துரை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நடவடிக்கை என்பது தவறு செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் எடுக்கப்படுகிறது. தவறு செய்தால், அதனால் ஏற்படுகிற விளைவுகளை அவர்கள் அனுபவிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பொதுவாகவே யார் மீதாவது வேண்டுமென்றே நடவடிக்கை எடுப்பதில்லை. தவறு செய்திருப்பதாக நிரூபிக்கப் பட்டாலோ, தெரிந்தாலோ, குற்றச்சாட்டுகளை ஏற்று ஒருமுறை தண்டனை வழங்கினால், அதற்கு மேலும் அவர்களை பழிவாங்காமல் தேவையான உதவிகளைச் செய்துதான் வருகிறோம்.

### *Working Days*

* 112. Q.—THIRU P. R. THOMAS, THIRU S. MUTHUSAMY, THIRU C. R. LAKSHMIKANDHAN AND SELVI A. LEELAVATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Graduate and Post-Graduate Teachers' Association has made an appeal to the Government on 4th April 1982 not to increase the number of working days from 200 to 220 and to extend the earned leave benefit to the Teachers in the Recognised Schools in Tamil Nadu; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: தமிழ் நாடு பட்டதாரி-முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 3 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று இருப்பதை 23 நாட்களாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். அதன் அடிப்படையில் அரசு அதை 10 நாட்களாக உயர்த்தியது. அவர்களுடைய விண்ணப்பத்தின் அடிப்படையில் இவ்வாறு 10 நாட்களாக உயர்த்தியிருப்பதாக அரசு அறிவித்திருக்கும் அதே வேளையில் அவர்களுக்கு 220 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கும் பணி நாட்களையும் 200 நாட்களாகக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் 1981 ஆம் ஆண்டு 7 அம்சக் கோரிக்கையை விடுத்தார்கள். அதில் ஆசிரியர்கள் பணியிலிருக்கும் மொத்த நாட்களைக் கணக்கில் எடுத்து 11 நாட்களுக்கு ஒரு நாள் அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல், ஆசிரியர்களுக்கும் ஈட்டிய விடுப்பு அளிக்க வேண்டுமென்றும், அந்த அடிப்படையில் ஆண்டுக்கு 23 நாட்கள் வழங்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். ஆனால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய கோரிக்கை மீது முடிவு எடுக்கும்போது, அவர்களுக்கு அளிக்கும் ஈட்டிய விடுப்பின் அடிப்படையில் இவர்களுக்கும் 20 பணி நாட்களை உயர்த்தித் தரலாமென்று முடிவு செய்தோம். அதுகூட அலுவல் சார்பற்ற முறையில் அவர்கள் செய்கின்ற விடைத்தாள் திருத்துதல் போன்ற நாட்களையும் இதில் சேர்த்துதான் சொல்லியிருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி: முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் அப்படி ஒரு கோரிக்கையை வைக்கவில்லையென்று சொல்லிவிட்டு இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

மற்ற எல்லா சங்கங்களைச் சேர்ந்தவர்களும் 200 நாட்களுக்குப் பதிலாக 220 நாட்களாக ஆக்கப்பட்டிருக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அப்படியானால் இந்தக் கோரிக்கைகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லையா? இதுகுறித்து வெளியிட்ட அரசாணையில் எந்தவிதமான காரணமும் சொல்லப்படவில்லையே, ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை கல்வியமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வியே பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் 1—4—1982-லே 200 நாட்களை 220 நாட்களாக அதிகப்படுத்தக்கூடாது



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, பல்வேறு சங்கங்களின் சார்பில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டபோது, இதை முழுமையாகப் பரிசிலனை செய்யாமல் அரைகுறையாகப் பரிசிலனை செய்ததன் விளைவாகத்தான் 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று அறிவிக்கப்பட்டது. அதே சமயத்தில் வேலைப் பளுவைக் கூட்டி 20 நாட்கள் கூடுதலாக வேலை செய்ய வேண்டுமென்று அறிவிப்பு வந்ததால், ஆசிரியர்கள் மத்தியில் பலத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக அரசு விடுமுறை விதிகளின்படி, 11 நாளுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படிப் பார்த்தால், 200 நாட்கள் என்றால், 20 நாளைக்கு அதிகமாக ஈட்டிய விடுப்பு தர வேண்டும். அந்த அடிப்படையில்தான் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதைப் பரிவுடன் பரிசிலனை செய்து, 11 நாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பு என்ற அரசின் விதிமுறைகளை ஆசிரியர்களின் விஷயத்தில் நடைமுறைப்படுத்தினால், நியாயம் கிடைக்கும். இதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நாம் இப்போது ஊதியக் குழு அமைத்திருக்கிறோம். அவர்கள் இதைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி ஆ. லீலாவதி: தலைவர் அவர்களே, இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசிலனை செய்யலாம் என்று சொல்லியிருப்பதற்கு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே 150 நாட்கள்தான் ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். அதற்குப் பிறகு 200 நாட்கள் என்றும், அதற்குப் பிறகு 220 நாட்கள் என்றும் அதிகரித்து இப்போது அவர்கள் 40 நாட்கள் அதிகமாக வேலை செய்கிறார்கள். ஆறு நாட்கள் ஒரு வாரத்திற்கு வேலை செய்யும்போது, மாணவர்களும் சோர்வுறுகிறார்கள். பசியால் துடிக்கிறார்கள். ஆசிரியர்களும் வேலைப் பளுவை உணருகிறார்கள். இப்போது சனிக்கிழமையும்கூட காலை 9 மணி முதல் மதியம் 1¾ மணிவரை பள்ளி நடக்கிறது. இதனால் மாணவர்களுக்கு மதிய உணவு வேளை கெட்டுப் போகிறது. இதனால் அவர்கள் உடல் நலம் கெட்டுப் போகிறது. ஆகவே அரசு இதை மீண்டும் பரிசிலனை செய்து இந்த ஜூன் மாதத்திலேயே மீண்டும் 200 நாட்கள்தான் வேலை என்று ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 26

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, 200 நாளும் நடக்கலாம். 100 நாளும் நடக்கலாம். அதுகூட சௌகரியமாகத் தான் இருக்கும். இப்போது பாடங்களைச் சொல்லித்தருகிற நிலைமையைப் பார்த்து, அவர்கள் பெறுகிற அறிவைப் பார்த்து, கல்வித் தரத்தினைப் பார்த்து 220 நாட்கள் வேலை செய்வது என்பது கொண்டு வரப்பட்டது. அதை ஒரு பெரிய குற்றமாகக் கருதக்கூடாது. ஆசிரியர்களுக்கென்று கேட்கிற கோரிக்கைகளை தாராளமாகப் பரிசீலிக்கிறோம் என்றும் சொல்கிறோம். அதைக் கேட்காமல் 220 நாட்களுக்குப் பதிலாக 200 நாட்கள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், அது மாணவர்களின் நலனுக்கு நல்லதாக இருக்காது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கல்வித் துறையில் கோடை விடுமுறைக் காலம் அனுமதிக்கப்படுகிற துறை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. பொதுவாக என்.ஜி.ஓக்கள் 280 நாட்கள் ஒரு ஆண்டுக்கு வேலை செய்கி றார்கள். 280 நாட்களுக்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளிக்கப்படுகிறது. அதேபோல் 220 நாட்கள் வேலை பார்க்கிற இந்த ஆசிரியர்களுக்கு 26 நாட்கள் அளிக்கப்பட வேண்டும். ஆகவே அந்த விதிகளின் அடிப்படையில் உடனடி யாக அவர்களுக்குத் தரவேண்டிய ஈட்டிய விடுப்பை உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது கல்லூரி ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு 10 நாட்களாக உயர்த்தப்படவில்லை. 3 நாட்களாகத்தான் இருக் கிறது. அவர்களும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆகவே அரசு இந்தக் கோரிக்கையையும் ஏற்று நல்ல முடிவுகள் எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை நாட்களை உயர்த்தவில்லை. ஆகவே அது ஒரு பிரச்சினையாக எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இப்போது நியமிக்கப்பட்டுள்ள ஊதியக் குழு விளக்கமாகப் பரிசீலித்து முடிவுகள் எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உள்ள நெருக்கடிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். இந்த ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் தேதிதான் பள்ளிகளைத் திறந்தோம். அதற்குப் பின்னாலே ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை உருவானதன் காரணமாக ஏறத்தாழ 10 நாட்களுக்கு பள்ளிகளுக்கு விடுப்பு விட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு



1984 மார்ச் 26]

பஞ்சாயத்துத் தேர்தல் ஏப்ரல் 15 ஆம் தேதி என்று சொல்லப்பட்டது. அது இப்போது தள்ளிப் போய்விட்டது. அதன் காரணமாக ஏற்பட இருந்த ஆபத்து இப்போது தள்ளிப் போய்விட்டது. எனவே மேற்சொன்ன காரணங் களால், ஏறத்தாழ 20 வேலை நாட்கள் குறைகிற நிலைமை பள்ளிகளுக்கு ஏற்பட்டு விட்டது. இது இயற்கையாகவே ஏற்பட்டுவிட்டது. எனவே இதன் காரணமாக இந்த நாட்களுக்கு மட்டுமாவது தவிர்ப்பு வழங்கிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

### பள்ளிகளுக்குக் கட்டிட வசதி செய்து தருதல்.

*113 **வினா—திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், உதகமண்டலம், பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில், போதிய கட்டிட வசதிகள் இல்லாத பள்ளிகள் எத்தனை?

(இ) இப்பள்ளிகட்கு கட்டிட வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) போதிய கட்டட வசதிகள் இல்லாத பள்ளிகள் விவரம் வருமாறு :—

| மாவட்டம். | அரசினர் உயர்நிலைப் பள்ளிகள். | அரசினர் மேல்நிலைப் பள்ளிகள். |
|---|---|---|
| சேலம் | 18 | 12 |
| தருமபுரி | 20 | 10 |
| கோயம்புத்தூர் | 21 | 11 |
| உதகமண்டலம் | 27 | 17 |
| பெரியார் | 15 | 5 |

(இ) கட்டிட வசதிக்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கி இதுபோன்ற பள்ளிகளின் தேவைகள் முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் என்னுடைய சுற்றுப் பயணத்தின்போது இன்னும் அதிகமான பள்ளிகள் இத்தகைய நிலைமையில் இருப்பதைப் பார்த்தேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வித்

[illegible] [1984 மார்ச் 26

துறை அதிகாரிகள் தருகிற புள்ளி விவரங்களைத்தான் இங்கே கொடுக்க முடியும் என்பதை அறிவேன். இப்படி ஒவ்வொரு பகுதியிலும், மாணவர்கள் உட்காருவதற்கும் இடமில்லாமல், மரத்தடியிலும் இடமில்லாமல் இருக்கிற நிலைமை இருந்தாலும், உதகமண்டலத்தைப் பொறுத்தவரையில், அங்கே கடுமையான குளிர் மழை போன்ற காலங்களில் சரியான கட்டிட வசதிகள் இல்லாமல் மாணவர்கள் கஷ்டப்படுவது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. நீலகிரி மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் கல்வியில் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளுக்கு என்று தனியான முன்னுரிமை கொடுத்து உதவிட அரசு முன்வருமா? காரணம் அங்கேதான் அரசுப் பள்ளிகள் அதிகமான அளவுக்கு இருக்கின்றன. எனவே அந்தப் பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து பள்ளிகளுக்குக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இதற்காக அரசு அதிகப்படியான பணத்தை ஒதுக்கி முயற்சிகளை மேற்கொள்ளும்போது, பரந்த அளவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம். தற்போது இங்கே கேட்கப்பட்ட வினா 5 மாவட்டங்களைப் பொறுத்தது என்றாலும், பிற மாவட்டங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதை அரசு அறியும். எனவே தமிழ் நாடு முழுவதுமாக ஒதுக்கப்படுகிற பணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில பள்ளிகளையாவது தேர்ந்தெடுத்து நாம் கட்டிடங்களைக் கட்ட வேண்டியிருப்பதால், ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தனியாக முன்னுரிமை கொடுத்து அதிகமான கட்டிடங்களைக் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், நீலகிரி மாவட்டம் சிறிய மாவட்டமாக இருந்தாலும், அதிகமான பள்ளிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அங்கே புதிய கட்டிடங்கள் கட்டப்படுகிற வரை வாடகைக் கட்டிடங்களிலாவது அத்தகைய பள்ளிகளை வைத்து நடத்துகிற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா? காரணம் அங்கே உள்ள மாணவர்கள் பெரு மழை காரணமாகவும், நில நடுக்கம் காரணமாகவும், உடல் நடுக்கம் காரணமாகவும் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். எனவே அந்தப் பகுதிகளில் அதிகமான கட்டிட வசதிகளை உருவாக்குவதற்கு முன்பு வாடகைக் கட்டிடங்களில் பள்ளிகளை நடத்துவது குறித்து அரசு பரிசீலிக்குமா?



1984 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பள்ளிகள் நடத்துகிற அளவுக்கு வசதியுள்ள கட்டிடங்கள் அங்கெல்லாம் அவ்வளவு எளிதில் கிடைக்காது. இருந்தாலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு முடிந்த அளவுக்கு நாம் உதவி செய்வோம்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக நகரப் பகுதிகளில் உள்ளவர்களே அதிகமான செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே நகரப் பகுதிகளில் இவ்வளவு நெருக்கடிகள் ஏற்படுவதில்லை. கிராமப்புறங்களில் அதிகமான அளவுக்கு அரசுப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் திறக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் நிறைய பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அங்கே பயிலுகிற மாணவர்களுக்குக் கிடைக்கிற கல்வி போதிய வசதியுடன் கூடியதாக இல்லை. போதிய கட்டிடங்கள் இல்லை. ஆசிரியர்கள் இல்லை. போதிய அளவுக்கு பரிசோதனைக் கூடங்கள் இல்லை. எனவே கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு என்று தனியானதொரு திட்டத்தை அரசு மேற்கொள்ள முன்வருமா? ஆசிரியர்களைப் போதிய அளவில் நியமிப்பதானாலும் சரி, கட்டிடங்களைக் கட்டுவதானாலும் சரி, விஞ்ஞான, பரிசோதனைக் கருவிகளை வழங்குவதானாலும் சரி, அடிப்படையில் கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் தனியானதொரு திட்டத்தை உருவாக்கி அதற்கு முன்னுரிமை கொடுத்து அரசு செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு உயர்நிலைப் பள்ளிகள் என்றால், கிராமங்களில்தான் இருக்கும். சென்னை போன்ற சில பகுதிகளில் ஒன்றிரண்டு இருந்தாலும், தமிழ் நாட்டில் அரசுப் பள்ளிகள் கிராமத்திலேதான் இருக்கின்றன. கிராமத்திலேதான் செலவு செய்து கொண்டிருக்கிறோம். நகரத்திலே அரசு உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க எந்தத் திட்டத்தையும் நாம் வைத்துக்கொண்டிருக்கவில்லை. சென்னையிலே துவக்க வேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாகத்தான், சில இடங்களில் துவக்கியிருக்கிறோம்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், கிராமங்களுக்கு மாறுதல் செய்தால் அல்லது நியமனம் செய்தால், கூடுமானவரையில் போகாமல் நகரத்தை நோக்கி வருகிறார்கள் என்ற பிரச்சினை சாதாரண பிரச்சினையல்ல. அது மிகக் கடுமையான பிரச்சினையாக கல்வித் துறையில் இருக்கிறது என்பதை

மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த வகையில் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தந்தால்தான், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். நாம் என்னதான் சொன்னாலும், அவர்கள் தங்களுக்குள்ள விடுப்பை எடுத்துக்கொண்டு போகாமல் இருக்கிறார்கள். இதனால் பல உயர் நிலைப் பள்ளிகளில், மேல் நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் கல்வி பாதிக்கப் படும் நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், எந்த ஊருக்குப் போட்டாலும் போக முடியும் என்ற நிலைக்கு அவர்கள் வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: கல்வியமைச்சர் அவர்கள் ஒரு உயர்ந்த கருத்தை இங்கே சொன்னார்கள். நான் அதை ஆதரிக்கிறேன். ஆசிரியர்களை மாறுதல் செய்யும்போது, அவர்கள் விடுப்பு எடுக்கிறார்கள் என்பது உண்மை தான். சில பேர் விடுப்பு போட்டால்தான் பக்கத்திலே மாற்றுகிறார்கள், சில பேர் விடுப்பு போட்டாலும் மாற்றுவதில்லை. அதற்குச் சரியானதொரு கொள்கை வகுக்கப்படவில்லை. சரியானதொரு கொள்கை இதற்கு வகுக்கப் படாததாலே செல்வாக்கு உடையவர்கள், செல்வாக்கு அற்றவர்கள் என்ற நிலையில் யாரும் செல்வதற்கு மறுத்து, மற்றவர்களைப்போல் மீண்டும் மாறுதல் வாங்கிக்கொள்ளலாம் என்று விடுப்பு போட்டு வருகிறார்கள். ஆகவே இதற்கு கல்வித் துறையிலே ஒரு சரியான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். மாறுதல் செய்யப்பட்டால், அவர்கள் அங்கே போய் பணியாற்ற வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை வைக்காததால் அரசு ஆணை வெளியிடுவதிலும், இயக்குநர் அலுவலகத்திலும் வேண்டியவர்கள், வேண்டா தவர்கள், இன்னார், இனியர் என்ற முறையில் சில சலுகைகள் கொடுக்கப் படுகின்றன. தவறுகள் நிகழ்கின்றன. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கென்று திட்டவட்டமாக ஒரு நடைமுறையை வைத்து மாறுதல்களைச் செய்ய இந்த ஆட்சி, கல்வித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** செல்வாக்கைப் பார்த்து மாறுதல் செய்யப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். செல்வாக்கு அல்ல. அவர்கள் தங்களுடைய குறைகளை, கஷ்டங்களைச் சொல்லுவதால், சில பேர் மாற்றப்படலாம். ஆனால் பொதுவான முறையில் சென்னைக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். இல்லையென்றால் சென்னைக்கு வருவதற்கு முயற்சி மேற்கொள்கிறார்கள். இதனாலே பல சிரமங்கள் ஏற்படுகின்றன. கணவன்-மனைவி என்ற காரணத்தை வைத்துக்கொண்டு



மாறுதல் கேட்கிறார்கள். அவர்கள் இருவரில் ஒருவர் சென்னையிலே இருக் கிறார். நாம் சொல்லியுள்ள கொள்கை அவர்கள் இரண்டு பேரையும் ஓரிடத் திலே வைப்பதுதான். குறிப்பிட்ட இடத்திலே இரண்டு பேரையும் வைப்பது அல்ல. அப்படியெல்லாம் செய்கின்றபோது, ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களை மாற்றுகிறபோது, கிராமங்களுக்குப் போவதற்கு அவர்களாகவே கொஞ்சம் ஆர்வம் காட்டினாலொழிய, அவர்களே போக வேண்டுமென்ற உணர்வு பெற்றாலொழிய, இதற்கு முடிவில்லை. அரசாங்க நிர்ப்பந்தத்தின் பேரில் மாற்றும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல பிரச்சினைகள் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, கட்டடத்தைப் பற்றியது, ஆசிரியர்கள் மாற்றம் பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: கட்டடம் பற்றிய கேள்வியாக இருந்தாலும்கூட ஆசிரியர்கள் மாற்றம் பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டால், நான் ஒரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பள்ளி ஆசிரியர்களை மாற்றும்போது, அவர்கள் கிராமப் பகுதி களுக்குப் போவதற்கு மறுக்கிறார்கள் அல்லது திரும்ப மாற்றுவதற்கு முயற் சிக்கிறார்கள். இதற்கு முன்பு அரசுப் பள்ளிகளாக இல்லாமல் டிஸ்ட்ரிக்ட் போர்ட் பள்ளிகளாக அந்தந்தப் பகுதியில் இருந்தபோது, இந்த நிலை இல்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் நகரப் பகுதிகளில் உள்ளவர்கள்தான் அதிகம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி இல்லாமல், பப்ளிக் சர்வீஸ் கமிஷனில், கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து தேர்ந்தெடுக்கும் வழி முறையை இந்த அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கிரா மத்திலேயே இருக்க )விரும்புகிறார்கள் )என்ற நம்பிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். அதுவே சரிதானா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கிராமத்தில் இருக்கிறவர்கள் பெரும்பாலும் நகரத்திற்கு வர விரும்புகிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஆசிரியர்கள் கிராமப்புறத்திற்குச் செல்வதற்கு விரும்பவில்லை என்ற கருத்தை நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் சொல்லிவருகிறார்கள். நகரப்புறத்திலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய வீட்டு வாடகைப்படி போன்ற சலுகைகள் கிராமப்புற ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத காரணத்தாலேதான், அவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்லுவதற்கு அஞ்சுகிறார்கள் என்பதை அரசு அறியுமா? நகர்ப்புறத்தில் வழங்கப்படுகிற சலுகைகளை கிராமப்புறங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதெல்லாம் பேசப்பட்ட பிரச்சினைகள்தான். கிராமப்புறத்திலே இருக்கின்றவர்களுக்கு தரப்படுகிற சலுகைகளைவிட அதிகமான சலுகைகளை நகரத்தில் இருப்பவர்களுக்குத் தர வேண்டும். அப்போது தான் இங்கு இருக்கிற விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அந்த ஆசிரியர்கள் எல்லாம், அரசுப் பணியாளர்கள் எல்லாம் வாழ்க்கை நடத்த முடியுமென்று கருதித்தான் இந்த வித்தியாசத்தை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். இப்போது ஏன் கிராமப்புறத்திற்குப் போகவில்லை என்று சொல்கிறபோது, அதே காரணத்தைச் சொன்னால், இப்போது அதையும் ஏற்றுக்கொள்கிறபோது, அடுத்து அதைக் காட்டி மறுபடியும் நகர்ப்புறத்தில் இருக்கிறவர்களுக்கு அதிகப்படியாகத் தர வேண்டுமென்று கேட்கின்ற முறை வரும். ஆகவே இது மாற்றி மாற்றிக் கேட்கின்ற ஒரு நிலையைத் தான் உருவாக்குமே தவிர, வேறு அல்ல. ஆனால், நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இதில் பிரச்சினை பணமல்ல. கிராமத்து மக்களுக்குப் பாடுபட வேண்டுமென்ற உணர்வை நாம் வளர்த்தாக வேண்டும். அந்த உணர்வு இல்லாத வரைக்கும் நாம் இதிலே வெற்றி பெறுவதென்பது கடினம். நாம் மாற்றுகிற நேரத்தில் அல்லது நியமனம் செய்கிற நேரத்தில் அவர்கள் போக விரும்புவது இல்லை என்றால், அதற்குக் காரணம் அங்கே போய் பணியாற்றிச் சேவை செய்ய வேண்டுமென்கிற அந்த ஆர்வத்தை இயல்பாகவே அவர்களுக்கு நாம் ஏற்படுத்தவில்லை. ஏற்படுத்துகின்ற முயற்சியிலும் நாம் ஈடுபடவில்லை. ஆகவேதான் இந்த மன்றத்திலே நான் கேட்கிறபோது, தனிப்பட்ட ஆசிரியர்களைக் குறை சொல்வதைவிட, அந்த உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அதிலேதான் நமக்கு உண்மையான வெற்றி கிடைக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு பதில் அளித்ததற்கிணங்க ஒரே ஒரு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். செல்வாக்கு, செல்வாக்கு இல்லையென்ற அடிப்



படையில் செய்வதில்லை. ஆனால் ஆசிரியர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கச் செய்யப்படும் மாறுதல்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நாமக்கல்லிலே கே. பி. இராமசாமி என்ற போஸ்ட் கிராஜுவேட் தமிழாசிரியர் பணியாற்றினார். அவருடைய மனைவியும் அங்கே ஒரு இடம் காலியாக இருந்ததால், ஆத்தூரிலிருந்து மாற்றப்பட்டார். அவரும் போஸ்ட் கிராஜுவேட் தமிழாசிரியை. ஆனால் திடீரென்று ஒரு 15 நாட்களுக்குள், மாற்றிவிடுவோம் என்று ஒரு பகுதியினர் சென்னைக்கு வந்தார்கள். இரண்டு பேரையும் தூக்கி வேறு எங்கேயோ ஆத்தூர் பக்கத்திலே எறிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சில காரியங்கள் நடக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பது தர்மம்தானா? அப்படிப்பட்டவைகள் அரசின் கவனத்திற்கு வரும்போது, அந்தக் குறைகளை நீக்கம் செய்ய வேண்டாமா? அதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

### பள்ளிகளில் முறை மாற்றுமுறை.

*114 வினா—திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், உதகமண்டலம், பெரியார் மாவட்டங்களில் போதிய வகுப்பறைகள் இல்லாததால், ஷிப்டு முறையில் (Shift System ) நடக்கும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள், அரசினர் மற்றும் தனியார் பள்ளிகள் மாவட்ட வாரியாக எவ்வளவு?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சேலம், தருமபுரி, கோவை, உதகமண்டலம் மாவட்டங்களிலே முறையே 1, 3, 5, 6 அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும், கோவை மாவட்டத்தில் நான்கு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் போதிய வகுப்பறைகள் இல்லாததால், ஷிப்டு முறையில் வகுப்புகள் நடக்கின்றன. பெரியார் மாவட்டத்தில் ஷிப்டு முறையில் நடத்தும் பள்ளிகள் ஒன்றுமில்லை.

(இ) மேற்படி பள்ளிகளில் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் கட்டிடம் கட்டுவதற்கும் சில கட்டிடங்கள் புதுப்பித்தும் வகுப்பு அறைகளை சீர்படுத்தியும் பள்ளிக்குக் கூடுதல் இடவசதியை ஏற்படுத்தும்படியும், 'ஷிப்டு' முறையில் பள்ளியை நடத்துவதை கூடிய விரைவில் கைவிடும்படியும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஷிப்டு முறைகளைப் பொறுத்தவரையில், நகரப் பள்ளிகளிலே வேண்டுமானால் அந்தப் பிள்ளைகளினுடைய தன்மைகள், சூழ்நிலைகள் சரியாக இருக்கலாம். ஆனால் கிராமங்களைப் பொறுத்தவரையில், ஷிப்டு முறையினால் குழந்தைகளுடைய கல்வி பாதிக்கப்படுகின்றது என்பது—நான் அங்கு சென்ற போது—பெற்றோர்களுடைய குறைபாடும், மாணவர்களுடைய எண்ணமும் கூட. அது மட்டுமல்ல, கிராமப் பகுதிகளிலே அரசு உடனடியாகக் கொஞ்சம் கவனம் செலுத்தி, அந்த ஷிப்டு முறைகளை உடனடியாக மாற்றி அமைத்தால்தான், அவர்களுக்குப் போதுமான ஐந்து மணி நேரம் கல்வி கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆதலால் அதை முன்னின்று பெற்றோர்–ஆசிரியர்கள், பெற்றோர்கள் சங்கம் செய்வதோடு அரசும் கவனம் செலுத்தி அந்தச் சில பள்ளிகளிலும் மாற்றி அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.



**வேலையில்லா பட்டதாரிகட்கு வழங்கப்படும் உதவித் தொகை.**

*115 வினா—திரு. ஏ. ஜே. தாஸ் & டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, 30—1—1982 அன்றுள்ளவாறு (unemployed Graduate Relief Allowance) சென்னை நகரில் எத்தனை பேருக்கு வழங்கப்படுகிறது?

(இ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(உ) அதில், எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது? எத்தனை பேருடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை?

(எ) விண்ணப்பங்கள் ஏற்கப்படாமைக்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) 599.

(இ) 1359.

| | | |
|---|---|---|
| (உ) | வழங்கப்பட்டது | 599 |
| | நிராகரிக்கப்பட்டது | 87 |

(எ) கீழ்க்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன:

1. விண்ணப்பதாரரது குடும்ப மொத்த வருமானம் மாதமொன்றுக்கு ரூ. 2,000 அல்லது ஆண்டொன்றுக்கு ரூ. 24,000 ஆக இருக்க வேண்டும். அதற்கு மேற்படலாகாது.

2. விண்ணப்பதாரர் தம்முடைய பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வியை முழுமையாகத் தமிழ்நாட்டிலேயே கற்றிருக்க வேண்டும். அல்லது அவருடைய பெற்றோர்களில் ஒருவர் அல்லது அவரது காப்பாளர் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழகத்தில் வசித்து வந்திருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர் ஊதியம் பெறுகின்ற பணியாளர் என்ற முறையில் மாதமொன்றுக்கு ரூ. 50-க்கு மேல் வருமானம் பெறுபவராக இருக்கக் கூடாது.

4. விண்ணப்பதாரர் தனியாரிடமிருந்தோ, அரசிடமிருந்தோ வேறு எந்த வகையிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 900-க்கு மேல் நிதி உதவியையோ வேறு உதவியையோ பெறுபவராக இருக்கக்கூடாது.

[1984 மார்ச் 26

5. விண்ணப்பதாரர் எந்தக் கல்வி நிறுவனத்திலும் பயிலும் மாணவராக் இருக்கக்கூடாது.

(முற்பகல் 10-30)

திரு. ஏ. ஜே. தாஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பதிலளித்தபோது, குறிப்பிட்ட அந்தத் தகுதிகளின் அடிப்படையில் எத்தனையோ பேர்கள் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் என வழங்கப்பட்டும், அவர்களுக்கெல்லாம் அந்த உதவித் தொகை கொடுத்து முடியவில்லை. காரணம் இந்தத் தகுதிகளெல்லாம் படைத்தவர்களாக இருப்பவர்களுக்குக் கூட அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லையா, அதிகாரிகள் அக்கறை காட்டவில்லையா அல்லது அந்த அதிகாரிகள் இந்தத் திட்டத்தை அமுல் நடத்தத் தயங்குகின்றார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு மட்டுமின்றி, அக்கறையோடு அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே அதிகாரிகள் கொடுத்திருக்கக்கூடிய அந்த ரூல்ஸ்-ன்படி விண்ணப்பித்திருக்கின்றவர்களுக்கு, அவர்களுக்கு இருக்கக்கூடிய தகுதிகள் அடிப்படையிலே தேர்வு செய்து அந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. 1983 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 29,993 பேர்கள் இதற்காக 'அப்ளை' செய்திருக்கின்றார்கள். அதில் அனைத்து விதமான தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டிருப்பவர்கள் 20,648 பேர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு ஊக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இப்படி உதவித் தொகை கொடுப்பது உதவியாக இருக்கும் வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: தலைவர் அவர்களே, இந்தத் தகுதிகள் உள்ளவர்கள் இன்னும் பல ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் இந்தத் தொகை வழங்கப்படவில்லையே. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தகுதிகளையெல்லாம் பெற்றிருந்தும்கூட, சிலருக்கு அந்த உதவி வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களுக்கு இருக்கின்ற தகுதிகளின் அடிப்படையிலே தேர்வு



1984 மார்ச் 26]

செய்திருக்கின்றார்கள். எத்தனை பேர்கள் இந்த உதவித் தொகையைப் பெற மனு செய்திருக்கின்றார்கள் என்ற விவரத்தையும், இதில் எத்தனை பேரைத் தேர்வு செய்திருக்கின்றார்கள் என்பது போன்ற விவரங்களையும் நான் தர இருக்கிறேன். 'அப்ளை செய்தவர்கள் 29,993 பேர்கள். தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்கள் 20,648 பேர்கள். ரிஜெக்ட் செய்யப்பட்ட மனுக்கள் 4,233. நான் கொடுத்திருக்கக்கூடிய இந்த விவரங்கள் 31—12—1983 தேதி வரையில்தான். அந்தத் தேதி வரைக்கான விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அந்த வகையில் ஏற்கெனவே பல்வேறு கட்டங்களில் அரசுத் துறை அதிகாரிகள், 5,112 பேர்களுக்கு அவர்களுடைய தகுதிகளை நிறைவு செய்து கொண்டிருக்கக்கூடிய வகையிலே தற்போது ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் எத்தனை பேர்கள் 'அப்ளை' செய்திருக்கின்றார்களோ அவர்களில் தகுதி பெற்றவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு உதவித் தொகையினைக் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் இந்த உதவித் தொகை பெற்றிருக்கின்றார்கள்? அந்தத் தொகையை அதிகப்படுத்துகின்ற உத்தேசம் அரசுக்குண்டா? இந்த உதவி பெற்றவர்கள் யாரேனும் வேலை பெற்று இனி வேண்டாம் என்று தெரிவித்த கணக்கு உண்டா? அதுபற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர்கள் வேலையைப் பெற்ற பின்பு வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும், அங்கே இருக்கக்கூடிய வட்ட ஆட்சியர்க்கும் அது குறித்து அறிவிக்க வேண்டும் என்று இருக்கின்றது. அவ்வாறு அறிவிப்பார்களானால், அதன் மீது அவர்களுக்குக் கொடுக்கின்ற இந்தச் சலுகை நிறுத்தப்படும். 1982-83 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், வேலையற்றோர் நிவாரணத்திற்காக ரூ. 81.58 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. 31—12—1983 வரையிலே இருக்கக்கூடிய கணக்கை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். 1982-83 வரை, அரசு ரூ. 81.58 லட்சம் ரூபாய்களை இந்தத் திட்டத்திற்குச் செலவிட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித்தொகை வழங்குவதற்கு அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, இந்த ஒதுக்கீட்டுக்குத் தக்கபடி நாம் உதவி கொடுக்கிறோமா அல்லது வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவி செய்வதற்காக ஒரு குறைந்தபட்ச நிர்ணயம் செய்து வைத்துக்கொண்டு இந்த அடிப்படையிலே பணம் ஒதுக்க முயற்சிக்கின்றோமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, மிக அதிகமான பேர்கள் அதைப் பெற முடியாமல் இருக்கின்றார்கள். குறைந்த அளவுக்கு அந்த ஆட்கள் சலுகையைப் பெற முடியும் என்ற அளவிலேதான் இருக்கின்றது. மாநிலத்திலே 14 வருடங்கள் வாழ்ந்திருந்தால்கூட, இந்தச் சலுகையைப் பெற முடியாது. 15 வருடங்கள் வாழ்ந்திருந்தால்தான் பெற முடியும் என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. தொகையைத் தீர்மானித்து விட்டு, அந்தத் தொகைக்குள்ளாக அந்த உதவிகள் வரத்தக்க அளவுக்கு நிபந்தனைகள் போடுகிறோமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையில், கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சலுகைகள் இந்த விதிமுறைகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. உதாரணத்திற்கு விண்ணப்பதாரர் குறித்து மாத வருமானத்தை நான் எடுத்துச் சொன்னேன். அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் 24,000 ரூபாயாக இருக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறோம். இந்த அளவிற்கு வேறு எந்த மாநிலத்திலும் ஆண்டு வருமானம் நிர்ணயிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை ஆரம்பித்த 1980 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 150 லட்சத்தை ஒதுக்கீடு செய்து நிர்ணயித்திருந்தோம். ஆனால் சலுகைகளைப் பெற வேண்டுமென்று வருகின்ற விண்ணப்பங்கள் குறைவாக இருப்பதால், ஆண்டு ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், ஏறத்தாழ ரூ. 88 இலட்சமாக தற்போது இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த வேலையற்ற, வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கான உதவித் தொகை பெறுகின்ற பட்டதாரிகள், அதற்காக விண்ணப்பித்திருக்கின்றவர்கள் 30,000 பேர் என்கிற அளவிலே சமுதாயத்தினுடைய மிகக் குறைந்த வருவாய் உள்ள பகுதிகளிலிருந்து, வேறு வழியில்லாமல் இந்த உதவித் தொகை கோருகின்ற நிலையிலே இருப்பதால்தான், அந்த உதவித் தொகையைக் கோருகிறார்கள் என்பது தெரிய வருகிறது. அந்த அடிப்படையிலே உதவித் தொகை தருகின்ற இந்த அரசு, தொடர்ந்து எகனாமிகல்லி பேக்வார்ட் ஆன அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக தனி கவனம் ஏதும் செலுத்தியிருக்கிறதா? அவர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டம் வகுக்கவோ, வேறு வேலை வாய்ப்புகளில் ஒரு முன்னுரிமை அளிக்கவோ, அல்லது அதிகப்படியான அக்கறை செலுத்துகின்ற அளவிற்கோ அரசு 'ஃபாலோ அப் புரோகிராம்' ஏதாவது வைத்திருக்கிறதா? தொடர்ந்து நடவடிக்கை ஏதும் எடுக்கிறதா? இந்தத் திட்டம் ஒரு முன்மாதிரி திட்டம். இந்த முன்மாதிரித் திட்டத்தின் அடிப்படையிலே, அவர்களுக்கு உதவக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கும் காரணத்தாலே, 'ஃபாலோ அப் ஸ்கீம்' ஏதும் அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, 'ஃபாலோ அப் ஸ்கீம்ஸ்' ஏதும் தற்போது வைத்துக்கொள்ளவில்லை. 'லைவ் ரிஜிஸ்டர்'-ல் குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு மேலாகப் பதிவு செய்து காத்திருக்கக் கூடியவர்களுக்கு இதிலே நாம் முன்னுரிமை வைத்து, அந்தத் தகுதியை நாம் நிர்ணயித்திருக்கிறோம். சுய வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், இவர்களைத் தவிர ஏற்கெனவே வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, காத்திருக்கக்கூடியவர்கள் சுய வேலை வாய்ப்புக்கு விருப்பம் தெரிவிப்பார்களேயானால், அவர்களுக்கு உதவுகின்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக சுய வேலை வாய்ப்பிலே ஈடுபடுவதற்கு இவர்கள் விருப்பம் தெரிவிப்பார்களேயானால், அவர்களுக்கு அரசு முன்னுரிமை அளிப்பதற்கு முன்வரும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** தலைவர் அவர்களே, உதவித் தொகை பெறுகின்ற வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் எவ்வளவு காலம் அந்த உதவித் தொகை பெற முடியும்? அதற்கு ஏதாவது கால வரம்பு, வயது வரம்பு அல்லது வேறேதாவது வரம்பு உண்டா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, உதவித் தொகையைப் பெறுகின்றவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பெற முடியும் என்று நாம் விதிமுறை வைத்திருக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிற புள்ளி விவரத்திலே முதுகலைப் பட்டதாரிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இந்த மூன்றாண்டுகளுக்குள்ளேயே அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து பணிவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டம் ஏதாவது அமைச்சர் வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 26

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, உதவி பெறுகின்றவர்கள் ஏறத்தாழ 7 கேட்டகிரிகள் நாம் வைத்திருக்கிறோம். அதிலே கிராஜுவேட்சும், போஸ்ட் கிராஜுவேட்சும் அடங்குகிறார்கள். இவர்களைத் தவிர 'குவாலிபைடு செகண்டரி கிரேடு டீச்சர்ஸ்' 'ஹையர்கிரேடு டீச்சர்ஸ், 'குவாலிபைடு பிசினஸ் எஜுகேஷன் டீச்சர்ஸ், மற்றும் தமிழ் படித்திருக்கக் கூடிய தமிழ்ப் பண்டிதர்கள்', 'குவாலிபைடு கிராஃப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ்', 'டிப்ளமா ஹோல்டர்ஸ் இன் இன்ஜினியரிங்'—என்று ஏழு விதமான கேட்டிகரியை வைத்திருக்கிறோம். பணிவாய்ப்பு அளிப்பதைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய திட்டம் எதுவும் வைத்திருக்கவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, மணமான பெண்களுக்கும் இந்த உதவி தரப்படுகிறது. அவர்களுக்கு மணமானவுடன் ஒரு கணவருடைய பாதுகாப்பு கிடைத்து விடுகிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவியை வேறு மணமாகாத பெண்களுக்குத் தருகிற வகையில் மாற்ற முடியுமா? அல்லது அல்லலுறுகிற ஆண்களுக்கு அதிகம் தருகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரங்கள் இதுவரை அரசுக்கு வரவில்லை. வருமேயானால் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

**நிலச் சொந்தக்காரர்களுக்கு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான மதிப்புத் தொகை வழங்கப்படாமை.**

*116 **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகராட்சியில் அரிசனங்களுக்கு இலவச நிலப்பட்டா வழங்கும் பொருட்டு, கடந்த 1981-ம் வருடம், தூத்துக்குடி நகராட்சியில் கையகப்படுத்திய நிலங்களுக்குரிய நிலச் சொந்தக்காரர்களுக்கு, 12—3—1983-ம் நாள் வரையிலும், அந்நிலத்திற்குரிய மதிப்புத் தொகை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அத்தொகையினை விரைவில் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?



1984 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க மீளவிட்டான் கிராமத்தில் 14.56 ஏக்கர் புஞ்சை நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதற்கான மொத்த நட்ட ஈட்டுத் தொகையான ரூ. 2,51,160-ஐ நிலச் சொந்தக்காரர்களான ஐந்து பேருக்கு முதல் தவணையாக 1981-ம் வருடம் மார்ச் மாதம் ரூ. 1,25,580-ம் பாக்கி ரூ. 1,25,580-ம் அதற்கான வட்டித் தொகை ரூ. 7,534.75-ம் ஆக மொத்தம் ரூ. 1,33,114-75-ஐ இரண்டாவது தவணையாக, 1982-ம் வருடம் மே மாதத்திலும் கொடுக்கப்பட்டு விட்டது.

(இ) மற்றும் (உ): மேற்கொண்டு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை எதுவும் பாக்கி இல்லை.

(முற்பகல் 10-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர்கள் 5 பேருக்கு இப்போது பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தூத்துக்குடி தனித் தாசில்தாரின் 15/77/76 ஆணைப்படி 6 பேர்களிடம் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த 6 பேர்களிலே ஒருவருக்குக் கொடுக்கப்படவில்லை. மறைந்த ஜோசப் பாண்டியன் மனைவி திருமதி செல்லமணி என்பவர் மனுச் செய்தும், அவருக்கு இதுவரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை, தரப்பட்டுள்ள புள்ளிவிவரப்படி ஆறு பேர்களிடம் நிலம் ஏற்கப்பட்டு, 5 பேருக்கு மட்டும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை. ஆனால் இங்கே அமைச்சரவர்கள் எல்லோருக்கும் பட்டுவாடா செய்ததாகச் சொல்லுகிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. எனவே மீண்டும் விவரங்களைப் பார்த்துச் சொல்லும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவரவர்களே, என்னிடம் இருக்கும் குறிப்புகளில் நிலச் சொந்தக்காரர்கள் 5 பேர்கள் என்றுதான் இருக்கிறது. அவர்களுக்கு, குறிப்பிட்டுள்ள தொகையை அரசின் மூலமாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் 6 பேர்கள் நிலச் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் குறிப்பிலே பார்க்கும்போது, 5 பேர்கள்தான் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற விவரம் இருக்கிறது. எனவே 6 பேர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்தால், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1984 மார்ச் 26

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, 6 பேர்கள் என்று தனித் தாசில்தார் பிறப்பித்த உத்தரவில் இருக்கிறது. அதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது. அந்த 6 பேர்களில் 5 பேர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. மற்றொருவர் பல முறை விண்ணப்பித்தும், நேரடியாகப் போய் சொல்லியும், தனித் தாசில்தார் திரு. கருவேல் முத்து என்பவர், அவருக்குப் பணம் தரவில்லை. இவர் ஒரு ரிடையர்ட் ஆசிரியர். இவரை மிரட்டி அனுப்பியிருக்கிறார்கள். அவருக்கு இன்னும் பணம் தரவில்லை. அங்கே 6 பேர்களிடம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இவருக்கு 25,000 ரூபாய்—நிலத்திலுள்ள பனை மரம், 9 சென்ட் நிலம்—வர வேண்டும். இன்னும் அவர்கள் கோரிக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு விண்ணப்பிக்கிறார்கள். இதுவரை தரவில்லை. எனவே இப்படி தவறான தகவல்களைத் தரும் அரசு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். இதுவரை பணப் பட்டுவாடா செய்யாத அந்த ஏழைக்கு அந்தப் பணம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** நிலத்திற்குச் சொந்தக்காரராக அவர் இருக்கும்போது, அவருக்குத் தர முடியாது என்று சொல்லுவது எந்த விதத்திலும் நியாயமல்ல. அதிகாரிகள் தவறான தகவல்கள் தந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், அந்தப் பெண்மணி நிலச் சொந்தக்காரராக இருந்தால், அதை ஆராய்ந்து பார்த்து, நடவடிக்கை எடுத்து, அவருக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுக்க, அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்த ஆண்டு நிலவரப்படி, ஈட்டுத் தொகை தரப்படவில்லை. மற்றவர்களுக்குக் கூட அப்படித் தரப்படவில்லை. இப்போதுள்ள நிலவரப்படி ஈட்டுத் தொகை தரப்படுகிறது. அது மிகவும் நஷ்டத்தை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. எனவே ஆர்ஜிதம் செய்த ஆண்டு என்ன மார்க்கெட் ரேட்டோ, அந்த அடிப்படையில் ஈட்டுத் தொகையை அவர்களுக்கு அரசு தருமா? அங்கேயுள்ளவர்கள் தந்துள்ள கோரிக்கையின் அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேன். அது பரிசீலிக்கப்படுமா? அதிகத் தொகையாக இருந்தால், அது அவர்களுக்குக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** அதை அரசு பரிசீலிக்கும்.



1984 மார்ச் 26]

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, அரசு நிலத்தைக் கையகப்படுத்துகிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் 6 பேர்கள் என்று தாசில்தார் அறிவித்ததாக ஆணை எண்ணோடு மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஐந்து பேருக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒருவருக்குக் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். அவர் ஈட்டுத் தொகையைக் கூட்டிக் கேட்டிருந்தால், அந்தப் பணத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அவருக்குக் கோர்ட் மூலம் தாக்கீது அனுப்பி, அவர் கோரிக்கையைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இதில் ஏதாவது தவறு செய்திருந்தால், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, உரிமை உடையவர்களுக்குப் பணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில், குறிப்பிட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், அவை ஐந்து பேருக்குச் சொந்தம் என்று இருக்கிறது. ஆனால் உறுப்பினர் பேசுகிறபோது, தனித் தாசில்தார் கொடுத்திருக்கிற தகவலின் அடிப்படையில் அது ஆறு பேருக்குச் சொந்தமானது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஆறு பேருக்குச் சொந்தமானதை ஐந்து பேருக்கு மட்டும் கொடுத்திருந்தால், அது நியாயமில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆராய்ந்து பார்த்து தவறான தகவல் கொடுத்திருந்தால், அப்படித் தவறான தகவல்கள் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்க வேண்டிய அந்த ஆறாவது நபருக்கு நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. கவன ஈர்ப்பு

### (1) அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக பொருளாதார நிலை பாதித்துள்ளது குறித்து.

**திரு. பா. ரா. ராமன்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"இம் மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படுகிற நிலக்கரி அதிக அளவில் பற்றாக்குறையாக இருப்பது குறித்தும், அதன்

காரணமாக இம் மாநிலத்தின் பொருளாதார நிலை பாதித்துள்ளது குறித்தும்".

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** அறிக்கையில் கூறியுள்ளபடி நமது மாநிலத்திற்கு மாதத்திற்கு 2.7 லட்சம் டன் நிலக்கரி தேவை. இவ்வளவு தேவையை மாதந் தோறும் இந்தியாவிலிருந்து நாம் பெற முடியாத நிலை இருக்கும்போது, ஏன் இதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது? இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வெளிநாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கேட்டு இந்திய அரசுக்கு நாம் கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். அதுபற்றி முடிவெடுக்க வேண்டுமென்று இருமுறை நானும் மத்திய அமைச்சரைப் பார்த்துப் பேசி வற்புறுத்தியிருக்கிறேன். ஆனால் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஒருவேளை நமக்கு அனுமதி கிடைக்காவிட்டால், நம்முடைய பொருளாதாரம் பாதிக்கப்படுகின்ற நிலையைத் தவிர்க்க நிலக்கரிக்கு மாற்றாக எரி எண்ணெயை உபயோகப்படுத்துவதற்காவது அனுமதிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இரண்டு முறையிலே நடவடிக்கை எடுத்து வருகிறோம். முதலாவது குறைந்த விலையில் எரி எண்ணெயை மத்திய அரசு தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இரண்டாவது எப்படி உணவுப் பண்டங்களை "பப்பர் ஸ்டாக்" ஆக கையிருப்பில் வைத்துக் கொள்கிறோமோ அதுபோல் நிலக்கரியையும் இறக்குமதி செய்து கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இரண்டும் மத்திய அரசின் ஆய்வில் இருக்கின்றன.

---

@ 266-267 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள சுமார் 1,000 பட்டதாரி ஆசிரியர் களுக்கு பணியில் சேர்ந்தநாள் முதல் பணிவரன்முறை செய்யப்படாததால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** விவர அறிக்கையின் முதல் பத்தியில் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு அவர்கள் பெற்று வந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெற ஆணை பிறப்பிக்க வேண்டிய தேவை யில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை அனுப்பப்பட்டுள்ள தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒரு சாராருக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை மற்றும் இதர சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னொரு சாராருக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவரன்முறை சலுகை அளிக்கப்படவில்லை. இது ஒரு முரண்பாடு. பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவரன்முறை சலுகை அளிக்கப்பட்டவர்களுக்குக் கூட அவர்கள் துறைத் தேர்வு தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனை இருந்த காரணத்தால், தகுதிகாண் பருவம் முடித்தல் என்ற அந்தத் தடை இருக்கிற காரணத்தால், அவர்கள் இரண் டாவது ஊதிய உயர்வைப் பெற முடியாத நிலையும், பணப் பயனைப் பெற முடியாத நிலையும், அதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பை அவர்கள் அனுபவிக்கும் நிலையும் இருக்கிறது. இது ஒரு பிரச்சினை. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத, தற்காலிக ஆசிரியர்கள் அதிகமான ஊதியத்தையும் அதேசமயத்தில் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் குறைவான ஊதியத்தையும் பெற்று வருகி றார்கள். இதுவும் ஒரு முரண்பாடு. இவைகளையும் அரசு கவனித்து எல்லோ

---

@ 267 268-ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 26

(முற்பகல் 10-50)

ருக்கும் ஒரேவிதமான கொள்கையாக, எந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணியில் சேர்ந்தார்களோ அந்தத் தேதியிலிருந்தே அவர்களின் பணியை முறைப்படுத்த தீவிரமான பரிசீலனையை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலிக்குமா, நல்ல முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அரசு இதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு பல்லாண்டுக் காலமாக இருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு இணையான ஆசிரியர்களுக்கும் தடையாக இருந்த துறைத் தேர்வு நிபந்தனையை நீக்கி நல்லதொரு ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் இந்த ஆணை ஏப்ரல் 1982-லிருந்துதான் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்டது 1—4—1970-லிருந்து அமுல்படுத்தப்படவேண்டுமென்பதுதான். துறைத் தேர்வு நிபந்தனையை நீக்கி அந்தச் சலுகையை அளித்தால்தான் எல்லோருக்கும் சமமான வாய்ப்பு கிடைக்கும் என்ற அளவில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தையும் இணைத்து பரிசீலனை செய்வார்களா, பரிசீலித்து நல்லதொரு முடிவை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இதுகுறித்தும் அரசு பரிசீலிக்கும்.

### 3. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் நான் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புத் தந்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே தரப்பட்டிருப்பது துணை மதிப்பீடுதான். ஆனால் இதிலே குறிப்பிட்டிருக்கிற தொகையைப் பார்க்கிறபோது, இது துணை மதிப்பீடு அல்ல என்பதைத்தான் பார்க்க முடிகிறது. இதுதான் எப்போதும் சமர்ப்



1984 மார்ச் 26] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

பிக்கப்படுகிற பொது நிதி நிலை அறிக்கையோ என்று சொல்கிற அளவுக்கு, பெரிய தொகை இதிலே கேட்கப்பட்டிருக்கிறது. இது நிதிநிலை அறிக்கையா, ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருப்பது நிதிநிலை அறிக்கையா என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு ரூ. 1,130 கோடி என்ற அளவுக்கு கேட்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது பல்வேறு சீர்திருத்த வேலைகளைச் செய்திருக்கிறார்களோ என்று கருதினேன். அதை ஆழ்ந்து பார்க்கிறபோது, நாம் எதிர்பார்த்த வகையில் எதுவும் இல்லையென்று அறிந்து ஏமாற்றம் அடைந்தேன். அதற்காக நான் வருத்தப்படுகிறேன். பொதுவாக தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டைப் பகுதியில் இந்த ஆண்டு வெள்ளப் பாதிப்பினால் விடுகளை இழந்தோர் அல்லது நிலங்களில் மணல் மேடுகள் தட்டி தூர் படிந்து போய், அதனால் பாதிப்புக்கு இலக்கான விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயிர் பாதிப்பு, இப்படி பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருந்தாலும், அவர்களுக்கு உதவிடும் வகையில் கூட்டுறவுக் கடன்களை, விவசாயக் கடன்களை ரத்து செய்வது பற்றியோ அல்லது கடன்கள் தள்ளுபடி செய்வதைப் பற்றியோ அல்லது விதைகளை வருங்காலத்தில் இலவசமாக வழங்குவதைப் பற்றியோ அல்லது புதிய கடன்களை வழங்குவது பற்றியோ ஏதாவது குறிப்பிட்டிருக்கிறதா; அதனால் அதிகச் செலவு ஏற்பட்டதா என்று பார்த்தால், அதுவும் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. அதிலே போதிய கவனத்தை அரசு செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நான்காவது ஊதியக் குழு அமைக்கப்படவிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், அரசு ஊழியர்களை, ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், நான்காவது ஊதியக் குழுவிற்கும் 3-வது ஊதியக் குழுவிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்விற்கேற்ற வகையில் அவர்களுடைய ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படாவிட்டாலும் கூட, அதற்கு ஈடாக ஒரு இடைக்கால நிவாரணம் என்ற வகையில் ரூ. 300 அளவுக்குத் தரப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டதா என்றால், அதைப்பற்றியும் குறிப்பிடவில்லை. ஆகவே அப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகளைக் கவனித்து இடைக்கால நிவாரணம் தர வேண்டும். இப்போது கர்நாடக மாநிலத்தில் செய்திருப்பதைப்போல இங்கும் தரவேண்டுமென்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களைக் கேட்டு வற்புறுத்த விரும்புகிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] /1984 மார்ச் 26

அடுத்ததாக, முன்பு நமது நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையை அளித்த போது, அந்த விவாதத்தில் நான் ஒன்றைச் சொன்னேன். அதாவது ஊக்க ஊதியம் என்று ஆசிரியர்களுக்கு கூடுதல் தகுதியை பெற்றுக்கொள்வதற்கு உரிய ஊக்க ஊதியமாக அளிக்கப்பட்டு வந்தது. அது பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. அது மாற்றப்பட்டு இந்த அரசு வந்ததற்குப் பின்பு, இப்போது உத்தரவு போட்டு lumpsum என்ற ஒட்டு மொத்தத் தொகையாக மூன்றாண்டுகளுக்கு மட்டும் வழங்கப்படும் கூடுதல் ஊக்க ஊதியம் எல்லாப் பிரிவினருக்கும் தரப்படும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது. இப்புதிய ஆணை ஆசிரியர் சமுதாயத்திற்கு மிகப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அது ஆசிரியர் சமுதாயத்திற்கே மிகப் பெரிய நட்டத்தை ஏற்படுத்து கிறது; அண்ணா தந்ததை இந்தத் தம்பி பறிக்கலாமா என்று நான் அப்போது கேட்டேன். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எழுந்து "அண்ணா தந்ததை இந்தத் தம்பி பறிக்க மாட்டான். அது எப்படியோ வந்துவிட்டது. எனவே அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டு, பழைய ஆணை நடைமுறைப்படுத்தப்பட நான் உத்தரவு பிறப்பிப்பேன் என்று உறுதி அளிக்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லி நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் கூட அதற்கான ஆணை பிறப்பிக்கப் படவில்லை என்றால், மாண்புமிகு அமைச்சர்கள் தருகிற, அதுவும் அவை களிலே தருகிற உறுதிமொழிகளுக்கேகூட இங்கே மதிப்பில்லை, அவைகள் செயல்படுத்தப்படவில்லை என்றால், இந்த அரசாங்கத்தின் மீது யாரும் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள். இப்போது இழந்து வருகிறார்கள் என்று இங்கே நான் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில் விரைவில் இப்போதாவது ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இது மிகப் பெரிய பிரச்சினையாக இன்றையதினம் ஆசிரியர்களிடையே இருந்து வருகிறது என்பதையும் இங்கே நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கேள்வி நேரத்தில் பேசும்போது, கிராமப்புறங்களுக்கு ஆசிரியர் பெருமக்கள் செல்வதில்லை என்ற குறைபாட்டை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொல்ல, நான் அப்போதே குறுக்கிட்டு, "கிராமப்புறங்களுக்குச் செல்லும் ஆசிரியப் பெருமக்களுக்கு வீட்டு வாடகைப்படி தரப்படுவதில்லை.



1984 மார்ச் 26] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அதைப்போலவே வேறு பல சலுகைகளும் தரப்படாத காரணத்தால் ஆசிரியப் பெருமக்கள் கிராமப்புறங்களுக்குச் செல்லத் தயங்குகிறார்கள். நகரப்புறங் களில் பணியாற்றினால் அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி கிடைக்கிறது, சி.சி.ஏ. கிடைக்கிறது. இப்படிப்பட்ட சலுகைகள் அங்கே இல்லை என்ற காரணத்தால்தான் அவர்கள் கிராமங்களுக்குச் செல்ல அஞ்சுகிறார்கள், தயங்குகிறார்கள்" என்று சொல்லி, அந்த நிலைமைகளை மாற்றியமைக்க இந்த அரசு முற்பட வேண்டும் என்று குறிப்பிட, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு "அதுவல்ல காரணம், ஆசிரியர்களிடத்திலே சேவை மனப்பான்மை இல்லை" என்று பதிலளித்தார்கள். சேவை மனப்பான்மை இருந்தால் மட்டுமே வயிற்றுக்குச் சோறு கிடைத்துவிடாது; சோறு இல்லாமல் சேவை செய்திடவும் முடியாது; கிராமப்புறங்களில் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல, கிராமங்களில் வீடுகளே கிடைப்ப தில்லை. கிடைத்தாலும் அதிகமான வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல. அங்கெல்லாம் விலைவாசி குறைந்திருக்கிறது என்பதைப் போன்ற கருத்தில் இங்கே பலரும் பேசுகிறார்கள். ஏதோ நகர்ப்புறங்களில் மட்டும்தான் விலைவாசி உயர்ந்திருப்பதைப் போலவும் கிராமப்புறங்களில் விலைவாசி குறைந்திருப்பதைப் போலவும் பேசுகிறார்கள். உண்மையில் நகர்ப்புறங்களைக் காட்டிலும் பொருள்கள் அதிகமான விலையில் கிராமங் களில்தான் விற்பனை செய்யப்படுகின்றன. விறகை எடுத்துக் கொண்டால் கூட, கிராமங்களில் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. நகர்ப்புறங்களி லிருந்து விறகை வரவழைத்து அங்கே கூடுதலான விலைக்கு இன்றைக்கு விற்கப்படுகிறது. மண்ணெண்ணெய் நிலையும் அப்படித்தான். எனவே கிராமங்களில் உள்ள விலைவாசி எந்த வகையிலும் நகரங்களைக் காட்டிலும் குறைவாக இல்லை. எனவே இதையெல்லாம் அரசு பரிசீலித்து கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரிய பெருமக்களுக்கும் வீட்டு வாடகைப்படியை உடனடியாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று—இந்தத் துணை மதிப்பீட்டில் அதுபற்றி குறிப்பிடப்பட வில்லை என்றாலும்—மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர் குழந்தைகளுக்கு மேல்நிலைக் கல்விக்குப் பிறகும் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று அதற்காக நாங்கள் வாதிட்டு அரசும் அதை ஏற்றுக்கொண்டு ஒரு ஆணையை வெளியிட்டது. அப்படி ஒரு உத்தரவைப் பிறப்பித்து 3 ஆண்டுகளாகியும்கூட, இதுவரை ஒரு ஆசிரிய ருடைய குழந்தைக்குக்கூட அதற்கான நிதி தரப்படாத நிலைமை இருக்கிறது. எனவே அதைபற்றி அரசு சிந்தித்துப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அளித்த அந்த உறுதிமொழியைக் குறித்து அரசு சிந்தித்ததா என்று கேட்க விரும்புகிறேன். துணை மதிப்பீட்டில் அதைப்பற்றி எந்தக் குறிப்பும் இங்கே தரப்படவில்லை. எனவே அரசு தெரிவித்த அந்த ஆணையை நிறைவேற்றுகிற நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறதா என்பதையெல்லாம்பற்றி இங்கே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்பதால், ஏதோ பெயருக்கு இங்கே ஒரு மதிப்பீடு படிக்கப்படுகிறதே தவிர, அது உருப்படியாக இல்லை என்பதை நான் இங்கே மிகவும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நாங்கள் போனஸ் வேண்டுமென்று பலமுறை கேட்டோம். தொழில் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும் அதிலிருந்து கிடைக்கிற லாபத்திலிருந்து பங்களிப்பதுதான் போனஸ் என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்ட வாதம் இன்றைபதினம் மாறி போனஸ் என்பது "பட்டுவாடா செய்யப்படாத ஊதியம்" என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் இன்னும் போனஸ் தருவதற்கு இந்த அரசு தயங்குவது ஏன் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

திருச்சியில்—என்னுடைய தொகுதியில்—ரெயில்வே சென்ட்ரல் ஸ்கூல் என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு 15 நாள் ஊதியம் போனசாகத் தரப்படுகிறது. ஆனால் அதற்குப் பக்கத்தில் உள்ள அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு போனஸ் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால், எவ்வளவு பாகுபாடு ஆசிரியர்களிடையே காட்டப்படுகிறது என்பதை இந்த அரசு உணர வேண்டும். எனவே போனஸ் தருவதை இப்போதாவது அரசு ஏற்று இங்கே அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகிறேன்.

அடுத்து. பயிற்சிக்காக ஒரு ஊக்க ஊதிய உயர்வு தரப்படுகிறது. இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்த ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது 1—6—1981-க்குப் பின்னால் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்த ஊக்க ஊதிய உயர்வு இல்லை என்று ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது முன்னுக்குப் பின் முரணான ஓர் உத்தரவு என்பதால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உடனடியாக அதை ரத்து செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இடைநிலை ஆசிரியர்களுக்கான பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு தரப்பட்டு வந்தது. இரண்டாண்டுகள் பயிற்சி பெற்றவர்களுக்கு அது தரப்பட்டு வந்தது. ஆனால் இரண்டாண்டுப் பயிற்சி என்பது இடையில் ஓராண்டுப் பயிற்சியாக மாற்றப்பட்டது. பிளானிங் கமிஷன் மூலம் பள்ளிகள் தொடங்கப்பட்ட காலத்தில் அரசே "எமெர்ஜென்சி கோர்ஸ்" என்று இடைநிலை ஆசிரியர்களுக்கு இந்த ஓராண்டு ஆசிரியப் பயிற்சியை அளித்தது. இதன் காரணமாக ஓராண்டு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்த ஊதிய உயர்வு இல்லை என்று அறிவித்திருப்பதன் காரணமாக ஒரே பள்ளியில் ஒரே நிலையில் ஒரே பணியை ஆற்றுகிற ஆசிரியர்களுக்கு இடையே இந்தப் பாகுபாடு காட்டப்படுகிறது. ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதிய உயர்வு மற்றொரு ஆசிரியருக்கு வழங்கப்படாத நிலை இருக்கிறது. எனவே இந்தப் பாகுபாட்டையும் அரசு களைய வேண்டும், நீக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

(மாற்றுத் தலைவர் திரு. ஏ. ஜே. தாஸ் தலைமை)

அதுமட்டுமல்லாமல், அதே ஊதிய விகிதத்தில், இடைநிலை ஆசிரியர்கள் ஊதிய விகிதத்தில் 210 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த உடற்பயிற்சி ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், சிறப்பு நிலை ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் இன்னும் ஊக்க ஊதியம் வழங்கப்படவில்லை. இதை ஏற்கெனவே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதற்காக எவ்வளவு செலவாகும் என்று அறிய அரசு புள்ளிவிவரம் சேகரித்து திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் இதுநாள் வரை உரிய அறிவிப்பு தந்து நடைமுறைப்படுத்தாதது மிக மிக ஏமாற்றத்தை அளிக்கிறது. சேகரித்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் அதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் பகுதி நேர தொழில் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு 150 ரூபாய் ஊதியம் தரப்படுகிறது. அந்தப் பள்ளியில் பணியாற்றுகிற ஏவலர்களுடைய ஊதியத்தைவிட இந்த ஆசிரியர்களுடைய ஊதியம் மிக மிகக் குறைவாக இருப்பதை மாணவர்கள் கவனத்திலே கொண்டு அவர்களை மாணவர்கள் மதிப்பதே இல்லையென்ற சூழ்நிலை இருக்கிறது. ஏவலர்களைவிட இந்த ஆசிரியர்கள் மட்டமானவர்கள், சம்பளம் குறைவாகப் பெறுபவர்கள் என்று கருதக்கூடிய சூழ்நிலை

ஏற்பட்டால், மதோதத்துவப்படி மாணவர்கள் எப்படி ஆசிரியர்களை மதிப்பார்கள்? ஆகவே அந்தப் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும், அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வூதியம் ஏனைய ஆசிரியர்கட்கு இணையாக அமைதல் வேண்டும். இடைக்கால ஏற்பாடாக குறைந்தபட்ச ஊதியம் ஒருபகுதி நேரத்திற்கு 450 ரூபாய் என்று வழங்க வேண்டும் என்று கல்வி ஆலோசனைக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டபோது, அவர்களுக்கு ஒருப்குதி நேரத்திற்கு ரூ. 300 வீதம் 600 ரூபாய் கிடைக்கும் அளவிற்கு உயர்த்த அரசுத் தரப்பிலே சொல்லப்பட்ட கருத்து என்னவாயிற்று? அது ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்ற அறிவிப்பை ஏன் இந்தத் துணை மானியத்தில் சேர்க்கவில்லை? 1,130 கோடி ரூபாய்க்குத் துணை மதிப்பீடு வந்ததற்குப் பிறகும் செய்யவில்லை என்றால், வேறு எந்த நிலையில் செய்யவிருக்கிறார்கள்? செய்யவேண்டிய செலவுகளைச் செய்யுங்கள், செய்ய வேண்டாத செலவுகளைச் செய்ய வேண்டாம் என்று வலியுறுத்திச் சொல்வதற்கு நான் ஆசைப்படுகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் எழுத்தர்கள், ஏவலர்கள், காவலர்கள் ஆகியவர்களைத் தராத காரணத்தால், எழுத்தர்கள், ஏவலர்கள், காவலர்கள் ஆகியவர்களுடைய பணியை ஆசிரியர்களே ஆற்ற வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு உயர்த்திய பள்ளிகளுக்கு மட்டும் இந்த வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். ஆனால் நான்கைந்து ஆண்டுகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளில் இப்பதவிகள் தரப்படாத காரணத்தால், கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது, ஆசிரியர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஆகவே இதிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள எழுத்தர்கள் ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளிகளில் வாங்கி வந்த ஊதியத்தையே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்பள்ளிகளுக்குக் கூடுதல் பணியாளர்கள் தரப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டபோது, கல்லூரிகளில் வைக்க வேண்டிய இரண்டாண்டுப் படிப்பு இப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி கூடுதல் பணி ஏற்பட்ட பிறகும், அதற்கேற்றவாறு அலுவலர்கள் அளிக்கப்படவில்லை. அப்படி இல்லையென்றால் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்



போலவே, ஒரு 25 ரூபாய், 40 ரூபாய் என்ற அளவில் தருவதற்கு முயற்சி செய்திருக்கலாம். அதுகூட தரப்படவில்லை. இதையும் சிந்தியுங்கள்; செயல்படுத்துங்கள்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி இந்தத் துணை மதிப்பீட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுபவர்களுக்கு 150 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. 150 ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டிருப்பதாலே அவர்கள் திருடித்தான் வாழ வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்கள் எவ்வளவுதான் நல்ல முறையில் பணியாற்றினாலும்கூட, அவர்கள் நல்ல ஆடைகளை அணிந்தால், அது திருடப்பட்ட பணத்தால் வாங்கப்பட்டது என்று கருதப்படுகிறது. இதற்காக உள்ள அமைச்சர் அவர்கள்கூட அடிக்கடி சென்று பார்வையிட்டு, தினந்தோறும் நான்கைந்து பேரை பணி நீக்கம் செய்து வருகிறது. ஏதோ பணி நீக்கம் செய்வதற்காகவே அமைச்சராக வந்தவரைப்போல செயல்படுகிறார். செய்தி பத்திரிகைகளில் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றது. அந்த அமைச்சர் அவர்கள், அந்தப் பணி நீக்க அமைச்சர் அவர்கள், சத்துணவு அமைச்சர் அவர்கள், "அதிலே பணியாற்றுகிறவர்களுக்கு தரும் 150 ரூபாயைச் சற்று உயர்த்த முயற்சிக்கிறோம், எல்லோரும் இன்னும் ஒழுங்காக வேலை பாருங்கள்" என்று சொல்லுகிற நிலை நாட்டிலே இல்லை. இந்த 150 ரூபாயில் ஒரு குடும்பத்தை நடத்த முடியாது. மிகப் பெரிய, முதலமைச்சரின் திட்டம்—இதை அமுல் நடத்துகிறபோது, அதில் பணியாற்றுகிறவர்களுக்குப் போதிய அளவிற்கு ஊதியம் தர வேண்டுமா இல்லையா? அல்லது அவ்வாறு சொல்லப்படும் திருட்டை இவர்கள் ஊக்குவிக்கிறார்களா? அல்லது அவர்களும் அதிலே பங்குபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்கிறார்களா என்று கேட்கிறேன். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் நான் கூறுகிறேன். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சாலைகளைப்பற்றி இந்தத் துணை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே பார்க்கலாம். அமைச்சர் அவர்கள் பயணம் செய்கிறார்கள். இந்தக் காலத்திலே ரோடுகளில் எல்லாம் வைக்கோல்கள் பரவப்பட்டு இருக்கின்றன. தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இதைப் பார்க்கலாம். அந்தச் சாலைகளில் பயணம் செய்ய முடியவில்லை. வேண்டுமானால் அமைச்சர்கள் வரும்போது, அந்த வைக்கோல்களை காவல் துறையினர் அப்புறப்படுத்தியிருக்கலாம். ஆனால் நாங்கள், பொது மக்கள்

செல்லுகிற பகுதிகளில் எல்லாம் இன்றைக்கு போர் அடிக்கின்ற நெற்களமாகச் சாலைகள் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். இந்த நிலை மிக மிக அவல நிலையைத் தருகிறது. தருவதோடு மட்டுமல்ல, ரோடுகள் சாலைகள் எல்லாம் பழுதடைந்து விடுகின்றன, குண்டும் குழியுமாக இருக்கின்றன. சில வண்டிகள் செல்லுகின்றபோது, ஒரு குழிக்கு உள்ளே இருந்து மேலே வருவதற்குள்ளே குழிக்குள்ளேயே வண்டி புதைந்து விட்டதா, வெளியிலேயே தெரியவில்லை என்கின்ற அளவுக்கு அவ்வளவு குண்டும் குழியுமாக சாலைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சாலைகளைச் சரி செய்வதற்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எங்கு போனாலும் சாலைகள் பராமரிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட விவசாயப் பகுதிகளிலே அரசே கதிரடிக்கும் போரடிக்கும் களங்களைத் தனியாக பொது இடத்தில் கட்டித் தந்து, அப்பணி சாலைக்கு வரமுடியாத அளவுக்கு ஒரு ஏற்பாட்டை, புதிய திட்டத்தை உருவாக்கினால் என்ன? ஏன் அதை இதுவரையில் செய்ய முடியவில்லை? இதுவரை செய்யவில்லை என்றாலும் கூட, இனியாவது நெற்களஞ்சியத்திற்குப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு களத்தை உருவாக்குவதற்கு ஒரு தனித் திட்டத்தை உருவாக்கி, அதைச் செய்தால்தான் சாலைகள் நன்றாக இருக்கும். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் துணை மதிப்பீட்டு அடிப்படையிலே நான் பேசுகின்றபோது வற்புறுத்த விரும்புகின்றேன். ஆகவே துணை மதிப்பீடு மிகப் பெரியதாக இருக்கிறதே தவிர, அதிலே குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள் மிகப் பெரியதாகத் தெரியவில்லை என்பதை மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது சும்மா ஒரு பலூன் மாதிரி தெரிகிறது. அவ்வளவுதான். ஊசி பட்டால் போதும், உடைந்துவிடும். அந்த அளவுக்கு காற்று ஊதிய பலூனாகத் துணை மதிப்பீட்டை ஆக்காமல் இது உண்மையிலேயே பயன்தரத்தக்கதாக இதை மாற்றுவதற்கு நாங்கள் சொன்ன ஆலோசனைகளை எல்லாம் ஏற்று ஒரு சிலவற்றையாவது இறுதி அறிவிப்பிலே சேர்க்க வேண்டுமென்று கூறி, இந்த எண்ணத்தை நான் தெரிவிப்பதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

*** திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீட்டின் மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே கைத்தறி நெசவாளர்களுக்காக கிட்டத்தட்ட ரூ. 9 கோடியே 86 லட்ச ரூபாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே நூலுக்கு 3 சதவீதத்



பழையபடி அந்த 3 சதவீதம்தான் வசூலிக்கப்படுமென்று சொல்லி, அந்த ஒரு சதவீதத்தைத் தள்ளுபடி செய்ததற்காக நான் நெசவாளர்கள் சார்பிலே நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒரு சதவீதமே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கோடி வருமானம் வரக்கூடியது. அந்த வருமானத்தைக்கூடக் கணக்கிடாமல் ரத்து செய்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ரூபாய் 9 கோடியே 86 லட்சத்தை இந்தத் துணை மானிய மதிப்பீட்டிலே ஒதுக்கியிருப்பதால் ஏதோ நெசவாளர்களுக்கு ரூ. 9 கோடி ஒதுக்கிக் கொடுத்து விட்டார்கள் ; இனி அவர்களுக்குப் பஞ்சமோ, பசியோ, வேலையில்லாத் திண்டாட்டமோ வராதென்று நினைக்கத் தோன்றும். காரணம், இந்தப் பணம் அவ்வளவும் ரிபேட்டாக, தள்ளுபடியாக, ஜனதா ரகம் என்று சொல்லக்கூடிய ஒரு ரகத்திற்கு மான்யமாகக் கொடுக்கக்கூடியதுதான். ரிபேட் என்கின்ற அந்தப் பணம், வாங்குகின்ற மக்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடியாக மாநில அரசு கொடுக்கிறது ; அதே அளவுக்கு மத்திய அரசும் கொடுக்கிறது. ஜனதா ரகம் என்று சொல்லக்கூடிய ஒரு ரகம் ஏழை எளிய மக்களுக்காகத்தான் என்று சொல்லி வருகிறார்கள். இன்றைக்கு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்று நலிந்த மில்களுக்கு மத்திய அரசு பொறுப்பேற்று இன்றைக்கு வேலை இல்லாத மக்களுக்கு வேலை கொடுப்பதாக நினைத்து, அந்த மில்களை எல்லாம் அரசுத் துறையில் ஏற்றுக்கொண்டது. அந்த மில்களை எல்லாம் 50 அல்லது 40 ஆண்டுகள் ஓடி, எல்லாம் தேய்ந்து போய், கட்டிடங்கள் எல்லாம் கலகலத்துப் போய், உளுத்துப் போய், உடைந்து விழுகின்ற நிலையிலே இருக்கின்றன. அதே நேரத்தில் அந்த மில் முதலாளிகள் அந்த மில்களை வைத்துக்கொண்டு பல மில்களைக் கட்டி, பல துணைத் தொழில்களை ஆரம்பித்து கோடீஸ்வரர்களாக இன்றைக்கு இருக்கிறார்கள். சட்டத்திலுள்ள பல ஓட்டைகளின் காரணமாக அந்த நூல் மில்களை இன்றைக்கு சிக் மில்கள் என்ற முறையிலே ஆக்கி அவர்கள் வேலை இழக்கச் செய்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு நாம் பக்கிங்காம் கர்நாட்டிக் மில்லை எடுத்துக்கொண்டால் அது வெள்ளைக்காரர்கள் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. அதிலே வேலை செய்பவர்கள் எல்லாம் ரிடையரிங் வயதிலே—58 அல்லது 59 வயதிலே—இருப்பவர்கள். அவர்கள் வேலை பார்க்கிறபோது 150 ரூபாய்க்கு வந்தவர்கள். இன்றைக்கு 3,000, 4,000 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறார்கள். கிட்டத்தட்ட 16 ஆயிரம் பேர்களிலே 7 ஆயிரம் பேர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் [illegible] மில் ஆரம்பிக்கின்றபோது, [illegible]திலிருந்து 4 சதவீதம் வரியை விதித்தபோது, [illegible] எல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு டாக்டர் நாவலர், நிதி அமைச்சர் அவர்கள்

(முற்பகல் 11-10)

ஒரு துணி மில்லில் உள்ள அந்த இயந்திரம் ஒரு நாளைக்கு 40 மீட்டர் நெய்திருக்கும் என்று வைத்துக்கொண்டால், ஆரம்ப காலத்தில் 40 மீட்டர் அளவுக்கு நெய்திருக்கும் அந்த இயந்திரம், 40, 50 ஆண்டுகளுக்குப் பிறகு, பழுதடைந்து, நட் கழன்றுபோய் லூஸ் ஆகி, பஞ்சடைந்துபோய் பழுதடைந்த நிலையிலே, 30 மீட்டர் அளவுக்குத்தான் நெய்யும். அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குச் சம்பளம், பஞ்சப்படி, இன்கிரிமெண்ட் என்று படிப்படியாக உயர்ந்து வருகின்றது. அப்படி படிப்படியாக உயர்ந்து ரூ. 2,500 வரைக்கும் கிடைக்கின்றது. ஓய்ந்துபோன, உளுத்துப்போன, இடித்துத் தள்ள வேண்டிய அளவுக்கு பழுதடைந்து போயிருக்கின்ற அந்த மில்களை, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொடுத்து ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். பம்பாயிலே 13 மில்களை, ரூ. 150 கோடி கொடுத்து ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி தேசிய உடமையாக்கப்பட்ட அந்த மில்களிலே நெய்யக்கூடிய துணிகளை கண்ட்ரோல் ரேட் விலைக்கு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக ஆங்காங்கே விற்கின்றார்கள். பாலியீஸ்டர் துணி ஒரு மீட்டர் 10 ரூபாய், 8 முழம் வேஷ்டி 8 ரூபாய், 16 முழம் சேலை 20 ரூபாய் என்று விற்கின்றார்கள். இது யாருக்கு லாபம்? உழைக்கின்ற தொழிலாளர்களுக்கு லாபமா? வாங்குகின்ற மக்களுக்கு லாபமா என்று பார்க்கின்றபோது, ஓய்ந்துபோன, உளுத்துப் போன, இடித்துத் தள்ளவேண்டிய அந்தத் தொழில்களுக்கு, மில்களுக்கு மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை மானியமாகக் கொடுக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்காக அரசியல் தலைவர்கள் எல்லாம், தர்ணா என்றும், ஊர்வலம் என்றும், போராட்டம் என்றும், ஸ்ட்ரைக் என்றும், செய்து பம்பாயிலே, லக்னோவிலே, அகமதாபாத்திலே பார்த்தால், சென்னையிலே பக்கிங்காம்-கர்நாடிக் உட்பட இடித்து நொறுக்கித் தள்ளவேண்டிய மில் களுக்குக் கொடுக்கின்றார்கள். அதற்கு நஷ்ட ஈடு என்று கொடுக்கின்ற பணத்தைக் கொண்டாவது அந்த தொழிலாளர்களைக் கூப்பிட்டு எத்தனை ஆண்டுகள் சர்வீஸ் என்று கேட்டு, 'இந்தா போ, ஒரு லட்சம் ரூபாய், ஒரு 50 ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொள்' என்று கொடுத்து அனுப்பினால்கூட, நஷ்ட ஈடு கொடுத்து வாங்குகின்ற அந்த மில்லினுடைய விலை அளவுக்கு நமக்குச் செலவாகாது. அது ஒரு பக்கம். அடுத்த பக்கம் கைத்தறி நெசவாளர் களிடத்திலே வருகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** அவர்களை பணம் கொடுத்து வெளியிலே போகச் சொன்னாலும்கூட, வேலை வாய்ப்பை யார் உண்டாக்கிக் கொடுப்பது?



**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு வேலைக்கு வந்தவர்களைப்பற்றித் தனியாகப் பார்ப்போம். என்னைப் போன்ற உளுத்துப்போன கட்டை, ஓய்வுக்குப் போக வேண்டிய உடம்புகள் அங்கே இருக்கின்றன. அவர்களுக்கு ஏன் வேலை கொடுக்க வேண்டும், ரிட்டையரிங் ஏஜிலே இருப்பவர்களுக்கு ரிட்டையர்மெண்ட் கொடுத்து அனுப்பி விடுவோம். ஆக இது ஒரு பிரச்சினை. நான் வேலை கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. மில் என்ற ஒரு பகுதியில், ஒரு செக்டாரில், ஒரு கேட்டை விட்டு வெளியிலே வருகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை மடக்கி வைத்து 'கேட்' கூட்டம் என்றும், தர்ணா என்றும், போராட்டம் என்றும், ஊர்வலம் என்றும் நடத்து கின்றார்கள். அப்படி போராட்டம் செய்துகொண்டிருப்பவர்களுக்கு மட்டும் தான் சலுகை இருக்கிறது என்று நான் சொல்வதற்குத்தான் வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூட பேசினார்கள். சத்துணவுத் திட்டத்திலே 150 ரூபாய் சம்பளம் கொடுத்தால் திருட மாட்டார்களா, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுபவர்களை முழு நேர வேலைக்கு எடுக்க மாட்டார்களா என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டத்திலே 'பார்ட் டைம் ஒர்க்கர்' என்றுதான் அறிவிக்கப் பட்டிருக்கின்றது. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் படித்தார்களோ படிக்கவில்லையோ அல்லது அப்படிப் பேசவேண்டு மென்று பேசினார்களோ தெரியாது. அது வேறு விஷயம். ஆக இப்படி உத்தியோகத்திலே இருந்து சம்பளம் வாங்குபவர்களுக்கு மட்டும்தான் அரசியல்வாதிகள் தலைமை ஏற்றுப் போராட வேண்டுமா? குடிசைத் தொழிலாளருக்காகப் போராடக் கூடாதா? அந்தக் கேள்விக்குத்தான் நான் வருகிறேன். எங்கள் நெசவாளர் சங்கங்களுக்கு ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்தாறு லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே ஜனதா ரகம் என்று ஒன்று இருக்கிறது. நாங்கள் கூட்டுறவுச் சங்கத்திலே நூலை வாங்கி அதை நெய்து, அதையும் கூட்டுறவு நெசவாளர் சங்கத்திலேயே கொடுத்தால், எங்களுக்குக் கூலி ஒரு சேலைக்கு ரூ. 6½ தான் கிடைக்கிறது. கூட்டுறவு நெசவாளர் சங்கம் மத்திய சர்க்காருடைய சப்சிடியிலே, மான்யத்திலே அதைக் கழித்துக்கொண்டு ரூ. 30 விலையுள்ள சேலையை ரூ. 20-க்கு விற்கின்றார்கள். அது யாருக்குப் போய் சேருகிறது? அது ஏழைக்கு என்று சொல்லலாம். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனில் அந்த மில் துணிக்கு 10 ரூபாய் மீட்டருக்குக் குறைத்து விற்கின்றார்கள். அதுபோல கைத்தறியிலே நெய்த துணியை நெய்தவனுக்கு 6½ ரூபாய் கூலி கொடுக்கின்றார்கள். வாங்குபவர் களுக்கு ரூ. 10 சலுகை. இது என்ன தர்ம நியாயம்? அப்படித்தான் இந்த

[திரு. சி. இராமலிங்கம்] [1984 மார்ச் 26

ஒன்பது கோடி ரூபாய் இருக்கிறது. ரிபேட்டுக்காக நூற்றுக்கு பத்து ரூபாய் கொடுக்கிறார்கள். நூற்றுக்கு பத்து ரூபாய் மாநில சர்க்காரும், பத்து ரூபாய் மத்திய சர்க்காரும் ஆக மொத்தம் 20 ரூபாயாகக் கொடுக்கிறார்கள். 80-க்கு 80 வேஷ்டி ஒன்றின் விலை 55 ரூபாய். இந்த 55 ரூபாய் வேஷ்டியை பத்து ரூபாய் குறைத்து 45 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். ஆனால் அந்த வேஷ்டியை நெய்யக்கூடிய எனக்கு 8 ரூபாய்தான் கூலி. இதைத்தான் பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், டெக்ஸ்டைல் கொள்கையிலே, மாநில அரசு, மத்திய அரசுக்கு உடன்பட்டது. மத்திய அரசு சொல்வதை மாநில அரசு கேட்பது, மத்திய அரசு செய்வதை இங்கே நடைமுறைப்படுத்துவதுதான் இதுவரை உள்ள நிலைமையாக இருந்திருக்கிறது.

இரண்டாவது, நெசவாளர் சங்கங்கள் அமைக்கிறோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், 20 அம்சத் திட்டம் கொண்டுவந்தார்கள். அதிலே தனியார் துறையிலே இருக்கக்கூடிய எல்லா நெசவாளர்களையும், கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலே, நானும் மாநில அரசின் சார்பிலும் நம் மாண்புமிகு தொழிலாளர் அமைச்சரும் ஊர் ஊராகச் சுற்றி, பிரசாரம் செய்து, தனியாரிடத்திலே இருந்த நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவந்துவிட்டோம். இவ்வாறு தனியார்களிடத்திலே கொத்தடிமைகளாக இருந்தவர்களை மீட்டு அவர்களுக்கென்று ஒரு ஷெட்டைக் கட்டி, அதிலே தறியைப் போட்டு, அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற அடிப்படையிலே, இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் சொசைட்டி என்ற முறையிலே கிட்டத்தட்ட 600 ஷெட்டுகள் போட்டு, இன்றைக்கு சுமார் 45,000 தறிகளுக்குமேல் அவற்றில் வேலை செய்கின்றன. கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய மூன்று இலட்சம் தறிகள் மற்றும் மேற்படி 45,000 தறிகள் உற்பத்தி செய்யக்கூடிய துணி, சராசரி ஆண்டு ஒன்றுக்கு 240 கோடி ரூபாய்க்கு வரும். மேற்படி 240 கோடி ரூபாய்க்கான துணி உற்பத்தியை மத்திய அரசு ஒரு திட்டம் தீட்டி, கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவந்துவிட்டது. அதிலே உற்பத்திக்கு மட்டும் செலவு செய்கிறோம். நவீன இயந்திரங்களைக்கொண்டு நூல் நூற்று, தறிகளுக்குக் கொடுப்பது, சாயம் போடுவது போன்று உற்பத்திக்கு மட்டும் செலவு செய்யப்படுகிறது. ஆனால் உற்பத்தியாகும் துணியை எங்கே விற்பது? யாரிடத்தில் விற்பது? எப்படி விற்பது? யார் வாங்குகிறார்கள்? யார் அதைக் கட்டுகிறார்கள்? அது விற்றால்தானே மேற்கொண்டு நெசவாளிக்கு வேலை



1984 மார்ச் 26] [திரு. சி. இராமலிங்கம்]

கொடுக்க முடியும் என்கின்ற அடிப்படையை ஆராயாமலேயே, மத்திய அரசு, நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று திட்டத்தை வகுத்துவிட்டது.

இவ்வாறாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தவுடனே நூறு தறிகள் வைத்திருக்கக்கூடிய ஒரு சங்கத் தறிக்காரருக்கு, டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் அவர்களுடைய சிபாரிசின் அடிப்படையில், தறி ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம், நூறு தறி வைத்திருக்கும் சங்கத்திற்கு ரூபாய் இரண்டு லட்சம் வரை மூலதனக் கடன் கொடுக்கிறார்கள். நாங்கள் அதை வைத்துக் கொண்டு நூல் வாங்குவது, சாயம் போடுவது, நெசவாளர்களுக்குக் கூலி கொடுப்பது ஆகியவற்றைச் செய்ய வேண்டும். அந்த நூறு தறியும் சரியாக நெய்யாது. என்னைப்போன்ற அரசியல்வாதிகள் மாதம் ஒன்றுக்கு ஒரு முறை அல்லது இரு முறைதான் நெய்வோம்.

(மணி அடிக்கப்பட்டது)

இன்னும் ஐந்து நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். இப்படி சராசரி அவர்களுடைய பொறுப்பிலே வருகிற அந்தக் கூலி, அந்த வருமானத்தைப் பார்க்கின்றபோது, ஒரு நெசவாளிக்கு முழுநேர வேலை என்று வருகிறபோது, அவன் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 250 நாட்களிலிருந்து 300 நாட்கள் வரை வேலை செய்கிறான். அவன் வேலை செய்கிறபோது, கிட்டத்தட்ட தறி ஒன்றுக்கு 6,000 ரூபாய் மூலதனம் வேண்டும். ஆனால் குறைந்தபட்சம் நெய்கிற துணியே அன்றாடம் விற்பதில்லை. பொங்கல், தீபாவளி காலங்களில்தான் விற்கிறது.

அதே அடிப்படையில் இந்த ஆண்டு எங்கள் மாநில சங்கத்திலே நாங்கள் தீபாவளிக்கு முன்னால்தான் பிரைமரி நெசவாளர் சங்கத்திலே கொள்முதல் செய்தோம். அதன்பிறகு நாங்கள் கொள்முதலே செய்யவில்லை. நாங்கள் கொள்முதல் செய்த அந்தத் துணிகளை விற்கலாம் என்றாலோ மக்களிடத்திலே வாங்கும் சக்தி இல்லை. அவர்களால் வாங்க முடியவில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுக்குக் கொடுத்தோம். அவர்களால் குறிப்பிட்ட அளவிற்குமேல் வாங்க முடியவில்லை. எனவே இன்றைக்கு மாநில சங்கத்திலே கிட்டத்தட்ட 70 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி தேங்கியிருக்கிறது. இதுபோல் எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் தேங்கியிருக்கிறது. இந்தத் தேக்கத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்று நாங்கள் ஆராய்ந்து பார்த்த நேரத்திலே, இந்த பிரைமரி நெசவாளர் சங்கங்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கி கடன் கொடுக்கிறது. இரண்டு லட்சம்

(முற்பகல் 11-20)

ரூபாய் கடன் கேட்கும்போது, அந்தப் பிரைமரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நடைமுறை மூலதனம் 70,000 ரூபாய் என்றால், கூட்டுறவு சென்ட்ரல் வங்கி அந்த 70,000 ரூபாயைத்தான் கடனாக கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்குக் கொடுக்கிறது. இது தவறான முடிவாகும். அப்படிக் கொடுக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால் ஒரு வருடம் 75,000 ரூபாயாக இருக்கலாம். அடுத்த வருடம் ஒரு லட்சம் ரூபாயாக வரலாம், அதற்கு அடுத்த வருடம் 1½ லட்சம் ரூபாயாக வரலாம். ஆனால் மத்திய வங்கி குறிப்பிட்ட தொகையான 75,000 ரூபாயைக் கொடுப்பதால், உற்பத்தி செய்த சரக்கை நாங்களே வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. வெளியிலே மாநில சங்கங்களுக்குக் கொடுக்கிறோம். எங்களிடம் சரக்குகள் தேங்கியிருக்கின்றன. மேற்கொண்டு நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. இரண்டு லட்சம் ரூபாய் இருந்தால், அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். வியாபார ரீதியிலே பார்ப்போமானால், சரக்கை வாங்கிக் கொண்டு 3 மாதம், 6 மாதம் கழித்துத்தான் பணம் கொடுப்பார்கள். எனவே 6 மாத மூலதனத்தை மத்திய வங்கி எங்களுக்குக் கடனாகக் கொடுக்க வேண்டும். இப்போது அப்படிக் கொடுப்பதில்லை. மற்ற தொழில்களைப் பார்ப்போம். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வந்தால் 25,000 ரூபாய் கடனுதவி என்று மத்திய அரசு சொல்கிறது. பட்டதாரிகளுக்கு 50,000 ரூபாய் கடனுதவி அளிக்கிறது. பார்பருக்குக் கடனுதவி கொடுக்கிறோம். அவர்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கிக் கொடுக்கிறோம். செருப்புத் தொழிலாளிக்கு பங்க் கொடுக்கிறோம். 2,500 ரூபாயும் கொடுக்கிறோம். ஒவ்வொரு தொழிலாளிக்கும் கொடுக்கிறோம். ஆனால் தனிப்பட்ட நெசவாளர்களுக்குக் கடனுதவி அளிப்பதில்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தமாகக் கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை எந்த நெசவாளியும் எடுத்துச் செலவழித்துவிட முடியாது. நூல் வாங்க முடியாது, சாயம் போட முடியாது, எந்த வேலையும் செய்ய முடியாது. நெசவாளர் சங்கம்தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். அப்படி இருக்கும்போது அனுமதிக்கப்பட்ட 2 இலட்சம் மூலதனத்தை நெசவாளர் சங்கத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடாதா? மற்ற தொழிலாளர்களுக்கு நேரடியாகக் கொடுக்கிறார்கள். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம் அல்லது ஊரை விட்டுப் போனாலும் பரவாயில்லை; அதை எடுத்துக்கொண்டு போனாலும் பரவாயில்லை என்று சொல்லும்போது, நெசவாளர்களை ஒரு கட்டுப்பாட்டிற்குள். ஒரு வளைவுக்குள் ஏன் வைக்க வேண்டும்? ஒரு பக்கம் சரக்கு விற்கவில்லை.



என்னுடைய சங்கத்திற்கு ரூ. 75,000 தான் காசு கடன்; இருப்புச் சரக்கு 1 லட்சம் ரூபாய். அனுமதிக்கப்பட்ட கடன் ஆரம்பத்திலே 3 லட்சம் ரூபாய். இப்போது டர்ன்-ஓவர் மூலம் 1 லட்சம் ரூபாய். இப்படி இருக்கக்கூடாது.

மத்திய அரசு ரிசர்வ் வங்கி மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். நாங்கள் அதைக் கையாடல் செய்ய முடியாது. டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் இருக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அவர்கள் கண்காணிக்கிறார்கள். அதே நேரத்தில் நெசவாளர்கள் அந்த வங்கிகளுக்குப் போனால் அடிமைகள்போல், வேலைக்காரர்கள்போல் நடத்தப்படுகிறார்கள். அது வேறு விஷயம். அதை நடைமுறையிலே மாற்றிக்கொள்ளலாம். நெசவாளர்களுக்கு நன்மை செய்யும் மாநில அரசும், மத்திய அரசும் அவர்களிடம் பணத்தை நேரடியாகக் கொடுப்பதில்லை. மற்ற தொழிலாளர்களுக்கு உள்ள சலுகை எங்களுக்கு இல்லை என்பதைச் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு தேக்க நிலைக்குக் காரணம் மூலதனப் பற்றாக்குறைதான். ஆறு மாதங்களாக விற்கவில்லை என்றால், ஓராண்டுக்குத் தேவையான நிதியை அந்த வங்கிகள் கொடுக்க வேண்டும். இன்றைக்கு ஒரு தறிக்கு 2,000 ரூபாய் கொடுப்பது என்பது 3 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயித்த தொகை. அது இன்றைக்குப் போதாது. ஆறு ஆயிரம் ரூபாய் ஒரு தறிக்குக் கொடுக்க வேண்டும். படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு 25,000 ரூபாய் கொடுக்கும்போது, எங்களுக்கு ஏன் 6,000 ரூபாய் கொடுக்கக்கூடாது என்று கேட்கத்தான் தோன்றுகிறது. இன்றைக்கு நெசவாளர்கள் பசி, பட்டினியால் வாடுகிறார்கள். அதற்குக் காரணம், மத்திய வங்கிகளின் நடைமுறை சரியாக இல்லை என்பதுதான். பல நெசவாளர் சங்கங்களின் தாழ்மையான வேண்டுகோள், கூட்டுறவு வங்கிகள் நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளைக் கொடுப்பதில்லை என்பதுதான். ஒரு லட்சம் ரூபாய்க்கு சரக்கு இருக்கிறதென்றால், அதைக் கணக்கிட்டு கூட்டுறவு மத்திய வங்கி ஏன் கீ லோன் கொடுக்கக்கூடாது? தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளாக இருந்தால், எங்களுக்குக் கொடுப்பார்கள். எனவே இந்த நிலையில் கூட்டுறவு வங்கியிலிருந்து எங்கள் சங்கத்தை ஏன் பிரித்துக்கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு என்று ஒரு வங்கியை வைத்து, அதன் சார்பாக கடனுதவிகளை நாங்கள் பெறலாம். இன்றைக்கு மில்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கோடிக் கணக்கில் பணம் ஒதுக்குகிறார்கள். ஹேண்ட்லூம் வீவர்ஸ் வங்கி என்று ஒன்று ஏற்படுத்தினால், அதன்மூலம் நன்மைகளை நாங்கள் பெற

முடியும். இன்றைக்கு எங்கள் துணி உற்பத்தி கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 300 கோடி ரூபாயாகும். அதேபோல் நூல் மில்களில் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. எனக்கு என்று ஒரு வீடு இருந்தால், எப்படி அங்கே போய் இருக்க, படுக்க வசதி இருக்குமோ, அதுபோல் எங்களுக்கு என்று தனியாக ஒரு வங்கி இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு எங்களுக்கு நிதி ஒதுக்குவதாகச் சொல்கிறது. ஆனால் உண்மையிலேயே அவர்களால் ஒதுக்கப் படுகின்ற அந்த நிதி எங்களுக்கு வருவதில்லை. அதுபோல் மாநில அரசுகூட கைத்தறித் துறைக்கு என்று ஒரு செலவினத்தைச் சொல்கிறது. ஆனால் உள்ளபடியே ஒரு சிங்கிள் பைசா கூட நெசவாளர்களுக்கு வந்து சேர்வதில்லை. எல்லாம் நிர்வாகச் செலவுகளுக்குப் போய்விடுகிறது. கோவாப்டெக்ஸ் எப்படி இயங்குகிறது என்றால், அவர்கள் விற்கிற துணியிலிருந்து வரும் லாபத்தி லிருந்து 7 கோடி ரூபாய் அளவுக்கு எடுத்து நிர்வாகச் செலவைச் சரிக்கட்டுகிறது. அரசு ஒதுக்குகிற பணம் உள்ளபடியே நெசவாளர்களுக்கு வந்து சேர்வதில்லை. எங்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு அரசு மானியம் ஒதுக்குவதை நான் வரவேற்கிறேன். ஆனால் இனிமேலாவது இவ்வாறு ஒதுக்குகிற தொகை நெசவாளர்களுக்கு முழுக்க முழுக்க வந்தாக வேண்டும். இன்றைக்கு கைத்தறிக்கு ரிபேட் கொடுக்கிறார்கள். 100 ரூபாய்க் கான துணியை 80 ரூபாய்க்கு விற்று அதன்மூலம் ஏன் ரிபேட் கொடுக்க வேண்டுமென்று நான் அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டேன். அதற்கு அவர்கள் இதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்றார்கள். இன்றைக்கு கொத்தடிமையாக இருந்த ஒருவனை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டதற்குப் பிறகு, அவனுக்கு வேலை இல்லையென்றால், மீண்டும் அவன் அங்குதான் போகப்போகிறான். இன்றைக்கு மாநில சங்கமே முழுக்க முழுக்க எல்லாத் துணிகளையும் வாங்க முடியவில்லை. ஏதோ அரசு கொடுக்கும் 10 கோடி ரூபாய் மானியத் தொகையை வைத்துத்தான் 300 கோடி ரூபாய்க்கான துணிகளை விற்க வேண்டியிருக்கிறது. வியாபாரிகளும் ரிபேட் காலத்தில்தான் வாங்குகிறார்கள். இந்த ரிபேட் கூட நெசவாளர்களுக்குப் போவதில்லை. வாங்குபவர்களுக்குத்தான் போகிறது. இந்த நிலையை மாற்றி யமைக்க வேண்டும். ஓரளவுக்கு இதனைச் சீராக்க வேண்டும்.

**திரு. ப. மாணிக்கம்:** பிரைமரி சொசைட்டியிலிருந்து மாநிலத் தலைமை சொசைட்டி வாங்கி 35 சதவிகிதம் 'ஹேண்ட்லிங் சார்ஜ்' போடுகிறது. இந்த சதவிகிதத்தைக் குறைக்க வேண்டும். எப்படி வியாபாரிகள் ரிபேட்டைப் பயன்படுத்தி விற்கிறார்களோ அதுபோல் மாநில சொசைட்டியும் ஹேண்ட்லிங் சார்ஜ் போடுவதைக் குறைத்த காலாகாலத்தில் பிரைமரி சொசைட்டி



களுக்குக் கொடுத்தால் அதன்மூலம் வேலைவாய்ப்பை உருவாக்க முடியும் அல்லவா? அவர்கள் இன்றைக்கு ஆண்டுதோறும் வட்டி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுக்கான வட்டி பாக்கி இருக்கிறது. இப்படிச் செய்வதன் மூலம் விற்பனை அதிகரித்து அதன்வாயிலாக வேலைவாய்ப்பையும் பெருக்க முடியும். அதுபோல் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்துகின்ற வட்டியும் அதிகமில்லாத நிலையில் அதனுடைய வருவாயும் அதிகரிக்கும். இதுகுறித்து உறுப்பினரின் கருத்து என்ன?

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் எங்களுடைய மாநில சங்கம் அதிக லாபம் வைத்து துணிகளை விற்கிறது என்று சொன்னார்கள். எத்தனை சதவிகிதம் என்று அவர் தெரியாமலேயே 35 சதவிகிதம் என்று சொன்னார். எங்களுடைய மாநில சங்கத்தினுடைய நிர்வாகச் செலவையே துணி விற்பதன் மூலம்தான் சமாளிக்கிறோம். நாங்கள் ஆங்காங்கு கடைகளைத் திறந்து, அலங்காரம் செய்து ஆட்களை நியமித்து துணிகளை விற்க வேண்டியிருக்கிறது. அதுவும் சாதாரணமாக ஜவுளிக் கடையில் 100 ரூபாய் சம்பளத்துக்கு வேலைக்கு வருவான். ஆனால் கோவாப்டெக்ஸ் என்றால் அந்தந்த மாநிலத்தில் இருக்கிற சர்க்கார் யு.டி.சி.-க்கு வழங்கப்படுகிற ஊதியம் அளவுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. ஆகவே சாதாரண துணிக் கடையில் 100 ரூபாய் என்று சம்பளம் இருக்கும் போது, எங்களுடைய சங்கத்தைப் பொறுத்தவரையில், 'புல் டைம்' பணியாளர்களாக இருப்பதால், சர்க்கார் சிப்பந்திகளைப்போல் ஊதியம் வழங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதில் லாபம் வருகிறது என்று சொல்ல முடியாது. எங்களுக்கு நிறைய செலவு ஏற்படுகிறது. செலவு செய்ய

(பிற்பகல் 11-30)

வேண்டியிருக்கிறது. எங்களது மாநில சங்கம் சரக்கு முழுவதையும் வாங்கி விற்க வேண்டுமென்றால், அதற்கு மக்கள் எல்லாவற்றையும் வாங்கி ஒத்துழைக்க வேண்டும். மக்களுடைய நாகரிகமான போக்கினால், எங்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. இப்போது பலவிதமான துணிகள் வந்துவிட்டன. பாலியஸ்டர் வந்துவிட்டது. நேர்த்தியான, பளபளப்பான துணிகள் வந்து விட்டன. அது அதிகம் கிழிவதில்லை. அதைப்பற்றி ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். ஒரு ஐந்து செட் பாலியஸ்டர் பேண்ட்-சட்டை இருந்தால், ஐந்தாறு ஆண்டுகளுக்குத் துணிகள் வாங்கவேண்டியதில்லை. தாய்மார்களுக்கு 5 பாலியஸ்டர் புடவைகள் இருந்தால், 5 ஆண்டுகளுக்கு சேலைகள் வாங்க வேண்டிய அவசியமில்லை. இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது கூட புதிதாக மத்திய அரசாங்கத்தில் 72 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய மில் திறக்கப் போகிறார்கள். அது கைத்தறி வளர்ச்சிக்கு நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கேற்ப இன்றைக்கு செலவினங்களில் அதிகமாக லாபம் வைக்கவில்லை உசிதமாக இருக்கிறது. நெசவாளர்களுக்கு அதிக சலுகைகள் செய்கிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர, எங்களுக்கு அவை வரவில்லை. வாங்குகிற மக்களுக்குத்தான் அவ்வளவும் போகிறது. நீங்கள்தான் அனுபவிக்கிறீர்கள். நாங்கள் எப்போதும்போல் அரைப்-பட்டினி, கால் பட்டினி என்ற நிலையில் தான் இருக்கிறோம். பெரியவர்கள் சொல்வார்கள், ஆறு மாதம் தறியும், ஆறுமாதம் வேலும் மயிலும் என்று. அதாவது 6 மாதகாலம் 'முருகா, முருகா' என்று ஊரை விட்டு எங்காவது போகத்தானே வேண்டியிருக்கும். இது மத்திய அரசின் டெக்ஸ்டைல் கொள்கையால் வந்தது. ஆகவே மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையை மாற்ற வேண்டுமென்றுதான் இவ்வளவும் சொல்கிறேன். "எங்களுக்கு நீங்களே வேலை கொடுங்கள். சாதாரண தெருக் கூட்டுகிற தொழிலாளி எவ்வளவு சம்பளம் பெறுகிறானோ அவ்வளவு சம்பளம் எங்களுக்குக் கொடுங்கள்" என்றுதான் கேட்கிறோம். ஆகவே கூட்டுறவு வங்கிகள் எங்களிடம் கருணை வைத்து, எங்களுக்கு ஒதுக்கிய நிதியை எங்களிடமே நேரில் கொடுத்து உதவ வேண்டுகிறேன். அந்தப் பணத்தை நாங்கள் துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பில்லை. எங்களுக்கு மேலே கண்காணிக்க கைத்தறி இயக்குநர் இருக்கிறார். பைசா கூட நாங்கள் திருட முடியாது. மற்ற கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டு, அவர்களின் பணத்தை முழுவதுமாக அவர்களிடமே தந்துவிடுகிறார்கள். எங்களின் நிலை அப்படி இல்லை. அந்தப் பணத்தைக் கொண்டு நாங்கள் உற்பத்தி செய்கிற துணிகளை விற்றாகவேண்டிய நிலை இருக்கிறது. ஏதோ ஒரு நேரத்தில் போட்ட சட்ட திட்டங்களையே இப்போது 1984 ஆம் ஆண்டு காலத்தில் வைத்துக்கொண்டிராமல் இதற்காக ஒரு கமிட்டியை நியமித்து அவர்களை வைத்து இதற்கான சட்ட திட்டங்களை நிர்ணயிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கைத்தறி நெசவாளர்களின் குறைகளைச் சொல்ல எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் நன்றி கூறி, அமர்கிறேன்.





**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நம் முன்பு தரப்பட்டிருக்கிற 1983-84 ஆம் ஆண்டு, துணை நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

1983-84 ஆம் ஆண்டுக்கு துணை நிதிநிலை அறிக்கை ரூ. 1,130 கோடி ரூபாய்க்குத் தரப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை ரூ. 1,774 கோடிக்கு சென்ற ஆண்டு தரப்பட்டது. சென்ற ஆண்டு மார்ச் மாதம் இந்த அவையில் ஒரு ஆண்டுக்குள்ள நிதிநிலை அறிக்கையாக நமக்குத் தரப்பட்டது, ரூ. 1,774.88 கோடிக்கு. இந்த ஆண்டு 1984-85க்கான நிதி நிலை அறிக்கை ரூ. 2,065.43 கோடிக்குத் தரப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 95.90 கோடிக்கான பற்றாக்குறை சொல்லப்பட்டது. இன்று 1983-84 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கையில் ரூ. 1,130.10 கோடிக்கு நிதிநிலை அறிக்கை தந்தால், 1983-84 ஆம் நிதி ஆண்டுக்கு நாம் என்ன எதிர்பார்த்து பட்ஜெட் தயாரிக்கப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன். எப்போதுமே துணை நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், எதிர்பாராத செலவினங்கள் என்று வருகிறபோது, 100 கோடி, 120 கோடி அல்லது 200 கோடி ரூபாய்க்கு மேல் வருவதில்லை. எனவே இது ஓரளவுக்கு மற்றொரு நிதிநிலை அறிக்கையேயாகும். இதை 1983—84 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். இரண்டாவது நிதிநிலை அறிக்கை ஒன்றைத் தர வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். 1983—84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போதே "இந்த நிதிநிலை அறிக்கை முற்றுப் பெற்றதாக இருக்கவில்லை, பல இனங்கள் இதிலே விடுபட்டுப் போயிருக்கின்றன" என்று நான் தெரிவித்தேன்.. இந்த அவையில் பேசிய குறிப்பேட்டைப் பார்த்தாலே இப்போது நான் தெரிவிக்கிற இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துகிற அளவிலேதான் அப்போதே நான் பேசியிருக்கிறேன் என்பது தெளிவாகும். எனவே அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைக்குத் துணையான அறிக்கையாக இது இல்லாமல் இணையான நிதிநிலை அறிக்கையாக, ஒரு கூடுதல் நிதிநிலை அறிக்கையாக இங்கே வைத்திருப்பதிலிருந்து, நம்முடைய நிதித் துறை என்னென்ன செலவுகளை எப்படியெப்படி செய்ய வேண்டியிருக்கிறது என்று கணிக்கிற தன்மையில் தவறிவிட்டதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் உண்மையில் நிதித் துறை அவ்வாறு தவறிவிட்டது என்று நினைப்பது தவறு. அவர்கள் உண்மையில் தவறில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அவர்களுக்குக் கணக்குத் தெரியாது என்று நான் சொல்லமாட்டேன். நல்ல முறையில் கணிப்பதற்கான முறையை உணர்ந்தவர்கள்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 மார்ச் 26

அவர்கள். இருந்தாலும் அப்படி உண்மையான நிலைமையை எடுத்துக் காட்டினால், அதிகமான பற்றாக்குறையைக் காட்டுகிற நிதிநிலை அறிக்கையாக அது மாறிவிடும் என்றும், அதன் காரணமாக நமது மாநிலத்தின் நிதிநிலை எவ்வளவு சீர்கேடு அடைந்திருக்கிறது என்று மக்கள் உணர்ந்து கொள்வார்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமையை அது உருவாக்கிவிடுமே என்று எண்ணி, அதை மக்கள் மத்தியிலிருந்து மறைத்து, அதிகமான பற்றாக்குறை இல்லை, வெறும் 93 கோடி ரூபாய் அளவுக்குத்தான் அந்த ஆண்டு பற்றாக்குறை எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்க விழைந்து அவர்கள் அவ்வாறு செயல்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் உண்மையில் ஏறத்தாழ ரூ. 1,200 கோடி அளவுக்குப் பற்றாக்குறை உள்ள நிதிநிலை அறிக்கையை மறைக்க இப்படிப்பட்ட ஒரு சாகசமான அல்லது தந்திரமான ஒரு முறை—ஒரு நிதித் தந்திரம் வேண்டுமென்றே கையாளப்பட்டது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த அவையில் நமக்குத் தரப்பட்டிருக்கிற இந்தக் கூடுதலான துணை மான்ய மதிப்பீட்டின் விளக்கக் குறிப்பின் இரண்டாவது பக்கத்திலே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

1, 4, 9 ஆகிய இனங்களில் சொல்லப்பட்டவைகள் எல்லாம் இதற்கு முன்னாலே எதிர்பார்க்கக் கூடிய இனங்களே தவிர, வேறு அல்ல. இந்திய ரிசர்வு வங்கியிடம் பெற்ற வழிவகை முன்பணத்தைத் திருப்பித் தருவதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது முன் கூட்டியே நமக்குத் தெரியாத இனமா என்றுதான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

அதைப் போலவே, 1 முதல் 8 வரையான இனங்களுக்குத் தரப்பட்டிருக்கிற விளக்கக் குறிப்பில் 1, 2, 5 ஆகிய பத்திகளில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது, மத்திய அரசு பொறுப்பேற்றிருக்கிற திட்டங்களுக்கும், மாநில அரசுத் திட்டங்களுக்கும், மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும் கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து, மேலும் ஒரு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதாவது மத்திய அரசிடமிருந்து பெற்ற வழிவகை முன்பணத்தைத் திருப்பிக் கொடுக்க கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இப்படி மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கம் தேவைப்படும் என்பது அப்போதே தெரியாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன். மழை வந்தால் எவ்வளவு



1984 மார்ச் 26] [திரு. ம. சங்கரலிங்கம்]

சேதம் ஏற்படும் என்பது தெரியாது. வறட்சி வந்தால் அதன் காரணமாக எவ்வளவு சேதம் ஏற்படும் என்பது தெரியாது. அதைப் போலவே கால் நடைக்கு திடீரென்று நோய் வந்தால் எவ்வளவு சேதம் என்று தெரியாது. ஆனால் மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையான ரூ. 500 கோடியைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது அரசுக்குத் தெரியாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன். இப்படி ரூ. 500 கோடியைத் திருப்பித் தர வேண்டும் என்று மக்களுக்குத் தெரிய வேண்டிய ஒன்றை, இந்தப் பேரவைக்கும் மேலவைக்கும் தெரிவிக்க வேண்டிய ஒன்றை நிதிநிலை அறிக்கையில் மறைத்துக் காட்டிவிட்டு, இப்போது கூடுதலான நிதிநிலை அறிக்கையைத் தந்து, இது ஒரு துணை நிதிநிலை அறிக்கை மதிப்பீடு என்று சொல்லும் சரியான மரபு முறையை மாற்றி, உண்மையான நிலையை மாற்றிக் காட்ட வேண்டும் என்று அரசு செய்கிற தந்திரம் என்று சொல்ல விரும்புகிறேன். இதன் காரணமாகத்தான் ரிசர்வ் வங்கியில் ஓவர்டிராப்ட் வாங்குகிற நான்கு மாநிலங்களில் நாம் ஒன்றாக இருக்கிறோம். அதைத் திருப்பிக் கொடுக்காத மாநிலங்களிலும் ஒன்றாக இருக்கிறோம். நம்முடைய நிதிநிலை எவ்வளவு சீர் குலைந்து, சீரழிந்திருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதற்கு இந்தத் துணை நிதிநிலை அறிக்கை சான்று. நம்முடைய நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிற—வெள்ளிடை மலையாக—ஒரு கண்ணாடியைப் போல் இந்தத் துணை நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இயற்கையின் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 37 கோடிதான் உண்மையானது. மற்றதெல்லாம் அவ்வப்போது அரசு மதிப்பீடு செய்து கொண்டு வந்திருக்க வேண்டியவைகளே, அவைகளையெல்லாம் மதிப்பீடுகளாகக் கொண்டு வரத் தவறியது சரியல்ல. நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்வதில் கையாண்ட முறை பாராட்டத் தக்கதல்ல என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக தேர்தலுக்காக ஒரு கோடி ரூபாய் கூடுதலாகக் கேட்கப்பட்டிருக்கிறது. எங்கே தேர்தல் நடந்தது? எனக்குத் தெரிந்த வரையில், தேர்தல் எங்கேயும் நடக்கவில்லை. நம் மாநிலத்தில் ஊராட்சிகளுக்கோ நகராட்சிகளுக்கோ எங்கேயும் தேர்தல் நடக்கவில்லை. எப்போதாவது சர்வ கட்சிக் கூட்டம் கூட்டப்படும். அதற்கும் நாங்கள் எங்களுடைய சொந்தச் செலவில் வந்து போகிறோம். அதற்காக எங்களுக்குப் படி ஏதும் கொடுக்கப்படுவதில்லை. ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்,

[1984 மார்ச் 26

(முற்பகல் 11-40)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

மேலவை உறுப்பினர்களின் தேர்தல்தான் நடந்திருக்கிறது. இது எதிர்பார்க்கக்கூடிய தேர்தல். ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை எதிர்பாராமல் நடத்தினார்கள் என்றால் சரி. அதுவும் நடக்கவில்லை. இதைக் கூர்ந்து கவனிக்கும்போது வாக்காளர்களின் பட்டியல் தயாரிப்பதற்காக என்று கொள்ளலாம். 1985 ஜனவரிக்குப் பிறகு தேர்தல் வருகிறபோது அதற்கு முன்பே பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்பது தெரிந்ததுதானே. 1985 ஆம் ஆண்டு சனவரியில் நடக்க வேண்டிய பொதுத் தேர்தலுக்குரிய வாக்காளர் பட்டியலைத் தயார் செய்ய வேண்டும் என்பது 1983—84 ஆம் ஆண்டிற்குரிய பட்ஜெட் போடுகிற போதே தெரிந்திருக்க வேண்டிய ஒன்றுதானே. அதைத் தெரியாமலா இருந்திருக்கிறார்கள்? இதைக் கையாண்டு கொண்டிருக்கிற தேர்தல் இலாக்கா அதிகாரிகள் தெரிவிக்கவில்லையா? பட்ஜெட் தயாரிக்கும் போது எல்லா இலாக்கா அதிகாரிகளையும் கேட்டுவிட்டு 1984 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் என்னென்ன செலவு செய்ய இருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டுத்தானே தயார் செய்திருப்பார்கள்? இப்படி பல இனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டிருக்கிற முறை ஏற்றுக்கொள்ளப் படுவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதிலே முனைந்து பார்த்தால், பல வேடிக்கைகள் காணப்படுகின்றன. பக்கம் 33-ல் ஒரு விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். "பாம்பு கடித்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த குதிரைகள் வாங்க ரூபாய் 80,000 அரசு அனுமதி வழங்கியுள்ளது" என்று சொல்லியிருக்கிறார்கள். மாணிக்கவாசகர் காலத்திலே குதிரை வாங்கியதாகப் பார்த்தோம்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாணிக்கவாசகர் நரியை வாங்கினார், குதிரையை வாங்கவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அவர் நரியை வாங்கி குதிரையை வாங்கினதாகச் சொன்னார். பிறகு நரியாக மாறியது. அது புராணம். அதற்குள்ளே நான் போகவில்லை. பாம்பு கடித்தால் வைத்தியம் செய்யும் வைத்தியருக்குச் சம்பளம் 100 ரூபாய். அவருக்குக் குதிரையை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்றால், அவருக்குக் குதிரை ஏறத் தெரியுமா? குதிரையைச் செல்வந்தர்கள்தான் வைத்து பராமரிக்க முடியும். இந்த 100 ரூபாயை



1984 மார்ச் 26] [திரு. ம. சங்கரலிங்கம்]

வைத்துக்கொண்டு பராமரிக்க முடியாது. வேண்டுமானால் அவருக்கு டி.வி.எஸ். மோப்பெட் வாங்கிக் கொடுக்கலாம். அல்லது ஹாஃப் ஹார்ஸ் பவர் மோட்டார் வாங்கிக் கொடுக்கலாம், ஆட்டோரிக்ஷா வாங்கிக் கொடுக்கலாம். குதிரையைப் பராமரிக்க வேண்டுமானால் அதற்குக் கொள் வாங்கிக் கொடுத்து காப்பாற்ற வேண்டுமானால், 300 ரூபாய் ஆகும். ஆனால் அவருக்குக் கொடுப்பது 100 ரூபாய். ஆகவே அவர் பாம்புக் கடிக்கு மருந்து கொடுப்பதற்குப் பதிலாக குதிரைக் கடியில் அவர் சாகப் போகிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாடுகளில் இருந்தும், குதிரைகளில் இருந்தும், அது போன்ற மற்ற மற்ற மிருகங்களில் இருந்தும் சீரம் எடுத்தால்தான், அந்த மருந்துகளை உருவாக்க முடியும். கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் ஏராளமான குதிரைகளையும் மாடுகளையும் பார்க்கலாம். அதற்காகத்தான் குதிரையைக் கொடுக்கிறோம். அவர் சவாரி செய்வதற்காக அல்ல. ஆகவே மருந்துகள் எடுப்பதற்காகத்தான் குதிரைகள் வாங்கப்படுகின்றன, அவர்களுக்காக அல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தியர்கள் குதிரை ஏறாமல் மருந்துக்காக அந்தக் குதிரைகள் பயன்படுத்தப் அவர்கள் விளக்கம் தந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வைத் படுகின்றன என்று அறிகிறபோது நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய கருத்தை நான் திருத்திக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாகவும், இந்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாகவும் இந்த மாநிலத்தில் உள்ள விவசாயிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இதற்காக அரசு எடுத்துள்ள நிவாரணப் பணிகள் போதுமானவையாக இல்லை என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு மாநிலம் முழுவதும் இருந்த வறட்சியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு, உற்பத்தி இல்லாமல் குடும்பத்தில் இருக்கக்கூடிய அத்தனை நகைகளையும் விற்று அல்லது அடகு வைத்து பயிர் செய்து இந்த ஆண்டு அறுவடை செய்யலாம் என்று இருக்கும்போது, இந்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக அறுவடை செய்ய முடியவில்லை. மழை மிகுதியின் காரணமாக பயிர் விளைச்சலும் குறைவாக இருந்தது. இதனால் எல்லா இடங்களிலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு எவ்வளவு நிவாரணம் அளித்தாலும் அது தகும். இந்த [illegible] பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இதுவரை இருக்கக்கூடிய

[திரு. ம. சங்கரலிங்கம்] [1984 மார்ச் 26

கடனை ஒத்தி வைத்தால், போதுமானதல்ல. அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால், அத்தனை கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே விவசாய இலாக்காவுக்கு கூடுதலாக ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாய இலாக்காவைப் பொறுத்தவரையிலே, இப்போது ரிசர்வ் வங்கி கடன் கொடுத்து பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்கிற புதிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அவர்கள் மாநிலம் முழுவதும் மெயின் ரோட்டில் இந்தப் பயிற்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பக்கத்திலே போய் பயிற்சி நடத்துவதில்லை. மெயின் ரோட்டிலே படம் வரைவதும், எழுதுவதுமாகத்தான் இருக்கிறார்களே தவிர, விவசாயிகளுக்கு உதவி செய்வதில்லை. ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக்கொண்டால், உதாரணத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒரு கலெக்டர், 2 ஆர்.டி.ஓ-க்கள், 4 டெபுடி கலெக்டர்கள், 4 தாசில்தார்கள் ஆகியோருக்கு ரெவின்யூ இலாக்காவின் கையிலே இருக்கக்கூடிய வெகிக்கிள்கள், ஜீப் கார் உட்பட, 16 தான் இருக்கின்றன. ஆனால் ரிசர்வ் வங்கியினுடைய உதவியோடு நடக்கக்கூடிய ஸ்பெஷல் திட்டத்தை அமுல்படுத்துகிற விவசாய இலாக்காவினிடத்திலே ஒரு ஜாயின்ட் டைரக்டர், 4 டெபுடி டைரக்டர், 7 அசிஸ்டன்ட் டைரக்டர்கள், அதற்குப் பிறகு அக்ரிகல்சரல் ஆபீசர்கள் ஆகியவர்களிடத்திலே இருக்கக்கூடிய வேன், ஜீப் இவைகளையெல்லாம் சேர்த்து 23 இருக்கின்றன. இவர்கள் எல்லாம் மெயின் ரோடு சுகவாசிகளாகத் தாங்குகிறார்களே தவிர, ஒரு இடத்திலேயாவது விவசாயிகளைப் போய்ப் பார்த்து விவசாயிகளுக்கு உள்ள துன்பத்திலே துணை கூட நிற்பதில்லை என்பது என்னுடைய பகிரங்க குற்றச்சாட்டு. நான் தெளிவாகச் சொல்கிறேன். கம்பம் வேலியிலே சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் உள்ள பயிர்கள் அப்படியே பாதித்து விட்டன. காரணம் ஐ.ஆர். 50 போட்டதினால். ஐ.ஆர் 50 என்ற புதிய ரகம் கோடை காலத்தில் முதல் போகத்தில் போட வேண்டியதே தவிர, இரண்டாவது போகத்திலே போடக் கூடாது என்று விதி முறையையே அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது, மழை மிகுதியாக இருக்கக்கூடிய காலத்தில் கம்பத்தில் போடச் சொல்லவேண்டிய அவசியம் என்ன? எல்லா இடத்திலுமே போடச் சொல்லுகிறார்கள். நேற்றுக்கூட வானொலியிலே வேளாண்மைப் பகுதி, வேளாண்மை விவசாயம் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு விவசாயப் பாடத்திலே, முதல் போகத்திலே போட வேண்டும், நல்ல வெயில் இருக்கும்போது போட வேண்டும், இரண்டாவது போகத்திலே போடக் கூடாது, போட்டால் ஆபத்து



1984 மார்ச் 26] [திரு. ம. சங்கரலிங்கம்]

என்று சொல்கிறார்கள். நேற்று நமக்குச் சொல்வதை 6 மாதங்களுக்கு முன்னாலே சொல்லியிருக்கக்கூடாதா? ரிசர்வ் வங்கியிலிருந்து இவ்வளவு கோடிக்கணக்கான கடன் வாங்கி இன்றைக்கு நாம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து, அந்த இலாகாவினருக்குக் கொடுத்து, அவர்களுடைய டெக்னிகல் இல்-அட்வைஸ் (Ill advice) டெக்னிகல் இல்-டீட்ஸ் Technical ill-deeds மூலமாக தவறான வழி காட்டுவதன் மூலம் இந்த விவசாயிகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்கள் காரணம் சொல்லலாம். ஆனால் அவர்களால் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? விவசாயிகள். எனவே விவசாயிகளுக்கு அரசு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய காலத்தில் இருக்கிறது. எந்த விவசாயிகள் ஐ.ஆர். 50 போட்டு இந்தப் போகத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். நாம் நஷ்ட ஈடு கொடுக்காவிட்டாலும் கூட, அதற்கு முன்னால் கொடுக்க வேண்டிய கடனை உடனடியாக நாம் ரத்து செய்ய வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குக் கடன் இருப்பதனால், புதிய கடனுக்கு லாயக்கற்றவர்களாக ஆகிறார்கள். புதிய கடன் கொடுப்பதற்கும் நாம் உதவி செய்ய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அரசு அறிவித்திருக்கிறது. அதிலே ஒன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கு என்று அறிவித்திருக்கிறார்கள். நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். இன்னொன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அது திருநெல்வேலியிலே கொடுத்ததினாலே, பக்கத்திலே வேண்டியதில்லை என்று கூறி, நாங்கள் அதைப் பயன்படுத்துகிறோம். கால்நடைக் கல்லூரி ஒன்று திறப்பதாகச் சொல்லுகிறார்கள். அதையாவது கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், புதிய ரக, உயர்ந்த ரக, பலன் தருகிற, பால் தருகிற பசுக்களை வளர்ப்பதற்குரிய தட்பவெப்ப நிலை தர்மபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களிலே இருக்கின்றது. கன்னியாகுமரியில் நீங்கள் ஒரு மாதிரிப் பண்ணை ஏற்படுத்தி ஒரு கால்நடைக் கல்லூரியை ஏற்படுத்துவதாக இருந்தால்தான், அந்த மாவட்டத்திற்கு அது பயன்படும். அதைப் பயன்படுத்தி வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் முறையாக அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய புதிய ஆராய்ச்சிகள் தெளிவாக முடிவுடைவதற்கு முன்னால் அரசுப் பண்ணைகளிலேதான் ஆராய்ச்சிகள்

செய்ய வேண்டுமே தவிர, விவசாயிகளுக்குச் சிபாரிசு செய்து அவர்கள் பெருமளவிலே பாதிக்கிற ஒரு நிலையை உருவாக்கக் கூடாது என்பதற்கு ஒரு சரியான உத்தரவு போட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு சிறிய மாவட்டம். ஆனால் பார்த்தால் பச்சைப் பசேல் என்று இருக்கிற ஒரு மாவட்டம். மக்களைப் பார்த்தாலும் கூட வளமாக இருக்கிறார்களோ என்று எண்ணுகிற மாவட்டம். ஆனால் ஒவ்வொரு தனி மனிதனுடைய பெர் கேப்பிடா இன்கம்மை நாம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தமிழ் நாட்டிலேயே மிகப் பின் தங்கிய மாவட்டம் தான் அது. விலைவாசிப் புள்ளிகளை எடுத்தால், கோயம்புத்தூருக்கு அடுத்தாற்போல இருக்கக்கூடிய, விலைவாசிப் பட்டியலில் உயர்ந்து நிற்பது கன்னியாகுமரி மாவட்டம். அது நபர் வருமானம் இல்லை. எல்லா மாவட்டங்களையும் விட பின்தங்கி நிற்கக்கூடிய ஒரு மாவட்டம். எனவே தொழில் துறையானாலும் சரி, வருவாய்த் துறையானாலும் சரி, மிகப் பின்தங்கி இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பல முக்கிய வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த நிதிநிலையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக தோவாளை தாலுக்காவில் குடி தண்ணீர் திட்டத்திற்கு உலக்கருவி என்று ஒரு திட்டத்தை நாங்கள் கேட்டு, அதை அரசும் பரிசீலனை செய்து, அது விரைவில் செயல்படுத்தப்படும் என்று பலமுறைகள் உறுதியளித்தும், இன்று வரையில் செயல்படுத்தப்படவில்லை அதற்கு நிதி ஒதுக்கீடும் இல்லை என்பதை அறிகின்றபோது உண்மையிலேயே நான் வருந்துகிறேன். அந்த உலக்கருவி குடி தண்ணீர் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எஞ்சிய தண்ணீரை பாசனத்திற்குக் கொண்டுவர முடியும் என்று சொல்லி, அதையும் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பருவ காலம் என்பது 6 மாதம் பெரும் கோடை, அதற்குப் பிறகு அடுத்து 6 மாதம் தொடர்ந்து மழை. குளிர் இவைகளின் மூலம் மிகவும் பாதிக்கப்படுவது இந்தக் கால்நடைகள். விவசாயிகளின் முதல் சொத்து கால்நடைகள்தான். அந்தக் கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. அந்தக் கால்நடைகளுக்கு காநோய், வாநோய் தென் மாவட்டங்களில் வந்தபோது, அந்தக் கால்நடை மருத்துவ நிலையங்களில் எல்லாம் தடுப்பூசி போடுவதற்கு மருந்துகள் இல்லை. நானே போய் நேரடியாக வெட்னரி ஆஸ்பத்திரியிலே கேட்டேன். அங்கே அவர்கள் நாங்கள் இண்டெண்ட்



போட்டிருக்கிறோம், ஊட்டியிலே இருந்து வேண்டும். இன்னும் 15 நாட்கள் ஆகும் என்றார்கள். 15 நாட்கள் கழித்து வருகின்ற நிலையில், அதற்கு முன்னாலேயே பல ஆயிரக்கணக்கான கால்நடைகள் பாதிக்கப்பட்டுவிடுகின்றன. மிக விரைவிலே பரவுகின்ற நோய்களாக அந்த நோய்கள் இருக்கின்றன. ஆகவே திட்டங்களைப் போடுவதும், நிதிகள் ஒதுக்கிடுவதும், சாதாரண மக்களுக்கு, பாதிக்கப்படுகின்றவர்களுக்கு, விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக்கூடிய நிலையில் பல தடுப்புச் சுவர்களுக்கு அப்பால் நின்றுவிடுகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த நிதிநிலை ஒரு இடைநிலை அல்லது ஒரு கூடுதல் நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும்கூட, அது மக்கள் துயரைப் போக்குகின்ற நிலையிலே, பயன்படுத்துகின்ற நிலையிலே அரசு இயந்திரங்களை நாம் செயல்படுத்துகின்ற அளவுக்கு சம்பந்தப்பட்ட துறையினர் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் விவசாயிகளுடைய குறைகளைப்பற்றி விரிவாகச் சொன்னார்கள். எனக்கு உண்மையிலேயே அதைப்பற்றி ரொம்பத் தெரியாது. இருந்தாலும் கூட அவர்கள் சொன்னதுபோல, வடசேரி கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு மத்தியக் கூட்டுறவு வங்கி கொடுக்க வேண்டிய கடனை 15 நாட்கள் நிறுத்தி வைத்துவிட்டார்கள் சில வாரங்களுக்கு முன்னால். அதற்கு அவர்களால் சொல்லப்பட்ட காரணங்கள் எல்லாம், அங்கே சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதுதான். அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பதிலாக அந்த நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனை நிறுத்தி வைத்திருந்ததன் மூலம் சுமார் 7 ஆயிரம் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டார்கள் கூட்டமாக வந்தார்கள். எல்லோரும் போய்ச் சொன்ன பிறகு, என்னிடத்திலேயும் வந்து சொன்னார்கள். நான் அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்துக்கொண்டு போய் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். "சில தவறுகள் நடந்திருந்தால், சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுங்கள், சஸ்பெண்ட் செய்யுங்கள், அதற்காக இந்த 7 ஆயிரம் நெசவாளர்களைப் பட்டினி போடாதீர்கள்" என்று சொன்னேன். அதற்குப் பிறகு கலெக்டரும் அந்த சென்ட்ரல் பாங்க் செக்ரட்டரியை அழைத்து, எங்களையும் வைத்துப் பேசி உடனடியாகக் கடன் கொடுப்பதற்கு உத்தரவிட்டார்கள். ஏன் இதை நான் சொல்கின்றேன் என்றால், அவர் சொல்கின்ற ஒரு குறை, நெசவாளர்களுக்கு என்று ஒரு வங்கி இருக்க வேண்டும் என்பது. அதிலே நியாயம் இருப்பதுபோல எனக்குத் தெரிகிறது. அப்படி நியாயம் இருக்

கிறதா இல்லையா என்பதைப்பற்றி அரசு நன்கு பரிசீலனை செய்து, தேவையானால் அதையும் அமுல்படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய இந்தக் கருத்துக்களை வழங்கி அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் எனது அணியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசத் தொடங்கி, எனது அணியின் சார்பாக என்றார்கள். அது எந்த அணி என்று அறிய விரும்புகிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள்-பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி சார்பாக எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான, நிதி ஒதுக்கீடுகளை நான் வரவேற்கிறேன். அதனை ஆதரிக்கின்ற அந்த சமயத்தில், ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சென்ற மாதம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான நான்காவது ஊதியக் குழு ஜூன் மாதத்திலிருந்து செயல்படத் துவங்கும் என்ற அறிவிப்பு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அந்த ஊதியக் குழுவைப் பொறுத்தவரையில், இன்னும் இறுதி விவரங்கள், தெளிவான விவரங்கள் கிடைக்கவில்லை. "அதன் தலைவர் யார்? அதன் உறுப்பினர்கள் யார்? எத்தனை மாதங்களுக்குள்ளாக அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும்?" என்ற விவரங்கள் எல்லாம் இன்னும் கிடைக்கவில்லை. என்றாலும்கூட ஒரு கருத்தை நான் ஆசிரியர்கள் சார்பில் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 10, 15 ஆண்டுகளில் ஊதியக் குழு அமைக்கப்பட்டபோதெல்லாம், ஊதியக் குழுவானது 3 இலட்சம் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை, தனித்தன்மை வாய்ந்த ஆசிரியர்களின் பிரச்சினைகளை, சரியான முறையில் ஆராயாமல் அறிக்கை கொடுத்ததனால், இன்றுவரை ஏராளமான முரண்பாடுகளும் குறைபாடுகளும் களையப்படாமல் இருக்கின்றன. அவைகளைப்பற்றி மீண்டும் மீண்டும் விவாதிக்க வேண்டிய நிலையிலும், எடுத்துச் சொல்லவேண்டிய நிலை



யிலும், தீர்க்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டிய நிலையிலும்தான் நாங்கள் இருந்துகொண்டு வருகிறோம். ஆகவேதான் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நான்காவது ஊதியக் குழு அமைக்கப்படும்போது, தமிழகத்திலுள்ள 3 இலட்சம் ஆசிரியர்களுக்காக, தனியே ஓர் ஊதியக் குழுவை அமைத்து தனித்தன்மை வாய்ந்த ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை கொடுத்தால்தான், கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட முரண்பாடுகளையும், குறைபாடுகளையும் தீர்க்க முடியும். வருங்காலத்திலும் புதிய குறைபாடுகளும், புதிய பிரச்சினைகளும் உருவாகாமல் தடுக்க முடியும். ஆகவே ஆசிரியர்களுக்கான தனி ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

அடுத்து, மீண்டும், மீண்டும் இந்த மேலவையில் எடுத்துச் சொல்லப்பட்ட ஒரு கருத்து, அறிஞர் அண்ணாவால் கொண்டு வரப்பட்ட ஆசிரியர்களின் உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வை மாற்றம் செய்து, குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதென்று, அரசு முடிவு செய்து, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதியிட்ட ஓர் ஆணையை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை வெளியிட்டது. இந்த ஆணையின் காரணமாக வந்திருக்கக் கூடிய குறைபாடுகளை மீண்டும் சொல்லப் போவதில்லை. ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, ஆசிரியர்களுக்குப் பல்வேறு பதவி உயர்வு வாய்ப்புகள் போன்றவை மற்றவர்களுக்கு இருப்பதுபோல் இவர்களுக்கு இல்லை என்ற காரணத்தினாலும், இந்த உயர்கல்வித் தகுதிக்கு ஒரு சரியான மரியாதை கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினாலும், இரண்டு ஊக்க ஊதிய உயர்வு முறையை அறிமுகப்படுத்தினார்கள். அதை ஆசிரியர் சமுதாயம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அனுபவித்துக் கொண்டிருந்த சமயத்தில், திடீரென்று இந்த ஊக்க ஊதிய உயர்வை மாற்றி, சரியான முறையில் விவாதம் நடத்தாமல், ஆசிரியர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளாமல், புதிய ஆணையை வெளியிட்டதனால் ஏற்பட்ட பிரச்சினைகளை ஏற்கெனவே அரசுக்கு நாங்கள் உணர்த்தியிருக்கின்றோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும்கூட இது குறித்து இந்த மேலவையில் ஓர் உறுதிமொழியைத் தந்திருக்கின்றார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் பழைய முறையையே எங்களுக்கு நீட்டிக்க வேண்டும். உயர்கல்வித் தகுதிக்காக இரண்டு ஊக்க ஊதிய உயர்வு தருகின்ற அந்தப் பழைய முறையையே தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை, 3 இலட்சம் ஆசிரியர்கள் சார்பாக மீண்டும் நான் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்த விரும்புகின்றேன். இது சம்பந்தமாக ஒரு நல்ல அறிவிப்பை

நடப்புக் கூட்டத்தொடரிலேயே அரசு அறிவிக்குமானால், அது ஆசிரியர் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்தியை நீக்குவதற்கு உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாணவர்களுக்கு, கூடுதலாக பேருந்துக் கட்டணத்தில் அளிக்கப்பட்ட சலுகையை நான் வரவேற்கிறேன். மாணவர்கள் கல்வி நலனுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தச் சலுகையை நாங்கள் வரவேற்கின்றோம். அதை மேலும் தரப்பட்ட மாணவர்களுக்கும், பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களுக்கும் அளிக்க வேண்டும். விரிவுபடுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். அதிலும் குறிப்பாக தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கிராமப்புறங்களிலிருந்து வெளியூர்களுக்குச் செல்லக்கூடிய மாணவர்களுக்கு இப்படிப்பட்ட கட்டணச் சலுகைகளை, பரவலாக அமல்படுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

அதே நேரத்தில், இன்றைக்குக் காலையில் கேள்வி நேரத்தில் நடந்த விவாதத்தின்போது, ஆசிரியர்கள் கிராமப்புறங்களில் சென்று சேவை செய்ய விரும்புவதில்லை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் கூறிய கருத்தையொட்டி நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு கிராமப்புறங்களில் ஓரளவுக்காவது வசதியான வீடுகள் தங்குவதற்கு இல்லாத காரணத்தினால் தான், அவர்கள் வெளியூர்களிலிருந்து போக வேண்டியிருக்கின்றது. இவ்வாறு வசதியில்லாத காரணத்தினால் பணியாற்ற முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. கிராமப்புறங்களில் பணியாற்றச் செல்லக்கூடிய ஆசிரியர்களுக்கு பேருந்துகளில் சலுகைக் கட்டணம் அளிப்பதன் மூலமாக இந்தக் குறைபாட்டை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்ய முடியும் என்று நாங்கள் கருதுகின்றோம். ஆகவே கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, பேருந்துகளில் செல்வதற்கு, மாணவர்களுக்கு அளிப்பதுபோல சலுகை அளித்தால், இந்தக் குறைபாடு ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யப்படும் என்று நான் நம்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அரசு ஊழியர்களுக்குச் சலுகைகளை அறிவிக்கும்போது, அதை அமுல்படுத்தும்போது ஏற்படும் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, அரசு ஊழியர்களுக்கு ஒரு சலுகையை அறிவிக்கும் போது, தனியார் கல்வி நிறுவனங்களிலே, கல்லூரிகளிலே, பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள், அலுவலர்களுக்கும், நகராவைப் பள்ளி ஆசிரியர்



களுக்கும், அலுவலர்களுக்கும் அதை விரிவுபடுத்துவதென்பது பல்வேறு கட்டங்களில் ஒரு நியதியாக அரசு பின்பற்றி வருகிறது. கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக அந்த நியதியைப் பின்பற்றாமல், ஒருசில முக்கிய சலுகைகளை அறிவித்தபோது, அதனை தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்தாமல், மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. விடுமுறை பயணச் சலுகை, வீடு கட்டுவதற்கான கடன் சலுகை அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது, தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கும், நகராவைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அவை விரிவுபடுத்தப்படவில்லை. அதனால் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு கொள்கை ரீதியாக ஒரு முடிவெடுக்கும்போது, அந்தச் சலுகை எல்லோருக்கும் பொருந்துமென்று முடிவெடுத்தால் நல்லது. தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், நகராவைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்காமல், அதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வசதிகளைப் போக்குவதற்கு, அரசு கொள்கை ரீதியாக, தெளிவாக ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே ஓய்வு பெறும்போது, அரசு ஊழியர்களுக்கு அவர்கள் அளிக்கும் தொகையோடு அரசு ரூபாய் 5,000 கொடுக்கும் சலுகையைப் பொறுத்து அரசு ஆணை வெளியிடப்பட்டுவிட்டது. அதிலே தனியார் பள்ளி ஆசிரியர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள், நகராவைப் பள்ளி ஆசிரியர்கள் இடம் பெறவில்லை. முன்பு ஏற்பட்ட குறைபாடு மறுபடியும் ஏற்படக்கூடாது என்பதற்காக ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போதே தெளிவாகச் சுட்டிக் காட்டினோம். இருந்தாலும் 10, 15 நாட்களுக்கு முன்பாக ஆணை வெளியிட்டபோது, அதிலே தெளிவாக 'அரசு ஊழியர்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, நகராவைப் பள்ளி ஆசிரியர்கள் பற்றி ஒரு வார்த்தைகூட அதிலே குறிப்பிடப்படாததால், இந்தச் சலுகைகூட அவர்களுக்குக் கிடைக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி ஒரு குறைபாடு வரக்கூடாது என்ற விவாதத்தில் சுட்டிக் காட்டிய பிறகும், அந்தக் குறைபோடு ஆணை வெளியிட்டிருப்பது எங்களுக்கு வேதனை அளிப்பதாக இருக்கிறது. அந்தக் குறையை நீக்க மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கல்வித் துறையைப் பற்றித் தனியாக விவாதம் நடைபெற இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினரவர்கள் இப்போது பேச வேண்டாமென்று சொல்லவில்லை. பொதுவான விஷயங்களை இப்போது அவர்கள் பேசலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: விடுமுறைப் பயணச் சலுகை, வீடு கட்ட கடனுதவி, ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் உதவித் தொகை ஆகிய சலுகைகளை தனியார் பள்ளி, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும், நகரவைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உடனடியாக வழங்க ஒரு திருத்த ஆணையை வெளியிடுமாறு மாண்புமிகு நிதி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிப் பள்ளிகளுக்கு மானியம் கொடுக்கிறோம். நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளுக்கு அரசு மூன்றில் இரண்டு பங்கு மானியத்தைக் கொடுக்கிறது. மூன்றில் ஒரு பங்கை நகராட்சி ஏற்கிறது. இதனால் ஒழுங்கான முறையில், சரியான தேதியில் நகராட்சி ஆசிரியர்களுக்கு ஊதியம் சென்று சேர்வதில்லை. திண்டிவனம் நகராட்சியில்கூட கடந்த 2, 3 மாதங்களில் முதல் தேதி ஊதியம் கொடுக்காமல், காலந் தாழ்த்திக் கொடுக்கப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை நகராட்சியில் ஊதியம் காலதாமதமாகப் பட்டுவாடா செய்யப்படுகிறது. 2/4 மானியம், 1/3 மானியம் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், நாம் கொடுக்கின்ற 2/3 மானியம் உரிய காலத்தில் நகராட்சிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று அவர்கள் பழியைத் திருப்பிச் சொல்லிவிட்டு, ஊதியத்தைத் தாமதமாகக் கொடுக்கிறார்கள். எனவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் தருவதுபோல, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கான ஊதியத்திற்கு முழு மானியத்தைக் கொடுத்து, சரியான தேதியில் அவர்களுக்கு ஊதியம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வு பெறுபவர்களைப் பொறுத்தவரையில், தற்பொழுது பணியில் உள்ளவர்களுக்கு எவ்வளவு தருகிறோமோ அதுபோல் அகவிலைப் படி ஓய்வு பெறுபவர்களுக்கும் கொடுக்க வேண்டும். பாதி அல்லது சலுகை என்று சொல்லி அகவிலைப் படியைக் குறைத்துக் கொடுப்பது சரி அல்ல. இப்படிச் செய்வதன் மூலம் அவர்களுக்கு நாம் நியாயம் வழங்க முடியாது. ஆகவே பணியில் இருக்கின்றவர்களுக்கு உள்ள அதே அகவிலைப்படி பிரச்சினை ஓய்வு பெறுபவர்களுக்கும் இருப்பதால் சம நீதி வழங்குகின்ற வகையில் ஓய்வு பெறுபவர்களுக்கும் பணியில் இருக்கின்றவர்களுக்கும் வழங்கப்படும் அதே அளவு அகவிலைப்படியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, வேளாண்மைக் கல்லூரியைப் பொறுத்தவரையில், தஞ்சைக்கு அடுத்தபடியாக விவசாய உற்பத்தியில் இரண்டாவதாக முன்னணியில் நிற்பது வட ஆற்காடு மாவட்டம். இந்த மாவட்டத்தில் மிக முக்கியமான தொழில் விவசாயம். ஆகவேதான் இந்த மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். அதற்கேற்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுற்றுலா மையம் என்று ஒன்றும் இல்லை. இன்றைக்கு அங்கு முக்கியமாக இருப்பது கல்ராயன் மலை. அதை சுற்றுலா மையமாக அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏலகிரி மலையை சிறந்த சுற்றுலா மையமாக உருவாக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் சரியான திட்டத்தைத் தீட்ட வேண்டும். இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் இருக்கின்ற இந்த இரண்டு வாய்ப்புகளையும் பயன்படுத்தி இரண்டு இடங்களையும் அரசு சுற்றுலா மையங்களாக மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, கடலூர் கல்வி மாவட்டத்தையும், திருவண்ணாமலை கல்வி மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு கூடுதல் பணிச் சுமை காரணமாக பல்வேறு நிர்வாகச் செயல்பாடுகள் தாமதமாகவும், தேக்க நிலையிலும் நடைபெறுகின்றன. ஆகவேதான் இந்த இரண்டு கல்வி மாவட்டங்களையும் இரண்டாகப் பிரித்து மேலும் கூடுதலாக மாவட்டக் கல்வி அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறேன். அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இரண்டு ஆண்டுகளாக நாங்கள் ஒன்றை வற்புறுத்தி வருகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் சரியான முறையில், திறமையாக தங்கள் கடமைகளை தொகுதி மக்களுக்குச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தந்தத் தொகுதி மக்களிடம் சரியாகத் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஏற்படுகிற குறைகளை அவ்வப்போது சேகரித்து அவைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இப்பணிகளையெல்லாம் சரிவர செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அலுவலகம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை நான் இப்போதும் வலியுறுத்துகிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அலுவலகம் அவசியம் இருக்க வேண்டும். அப்படியானால் தான் அவர்கள்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 26

தங்களுடைய ஜனநாயகக் கடமைகளைச் சரியான முறையில் ஆற்ற முடியும். அது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். பிற மாநிலங்களில் இருக்கிறதா என்று கேட்காமல் இந்த விஷயத்தில் மற்ற மாநிலங்களுக்கு, ஏன் இந்தியாவுக்கே வழி காட்டுகின்ற வகையில் நம்முடைய அரசு இதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது ஏழையெளிய மக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு உதவி புரிவதாக அமையும். அந்த வகையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக தனி அலுவலகம் அமைப்பதற்குரிய வழிவகைகளை அரசு செய்ய வேண்டுமென்று சொல்லி வாய்ப்பு கொடுத்தமைக்காக தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

Thirumathi TARA CHERIAN : Hon. Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity to say a few words. The Hon. the Finance Minister has come up before the House with a Demand for Grant to the tune of Rs. 1,130 crores to meet further expenditure and to meet Supplementary Estimates.

(பிற்பகல் 12-10)

Sir, in the preliminary paragraph of his Speech, the Hon. the Finance Minister has explained how, subject to certain limitations fixed by various Acts and the Constitution, Government can put forward such a Demand for Supplementary Expenditure. I do not know whether there is any provision in any Act by which we may know, in a better way, why some States find themselves in the red, with deficits running to crores of rupees. All the States approach the Planning Commission and ask for more funds to implement various schemes. Some time ago, I read in the newspapers that there was a tussle in a meeting of the Planning Commission because certain States had huge overdrafts. I hope that the Hon. the Finance Minister will be able to explain to us how, within the limitations fixed in the various Acts, he could bring down the overdraft within a permissible limit. Only then, people will be able to know the facts because now there seems to be some criticism about this. Of course, I can understand the situation. We had a drought followed by excess of rains resulting in floods. All these might have resulted in extra expenditure for the State. Yet, in financial matters like having overdrafts, one has to be very careful. I suppose that the authorities of the Finance Department will be able to do whatever is necessary.



1984 மார்ச் 26] [திரு. ப. மாணிக்கம்]

Sir, I was glad when I read in yesterday's paper that the Hon. the Labour Minister had set up a new committee to go into the question of child labour in the State. I think that no allocation has been made in this Supplementary Budget for the welfare of these children. I request the Hon. the Finance Minister to make a small allocation under this Head as a token provision so that when the Committee now appointed by the Government comes up with its recommendations after some months, those recommendations could be implemented. Sir, it is not as if child labour is employed only in the match industry. Children are employed as domestic servants. A five-year-old girl is asked to look after a one-year old baby. She has to be awake throughout the night and look after the baby. The committee should be asked to go into the problems of such children also and find a solution. The various voluntary organisations who are already in the field will also be willing to associate themselves with the work of this committee. The NSS volunteers among the students may also be asked to conduct a survey and come out with statistics as to how many children are employed as child labour in Tamil Nadu. It is a pitiable sight to see small boys working in bunk-shops and sleeping in the streets. Sometimes, these boys are also misused by the goondas. There are several things that can be done for the welfare of these small children. For instance, some night-shelters can be put up for these boys to sleep in the night. Therefore, I feel that the time has come up for the Hon. the Finance Minister to set apart at least a small sum of money for the welfare of these children.

Sir, a sum of Rs. 92.65 crores has been set apart for the Social Welfare Department. I am happy that the Hon. Minister, Thirumathi Gomathi Srinivasan, has been able to fight for it and get this amount allocated. In this connection, I would like to say that only a very few people are sanctioned Old Age Pension in our State. More than anything else, there seems to be a communication-gap in this matter so much so that hundreds of deserving persons are not benefited by the Old Age Pension Scheme. Proper publicity is not being given to this scheme. People think that only certain privileged people, perhaps those belonging to a certain Party or the other, will have more opportunities of getting this Pension. I think that the Legislators and the social welfare organisations have a duty to educate the people on the eligibility norms

for this Pension, who is to be approached for getting this Pension sanctioned, etc. The old people among the poor are today the most economically backward people. With the disintegration of the joint family system, these old people are not wanted by their own children. Therefore, I request the Hon. the Finance Minister to make at least a small allocation for providing some succour to these old people. In this area of work also, the voluntary organisations can render help to the Government. There are many such organisations which deserve to be encouraged and we must trust them. If we do not trust our own people, whom are we going to trust? I hope that something will be done about this.

Sir, I am going from one subject to another in a hotch-potch manner. The Government are going to get World Bank assistance to the tune of Rs. 16.13 crores for starting a sheep rearing unit. Let not the unit be run for a charitable purpose on humanitarian grounds. The technical aspects of running the unit should also be taken into consideration. Some years ago, we were able to bring some sheep from Australia, with the help of a former Australian Parliamentarian and a group of Australian people. In sheep-rearing, we have to overcome several bottlenecks. The price of mutton has gone up by at least three times. Now, it costs Rs. 30 a Kg. There are several schemes and something should be done to link and inter-link them so that the benefits may be derived by the people. This will be fetching a good profit and this should be linked to slaughter houses. In 1957 I suggested and tried to make this one of the works to be done by the Madras Corporation and there is a necessity that the slaughter houses should be maintained properly. I do not think there is one slaughter house worth the name. Something should be done to improve the condition.

Then, coming to the question of money that is given for each destitute, it is most pitiable that only Rs. 18 is given for each destitute child. This amount has gone up to Rs. 35 in some cases. There are different scales and the amount given will not at all be sufficient even for the food of the destitutes. There is one Home in Wall Tax Road and I would like the Hon. Minister to visit and know how they are doing things. There should be a uniform rate of amount paid to the Home for the Destitutes and the Orphanages.





At the end, coming to Tourism, we have done a lot and I am sure that our Hon. Minister Thiru Veerappan is doing very well. But there is still scope for improvement. The development of tourism will not only help us earn foreign exchange but also foster national integration because of domestic tourists coming from different States. Some States are making beautiful publicity and I know the Hon. Minister will not mind my saying it. We should have a non-official committee to go and see what is happening in all our tourist centres and suggest ways for improvement, particularly in the matter of information given to the tourists and in the matter of cleanliness of the area. We can charge extra cost on the tourists for any such services and we must see to it that the tourists cannot easily forget the places of visit. We have plenty of tourist spots and we are allotting a large amount of money for the purpose. There is a lot to be done so as to make our places look like Havoi or Honolulu. We have got all material resources and we must improve them and I am sure our Hon. Minister for Tourism will take note of my request to have a special non-official committee to consider what we can do in this direction.

Then, Sir, coming to the educated unemployed, I am glad that the Government have extended the help to many people. There are more than 5 million graduates who are unemployed and the question of giving help to all of them is a difficult one. Here in this State and Maharashtra State, funds are allotted for the aid of the handicapped people. I feel that one small committee should go into the matter to see how they are helped. I think if a handicapped person gets Rs. 8 per day, he feels satisfied. Therefore, there is necessity for a committee to go into the working of such schemes so that the needy persons may be benefited.

I do not want to talk much about the Social Welfare Board and they have a very small budget. Whatever is done is being done through voluntary agencies. Thousands and crores of rupees are spent by the State Government and the Central Government by way of giving loans. It is not closely followed up and the loans are not being recovered. Even if a sewing machine is given, there is no follow-up programme to see whether the loan given is used for the purpose for which it was intended. It has got to be looked into whether the benefits of the various schemes reach the real beneficiaries. This has got to be looked into.

Sir, so much of money is being asked in the Supplementary Demand. I do not know much about the working of the Legislature. We have got a lot of Committees like the Public Accounts Committee and the Assurances Committee. These Committees are the watch-dogs of democracy. Of course, these Committees present their Reports to the Legislature. But, I do not see why a paper should not be placed on the table of the House setting out the details of the schemes on which the allocations of funds are spent. For instance, we spend a lot of money on river projects and on flood relief work. Why should we not know in which particular district and in which particular village the amount is being spent? I am not saying this for the purpose of criticism. But, we would like to know for certain that the money allocated is being used for the purpose for which it is allocated. If a paper giving the details is placed on the table of the House, it will give a lot of satisfaction to the general public and nobody can point an accusing finger. But, at present, people are ignorant of what is being done.

Sir, a scheme to help the women is mentioned here. The Government have now registered a Corporation for the welfare of women, with a capital of Rs. 1 crore. A few months ago, we knew nothing about the starting of this Corporation. I think that a sudden decision has been taken to start this Corporation. Already we are having enough organisations to look after the welfare of women. Anyhow, I am sure that with the investment of Rs. 1 crore we can make a beginning and give employment to more women.

For implementing the National Rural Employment Programme, an allocation of Rs. 36 crores is asked for. Even an ordinary, uneducated man may like to know the places which are going to be benefited by this scheme. A few days ago, I had been to a village near Coimbatore. There, I met all sorts of people. A Headman was also there in the gathering. When we were talking about the Old Age Pension Scheme, a man said "Amma, we do not know anything about it." Therefore, there seems to be a lack of rapport between the officials and the people in the villages and also a lack of communication. In such areas of work, there are many people who will give their unstinted help if only Government ask for it.



Sir, I would like to say a few words about the welfare of the physically handicapped persons. It is said that three per cent of the posts in Government offices and in the public undertakings are reserved for these persons. But, we do not know who are the ones that are being employed. Is it difficult for us, people in Tamil Nadu, to know what is happening in this field of activity? If we know what is happening, we can bring to the notice of the Government some of the most deserving cases which can come under the category of physically handicapped persons. It is very necessary that the people should be aware of what is being done for them. Otherwise, there will be room for suspicions and doubts that things are not being done properly.

The hon. Member Thiru Ramalingam mentioned a lot about the working of the Co-optex. I am glad that quite a large sum of money is being allocated for the development of the handloom sector. A large portion of this amount will go towards rebate on sale of handloom cloth. I think that there should be a review of this rebate system. When a rebate is given on handloom cloth sold by the Co-optex, why is it not given on the cloth sold by a private man? Moreover, we should see that only good quality yarn is given to the handloom weavers. All of us talk about the welfare of the handloom weavers. But, at the same time, we should also take into account the fact that handloom goods worth crores of rupees remain unsold. What is the reason for this glut? Of course, in times of flood, etc., we distribute this soiled cloth free of cost to the affected people. But, it is not sufficient. We should find a market for the handloom cloth. For that, we should think of having a committee. On that committee, we should have people from Bombay and other places who are fashion-conscious. Somehow, the handloom items produced in our State are not attractive. There may be something wrong with the designing. Perhaps, the designs used by us have become out-moded. It may also be that the price fixed by us for certain items like silk sarees, etc. does not suit the purse of people belonging to the middle-class. For going into all these things, we should have a small committee. The committee should consist of fashion-conscious people, people who know the technical details of handloom weaving and also people who can give advice on financial matters. Nowadays, even college girls have become highly fashion-conscious. Therefore,

we should find a large market for selling the handloom cloth produced in our State. I hope that the hon. Member Thiru Ramalingam will, when he speaks next time, tell us more about what his organization is doing to get over the problem of unsold stocks, how much could be sold and how the designs, etc. could be revolutionized so as to ensure a better market for the handloom cloth.

With these words, I end my speech. Sir. Thank you.

(பிற்பகல் 12-20)

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடு மீது இரண்டு, மூன்று அம்சங்களைப் பற்றி மட்டும் நான் கருத்துக்களைக் கூறி வலியுறுத்த விரும்புகிறேன்.

முதலாவதாக, 1983-84 ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளில் 5 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இதிலே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடந்துள்ள வேலைகள் சரிவர நடைபெற்றிருக்கின்றனவா என்பதை அரசு கவனிக்க வேண்டும். தன்னிறைவுத் திட்டம் பற்றி உள்ள புகார்கள் பல முறை, பல முனைகளிலிருந்து வந்திருக்கின்றன. நகராட்சிகளில் போடப்பட்ட இந்தத் திட்டங்கள் சரிவர நிறைவேறவில்லை என்பதற்கு நிறைய விவரங்களைக் கூற முடியும். ஆனால் அவையின் நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நகராட்சிகளைப் பொறுத்தவரையில், நிதியமைச்சர் அவர்கள் ஒன்று சில குறிப்பிட்ட அதிகாரிகள் மூலமாவது கவனிக்க வேண்டும் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாவது கவனிக்க வேண்டும், இந்த வேலைகள் எப்படி நடந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். இதை நான் வற்புறுத்த வேண்டியதன் காரணம் அரசு தன்னிறைவுத் திட்டம் என்று நிறைவேற்றுவது ஒரு நிவாரண நடவடிக்கை போன்றது. இதெல்லாம் சமீப காலங்களிலே பல தவறுகளுக்கு இடம் தந்து, பலனற்ற முறை ஏற்பட்டு அரசுக்குக் கெட்ட பெயர் வருகிறது. ஆனால் இதெல்லாம் வீணாகப் போகக் கூடாது என்பதற்காக நான் வற்புறுத்துகிறேன். இரண்டாவதாக கைத்தறி சம்பந்தமாகக் கூடுதல் தொகை ரூபாய் 9 கோடி 86 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அந்தத் துறையிலே நேரடியாக சம்பந்தப்பட்டவர்; பல்வேறு விவரங்களைக் கூறினார். ஆனால் ஒரு கருத்தை இறுதியாகச் சொன்னதிலே ஒரு உடன்பாடு உண்டென்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னவென்று சொன்னால், இந்த ரிபேட் தொகை



ஒரு குறிப்பிட்ட காலத்திலே வந்தது. மத்திய அரசினுடைய கொள்கை ஒன்று இருக்கிறது. கைத்தறி சம்பந்தமாக மில் துணியிலிருந்து ஏற்படக் கூடிய போட்டியைக் குறைப்பதற்கும், போட்டியினால் ஏற்படக்கூடிய பாதகங்கள் நெசவாளர்களுக்கு அதிகமாக இருந்த காரணத்தினாலேயும் சில கொள்கைகளை வகுத்தது. நம்முடைய மாநில அரசுகூட கூட்டுறவுத் துறையிலே உள்ள நூற்பாலைகளிலிருந்து வரும் நூல்கள் பெரும்பாலும் நெசவாளர்களுக்கே போய்ச் சேரவேண்டும் என்கிற முறையிலே கொள்கையை வகுத்திருக்கிறது. அதே நேரத்தில் இந்த நெசவாளர்களின் பிரைமரி சொசைட்டி உற்பத்தி செய்து மாநில அமைப்புக்கு அனுப்பிவிட்டு 2 வருஷம், 3 வருஷம் பணம் பெறுவதற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இடைக் காலத்திலே ஒரு பிரைமரி சொசைட்டி கூட்டுறவுத் துறைக்கு வட்டி கட்டிக்கொண்டிருக்கிறது. பணம் தரவேண்டியவர்கள் மாநில சொசைட்டியைச் சேர்ந்தவர்கள். எனவே இதுவும் கூட்டுறவு, அதுவும் கூட்டுறவு, மூன்றிடத்திலும் கூட்டுறவு. இந்தக் கூட்டுறவு முக்கோணத்திலே கஷ்டப்படுவது யார் என்று சொன்னால், நெசவாளர்கள்தான். காரணம் வங்கிகள் எதுவும் உதவி செய்வதில்லை. ஆனால் சரக்கை உற்பத்தி செய்து மாநில சொசைட்டிக்குக் கொடுத்து அவர்கள் விற்பனை செய்தால், பணம் அனுப்புவார்கள். ஆனால் இப்படி விற்பனை செய்து பணம் அனுப்புவதிலே ஏற்படக்கூடிய தாமதத்தின் காரணமாக ஆண்டு தோறும் அவர்கள் வட்டி கட்டவேண்டி இருக்கிறது. பணம் வந்தால் உடனடியாகக் கட்ட முடியும். வருவதிலே தாமதம்; சுற்றுவாவேண்டி இருக்கிறது. இன்னொரு அம்சம் என்னவென்றால், பிரைமரி சொசைட்டி கொடுக்கக்கூடிய துணியை மாநில சொசைட்டி வாங்கி—அதன் விவரம் மாறாக இருக்குமேயானால், நான் திருப்பிச் சொல்லத் தயாராக இருக்கிறேன்—35 சதவீதம் ஹாண்ட்லிங் சார்ஜ் போடுகிறது. அதற்கு மாறாக அதைக் குறைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். எனவே இந்த முக்கோணத்திலே ஒன்று வட்டியும் அவர்கள் கட்டுகிறார்கள். பிரைமரி சொசைட்டிக்கு பணமும் வரவில்லை. இடையிலே அகப்பட்டுக்கொண்ட அல்லது அடியிலே அகப்பட்டுக்கொண்ட பிரைமரி சொசைட்டிதான் கஷ்டப்படுகிறது. இன்னும் உண்மையாகச் சொல்லப் போனால், நெசவாளர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். இந்தச் சலுகையில் ஒரு மாறுதல் தேவை. காரணம் இந்தக் கூடுதல் உதவி தேவை. இந்தத் துறைக்கு நல்ல உதவி தேவை என்று சொல்லும்போது அந்த உதவி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதில் ஒரு மாறுதல் தேவை. பிரைமரி சொசைட்டி நெசவாளர்கள் அதனால் பலன் பெற்று, உற்பத்தியைத் தொடர்ந்து நடத்துவார்கள். காரணம் உற்பத்தியும் செய்துவிட்டு இந்தப் பக்கம் வட்டியும் கட்ட வேண்டியிருக்கிறது. நம்முடைய மாநில அரசு இப்போது புதிதாகப் பரிசீலனை

செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். இங்கே தொகை ஒதுக்கீடு செய்வதன் மூலம் மட்டும் பிரச்சினைக்கு நிவாரணம் ஆகிவிடாது. மீண்டும் மீண்டும் இதில் சிக்கல் வருகிறது. ஒரு டெக்ஸ்டைல் பஞ்சாலைத் துறையிலே அது கைத்தறியாக இருக்கட்டும், ஆலைத் துணியாக இருக்கட்டும், கொஞ்சம் நெருக்கடி இருக்கிறது. அந்த முழு அம்சத்துக்குள் நான் போக விரும்பவில்லை. அது வேறு விஷயம். அது இந்திய அளவிலே எடுத்துக் கொள்ள வேண்டிய பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கியது. ஆனால் கூட்டுறவுத் துறையிலே இதில் ஏற்படக்கூடிய குறைபாடுகளில் ஒன்று ஹாண்ட்லிங் சார்ஜ். இன்னொன்று ரிபேட்டினுடைய பலனை யார் பெறுகி றார்கள் என்பதிலே ஒரு மாறுதல் தேவை. அதை அரசு புனர்பரிசீலனை செய்ய வேண்டும். புனர்பரிசீலனை செய்யும்போது, இன்றைக்கு வடக்கிலே என்ன இருக்கிறது? அத்தகைய மாறுதல் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். ஒரு யோசனை. ஹாண்ட்லிங் சார்ஜ் 35 பெர்சென்ட் என்பதைக் குறைப்பதன் மூலம் 20 பெர்சென்ட் ரிபேட் என்று போடுவதால் உண்மையி லேயே வாங்குபவர்களுக்கு ஆதாயம் குறைவுதான்.

(பிற்பகல் 12-30)

நான் அந்த விவரத்தைச் சொல்லும்போது, இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் அவையில் இருந்தால், அந்த விவரம் தவறாக இருந்தாலும்கூட அவர் அதை மறுக்க முடியும். ஆனால் அவர் இப்பொழுது அவையில் இல்லை. இருப்பினும் எனக்குத் தெரிந்த விவரங்களை நான் சொல்கிறேன். 35 பெர் சென்ட் ஹாண்டிலிங் சார்ஜைப் போட்டு, 20 பெர்சென்ட் ரிபேட் கொடுத்தால் 15 பெர்சென்ட் விலை கூடத்தான் செய்யும். ஆனால் பிரைமரி சொசைட்டி விலைக்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இந்தக் காரணத்தினாலேயே, இன்னொரு நெருக்கடி வருகிறது. பிரைமரி சொசைட்டி மாநில சொசைட் டிக்குக் கொடுத்து பணம் வாங்குவதற்குக் காத்திருப்பதைவிட, சில நேரங் களிலே சில தனியார்களுக்கு விற்பதற்கு அனுமதி வாங்கிக்கொண்டு விற்றுவிடு கின்றார்கள். அதனால் கைமேல் பணம் கிடைக்கிறது. அதற்கு ஆதாரம் இருக்கின்றது. எனவே கூட்டுறவு முறையில் தனியார் ஊடுருவல் ஏற்படுவதற் குரிய பலஹீனம் அங்கே அமைந்திருக்கிறது. ஆகவே அந்த பலஹீனத்தை அகற்றுவதற்கும் அந்தப் பலன் நெசவாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகை யிலே இந்தக் கொள்கையிலே புனரமைப்பு தேவை. நான் ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. புனரமைப்புத்தான் தேவை. Reconstruction of the Policy தான் தேவை. இதை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.



அடுத்து, மற்றொரு முக்கியமான விஷயம். 1982-83, 1983-84 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக ரூபாய் 114 கோடி 28 லட்சம் நம்முடைய அரசுக்குச் செலவாகியிருக்கின்றது. ஆனால் மத்திய அரசு இரண்டு முறையிலே ரூபாய் 77 கோடியே 54 லட்சம் தான் தந்திருக் கிறது. நாம் இன்னும் கூடுதலாகக் கேட்டிருக்கிறோம். இந்த வறட்சி நம்முடைய மாநிலத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரிய சோதனைதான். சுமார் 60, 70 வருடங்களில் இப்படிப்பட்ட வறட்சி வந்ததில்லை. குடி தண்ணீருக்கு மக்கள் அவதிப்பட்டார்கள். அரசு சில வேலைகளைச் செய்துதான் இருக் கின்றது. அந்த வேலைகளில் உள்ள பலஹீனம், குறைகளையெல்லாம் ஒரு அம்சமாக எடுத்து நான் துணை மதிப்பீட்டிலே பேசும்போது பேச விரும்ப வில்லை. ஆனால் நான் அந்த விஷயத்தைப் பற்றி ஏற்கெனவே எடுத்துக் காட்டியிருப்பதால், இப்போது ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை மட்டும் தான் சொல்ல விரும்புகிறேன். ரூபாய் 114 கோடியே 28 லட்சம் அளவுக்கு நாம் செலவு செய்திருக்கிறோம். இரண்டு ஆண்டுகளிலே செலவு செய்திருக் கிறோம். வறட்சி ஏற்பட்டது. அது இயற்கையின் சீற்றம். அடுத்து, ஒரு சீற்றம். இயற்கையினால் ஏற்பட்டது. இயற்கையினுடைய மற்றொரு திருவிளையாடல் வெள்ளம். இதற்கு நாம் கூடுதல் பணம் செலவழித்திருக் கிறோம். நாம் செலவழித்தது ரூபாய் 45 கோடியே 18 லட்சம். இந்த இரண்டுவிதமான இயற்கைச் சீற்றத்திலிருந்து நிவாரணம் அளிக்க, 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் செலவிட்டிருக்கிறோம். இப்போது 1983-84க்குள் ளேயேதான் அந்த வெள்ளமும் வந்திருக்கிறது. எனவே இந்த இரண்டிற்கும் சேர்த்து நாம் செய்திருக்கக்கூடிய செலவினம், கூட்டிப்பார்த்தால் ரூபாய் 160 கோடியே 46 லட்சம் என்று வருகின்றது. இந்தக் குறை மாநிலத்தில் மட்டு மில்லை, மத்திய அரசிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கின்றது. இதைப்பற்றி பட்ஜெட்டில் சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறேன். மீண்டும் இதை துணை மதிப்பீட்டில் நான் வலியுறுத்துவதற்குக் காரணம் வெள்ளத்திலிருந்தும் வறட்சி யிலிருந்தும் நிவாரணமளிக்க நம்முடைய மாநில அரசும் ஏராளமாகச் செலவு செய்கின்றது. எந்தப் பகுதி வறட்சிப் பகுதி, எந்தப் பகுதிகள் வெள்ளம் வரக்கூடிய பகுதி என்ற முறையிலே அரசிடம் ஏராளமான விவரங்கள் இருக் கின்றன. கடந்த சில ஆண்டுகளாக விரிவாகத் தொகுக்கப்பட்ட விவரங்கள இருக்கின்றன. இந்த உபரி நதி நீரை எப்படிப் பயன்படுத்துவது, வறட்சி யுள்ள பகுதிகள் எவை என்று வைத்து பல ஆண்டுகளாகத் திட்டங்களும் போடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிலும் விவரங்கள் இருக்கின்றன. நம் முடைய மாநில அரசிலும் கூட எந்தப் பகுதிகளிலே வறட்சி என்பதைப்பற்றி யும், எப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதும் என்பது பற்றியும் கடந்த காலத்

தில் வகுக்கப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. குடிதண்ணீர் சம்பந்தமாகவும் சரி, காவிரிப் பாசனத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாகவும் சரி, சில திட்டங்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. பழைய திட்டங்களாக இருக்கலாம். ஆனால் ஒன்று. சில நேரங்களிலே, பழைய திட்டங்கள் தப்பல்ல. இன்னும் சொல்லப் போனால், பல்வேறு பழைய மூலத் திட்டங்கள் இன்றைக்கும் நவீன காலத்திற்கு நல்ல பலன் அளிக்கக்கூடிய முறையிலே இருக்கின்றன. காரணம் அவர்களுடைய தூரதிருஷ்டிப் பார்வையினாலே அவர்கள் அத்திட்டங்களை உருவாக்கியிருக்கின்றார்கள். இவ்வளவு செலவு செய்கின்ற நம்முடைய மாநிலத்திலே வறட்சி சில ஆண்டுகளிலே அதிகமாக இருக்கின்றது, வெள்ளம் அதிகமாக இருக்கின்றது, சில ஆண்டுகளிலே வெள்ளம் குறைவாக இருக்கின்றது என்பதை நம்முடைய அவையிலே உள்ள பழம்பெரும் உறுப்பினர்கள் அறிவார்கள். பழைய தலைமுறையினரும் பல வறட்சிகளையும் வெள்ளங்களையும் பார்த்திருப்பார்கள். சில நேரம் வெள்ளம் கூடுதலாக இருக்கிறது, சில நேரம் வெள்ளம், வறட்சி குறைவாகவும் இருக்கின்றது. இது சம்பந்தமாக அரசு ஒரு முழுமையான கொள்கையை உருவாக்குவதிலே கவனம் செலுத்த வேண்டும். எந்தப் பகுதிகளில் அதிகமான வறட்சி வருகின்றது, எந்தப் பகுதி அதிகமான வெள்ளத்திற்குள்ளாகின்றது என்பதையெல்லாம் எடுத்துப் பார்த்து, நம்முடைய பாசன வசதிகள், வடிகால் முறைகள் இவைகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கான ஒரு முழுத் திட்டத்தை, மாஸ்டர் பிளான் என்ற முறையிலே நம்முடைய மாநில அரசே செய்யுமானால், அதனால் நீண்டகாலப் பலன் உண்டு. நமக்கு வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய சேதாரங்கள் குறையும். வறட்சியினால் ஏற்படக்கூடிய நமது சுமையும் குறையும். அவைகளைத் தவிர்த்து தமிழகத்திற்கு அதிகப் பலன் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறலாம். இந்த முறையில் அரசு நிச்சயமாக ஒரு மாஸ்டர் பிளானுக்குக் காலம் தாழ்த்தாமல் முயற்சிக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட உண்மையை ஒரு முறைக்குப் பதிலாக 3 முறை சொன்னால் தான் வலுவேற்படும் என்ற காரணத்தால், நான் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் வந்தபோது, மழை பெய்து, அதன் காரணமாக வெள்ளம் வந்தது மட்டுமல்லாமல், பொதுப் பணித் துறை அதிகாரிகள் கல்லணையில் தண்ணீரைத் திறந்து விட்டதும் ஒரு காரணமாகும். அதேபோன்று வைகையிலும் ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று வத்தராப் பள்ளத்திலே, பிளவைக்கல் ஆற்றிலும் ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று தாமிரபாணி ஆற்றிலும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் ஏன் ஏற்பட்டது என்பதை நிபுணர்களைக் கொண்டு விசாரிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், இந்த வெள்ள நீரைப் பிடித்து வைப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.



வைகை, கடைசியாக கடலில் நேராகக் கலப்பதில்லை. வைகை நீர் இரண்டு பெரிய ஏரிகளில் போய் கலக்கின்றது. ஆர்.எஸ். மங்கலம், இராமநாதபுரம் கண்மாய் ஆகிய ஏரிகளில் போய்ச் சேருகிறது. இராமநாதபுரம் கண்மாயிலிருந்து வெளியேறக்கூடிய நீர் கடைசியாக காரைக்குடிப் பகுதியிலுள்ள கிராமங்களில் பல இடங்களைச் சேதாரப்படுத்தி இருக்கிறது. பாலங்களை உடைத்திருக்கிறது. அவ்வளவு தண்ணீர் வீணாகப் போக வேண்டுமா? அது சம்பந்தமாக இன்னுமொரு கண்மாய் அதன் தென் கிழக்கே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது; வசதி இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அதை ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வறட்சி, வெள்ளம் என்று மீண்டும் மீண்டும் நாம் நிறைவு செய்வது மிகவும் அவசியமாக இருந்தாலும்கூட, அந்தச் செலவுகளை வகைப்படுத்திச் செய்யுங்கள். இந்த அரசு ஒரு மாஸ்டர் பிளான் போட வேண்டியது அவசியமாகும்.

கடந்த 1982-83, 1983-84 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே செலவு செய்திருப்பது 159 கோடி ரூபாய் ஆகும். அவசரத்திற்காக தேவை என்பது ஒரு அம்சம். ஆனால் இந்த அவசரத்திற்கு—அவ்வப்போது கணிசமான தொகை செலவு செய்ய வேண்டியது . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கைமீது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேச இருக்கின்றார்கள். அதற்கு அப்பால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். எல்லாம் சேர்த்து 1½ மணிக்குள் முடித்தால் நல்லது என்று நான் கருதுகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 3 நிமிடத்தில் முடிக்கிறேன். எனவே நான் வலியுறுத்த விரும்புவதெல்லாம் இந்த வெள்ளம் வறட்சியைத் தடுப்பதற்கு மாஸ்டர் பிளான் ஒன்று நம் மாநில அரசிடம் தயார் நிலையில் இல்லாத குறை இருக்கிறது. இதை நான் எடுத்துக் காட்டும்போது இந்தச் செலவிலும் கூட 'மார்ஜினல் வேஸ்டு' வரும். அரசு என்பது மாநிலம் முழுவதும் பரந்த பகுதியிலே நிர்வாகத்தைக் கொண்டு செல்கிறபோது சில சேதாரங்கள் ஏற்படக்கூடும். வாழ்க்கையிலே 'மார்ஜினல் வேஸ்டு' ஏற்படாது என்று சொல்லவில்லை. அதை ஓரம் சார்ந்த சேதாரங்கள் என்று சொல்வதுண்டு. ஆனால் உண்மையிலேயே இந்தக் காரியங்கள் நடைபெறுவதிலே நிறைய தவறுகள் நடந்திருக்கின்றன. சேதாரங்கள் இல்லாமல் தடுத்திருக்க முடியுமா? தடுத்திருக்க முடியும்.

[திரு. ப. மாணிக்கம்] [1984 மார்ச் 26

தஞ்சை மாவட்டத்தில் வெண்ணாற்றில் வெள்ளம் வந்தபோதும், பாமினி ஆற்றில் வெள்ளம் வந்தபோதும் ஊர் மக்கள் திரண்டு அதைத் தடுக்க முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் மணல் மூட்டைகளோ, சாக்குகளோ இல்லை. காவிரியில் வெள்ளம் வந்தால், அதைத் தடுப்பதற்கு மணல் மூட்டைகள் சாக்குகள் நிறைய இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இவைகள் ஒன்றுமே இல்லை. நேரிலேயே பார்த்தோம். அந்த வட்டாரத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இது தெரியும். இப்படிப்பட்ட தவறுகள் கடந்த காலத்தில் நடந்தன; ஆனால் எதிர்காலத்தில் நடக்கக் கூடாது. வெள்ள நிவாரணச் செலவுகளில் நிறைய தவறுகள் நடந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். வெள்ளம் வறட்சிகளைக் குறைக்க மாஸ்டர் பிளான் ஒன்று தயாரித்து நம்முடைய நீரைத் தேக்கி வைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று இவை எல்லாவற்றையும் விட அதிகமாக நான் வலியுறுத்துகிறேன். 'பர்குலேஷன் பாண்டு' குறித்து சில ஆண்டுகளுக்கு முன்னால் பேசினோம். அதை நாம் சரிவரச் செய்யவில்லை. மகாராஷ்டிரத்திலும் கூட விவரம் சேகரித்து வந்தோம். அந்த முறையைக் கையாளலாம். இருப்பினும் இங்கே 'பர்குலேஷன் பாண்டு' போய்விட்டது. அரசே குளம் குட்டைகளைத் தோண்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறதென்று மக்கள் சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 12-40)

குளம், குட்டையைத் தோண்டச் சொல்லியிருக்கிறது. குளம், குட்டை தோண்டி, செலவுக் கணக்கு எழுதுவார்கள். அது குளமாகவும் இராது. குட்டையாகவும் இராது. அதனால்தான் தமிழகத்தின் தேவை அடிப்படையில் இந்த விஷயத்தில் அபிவிருத்தி தேவை என்று வலியுறுத்தி, அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததுபோல, இந்தத் துணை மதிப்பீடு 1130.10 கோடி என்ற அளவிலே அவையின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக துணை மதிப்பீடு என்பது எதிர்பாராத இனங்களுக்காக, செலவினங்களுக்காக என்ற கருத்து மாறி, இன்றைக்கு எல்லா இனங்களின் மீதான கூடுதல் செலவினங்களுக்காக வைக்கப்படும் நிதிநிலை அறிக்கையாக இறுதித் துணை மதிப்பீடு



1984 மார்ச் 26] [திரு. க. இராமமூர்த்தி]

வந்திருக்கிறது. இன்னமும் சொல்லப் போனால், நிதிநிலை அறிக்கை 2,000 கோடி ரூபாய் அளவுக்கு என்றால், துணை நிதிநிலை அறிக்கை 1,100 கோடி ரூபாய் அளவிலே என்று சொல்லுகின்ற அளவுக்கு துணை மதிப்பீடுகள் இருக்கின்றன. இதனால் நிதிநிலை அறிக்கையினுடைய முக்கியத்துவம் அடிபட்டுப் போகிறது என்று பார்க்கும்போது, நிதிநிலை அறிக்கையை ஏற்று, அனுமதி தருகின்ற மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய அவை உதாசீனப்படுத்தப்படுகிறது அல்லது அவர்களது முழுமையான கருத்தை அறியாமல் செலவினங்கள் நடக்கின்றன என்ற உணர்வைத்தான் இது வெளிப்படுத்துகிறது. அதோடு மட்டுமல்ல, இன்னும் ஒன்று. நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறபோது, அதற்கென்றே ஒவ்வொரு இலாக்காவும் 2 அல்லது 3 மாதங்கள் அவகாசம் எடுத்து, தங்களுக்கு எவ்வளவு தேவை என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து, மதிப்பிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் நிதி அமைச்சரவர்கள் நிதியைத் தருகிறார்கள். பல்வேறு பரிசீலனைகளைச் செய்து, சிலவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வது, சிலவற்றை குறைப்பது என்ற அளவிலே அவர்கள் முடிவெடுத்து, நிதிநிலை அறிக்கையைத் தருகிறார்கள். அதற்குப் பிறகு இவ்வளவு பெரிய செலவினத்தை ஒவ்வொரு இலாக்காவும் அரசுக்கு வைக்கிறார்கள் என்றால், நிதித் துறையினுடைய கட்டுப்பாட்டை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்ற நிலை உருவாகிறது. ஒவ்வொரு இலாக்காவும் செலவு செய்துவிட்டு, பின்னால் அதற்கு அனுமதி வாங்கிக் கொள்ள முடியும் என்ற உறுதியோடு செயல்படும் நிலை ஏற்படும்போது, the purpose of the Budget. நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்யும் நோக்கம் பாழ்படுகிறது, நிறைவேறாமல் போகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் 1,130 கோடி ரூபாயிலே 220 கோடி ரூபாய்தான் வருவாய்க் கணக்கிலே வருகிறது; 909 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலே வருகிறதென்று நிச்சயமாகக் கோடிட்டுக் காட்டுவார்கள். மூலதனக் கணக்கைப் பொறுத்தவரையிலும், எந்த அடிப்படையிலே துணை மதிப்பீடு களிலே வருகிறது? கடனுக்காகச் செலுத்தப்படும் வட்டியும், மற்றவையுமாக இணைந்திருக்குமானால், இதை எப்படி முன்கூட்டியே எதிர்பார்க்காமல் போனோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வருவாய்க் கணக்கிலே இருக்கும் 220 கோடியைப் பொறுத்தவரையிலும் இந்த ஆண்டு, இந்த மாநிலம் சந்தித்த மிகப் பெரிய வெள்ளம் வறட்சியாலே, வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டதற்கான நிவாரணப் பணிகள்தான். அதைப்பொறுத்த வரையிலும், நம்முடைய அறிக்கையிலேயே தெரிவித்திருக்கிறார்கள். அந்த [illegible]

கெனவே 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. துயர் தணிப்புப் பணிகளுக்காக வழங்கியுள்ளது. இத்துடன் மேற்கொண்டும் 7.64 கோடி ரூபாய் செலவிட இப்போது அனுமதி வழங்கியுள்ளது. ஆக மொத்தமாக 45 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்குத்தான் அரசின் செலவினங்கள் இதிலே வந்திருக்கின்றன. அரசு 220 கோடி ரூபாய்க்கான செலவினங்களை இங்கே கணக்கிலே சொல்லியிருந்தாலும்கூட, உண்மையிலேயே 45 கோடி ரூபாய் அளவுக்குத்தான் எதிர்பாரா செலவு ஏற்பட்டிருக்கிறது. நிலைமை இப்படி இருக்க, ஒவ்வொரு துறையும் அதிகச் செலவு செய்திருக்கின்றது அல்லது உபரியாகச் செலவு செய்திருக்கின்றது, அல்லது எதிர்பாராமல் செலவு செய்திருக்கின்றது. இப்படி நிதிநிலை தயாரிக்கும்போது, நாம் அதில் அனுமதி வழங்காத சில இனங்களைக்கூட இங்கே கையாண்டிருக்கிறார்கள். இப்படி ஜனநாயக முறைக்குப் புறம்பாக காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதை அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக கூடுதலாக வருவாய் இனங்களைப் பெருக்குவதாக அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக நிதியைச் சேகரிக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான வழிவகைகளை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். வெவ்வேறு துறைகளில் ஏற்படுகின்ற செலவுகளை சிக்கனப்படுத்தல் மற்றும் வரி விதிப்பு போன்ற முறை மூலம் வருவாயை அதிகமாக்க வேண் வேண்டும். இதற்குரிய வழிவகை செய்வதாக மத்திய அரசிடம் நம்முடைய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. இப்படி வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டிருக்கும்போது, திட்டமிடாத செலவினங்களை அதிகமாக்கிக்கொண்டு போவதால் முதலில் அரசின் மீது பளு விழும். கடைசியாக ஏழையெளிய மக்கள் மீது இந்தப் பளு விழும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பளு விலைவாசி ஏற்றத்துக்கும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது.

அடுத்து, இந்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கல்வி பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணா போக்குவரத்துக் கழகம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இரண்டுக்கும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகையில் டிக்கெட் வழங்கியதற்காக 6 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம் மாவட்டத்தில் இருக்கிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இரண்டையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். இனம் பிரித்துக் காட்டப்படவில்லை. எந்தச் சூழ்நிலையில், எப்படி ஏற்கப்பட்டது என்பது போன்ற விபரங்களும் இல்லை.



அடுத்து, கோவாப்டெக்சைப் பொறுத்தவரையில், 10 கோடி ரூபாய் அதிகச் செலவினம் ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில், அவைகளுக்கு ஆகின்ற செலவினங்களை எதிர்ப்பவர்கள் அல்லது அதற்குக் குறுக்கே நிற்பவர்கள் யாரும் இல்லை. அதிலும்கூட சில கருத்துக்களை நான் சொல்வது தவறில்லை என்று கருதுகிறேன். கோவாப்டெக்சைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாம் தருகின்ற மானியத் தொகை 9 சதவிகிதம் தான். ஆனால் கூட்டுறவு நிறுவனம் தங்களுடைய 'ஓவர்ஹெட் சார்ஜ்' மூலமும், விளம்பரப்படுத்துதல் மூலமும் ஏற்படுகின்ற செலவினங்களை எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட 30 சதவிகிதம் லாபம் வைத்து விற்கிறார்கள். இதிலே நான் மற்ற விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. ஆனால் சொசைட்டிகளுக்கு இந்த 9 சதவிகித மானியம் வந்து சேர்கிறது என்பதற்கு பதிலாக, உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கே இந்த மானியம் நேரடியாக வந்து சேரத்தக்க அளவிற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும். அதேபோல மானியங்கள் கொடுக்கின்ற அதே வேளையில் இன்றைக்கு நூலின் விலையும் உயர்ந்திருக்கிறது. அதன் காரணமாக நெசவாளி நேரடியாக பாதிக்கப்படுகிறான். நேரடியாக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. ஆகவே மானியம் அளிப்பது அல்லது நிதி ஒதுக்க மதிப்பீட்டிலே நிதியை ஒதுக்கீடு செய்கின்ற நிலை வருகின்றபோது, நேரடியாக இந்தத் தொழிலிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு, உற்பத்தி செய்கின்ற சங்கங்களுக்கு உதவி கிடைக்க வேண்டும். நேரடியாக என்று நான் சொல்வதால், சங்கங்களுக்கு அதைக் கொடுக்காமல் நேரடியாகவே நெசவாளர்களுக்கு அது செல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

(பிற்பகல் 12-50)

ஆனால் அந்த உற்பத்தி செய்கிறவர்களுக்குப் பலன் கிடைக்கிற வகையில் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் கிராமப்புறச் சத்துணவுக் கூடங்களுக்கு, சமையல் பாத்திரங்கள் வாங்க ரூ. 48.17 கோடி செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எப்படி துணை மதிப்பீட்டில் வந்தது என்று தெரியவில்லை. இந்தக் கோரிக்கை சென்ற ஆண்டு வந்திருந்தால் பரவாயில்லை. இது இப்போது ஏற்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, நிரந்தரமான திட்டமூகி

விட்டது. சென்ற ஆண்டே இதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறோம். இப்போது அடுத்த பட்ஜெட் வந்துவிட்டது. இத்தனைக்கும் பிறகு இன்றைக்கு துணை மதிப்பீட்டில் அதற்கு ரூ. 48.17 கோடி என்ற வகையில் வந்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற பல்வேறு துறையினர் முழுமையாகக் கருத்தூன்றி தயாரிக்கவில்லை என்று தெரிகிறது. இவற்றை மனதில் கொண்டு பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே இதுபோன்ற மிக முக்கியமான இனங்களில்கூட அலட்சியமாக, பரவாயில்லை பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில், அல்லது சட்டமன்றத்தை மதிக்காத முறையில் தயாரித்து அதற்கான டிமாண்டுகளை நிதித் துறைக்குத் தருவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நிதித் துறைக்கென்று சில பொறுப்புகள் இருக்கின்றன. வெறும் பணம் கொடுப்பது என்பது மட்டுமல்ல. நிதி ஒதுக்கீடு செய்வதோடு நிதித் துறையின் கடமை தீர்ந்துவிடாது. அது எப்படி செலவழிக்கப்படுகிறது என்று பார்க்கும் பொறுப்பும் இருக்கிறது. இதுமாதிரி நடக்கிறதா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

உதாரணமாக 'பொது சுகாதாரத் துறை என்ற தலைப்பில், இனம் (1)-ல், 'பாம்பு கடித்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தக் குதிரைகள் வாங்க ரூபாய் 80,000க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது ' புதுப் பணி'' குறித்த செலவாகும். முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 80,000 முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மானிய பீதத்திலிருந்து மறுநிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் நடப்பாண்டுச் செலவு செய்யப்படும் துணை மதிப்பீட்டில் அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. துணை மானியக் கோரிக்கை அனுமதிக்கப்பட்ட பிறகு, இந்த முன்பணம் மேற்படி நிதியில் ஈடுசெய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமே புதுப்பணி குறித்ததாகும். சட்டமன்றத்திற்குத் தந்துள்ள நிதிநிலை அறிக்கையில் இதைத் தந்திருந்தால், எப்படிப்பட்ட விமரிசனத்திற்கு, எப்படிப்பட்ட கேள்விகளுக்கு இது ஆளாகியிருக்கும் என்று முன் கூட்டியே சொல்ல முடியாது. ஆனால் அப்படி வராமல் தவிர்த்ததன்மூலம் இந்தத் துறை மிகப் பெரிய ஒரு விமரிசனத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் என்னால் சொல்ல முடியும். குதிரைகள் வாங்குவது என்பது [illegible]. பாம்புக் கடிக்காக சிகிச்சை செய்ய அந்த டாக்டர் குதிரை மீதேறிச் செல்வாரா, குதிரை வண்டி வாங்கப்படுமா என்பது தெரியவில்லை.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : குதிரைகள் வாங்குவது பற்றிய பிரச்சினை சற்றுமுன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது எழுப்பப்பட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த விளக்கமான பதிலையும் சொன்னார்கள். அப்போது உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : குதிரை வாங்குவதென்றால் குதிரை வண்டி வாங்க வேண்டும். அப்படியானால் குதிரை வண்டியை ஓட்டுபவர் வேண்டும். அவருக்கு எந்தக் கணக்கில் சம்பளம் தருவது போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன.

MR. DEPUTY CHAIRMAN: I think it is better for the Hon. Minister to again explain the matter to the hon. Member.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரச்சினையை அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் எழுப்பியபோது விளக்கங்கள் தந்தேன். குதிரைகளைத் தருவது பாம்புக்கடி மருத்துவர்கள் சவாரி செய்வதற்காக அல்ல. ஆனால் ஒரு குறிப்பிட்ட மருந்தை குதிரையிலிருந்துதான் எடுக்க வேண்டும். கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் குதிரைகள், மாடுகள் போன்ற கால்நடைகளில் இருந்து 'சீரம்' என்ற மருந்தை எடுக்கிறார்கள். அதைக்கொண்டு பாம்புக்கடி மருந்து தயாரிக்க வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் குதிரைகளே தவிர சவாரி செய்வதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மன்னிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து முன்பே அவையில் சொன்னபோது நான் அவையில் இல்லாமல் போய்விட்டேன். மீண்டும் அமைச்சர் அவர்களை பதில் கொடுக்கச்சொன்ன சிரமத்திற்கு வருந்துகிறேன்.

இவைகளெல்லாம் நிதிநிலை அறிக்கையிலேயே வந்திருந்தால், இந்த விமர்சனங்களே வந்திருக்காது. ஏனென்றால் சப்ளிமென்டரியில் பொதுவாக டிடெயில்ஸ் கொடுக்கப்படுவதில்லை. முறையான விவரங்கள் அதில் தரப்படாத காரணத்தால் சில இலாக்காக்களைப் பொறுத்தவரை, அவை தங்களை விமர்சனங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அரசாங்கத்தையே சங்கடத்தில் ஈடுபடுத்தி விடுகின்றன. இறுதியாக அதனுடைய பளு நிதித் துறையின் மேல் வந்து விழுந்துவிடுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1984 மார்ச் 26

அடுத்து, தொழில் என்கிற மானியத்தின் கீழ் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது இனம் 6 என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை ஆலைகள் எவ்வளவு கரும்பைப் பிழிகின்றனவோ அதன் அடிப்படையில் ஆலைகளுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கம் அமைந்துள்ளது என்று போடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் ரூபாய் 2,74,32,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் இதன் மற்ற விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. ஆனால் தமிழகத்தில் இருக்கிற சில அரசு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குத் தாங்கள் தர வேண்டிய மானியத் தொகையை இதுவரை கொடுக்கவில்லை. சில நாட்களுக்கு முன்னே ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின்போதே மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் இதை ஒப்புக்கொண்டு அப்படிப்பட்ட ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாகச் சொன்னார்கள். அது ஒருபுறமிருக்க, இந்த அளவுக்கு அரசாங்கத்திடமிருந்து அந்த ஆலைகளுக்கு உதவித் தொகையும், மானியத் தொகையும் அளிக்கப்படுகிறது என்றாலும்கூட, அந்தத் தொகையைத் தவறாமல் பெறுகிற அந்த சர்க்கரை ஆலைகள் அவர்கள் விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்தை மட்டும் தாராமல் நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றன என்பது எப்படி நியாயமாகும்? ஒரு பக்கம் ஆலைகளுக்கு மான்யங்களும் உதவிகளும் அரசாங்கத் தரப்பிலே இருந்து போகின்றன. ஆ இன்னொரு பக்கத்திலே ஆலையை ஓட்டுவதற்கே காரணமாக இருக்கிற, அதன் முதுகெலும்பாக இருக்கிற, கரும்பை விளைவிக்கிற, அதிலும் நட்டத்தில் அல்லல் படுகிற அந்த விவசாயிகளுக்கு, ஆலைகள் தர வேண்டிய தொகை இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. இது எப்படி நியாயமாக இருக்க முடியும்? அரசிடமிருந்து முறையாக அந்த ஆலைகள் தங்களுக்குச் சேரவேண்டிய மானியத்தை எந்தத் தடையுமில்லாமல் பெற்று வருகின்றன. ஆனால் அதன் தொடர்பாக, கடைசியாகச் சென்றடைய வேண்டிய விவசாயிகளுக்கு அந்தப் பணம் போய்ச் சேருவதற்கு இருக்கவேண்டிய எந்த உத்தரவாதமும் இல்லாத நிலை இருப்பது சரியா என்பதைப் பார்க்க வேண்டும். இதற்காக அரசு ஆலைகளுக்குக் கொடுக்கும் மானியத்தை நிறுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை. குறைந்தபட்சம் அரசு அந்த ஆலைகளைப் பார்த்து நீங்கள் ஏன் உங்கள் கடமையைச் செய்யவில்லை என்றாவது கேட்க வேண்டாமா? இதை நிதி இலாக்கா செய்ய முடியாது என்றாலும்கூட, தொழில் துறை நிதித் துறையைப் பார்த்து பணம் கேட்கிறபோது அதற்கான கோரிக்கையை வைக்கிறபோது, "உங்களுடைய செலவினத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றனவே, இதை ஏன் சரிபார்க்கவில்லை என்று கேட்டிருக்க வேண்டாமா?" என்றுதான் கேட்க விரும்புகிறேன்.



1984 மார்ச் 26] [திரு. க. இராமமூர்த்தி]

இதுபோன்றுதான் பல்வேறு இனங்களைச் சொல்லி அவையில் கூடுதல் மதிப்பீடுகளை வைக்கிறார்கள். கூடுதலாகச் செலவு செய்யாத ஒரு துறைகூட கிடையாது. ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பிரிவுகள் இருக்கின்றனவோ அவ்வளவு பிரிவுகளும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் நிதித் துறையை, நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முறையை, ஏற்க மறுக்கிறார்கள் என்றுதான் பொருள்.

அடுத்து, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளாட்சித் துறையில் பல்வேறு பணிகளுக்காகச் செலவிடப்படும் தொகைக்குக் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. அவைகள் எல்லாம் வளர்ச்சித் திட்டங்கள் என்ற அடிப்படையில் வருகின்றன. தேவையான செலவினங்கள்தான். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. உள்ளாட்சி அமைப்புகள் இன்றையதினம் இயங்காத நிலைமைகள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அத்தகைய உள்ளாட்சி மன்றங்கள் வெறும் அதிகாரிகளாலே நிர்வகிக்கப்படுகின்றன. இதன் காரணமாக அந்த அதிகாரிகள் காண்ட்ராக்டர்களை வைத்துக் கொண்டு—அவர்கள் நாமினேட்டட் காண்ட்ராக்டர்களாக இருந்தாலும் சரி, டெண்டர் காண்ட்ராக்டர்களாக இருந்தாலும் சரி—அவர்களைப்பற்றி முழுமையான விவாதத்திற்குள் போக விரும்பவில்லை. இவர்களை வைத்துக்கொண்டு உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான பணிகளை ஆற்றி வருகிறார்கள். இதனால் பல இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. இது நான் பார்த்த உண்மை. கட்சிகளை எல்லாம் தாண்டி பல இடங்களில் தவறுகள் நடக்கின்றன. அநேகமாக தவறு செய்யாத பஞ்சாயத்து யூனியன்களோ, நகராட்சி மன்றங்களோ இல்லை என்று சொல்லத்தக்க வகையில் அனைத்து இடங்களிலும் தவறுகள் நடைபெறுகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவடையும் வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

திரு. க. இராமமூர்த்தி: நாங்கள் இத்தனை கோடி ரூபாய் இந்த வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடுகிறோம் என்று பெருமைப்பட்டாலும்; அந்த வளர்ச்சிப் பணிகள் உண்மையிலேயே நிறைவேறினால்தான் நாம் முழுமையாகப் பெருமை அடைய முடியும். இதற்கிடையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கான கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும். இந்தக் குழுவில் நான்-அபிசியல்களைப் போட வேண்டும். அதிகாரிகளைப் போட வேண்டும்

[திரு. க. இராமமூர்த்தி] [1984 மார்ச் 26

என்ற விவரத்திற்குள்ளே நான் வரவில்லை. அதிலே ஒரு அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர் இருக்கட்டும்; ஒரு டெக்னிக்கல் ஆபீசர் அல்லது என்ஜினியர் இருக்கட்டும்; இரண்டு, மூன்று மக்கள் பிரதிநிதிகள் இருக்கட்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்று தனித்தனியாக அமைந்தால்தான் அரசாங்கத்தினுடைய பணத்தைக் கொள்ளையடித்து, மக்களுடைய வளர்ச்சிப் பணிகளுக்கு எதிராக, மக்களுடைய திட்டங்களுக்கு எதிராகச் செயல்படும் சமூக விரோத சக்திகளைத் தடுத்து நிறுத்த முடியும். இல்லையென்றால் போடாத ரோடுகளுக்கு, காற்றிலே கலைந்து போகிற ரோடுகளுக்கு, மழை எப்போது வரும் என்று காத்திருந்து தண்ணீர் தேங்கியவுடனே "கிணற்றை நான் வெட்டினேன், குளத்தை நான் வெட்டினேன், தூர் வாரினேன்" என்று சொல்லி, வெறும் சிமெண்ட்டை மொழுப்பிவிட்டு இவ்வளவு ஆழம் போட்டேன் என்று சொல்லி ரிக்குகளை வைத்திருக்கக்கூடியவர்களுடைய டிரைவர்களே கூட மிரட்டி பணம் வாங்கக்கூடிய நிலைமை வந்துவிடும். இந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமானால், உள்ளாட்சித் துறை இயங்காத காரணத்தால், குறைந்தபட்சம் இப்படிப்பட்ட கமிட்டிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்க அரசு முன்வர வேண்டும். அப்படி இல்லையென்றால், மக்களிடம் பல சங்கடங்களுக்கிடையே நாம் வசூல் செய்யும் வரிப் பணத்தை சில துறையினர் ஊதாரித்தனமாக அல்லது நஷ்டம் ஏற்படும் வகையில் செலவழிக்கும் முறையைத் தடுக்க முடியாது. நிதித் துறை பல துறைகளிலே நேரிடையாகத் தலையிட முடியாது என்றாலும், இதுபோன்ற மானியக் கோரிக்கைகள் வரும்போது, அவற்றைத் தடுத்து நிறுத்தி கண்டிக்கிற உரிமை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது இந்த அளவிற்கு துணை மானியக் கோரிக்கை பெரியதாக இருக்கக்கூடாது என்று மற்ற இலாக்காக்களுக்கு அறிவுரை அளிப்பார்கள் என்று நம்பி அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான இறுதி நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிற கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அக்கறையோடும், பொறுப்புணர்ச்சியோடும் சிலபல கருத்துக்களை வழங்கியிருப்பதற்காக அவர்களுடைய அக்கறைக்கும், பொறுப்புணர்ச்சிக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதைவிட இறுதிவரை இருந்து கேட்கிற உறுப்பினர்களுக்கு மேலும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.



1984 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த இறுதி நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிற கோரிக்கைகளின் அடிப்படையில், நடைபெற்று முடிந்த பல்வேறு பணிகள், நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள், அரசு மேற்கொள்ள வேண்டிய தன்மைகள், பாங்குகள், எடுக்க வேண்டிய திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பலதரப்பட்ட கருத்துக்களை மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளைப் பற்றி மட்டுமல்லாமல், துறைகளில் உள்ள நுணுக்கமான பொருள்களைப் பற்றிய கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனைக்கும் விடையளிப்பது இயலாது என்பது அவர்களுக்கே தெரியும். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து தெரிவித்த கருத்துக்களை அந்தந்தத் துறையிலே இருப்பவர்கள் ஆராய்ந்து பார்த்து அதற்கான தக்க நடவடிக்கைகளை பொதுவாக எடுப்பார்கள், அவற்றைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என்பதை மாத்திரம் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஒரு ஐயப்பாட்டை எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கை 1130 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் கோருகிறது என்ற வகையிலே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இவர்கள் பேசியதற்குப் பிறகுதான் இன்னும் கொஞ்சம் தெளிவாக விளக்கத்தைத் தந்திருக்கலாமே என்கின்ற எண்ணம் எனக்கு வந்தது. ஆனால் இதில் உள்ளபடியே நாம் கோருவது எவ்வளவு என்று கேட்டால், சாதாரணமாக ரூ. 1,130 கோடி. இது 1,130 கோடி ரூபாய் என்றால், வரவு செலவுத் திட்டத்தை எப்படி அமைக்க வேண்டும், எப்படி கொடுக்க வேண்டும் என்கின்ற ஒரு நியதியினுடைய அடிப்படையிலே அரசு வகுத்திருக்கின்ற முறையின்படியும், கணக்கு ஆய்வுத் துறையினர் நமக்குத் தந்திருக்கின்ற வகையின்படியும் இதை நாம் வகுத்திருக்கின்றோம். உள்ளபடியே இந்த இறுதி நிதிநிலை அறிக்கையின் மூலமாக இந்த அவையினுடைய அனுமதி பெறவேண்டுமென்று நாம் வைத்திருப்பது வருவாய்க் கணக்கிலே செலவு என்ற வகையில் 303 கோடி 60 லட்சத்து 13 ஆயிரம் ரூபாயும், வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு 41 கோடியே 49 லட்சத்து 68 ஆயிரம் ரூபாயும், கடன்கள் என்ற வகையில் முன் பணம் வழங்குதல், கடனைத் திருப்பிக் கொடுத்தல்

என்ற வகையில் 99 கோடியே 25 லட்சத்து 43 ஆயிரம் ரூபாயும், ஆக ஒட்டு மொத்தமாக 344 கோடியே 45 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய்க்குத்தான் இந்த அவையினுடைய அனுமதியை—பேரவை, மேலவையினுடைய அனுமதியை—இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாகக் கோருகிறேன். ஆனால் 1,130 கோடி ரூபாய் என்று குறிப்பதற்குக் காரணமே நாம் மிகைப் பற்று வாங்கி, அதற்குப் பிறகு நாம் சொல்வதையெல்லாம் செலவுக் கணக்கில் எழுதிக் கொண்டுவர வேண்டுமென்ற ஒருமுறை வகுத்திருப்பதன் காரணமாகத்தான் நாம் அவ்வப்போது மிகைப் பற்று வாங்குவதும், நம்முடைய கையிலே ஓரளவுக்குப் பணம் சேர்ந்த உடனே மறு நாளே ஓரளவுக்கு முடிந்ததைச் செலுத்துவதும், வாங்குவதும் செலுத்துவதும், வாங்குவதும் செலுத்துவதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதன் காரணமாக, அப்படிச் செலுத்துகின்றபோது அதை நாம் செலவுக் கணக்கிலே வைத்து கணக்கு எழுத வேண்டுமென்ற ஒருமுறை இருப்பதன் காரணமாக இந்த நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே பார்த்தோமானால், 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து மார்ச் திங்கள் 20 ஆம் நாள் வரையில் நாம் மிகைப் பற்று என்ற அளவுக்கு வாங்கியது 687 கோடியே 23 லட்ச ரூபாய். நாம் மிகைப் பற்று வாங்கினோம். ஏனென்றால் அதில் 612 கோடியே 96 லட்ச ரூபாயை நாம் அவ்வப்போது திருப்பிக் கட்டிக் கொண்டு வந்திருக்கின்றோம். ஆனால் செலவுக் கணக்கு என்று வருகிற போது, அதையெல்லாம் காட்ட வேண்டிய அவசியம் வருகின்ற காரணத்தினால், இதனைச் சரிக்கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால் நிதிநிலை அறிக்கையில் 2900 சொச்சம் கோடி ரூபாய்க்கு 1984-85 ஆம் ஆண்டுக்குப் போட்டிருக்கும்போது, இந்த 1,130 கோடி ரூபாய் 3-ல் இரண்டு பகுதி ஆகிறதே என்றெல்லாம் கணக்குப் போட்டுச் சொன்னார்கள். அவ்வளவு பெரியதாக இருந்தால் அது பெரியதுதான். ஆனால் 344 கோடி ரூபாய்க்குத் தான் அனுமதி கேட்கிறோம். அதற்கு என்னென்ன காரணங்கள் என்பதும் இங்கே விளக்க அறிக்கையிலே மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இந்த மிகைப் பற்று வாங்க வேண்டிய அவசியம் தேவையில்லை என்கின்ற அளவுக்கு எடுத்துச் சொன்னார்கள். கூடுமான வரையில் மிகைப் பற்று வாங்காமலேயே ஒவ்வொரு மாநில அரசும் தங்களுக்குக் கிடைக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து செலவினத்தையும் சரிப்படுத்திக் கொண்டு போகின்றதிலே தான் ஒவ்வொரு மாநிலமும் முயன்று வருகின்றது. ஆனால் எதிர்பாராத செலவுகளும், அவசியமான செலவுகளும், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டிய செலவுகளும், மற்றவைகளும் ஏற்படுகின்றபோது, தேவையைவிட அதிகமாக வாங்கவேண்டிய அவசியம் வருகிறது. இந்த



ஆண்டு மட்டும் நாம் கவனிப்போமானால், கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் பற்றாக்குறை பட்ஜெட்டைத் தான் வைத்திருக்கின்றனவே தவிர, ஒரு மாநிலம் கூட உபரி பட்ஜெட் வைத்ததாகத் தெரியவில்லை. பற்றாக் குறை வரவு செலவுத் திட்டத்தை வைத்திருக்கிற மாநிலங்கள் பலவும் வரிப் பணம் போட்டு ஓரளவுக்கு ஈடு கட்டவேண்டுமென்கின்ற முறையில், நாமும் 57 கோடி ரூபாய்க்கு இங்கே வரியைப் போட வேண்டிய அவசியத்திற்கு ஆளானோம். ஆனால் மேற்கு வங்காளம் 85 கோடி ரூபாய்க்கும், கர்நாடகம் 80 கோடி ரூபாய்க்கும், நான்கு நாட்களுக்கு முன்னால் மத்தியப் பிரதேசம் 113 கோடி கோடி ரூபாய்க்கும் வரி போடவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக் கின்றன. காரணம் என்னவென்றால், நான் நிதி நிலை அறிக்கையிலே தெளிவுபட எடுத்துச் சொன்னமாதிரி நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, செலவழிக்கின்ற பெரும் பகுதி, அதிகாரம் மற்றவைகளையும் மத்திய அரசிடத் திலே வைத்துக்கொண்டிருப்பதனால் இத்தகைய இடர்ப்பாடுகள் எல்லாம் மாநில அரசுக்கு ஏற்படுகின்றன. ஆகவே நமக்கு அதிகச் செலவு ஏற்படு கின்றபோது, சமாளிப்பதற்கான பல்வேறு வழி வகைகள், மத்திய அரசுக்கு இருக்கின்றன. சமாளிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு இருக்கிற ஒரே வழி ரிசர்வ் பாங்கைத் தவிர, கடன் வாங்குவதைத் தவிர, மாநில அரசுக்கு வேறு வழியே இல்லை. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், 1983 ஆம் ஆண்டு வரையிலும் நாம் மிகைப் பற்று வாங்காமலேயே தான் சரிக் கட்டி வந்திருக்கிறோம். கூடுமான வரையில் சரிக்கட்ட வேண்டுமென்றுதான் எல்லா மாநில நிதி அமைச்சர்களும் விரும்புகிறார்கள். ஆனால் அவசியமான போது, வேறு வழி இல்லாத வகையில், வாங்கவேண்டிய அவசியமும் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நான் நிதிநிலை அறிக்கையிலே தெளிவு படுத்திக் காட்டியிருக்கிறேன். அதற்கு முன்னால் நாம் வாங்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், 22 மாநிலங்களில் வாங்காத மாநிலமாக கடந்த 5, 6 ஆண்டு காலத்திற்கு மேலாக இருந்தது தமிழகம்தான். அதை ரிசர்வ் வங்கியினுடைய கவர்னர் மன்மோகன்சிங் அவர்களும் பாராட்டி யிருக்கிறார்கள். அதற்கு முன்னர் இருந்த கவர்னர் அவர்களும் பாராட்டி அவர்களும் கூட பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் இப்போது கடைசியிலே யிருக்கிறார்கள். இந்தியாவினுடைய நிதி அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி பல்வேறு மாநிலங்கள் என்று இருந்தாலும், அதில் சுட்டிக்காட்டக்கூடிய அளவுக்கு 5 மாநிலங்கள் மிகைப் பற்று வாங்கவேண்டிய தன்மைகளில் வந்தாலும், ஓரளவுக்கு அதைச் சரிக்கட்டவேண்டிய அவசியத்தில் இருக்கின்றன.. நாமும் இருக்கின்றோம். நாம் மிகைப் பற்று வாங்க வேண்டிய அவசியம் வந்தது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்

களுக்கும் தெளிவாகத் தெரியும். நாங்களும் பல தடவைகள் விளக்கிக்காட்டியிருக்கிறோம். கடுமையான பஞ்சம் இரண்டு ஆண்டு காலமாக ஏற்பட்டது. அதுவும் 75 ஆண்டுக் காலத்திலே, 13 ஆண்டுக் காலத்திலே, ஏற்பட்ட கடுமையான பஞ்சம் மிகக் கடுமையான பஞ்சம். அது மட்டுமல்ல, அதையொட்டி கடும் வெள்ளமும் ஏற்படக்கூடிய அளவுக்கு பெருமழை பெய்தது. இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தஞ்சை மாவட்டங்களில் ஒரு பங்கு பெய்ய வேண்டிய இடத்திலே, 4½ மடங்கு 4¾ மடங்கு, 5 மடங்கு பெய்ததாக இப்போது நமக்குக் கணக்கு வந்திருக்கின்றது. அந்த அளவுக்குப் பெருவெள்ளமும் ஏற்பட்டு, அதனால் ஏற்பட்ட சேதங்களையும் மற்றவைகளையும் நாம் சமாளிக்க வேண்டி வந்தது. ஆகவே வறட்சிப் பணிக்கு மாண்புமிகு உறுப்பினர் கணக்கு எடுத்து தெரிவித்த மாதிரி நாம் ரூ. 114 செலவழிக்க வேண்டிய அளவுக்கு வந்து, நிவாரணப் பணிகளை ஏற்றுக்கொள்ளவும், வறட்சி நிலையை சமாளிக்கவும் வேண்டியிருந்தது. யாருக்கும் அரிசி இல்லாத நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக பெருஞ்செலவு என்று தனியாக அதற்கு ஒரு ரூ. 100 கோடி அளவுக்கு உணவு வழங்கு துறையிலே நாம் செலவழித்து, ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களிலிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் உணவுப் பொருள்கள் கொண்டு வரவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. அதனால் அரிசி விலை சிறிது கூடுதலாக ஆயிற்றே தவிர, அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்க வேண்டும் என்ற அளவில் நாம் அதை சமாளிக்க வேண்டியதாக இருந்தது. எதிர்பாராத செலவிலே கிருஷ்ணா ஆற்று தண்ணீர் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது அதற்கு ஒரு 30 கோடி ரூபாய் செலவழிக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது. அண்மையிலே இப்படிப்பட்ட நெருக்கடிகளை சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டினேன். அதற்கு நாம் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், திட்டச் செலவுகளை நாம் குறைத்திருக்க வேண்டும் அல்லது வேறு பல வளர்ச்சித் திட்டங்களை நாம் குறைத்திருக்க வேண்டும். கிராமப்புற ஒருங்கிணைப்புத் திட்டம் அல்லது வேலை வாய்ப்புத் திட்டம் அல்லது ஊரக வளர்ச்சித் திட்டம் இவைகளை நாம் குறைத்திருக்க வேண்டும். அப்படி குறைத்திருப்போமானால், நாம் இந்த மிகைப் பற்று வாங்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. ஆனால் எந்த ஒரு திட்டத்தையும் நாம் குறைக்காமலே வந்தோம் என்பது மட்டுமல்ல, நமது நிதிநிலையில் குறிப்பிட்டுக் காட்டியதற்கு இணங்க 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 3,150 கோடிக்கு அனுமதி அளித்திருந்தாலும், 3,600 சில்லரை கோடி ரூபாய் அளவுக்கு





திட்டத்திலே செலவழிக்கிறோம், நாம் கூடுதலாக ரூ. 511 கோடிக்கு மேல் செலவழிக்கின்ற அளவுக்கு, திட்டத்திலே குறை ஏற்படக்கூடாது என்று இருக்கிறோம். 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும் சரி, அதை நடைமுறைப்படுத்துவதிலும் சரி, இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்கள் அனைத்திலும் முன்னணியிலே இருப்பதிலே தமிழகம் தான் இருக்கின்றது என்று மத்திய அரசிலும், அதற்குரியவர்களும் பாராட்டத் தக்க அளவுக்கு நம்முடைய பணிகளை ஆற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே அதிலேயெல்லாம் நிதி வெட்டுப்படவே இல்லை. வறட்சிப் பணிகளையெல்லாம் முறைப்படி நடத்தியிருக்கிறோம். நான் கோடிட்டுக் காட்டியதைப் போன்று சில இடங்களிலே 100 பங்குக்கு மேல் 150, 170, 130, 125 பங்குகூட, 100 பெர்செண்ட்டுக்கு மேலாக 125 பெர்செண்ட் அல்லது 130 பெர்செண்ட்கூட சில இனங்களிலே நாம் சரிக்கட்டியிருக்கிறோம். ஆகவேதான் இந்த மிகைப் பற்று வந்தாலும் திருப்பிச் செலுத்திவிட முடியும் என்கின்ற அளவுக்கு நாம் இருக்கின்றோம். அண்மையிலே திரு. பிரணாப் முகர்ஜி அவர்களிடத்திலே சென்ற டிசம்பர் மாதம் ரூ. 113 கோடி ரூபாய்க்கு மிகைப்பற்று இருந்தாலும், இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொன்ன பிறகு, அவர்கள் தெளிவாக விளங்கிக் கொண்டு அதற்குப்பிறகு "மார்ச் 31 ஆம் தேதி அளவிலே ஒரு 60 கோடி ரூபாய் அளவுக்காவது மிகைப் பற்று இருக்கின்ற அளவுக்கு கொண்டு வருவீர்களானால், மிகவும் நல்லது" என்றார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டு, அதைச் செய்வோம் என்றும் சொல்லி, அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து அதிலும் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையோடு இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ரூ. 113 கோடியாக இருக்கும் மிகைப் பற்றை பல இனங்களிலே நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சியின் காரணமாக ரூ. 60 கோடிக்குக் கொண்டு வந்து சேர்க்கக் கூடிய அளவிலே இருக்கிறோம். இப்படித்தான் 5 மாநிலங்களைப் பொறுத்த வரையிலும், அந்த வாக்குறுதியைத் தந்து ஓரளவுக்குச் செய்துகொண்டு வருகிறார்கள். அந்த வகையிலேதான், இந்தச் செலவினங்கள் ஏற்படுகின்ற தன்மைகள் இருக்கின்றனவே தவிர, வேறு வகை இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்கு ஊக்க உதவி தருவதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். முன்பும் இதைப்பற்றிப் பிரச்சினை எழுப்பியபோது, நான் சொன்னேன். எனக்குச் சரியாக நினைவில்லை. அதைப் பார்த்து அது என்ன என்பதைத் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, அறிவு

அண்ணா காலத்திலே கொடுக்கப்பட்ட ஊக்கம் அறவே பறிக்கப்பட்டது, 'புல் ஸ்டாப்' வைக்கப்பட்டது என்ற அளவுக்குச் சொல்லி, அவர்கள் முடித்துவிட்டார்கள். அடுத்து "அப்படி அறிஞர் அண்ணா கொடுத்தது பறிக்கப்பட்டு இருந்தால், அரசு அதை மீண்டும் கவனிக்கும், அதைப்பற்றிப் பார்க்கிறோம்" என்று நான் சொன்னேன். அல்லது அவர் "அது அப்போது பறிக்கப்பட்டது, இப்போது ஒட்டுமொத்தமாக, தொகையாக எங்கள் கையிலே தருகிறார்களே" என்று அன்றைக்குச் சொல்லியிருந்தால், "இதுவா, அதுவா, என்பதைப் பற்றி நாம் யோசிக்கலாம்" என்றுகூட சொல்லியிருப்பேன். எனக்கு அது நினைவில்லை. அதைப்பற்றிப் பார்த்துச் சொல்கிறேன் என்று சொன்னேனே தவிர, அது பறிக்கப்படவில்லை. ஆனால் முறை மாற்றப்பட்டிருக்கிறது. முறை மாற்றப்பட்டதன் காரணமாக இரண்டு இன்கிரிமெண்ட், மூன்று இன்கிரிமெண்ட் என்று இருக்கிற நிலைமைகள் மாறி, அவற்றை ஒட்டு மொத்தத் தொகையாகத் தருகின்ற ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த முறை மேற்கொள்ளப்பட்டதென்பதை நாம் காண்கிறோம்.

5-9-1983 தேதியிட்ட பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையினுடைய ஆணை 843—இன் கீழ் அரசு ஊழியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிப்பதற்குப் பதில், மொத்தத் தொகையாக அளிக்கலாம் என்று அவர்கள் செய்த சிபாரிசின் மீது மேற்படி ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

"The scheme makes juniors in a particular category acquiring special qualifications eligible for more pay than the seniors in the same category. It is, therefore, felt that a lump-sum amount, without regard to the scales of pay, can be granted to those acquiring the special qualifications, dispensing with the present scheme of grant of advance increments.

The Government, therefore, direct that the present scheme of sanction of advance increments to Government servants for any purpose shall be dispensed with, with immediate effect. This order will not, however, affect those Government servants who have already availed themselves of the benefit of advance increments. The lump-sum amount has been fixed equivalent to the monetary value of the rate of increment for three years in the case of one advance increment, double the amount for two advance increments and treble the amount for three advance increments."





என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது எதிலே வந்ததென்று சொன்னால், பல்வேறு துறைகளில் உள்ள அரசு ஊழியர்களில் பலர் தங்கள் தகுதியை வளர்த்துக் கொண்டிருக்கிற நிலையில், அவர்கள் தகுதிக்கேற்ப இரண்டு அல்லது மூன்று ஊக்க ஊதிய உயர்வு தரப்பட வேண்டுமென்று வருகிற போது, சில சமயங்களில் ஜூனியர்ஸ் அதிகமான சம்பளம் வாங்கி, சீனியராக இருப்பவர்கள் குறைந்த சம்பளம் வாங்குகின்ற நிலை வருகிறது. மேலே இருப்பவர்களுக்கு, "கீழே இருப்பவர்கள் தம்மைவிட அதிகச் சம்பளம் வாங்குகிற நிலை இருக்கிறதே, மேலே இருக்கிற தங்களுக்கு அவமானமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஈடாக தங்களுடைய சம்பளத்தையும் உயர்த்திக் கொடுங்கள்" என்று கோரிக்கைகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததன் காரணமாக, நிர்வாகச் சீர்திருத்தத் துறையினர் ஆராய்ந்து பார்த்து, இதைச் சீர்திருத்துவதற்காகத்தான் 'லம்ப் சம்' ஆகக் கொடுத்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தது.

அந்த வகையிலே பல்வேறு துறைகளில் இருக்கிற நிலைமைகளுக்கேற்ப இந்தத் தொகை வழங்கப்படுகிறது. வேளாண்மைத் துறையில் போஸ்ட் கிராஜுவேட்சுக்கு இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமெண்ட்டுக்குப் பதில், லம்ப் சம்மாக 5,000 ரூபாய் தருவதென்றும், வேளாண்மைத் துறை சப்ஜெக்டில் பி.எச்டி. பட்டம் பெற்றிருப்பவர்களானால் மூன்று அட்வான்ஸ் இன்கிரிமெண்ட்டுக்குப் பதிலாக 7,500 ரூபாயும் தந்துவிடுவதென்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு துறைக்கும் இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் எல்லாம் பலமுறை அரசு ஊழியர்களுக்கு ஈடாக தங்களையும் கருதுங்கள் என்றும், அரசு ஊழியர்களுக்கு என்ன என்ன செய்கிறீர்களோ அனைத்தும் தங்களுக்கும் செய்யுங்கள் என்றும் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததன் காரணமாகத்தான், இந்த வகையிலும், அவர்களுக்கு என்ன செய்தோமோ அதையே ஆசிரியர்களுக்கும் செய்வது சரி என நினைத்து, ஆசிரியர்களுக்கும் அதுபோல் நிர்ணயித்திருக்கிறோம்.

மற்ற துறைகளில் செய்திருப்பதுபோல், ஆசிரியர்களுக்கு வேண்டாம் என்றால், ஒன்று கல்வித் துறையைப் பிரிக்க வேண்டும். அரசாங்கத் துறையில் இருக்கிற வேறுபாடுகள் எல்லாம் கல்வித் துறைக்கு வராது. 'அனாமலி' எல்லாம் மற்ற துறைகளில்தான் வருகிறது. கல்வித் துறையில் இல்லை என்று சொன்னால், கல்வித் துறையைத் தனியாகப் பிரித்து என்ன செய்ய வேண்டுமென்பதை கல்வித் துறை தான் ஆராயவேண்டும். எனவே அரசு எடுத்திருக்கிற முடிவில் அநியாயம் இல்லை. நியாயமிருக்கிறது. ஆசிரியர்கள்,

தங்களைத் தனியாகத்தான் கருத வேண்டுமென்று சொன்னால், அப்படிப் பட்ட நிலைமை என்னவென்று பார்த்து, அதில் இப்படிப்பட்ட 'அனாமலி'கள் எல்லாம் வாராதென்ற சூழ்நிலை ஏற்படுமானால், அந்தத் துறையினர் ஆராய்ந்து அந்த வகையிலே ஒரு செயற்குறிப்பு போட்டு அனுப்புவார்களே யானால், அதை நிதித் துறை ஓரளவிற்கு ஆராயக் கூடும்.

இப்போதுகூட 7,600 ரூபாயை அவர்கள் கையிலே கொடுத்தோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை வங்கியில் பிக்சட் டெபாசிட்டிலே போட்டால், மாதம் ஒன்றுக்கு, 70 ரூபாய் கிடைக்கும். பெர்மெனன்ட் பிக்சட் டெபாசிட்டில் போட்டால், மாதம் 120 ரூபாய் கிடைத்துக்கொண்டே இருக்கும். அதை நாங்கள் கொடுத்த இன்கிரிமெண்டாகவே ஆசிரியர்கள் நினைத்து மாதா மாதம் வாங்கிக்கொண்டு வந்தார்களானால், இதில் அதிக பெனிபிட்கூட இருக்கக் கூடும். ஏனென்றால் நீண்டகால பிக்சட் டெபாசிட்டில் பத்தாண்டு களுக்கு அந்த வங்கியிலே தொகையைப் போட்டாலும், 14½, 15 சதவிகிதம் வட்டியுண்டு. சாதாரணமாக ஒரு வருஷத்திற்குப் போட்டால் 10 சதவிகிதம் வட்டி வரும். நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் போட்டால் 14½ சதவிகிதம் வட்டி வரும். தனியார் அமைப்புகளிலே 15, 16 சதவிகிதம் தருகிறார்கள். லாங்டேர்ம் பிக்சட் டிபாசிட்டில் போட்டால், சொளையாக 120 ரூபாய் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும். எனவே 'லம்ப் சம்' வாங்கிக் கொள்வதுதான் நல்லது. அதனால் யோசித்துப் பாருங்கள். கல்வித் துறைக்கு அது பற்றி கோரிக்கை அனுப்பினால், அது ஆராயும். அவர்கள் இதுபற்றி செயற்குறிப்பை அனுப்பினால் அரசு அதுபற்றி தக்க முடிவெடுக்கும்.

(பிற்பகல் 1-20)

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் அறிவிப்புக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு ஜுனியர், சீனியர் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஜுனியர், சீனியர் பிரச்சினை இரண்டாவது ஊதியக் கமிஷன் பரிந்துரை வந்தபோது, ஏற்பட்ட பொழுது. Inc n·ive Incr m n·) காரணமாக சீனியர் குறைவாகவும், ஜுனியர் அதிகமாகவும் ஊதியம் வாங்கும் நிலை ஏற்பட்டபோது, அரசு ஆணை ஒன்றை வெளியிட்டது. ஜுனியர் எவ்வளவு வாங்குகிறாரோ, அந்த அளவிற்கு சீனியருக்குக் கொடுத்து ஊதியத்தை சமப்படுத்திவிட்டால், அதனால் ஏற்றத் தாழ்வு இல்லாமல் செய்து, முரண்பாட்டை நீக்க அருமையான ஆணையை அரசு வெளியிட்டது. அதைப்போல இப்போதும் வெளியிட்டால், ஜுனியர், சீனியர் ஊதியங்களில் உள்ள ஏற்றத் தாழ்வை நீக்கிவிட



முடியும். ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமான தொகையைவிட, இரண்டு இன்சென் டிவ் இன்கிரிமென்ட் விரும்புவதற்குக் காரணம், மாதா மாதம் அவர்களுக்கு வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட இந்த ஊதிய உயர்வு கை கொடுக்கிறது என்ப தோடு, பின்னால் அவர்கள் ஓய்வு பெறும்போது பணிக்கொடை, ஓய்வூதியம் போன்றவற்றுக்கு இதையும் சேர்த்துக் கணக்கிடுவதால், ஓய்வு பெறும்போது பண ஆதாயம் கிட்டுகிறது என்பதுதான். அந்த அடிப்படையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த முறையை ஆசிரியர்கள் விரும்பு கிறார்கள். ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிக் காக நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில், மேற்சொன்ன இரண்டு கருத்துக் களையும் சேர்த்து பரிசீலித்து, நல்ல முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் தனிப்பட்ட முறையில் கணக்கு போட்டுச் சொல்கிறார். அரசு பொதுவாக எல்லோருக்கும் நலம் பயக்கும் ஒட்டுமொத்தமான முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் சொல்லியதுபோல, கீழே ஒருவர் இன்சென்டிவ் இன்கிரிமென்ட் வாங்கினால், சீனியருக்கும் அதை ஈடுசெய்யலாமென்றால் என்னவாகும்? 500 பேர்கள் வேலை செய்யும்போது, ஜுனியர் இரண்டு பேர் பி.எச்டி. வாங்குவார்கள். அவர்களுக்கு இன்சென்டிவ் இன்க்ரிமென்ட் கொடுக்கும்போது, அவர்களுக்கு சீனியர்களான 498 பேர்களுக்கும் ஊதியத்தை உயர்த்துவது என்றால், என்ன வாகும்? நானும் சீனியர்தான், எனக்குக் கொடுங்கள் என்று ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தால், திட்டம் நல்ல திட்டம்தான், அரசுக்கு இன்னும் பல கோடி ரூபாய்களைச் செலவழிக்க வேண்டிவரும். ஏன் இந்த முடிவெடுத் தோம் என்பதைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் தன்மைகளைப்பற்றித் தனியாக அணுக வழி வகைகள் இருந்தால், இது தனிப்பிரச்சினை என்று கொண்டுவந்தால், அதைக் கல்வித் துறை ஆராயட்டும் என்று சொன்னேன். அதற்குப் பிறகு நிதித் துறைக்கு வந்தால், அதில் நியாயம் இருந்தால், நிதித்துறை அதைப்பற்றி ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு கருத்துக்களையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேளாண்மைத் துறைக்கு ஏராளமாகச் செலவழிக்கிறோ மென்றாலும், பணிகள் முறைப்படி நடக்க வேண்டும்; வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள விவகாரங்கள் இருக்கும் நிலைமைகளைச் சிறப்பாக அறிந்துகொண்டு, பணியாற்ற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதே நோக்கத்தைத்தான் அரசும் கொண்டிருக்கிறது. ஏராளமான அதிகாரிகளை வைத்து, ஏராளமான பணிகளை ஆற்றும் துறை வேளாண் துறைதான். அந்தத் துறை வளர வேண்டுமென்பதற்காகத்தான் அதிலே எல்லாவற்றையும் செய்கிறோம். மாநில அரசும், மத்திய அரசும் பல்வேறு வகைகளில் சலுகைகளை—மானிய உதவி, கடன் உதவி—அளிப்பதால்தான், ஓரளவுக்கு இந்தியா இதிலே ஓரளவுக்கு செல்ப்சப்பிஷியன்ஸி அடையத்தக்க அளவுக்கு இருக்கிறது. நம்முடைய மாநிலத்தின் ஜனத்தொகை இரண்டரை கோடியாக இருந்தது இப்போது ஐந்து கோடி என்று ஆனாலும், அதே அளவுக்கு உணவு உற்பத்தியிலும் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். சாதாரண காலமாக இருந்து, பெய்ய வேண்டிய மழை பெய்து, நீர்ப்பாசன முறைகள் ஒழுங்காக இருந்து, பயிர்கள் நல்ல முறையில் இருந்தால், தமிழ் நாடு 'மார்ஜினலி சர்ப்ளஸ் ஸ்டேட்' தான். கர்நாடகா மார்ஜினலி டெஃபிசிட் ஸ்டேட்; கேரளா டெஃபிசிட் ஸ்டேட்; ஆந்திரா சர்ப்ளஸ் ஸ்டேட். 57 இலட்சம் டன் எல்லா தானியங்களும் சேர்ந்து உற்பத்தியானது, இப்போது 90 இலட்சம் டன் அளவுக்கு உற்பத்தியாகிறது. கம்பு, கேழ்வரகு, சோளம், நெல் எல்லாம் சேர்ந்து அந்த அளவுக்கு வந்திருக்கிறது. இருந்தாலும் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் படிக்காத விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தத்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வானொலியில் சொன்ன காரணமே ஆங்காங்கு இருக்கிற கீழ்மட்ட அதிகாரிகள் அந்தக் கருத்தை ஏற்று விவசாயிகளிடம் வெளிப்படுத்தத்தான். அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அதிகாரிகளும், கீழ்மட்டத்தில் உள்ளவர்களும் கடைப்பிடித்து இனிமேல் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றுவார்கள்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களைத் தவிர வேறு உறுப்பினர்களுக்கு இதைப்பற்றிச் சொல்வதற்கான வாய்ப்பு இன்றைக்கு இல்லாததால், அவர்கள் மாவட்டத்திற்கு வேண்டுமென்று கேட்க முடியாமல் போய்விட்டது. (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த விஷயத்தில் துணைத் தலைவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் அதற்குரிய வசதிகள் ஒருங்கிணைந்து வருகின்ற மாவட்டம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இன்ன மாவட்டம் என்று சொல்லவில்லை. அந்த வகையில் அது கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போகலாம், போகாமலும் இருக்கலாம். அல்லது வேறு மாவட்டத்திற்குப் போனாலும் போகலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க வேண்டுமென்பதற்கான என்னென்ன காரணங்கள் உண்டோ அவற்றை எல்லாம் அவர்கள் எடுத்து வைத்தால், அந்தத் துறை ஆராய்ந்து பார்த்து அந்த மாவட்டத்திற்கு வரலாம். ஆனால் இன்னும் அதுபற்றி முடிவு செய்யவில்லை.

அடுத்து, வேளாண்மைக் கல்லூரியைப் பொறுத்தவரையில், முதலிலே ஏற்படுத்துகின்ற கல்லூரியைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் துறை மானியம் சட்டமன்றப் பேரவையில் வந்தபோது, அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திருநெல்வேலியிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதோடுகூட மற்றும் இரண்டு மாவட்டங்களிலே இரண்டு கல்லூரிகள் வருமென்றும் சொன்னார்கள்.

தனியார் கல்லூரிகள், தனியார் பள்ளிகள் போன்றவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். தனியார் கல்லூரிகள், பள்ளிகள் என்று வருகின்றபோது, அவைகளில் பணியாற்றுபவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல் பென்ஷன் இன்னும் பல்வேறு சலுகைகள் கொடுப்பதில்லை என்கிற நிலை வருகிற காரணத்தால், அரசு என்கிற முறையில் ஒன்றை அறிவிக்கும்போது, பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. அதுபற்றிக் கல்வித் துறையைத் தனியாக ஆராயச் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொருவரிடமும் மாதந்தோறும் இருபது ரூபாயை வசூலித்துவிட்டு ஓய்வுபெறும்போது, அவர்கள் கட்டிய தொகை, மற்றும் அதற்கான வட்டி, அதோடு கூட 5000 ரூபாய் சேர்த்துத் தரலாம் என்று வைத்திருக்கிறோம். 40 ஆண்டுகள் பணியாற்றுபவர் இதன் மூலமாக 52 ஆயிரம் ரூபாய் மொத்தத்தில் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் தனியார் பள்ளி, தனியார் கல்லூரி இவைகளைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களைப் போன்று மாதந்தோறும் பிடித்தம் செய்து தருவார்களா அல்லது 'லம்ப்' ஆகத் தருவார்களா என்பதையெல்லாம் குறித்து கல்வித் துறையை ஆராயச் சொல்லியிருக்கிறேன். பல்

வேறு கட்டங்களில் தனியார் கல்லூரிகள், தனியார் பள்ளிகள், போன்றவற்றில் பணியாற்றுகிறவர்களுக்கும், அரசுக் கல்லூரிகள், பள்ளிகள் போன்றவைகளில் பணியாற்றுபவர்களுக்குத் தருகின்ற பலன்களைத் தரவேண்டு வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால் நடைமுறையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தால், சரியாகச் சிக்கல்கள் இல்லாத வகையில் கல்வித் துறை ஆராய்ந்து சொல்கிற நிலை ஏற்படுமேயானால், அதுபற்றி அரசு ஆராயும். அதுபற்றி நாளையதினம் கல்வித் துறை குறித்த விவாதம் நடைபெறவிருப்பதால், விளக்கங்கள் பெற வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் இது சம்பந்தமாக விளக்கங்களைக் கேட்டுப் பெறலாம். நடைமுறைச் சிக்கல்கள், சங்கடங்கள் இல்லாமல் இருக்குமேயானால், அரசு பொறுப்பேற்க முடியும். அதுபோல் இந்தத் தொகையை வசூலிப்பது, திருப்பிச் செலுத்துவது போன்றவற்றில் நடைமுறைச் சங்கடங்கள் இல்லையென்றால், நிதித் துறை இதைக் கவனிப்பதிலே ஆட்சேபணை இல்லை. கல்வித் துறையையும் ஆராயச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ந்து முடிந்ததற்குப் பிறகு தக்க முடிவுகள் எடுக்கப்படும். பாசன வசதிகளைச் சீரமைப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொன்னார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 10 ஆயிரம் ரூபாய் ஓய்வு பெறுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் அளிப்பதுபற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்து சந்தேகத்திற்கு இடமான கருத்து. ஏற்கெனவே அரசு செய்த கொள்கை முடிவின்படி, அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பெறுவதைப்போன்று பென்ஷன், கிராஜுவிட்டி மற்றும் இறந்து போனால் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை போன்ற அனைத்து சலுகைகளையும் தனியார் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களும் அனுபவித்துக்கொண்டு தான்

(முற்பகல் 1—30)

வருகிறார்கள். இப்போது அவர்களுக்கு முழு மானியத்தையும் நாம் கொடுப்பதால், அந்தக் கட்டுப்பாட்டை நாம் வைத்துக்கொள்ள அரசுக்கு உரிமையிருக்கிறது. ஏற்கெனவே பல்வேறு முடிவுகளில் நாம் அதைச் செயல்படுத்திக் காட்டியிருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தில் அரசு தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தி தனியார் பள்ளி, தனியார் கல்லூரி, நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரி



யர்கள், அலுவலர்கள் [illegible] இந்த 10 ஆயிரம் ரூபாய் அளிக்கும் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதில் எந்தத் தடையும் இருக்காது என்று நம்புகிறேன். ஆகவே கடந்த கால அனுபவத்தின் அடிப்படையிலே இதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முற்றிலும் [illegible] நடைமுறைப்படுத்தி ஒழுங்குபடுத்தி ஒரு சீர்நிலைக்குக் கொண்டு வந்ததைப் போல இதையும் கொண்டுவர முடியும் என்று சொல்கிறார்கள். அதிலே ஐயப்பாடு இருக்கிற காரணத்தால்தான், அதைக் கல்வித் துறை தனியாக ஆராய வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால், அவர்கள் சொன்ன ஏற்பாட்டின்படி இதில் சிலபல கட்டுத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்த முடியும் என்கிற நிலையில் கருத்து வேறுபாடு இல்லை. இதை நடைமுறைப்படுத்துவதற்கான [illegible] வழிமுறைச் சொல்வார்களானால், அப்படித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தனியார் கல்லூரி ஆசிரியர்கள், அரசினர் கல்லூரி ஆசிரியர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் பல்வேறு வகைகளிலே ஒரு பொதுவுடைமைத் தன்மையைக் கொண்டு வருவதில் எப்படி அரசு ஈடுபட்டதோ அப்படியே ஈடுபடும். தாங்கள் அதற்கான விளக்கங்கள் கேட்டிருக்கிறேன். விளக்கங்கள் வந்த பிறகு அதற்கான முடிவு எடுக்கப்படும்.

மழைத் தண்ணீரை வீணாக்காமல் வடிகால் போன்றவைகளுக்குப் பயன்படுத்த சீரமைக்கப்பட்ட திட்டங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அரசு நீண்ட பெருங்காலமாக அந்த அக்கறையைக் கொண்டிருக்கிறது. எக்காரணத்தைக் கொண்டும் பெய்கிற தண்ணீர் வீணாகாமல் இருக்க வேண்டுமென்பதிலும் அதன் மூலமாக வடிகால் போன்றவைகளால் கடலுக்கு அந்தத் தண்ணீர் போகக்கூடாது என்பதிலும் அக்கறை கொண்டிருக்கிறோம். இந்தியாவிலேயே நீர்ப்பாசன முறை என்று பார்க்கிறபோது, தமிழகத்தில்தான் 95 சதவீதம் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு விடுகிற அளவுக்கு நீண்ட பெருங்காலமாக இந்த நீர்ப்பாசனத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இன்னும் கூட அதைச் செம்மைப்படுத்த முடியும் என்று வல்லுநர்கள் வெளியே [illegible] சொல்லியிருக்கிறார்கள். [illegible] தண்ணீரைக் குறைவாகப் பயன்படுத்தி, நீர்ப்பாசன முறைகளைச் செம்மைப்படுத்தி அதன் மூலம் அதிகப் பயன் பெறத்தக்க வகையில் வழிமுறைகளைப் பயன்படுத்தி, பல்வேறு திட்டங்கள் போட்டு மத்திய அரசின் முடிவுகளின் [illegible]

மூலமும் முடிந்தால் உலக வங்கி உதவியின் மூலமும் சீர்படுத்துகிற முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்போல எல்லா இடங்களிலும் நிலைமைகள் ஏற்பட வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். சில இடங்களில் ஏரிகள், குளங்கள் வெட்டுவதால் நீர்ப்பாசனம் இல்லாவிட்டாலும் கூட சாதாரணமாகக் கிணற்று நீர் ஊற வசதியாக இருக்கும். அன்றைக்கு ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் மதுராந்தகம் தொகுதியில் மட்டும் 143 ஏரி இருக்கிறது என்று அமைச்சர் சொன்னார். அதேமாதிரி ஒவ்வொரு இடத்திலும் நீர்ப்பாசனம் இல்லாவிட்டாலும், தண்ணீரை அதிலே தேக்கி வைத்தால் ஆங்காங்கு இருக்கிற கிணறுகளில் தண்ணீர் ஊறிவரும். ஆகவேதான் நீர்ப்பாசன முறைகளை எவ்வளவுக்கெவ்வளவு செம்மைப்படுத்த முடியுமோ அவ்வளவுக்குச் செய்து, பெய்கிற நீரை வீணாக்காமல் தடுத்து, அதைச் செம்மைப்படுத்துவதற்கான கூறுபாடுகளை இந்தத் துறையினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அரசுகூட அதற்கான யோசனைகள் சொல்லி திட்டங்கள் தீட்டியிருக்கிறது. "ஸ்விட்சர்லாந்து நாட்டில் என்ன செய்கிறார்கள் என்றால், பெரு மழை பெய்தால், மழைத் தண்ணீரை 300 அடிக்கு 400 அடிக்குக் கீழே பூமியில் கொண்டு போய் விட்டுவிடுகிறார்கள். பிறகு தேவைப்படுகிறபோது 600 அடிவரை கூட பம்ப் செய்து அதை வெளியே மீண்டும் எடுத்துப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. சென்னையிலே கூட மீஞ்சூர், பொன்னேரி போன்ற வடசென்னைப் பகுதியில் அதிகமாகக் கீழ் நீரோட்டம் இருக்கிற காரணத்தால், பெருந்தொழில்கள் வட சென்னைப் பகுதியில் மணலி போன்ற இடங்களில் ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. அதைப்போலவே திருவான்மியூர் பகுதியில் இருக்கிறது. சென்ற ஆண்டு சென்னை பூராவும் வறட்சி ஏற்பட்டபோது, திருவான்மியூர் பகுதி தண்ணீர்தான் நமக்குத் துணை நின்றது. அதனால்தான் அதைச் சமாளிக்க முடிந்தது. அப்படிப்பட்ட பகுதிகளில் இன்னும் நன்கு ஆராய்ந்து பெய்கிற வெள்ளத்தைப் பயன்படுத்திடும் நோக்கமும் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூடுதல் செலவுகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். பல்வேறு கூடுதல் செலவுகள் வருகின்றனவென்றால், சில செலவுகளுக்கான திட்டங்கள் தீட்டி எவ்வளவு செலவாகக்கூடும் என்ற யூகத்தில் திட்டம் போடுகிறோம். பிறகு மதிப்பீடு போடுகிறோம். அதற்குப் பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடுகிறோம். பிறகு 'ஆக்சஸ்' என்று இங்கே சட்டமன்றத்தில் காட்டுகிறோம். அப்படி வந்தாலும் புதுப் புதுத் திட்டங்களை மேற்





கொள்ள வேண்டியிருக்கிற நிலையில் அதற்காக அந்தந்தத் துறைகளில் தனியாகப் பணம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. அடுத்த நிதியாண்டு வருகிற வரையில் காத்துக் கொண்டிருந்தால், வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேறாது. அந்த நிலை ஏற்படும். இன்னும் சொல்லப்போனால், 1974-75 ஆம் ஆண்டு, 1975-76 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட திட்டங்களுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டது என்று இப்போது பணம் கேட்கிற நிலைமையும் இருக்கிறது. "40 லட்சம் ஒதுக்கினீர்கள். இப்போது 65 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது, மீதிப் பணத்தைத் தாருங்கள்" என்று கேட்டு ரிவைஸ்டு எஸ்டிமேட் வருகிறது.

அப்படி 1977-78-ல் போடப்பட்ட திட்டத்திற்குக் கூடுதலாக ரூ. 25 லட்சம் இந்த ஆண்டு அனுமதி செய்ய வேண்டி வருகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் வருவதால்தான் கூடுதல் செலவே வருகிறது. எனவே அவை குறித்த அனைத்து விவரங்களும் இங்கே குறிப்பில் தரப்பட்டிருக்கின்றன. பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி இங்கெல்லாம் அதைப்பற்றிய அனைத்து விவரங்களும் ஆராயப்படுகின்றன. இதற்குப் பிறகுதான் பொதுக் கணக்குக் குழுவுக்குப் போய் இது ஆராயப்படுகிறது. அக்கவுண்டன்ட் ஜெனரல் இதை ஆராய்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய வினாக்களைப் போன்றே அக்கவுண்டன்ட் ஜெனரலும் எழுப்புகிறார், பொதுக் கணக்குக் குழுவும் எழுப்புகிறது. அதற்கெல்லாம் சமாதானம் சொல்லித்தான் தீர வேண்டும். சமாதானங்கள் சரியாக இருந்தால்தான், பொதுக் கணக்குக் குழு ஏற்றுக்கொள்ளுகிறது. ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்கள் அதைப்பற்றிக் கருத்து சொல்லி இனிமேல் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று சிலபல யோசனைகளைச் சொல்கிறார்கள். எனவே சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்காது இங்கே எந்தக் காரியமும் நடக்காது, நடக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் அவைகள் மேலும் செம்மைப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் நாம் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். அந்த நோக்கங்கள் நிறைவேறத்தக்க அளவுக்கு அரசு அதிகாரிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து பொறுப்பாற்ற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு துறைகளைப் பற்றி எடுத்துச் சொன்ன கருத்துக்களில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து ஏதுமில்லை. அவைகளையெல்லாம் வரைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலும், நாங்கள் இங்கே தெரிவித்திருக்கிற உணர்வின் அடிப்படையிலும் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் நடந்துகொள்வார்கள்.

[1984 மார்ச் 26

என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் துணை நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி எனவே, இந்த அவை அதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 27—3—1984 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-36)

4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

137. 1982-83 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

138. 1982-83 ஆம் ஆண்டுக்குரிய அரக்கோணம் ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

139. 1981-82 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு கெமிக்கல்ஸ் புராடக்ஸ் நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

140. 1982-83 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஏழாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

141. 1982 ஆம் ஆண்டுக்குரிய பல்லவன் பொறியியல் கழகத்தின் எட்டாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].



1984 மார்ச் 26]

142. 1979-80 ஆம் ஆண்டுக்குரிய தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஆறாவது ஆண்டு அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) ஆம் பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

143. 1981-82 ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளுக்குரிய தணிக்கை அறிக்கையும் 31—3—1982 ஆம் நாளன்றுள்ள ஐந்தொகைக் கணக்கும் (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்குதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

144. 1983 ஆம் ஆண்டிற்குரிய சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

145. 1983 ஆம் ஆண்டுக்குரிய கும்பகோணம், சோழன் சாலை போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

146. 1982-83 ஆம் ஆண்டிற்குரிய பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

147. 1983 ஆம் ஆண்டிற்கான காரைக்குடி மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் முதல் ஆண்டு அறிக்கை (தமிழ்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

55. வேளாண்மைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85.

56. 1984-85 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை பற்றிய செயல் விளை முறைத் திட்டம் (தமிழ் & ஆங்கிலம்).

57. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

58. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை 1983-84.

59. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

60. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்கு வரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

61. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்கு வரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை 1983-84 (தமிழ் & ஆங்கிலம்).

62. 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு துறைமுகத் துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை (தமிழ் & ஆங்கிலம்).

63. மானியக் கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் (தமிழ் & ஆங்கிலம்).

64. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

65. எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ் & ஆங்கிலம்).

66. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் (1979-80) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

67. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77, 1977-78 ஆம் ஆண்டு களுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கையில் அடங்கி யுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவ னங்கள் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை.

68. பொதுத் துறை நிறுவனங்களின் செயலாக்கத்தினை விரிவான மதிப் பீடு செய்வதற்காக தணிக்கைக் குழுக்கள் (Audit Boards) ஏற்படுத்துவது குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை.

69. இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்கு



வரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

*70. 1984-85 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி (தமிழ் & ஆங்கிலம்).

*71. 1984-85 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (தமிழ் & ஆங்கிலம்).

@72. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு (தமிழ் & ஆங்கிலம்).

@73. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆகியவை பற்றிய செயல்முறைத் திட்டம் (ஆங்கிலம்).

---

* 23—3—1984 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

@ 23—3—1984 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு

[190 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தற்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 210 மெக்காவாட் திறன் கொண்ட மூன்று பிரிவு கொண்ட இந்நிலையத்திற்கு, கிழக்கிந்திய நிலக்கரி சுரங்கங்களிலிருந்து, ஹால்டியா துறைமுகம் வழியாக மாதம் ஒன்றுக்கு 2,20,000 டன், மற்றும் ஜெகநாத் சுரங்கங்களிலிருந்து பாரதீப் துறைமுகம் வழியாக, 20,000 டன் நிலக்கரியும் கிடைக்க வேண்டும். ஆனால் பாரதீப் துறைமுகம் மூலம் இதுவரையில் நிலக்கரி கிடைக்கவில்லை. ஜனவரி 1983-லிருந்து ஜனவரி 1984 முடிய இந்நிலையத்திற்கு 26.80 லட்சம் டன் நிலக்கரி வரவேண்டும். ஆனால், மொத்தம் 17.12 லட்சம் டன் மட்டும், அதாவது மாதம் ஒன்றுக்கு சராசரி 1,81,726 டன் நிலக்கரிதான் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையத்தின், இயந்திரங்களையும், தளவாடங்களையும் சீர்திருத்தம் செய்ததன் பலனாக ஜனவரி 1984 முதல் இந்த மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் உச்ச நிலையை எட்டியுள்ளது. இந்த அதிகபட்ச திறன் காரணமாகவும் தரம் குறைந்த நிலக்கரியின் காரணமாகவும் இந்நிலையத்தின் நிலக்கரி உபயோகம் மிகவும் அதிகரித்தது. இதனால் இந்நிலையத்தின் மூன்று பிரிவுகளும் நாள் ஒன்றுக்கு 9,000 டன் நிலக்கரி, அதாவது மாதம் ஒன்றுக்கு 2,70,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இச்சூழ்நிலையின் காரணமாக தற்போது நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

3. ஹால்டியா துறைமுகத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளின் காரணமாகவே தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு மிகவும் குறைவான அளவில் நிலக்கரி வந்து கிடைக்கிறது. கடந்த ஒரு வருட காலமாக, நிலக்கரி வந்து கிடைப்பதில் ஏற்படும் இடையூறுகளைப்பற்றி மத்திய அரசின், சம்பந்தப்பட்ட எல்லா துறைகளின் அனைத்து அதிகாரிகளுடனும் இதுகுறித்து தொடர்பு கொள்ளப்பட்டது. ஆயினும் எவ்விதமான திருப்திகரமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, கையிருப்பு வைத்துக்கொள்ளும் பொருட்டு ஐந்து லட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் இவ்வரசு கேட்டு வருகிறது. ஆனால் இதற்கு மத்திய அரசு இதுகாறும் அனுமதி அளிக்கவில்லை.



நிலக்கரி போதுமான அளவு கிடைப்பது குறித்து சம்பந்தப்பட்ட மத்திய அரசு அதிகாரிகளோடு தீவிரமாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பலனளிக்காத நிலையிலே இருந்தன. இச்சூழ்நிலையில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி பற்றாக்குறை நிலை மேலும் அதிகரித்த பொழுது, பொதுப் பணித் துறை செயலாளர் மற்றும் மின் வாரியத் தலைவரோடு 7—2—1984 அன்று நான் டெல்லி சென்று, மத்திய எரிசக்தி, கப்பல் போக்குவரத்து, நிதி முதலிய அமைச்சர்களுடனும், எரிசக்தித் துறை இராஜாங்க அமைச்சருடனும் மற்றும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன். இதன் விளைவாக மாதம் ஒன்றுக்கு ஹால்டியா துறைமுகம் வழியாக 1,60,000 டன், பாரதீப் துறைமுகம் வழியாக 40,000 டன், மற்றும் சான்டா நிலக்கரி சுரங்கங்களிலிருந்து 10,000 டன் நிலக்கரி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குமுறைகூட தூத்துக்குடி மின் நிலையத்தின் முழு தேவையையும் பூர்த்தி செய்யாது. தூத்துக்குடி மின்நிலையம், நிலக்கரி மற்றும் எரி எண்ணை கொண்டு இயங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்து அதன்மூலம் நிலக்கரி கிடைக்கப் பெறும் வரையிலும், தேவையான எரி எண்ணெயை சலுகை விலையில் வழங்கும்படியும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மேற்கண்ட நடவடிக்கை தொடர்ந்து எடுத்து வருவதோடு தற்போது கிடைக்கப்பெற்றுவரும் நிலக்கரி மற்றும் எரி எண்ணெயைப் பயன்படுத்தி, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து, எந்தவித தடையும் ஏற்படாமல், தொடர்ந்து முழு அளவில் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

[27 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கடந்த 1979-81 ல் தற்காலிகமான பட்டதாரி ஆசிரியர்களுக்கு என தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வு ஒன்றினை நடத்தியதில் 1,143 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1—4—1970 முதல் 3—3—1973 முடிய 'பி' பிரிவு பள்ளிகளிலும் 1—4—1970 முதல் 1973-74 ஆம் ஆண்டு முடிய 'ஏ' பிரிவு பள்ளிகளிலும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு பின் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே முன் தேதியிட்டு பணிவரன் முறை பெற தகுதியுடையவர்கள். இவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் அவர்கள் பெற்றுவந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெற அனுமதித்து ஆணைகள் ஏதும் பிறப்பிக்க அவசியமில்லை என பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தெளிவுரை வெளியிடப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 26

2. மேலே குறிப்பிடப்பட்ட நாளுக்குப்பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக் குழுவினால் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டோரின் பணியினையும் முன் தேதியிட்டு வரன்முறை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இதில் ஒரு முடிவு எடுத்த பிறகுதான் அவர்கள் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு பெற்றுவந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெறத் தகுதி உடையவரா என்று முடிவு எடுக்க இயலும். எனினும், இதில் அரசின் ஆணையை எதிர்நோக்கி ஏற்கனவே அளிக்கப்பட்ட ஊதிய உயர்வுகளுக்கான தொகையை பிடித்தம் செய்ய வேண்டாமென எல்லா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார்.

143896

D

V211,32'N84
N84.207.1-2